அஜாதசத்ரு



கோவி.மணிசேகரன்

அஜாதசத்ரு

டாக்டர்

கோவி. மணிசேகரன்

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

பதிப்புரை

அஜாதசத்ரு பெயரைப் பார்த்தாலே வில்லன் போலிருக்கிறது. சரித்திரச் சான்றுகளுமே கூட இவனைக் கொலைகாரன்— தந்தையைக் கொன்றவன் என்றே குற்றம் சாட்டுகின்றன.

ஆனால்...

இந்த அஜாதசத்ரு ஒரு மாவீரன்.

மதோன்மத்தனாக வாழ்ந்த தந்தை பிம்பிசாரனை அவன் கொல்லவில்லை— தான் செய்த கொடுமைகளுக்கு பிம்பிசாரனே தற்கொலை செய்து கொண்டான்.

இதை ஆதாரங்களோடு ஆணித்தரமாக நிலைநாட்டி அஜாதசத்ருவை அசகாய சூரனாக்கிக் காட்டி இருக்கிறார் வரலாற்றுப் புதினங்களை வடிப்பதில் தனக்கென ஒரு தனிப்பாதை வகுத்துக் கொண்டிருக்கும் டாக்டர் கோவி. மணிசேகரன்.

ஒரு சிறு பொறியை ஊதி பெரு நெருப்பாக்கி ஜ்வலிக்கச் செய்திருக்கிறார் தன் எழுத்து திறமையினால்.

புத்த சரித்திரத்திலே நாம் அம்பபாலியைச் சந்தித் திருக்கிறோம். ஆனால் அதே அம்பபாலியை 'கோவி' சித்தரித்துள்ள பாணி? அவர் பாணியிலேயே வியப்போமே.

'ஓ...! அம்பபாலி...!'

வைதேகி களங்கப்பட்டவள் என்று அவளைக் கணவன் காராக் கிரஹத்தில் தள்ளும்போதும், தான் குற்றமற்றவள் என்பதைக் கூறமுடியாமல் இருபதாண்டுகள் சிறையில் வாடிப் பிறகு அருமை மகனால் விடுக்கப்பட்டும் கொடுமைப்

படுத்திய கணவனுக்காக வாதாடிக் கெஞ்சும்போதும் பாரதப் பெண்களின் பண்பைக் கண்டு நெஞ்சம் விம்முகிறது.

மிலிட்டஸ்— தேவதத்தன்— மகாசிலாகந்தகா— விதுர்த்தபன்.

ஓ... அஜாதசத்ரு!

நம் நாட்டு வரலாறு, முறையாகத் தொகுக்கப்படவில்லை. சரியான தகவல்கள் கிடையாது. தொடர்பில்லாது துணுக்களை ஒன்று சேர்த்து சரித்திரச் சான்றுகளை இணைத்து, அழகாகப் பின்னித் தருவதற்கு கோவி. மணிசேகரனைப் போலப் பலரும் முயன்றால் அஜாதசத்ருவைப் போல பல சரித்திர நாயகர்களின் உண்மைக் கதைகள் நமக்குக் கிடைக்கும். ஆனால் அதற்கு கோவி. மணிசேகரனைப் போன்று உழைப்பாளிகளாக இருக்க வேண்டுமே.

பிம்பிசார புத்திரனின் பிடிவாத குணம் கோவியிடம் இருப்பதினால்தான் ஒரு அற்புதமான அஜாதசத்ரு உருவாக முடிந்தது.

தொடராக வந்த போதே லட்சக்கணக்கான ரசிகர்களை மகிழ்வித்த இந்த வரலாற்று நவீனத்தை புத்தக உருவில் தமிழக மக்களுக்கு அளிக்க வேண்டுமென்று துடியாக இருந்தோம்.

அதற்கு ஒப்புதல் அளித்து ஒத்துழைப்பையும் நல்கிய நூலாசிரியர் கோவி. மணிசேகரனுக்கு வாசகப் பெருமக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது வானதி பதிப்பகம்.

27-12-85
சென்னை-17.

வானதி திருநாவுக்கரசு

முன்னுரை

அன்புமிக்க ஸ்ரீ ஸ்ரீ கோவியார் அவர்கட்கு ஆசீர்வாதம்; நலம்.

நான் மகத மொழிக்காரன்; இவ்வாறுதான் எழுத முடிகிறது.

நீங்கள் கார்த்திகைக் கடவுள் அருளிய தமிழ் மொழியறிந்தவர்; ருத்திரன் அருளிய வேத மொழியையும் ஓரளவு தெரிந்தவர். எனது பாஷையில் நான் ஆசீர்வதித்தேன்.

உங்கள் எழுதுகோல் பெருமையினை நான் முற்றுமாக அறிந்தவன். எந்தப் பின்னணிக்கு எந்த மொழிநடையில் எழுதினால் அந்தப் பின்னணி அலங்காரக் காப்பியமாகத் திகழும் என்று அறிந்து, உபாசித்து, ஏன்? வேள்வியே நடத்தி அப் பின்னணிக்கேற்ப மொழியைப் பயன்படுத்துகிறவர்.

உங்கள் எழுதுகோல் முனையில் விண்ணுக்கும் மண்ணுக்குமாக வீறுகொண்டு நர்த்தனமிட்ட வீரமாப் புருஷர்கள் பலர். உலகின் பல வீரமாப் புருஷர்கள் சிறுகதைகளாகவும் புதினங்களாகவும் உங்கள் எழுதுகோலில் உயிர் பெற்று வாழ்ந்து வருகிறார்கள்.

ஆமாம்; அன்புடன் கேட்கிறேன்.

என்னை ஏன் நீங்கள் சிந்திக்கவில்லை? சிந்தித்துப் பார்க்கப் பயமாக இருக்கிறதா? என்னைப் பாவி என்று வரலாறு தூற்றுவது போல நீங்களுமா ஒதுக்கி விட்டீர்கள்?

எனது எழிலார்ந்த கோலம் உங்களுக்குமா புரிபடவில்லை? 'சரித்திரக் கர்ஜனை' என்று வாசகர்களால் புகழப்படும் உங்களுக்குமா?

காரணம் இப்படியும் இருக்கலாமோ ?

அஜாதசத்ரு சரித்திரம் ஓர் ஆழ்கடல் என்கிற ஐயமாகவும் இருக்கலாமோ ?

ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்குப் பயணமாகி இந்த அஜாதசத்ருவுடன் போராட வேண்டுமா என்கிற சோம்பலோ, தயக்கமோ நிச்சயம் உங்களுக்கு இருக்கக் காரணமில்லை. ஏனென்றால் ஐம்பது லட்சம் ஆண்டுகட்கு முன் பயணமாகிக் குமரிக் கண்டத்தை ஆராய்ந்து 'குமரி' என்கிற புதினத்தை எழுதி வருபவர் நீங்கள் என்பதை நானறிவேன். அவ்வாறிருக்க நான் என்ன பாவம் செய்தேன் ?

எனது ஆராய்ச்சி குறித்து வடபாரதத்திலுள்ளவர்கள் பலர் பலவிதமாக எழுதியிருப்பது மூளையைக் குழப்பத் தான் செய்யும். பௌத்த நூல்களான திரிபிடகத்தைப் படிக்கிறபோது மயக்கமே வந்து விடும். சமண நூல்களும் சிலவற்றைச் சொல்லி இருக்கின்றன. எல்லாருமே மனம் போனபோக்கில் எனது கதையைப் பூரணமாகச் சொல்லாமல், குறிப்பாக மகத சாம்ராஜ்யத்தை எனது தந்தை பிம்பிசாரன் ஆண்டதாகவும், அவர் சிசுநாகக் குடிமரபினர் என்றும், அவர் ஒரு கணிகையர் லோலர், காமாதுரன் என்றும், ஞான ஒளியான கௌதம புத்தர் காலத்தவர் என்றும் இயம்பி இருக்கின்றனர். முடிவில் நான் எனது தந்தை பிம்பிசாரச் சக்ரவர்த்தியைச் சிறையிலடைத்துச் சித்திரவதையுடன் கொலை செய்து, பாவத்தைத் தேடிக் கொண்டவன் என்று பழிசுமத்தி இருக்கிறார்கள்.

ஓ... என்ன கொடுமை !

புத்தர் சம்பந்தப்பட்ட பாலிமொழி நூல்களில் சில சம்வாதங்களும் எனது குடும்ப சம்பந்தப்பட்ட உறவினர் பெயர்களும் ராஜவேசிகளின் பெயர்களும் வெறும் பெயரள

வில் காணப்படுகின்றன. மற்றபடி அந்நாளைய பதினாறு பெரும் ராஜ்யங்களை ஆராய்ந்து அந்த ஆட்சி முறைகளை அறிந்து எழுதுவது என்பது திருகுவலிக்குச் சமமானதே !

ஆனால் உங்களுக்கு இது திருகுவலியல்லவே ! சரித்திரத்தைப் படித்து ஆராய்வது என்பது உங்களுக்குத் திவ்ய தீர்த்தத்தைப் பருகுவது போன்றது என்பது நானறியாததா ? பிற்காலத்திய மாவீரனான திப்பு சுல்தானையும், ருஷ்ய மாவீரனான ஐவானையும் தொட்டு அவர்களது பரிபூரண ஆசி பெற்றவராயிற்றே !

என்னைப் பற்றி எழுதக் கூடாதா ?

அருள் கூர்ந்து வேண்டுகிறேன்.

அவ்வாறு எழுதுகிற வாய்ப்பு கிடைக்கிறபோது...

என்மீது பழிசுமத்தியவர்களைப் பற்றிக் கொஞ்சம் சிந்தியுங்கள். கொலைபாதகனாக்கிய கொடியவர்களைப் பற்றி ஆராயுங்கள்.

எனக்கும் என் தந்தைக்கும் ஏற்பட்ட பூசல் என்ன ? காதலா ? இல்லை, மதமா ? சத்தியமாக இல்லை. நாடு பிடிக்கும் வெறியா ? நிச்சயமாக இல்லை. பின் என்ன ?

அது வரலாற்றிலேயே இல்லையே !

என் குடும்பப் பெயர்களும், நான் கொலைகாரன் என்கிற பழியும்தாமே சில வரிகளில் காணப்படுகின்றன ? மறந்துவிடலாம் என்று விட்டதோ ? மறைத்து விடலாம் என்று சுட்டதோ ?

உங்கள் அபாரமான கற்பனை இதில் நுழைந்து, அன்னை ஆதிபராசக்தி உங்களுக்கென்றே ஒரு வரப்பிரசாத மாய் அளித்த காப்பிய உரைநடையுடன் கூடிய கொஞ்சு தமிழில் எழுதி எனது ஆத்மாவை நிறைவு செய்யக் கூடாதா ?

ஒன்றை நீங்கள் வணங்கும் பராசக்தியறியச் சொல்கிறேன். நான் கொலைகாரனல்ல. மகாபண்டிதையான வைதேகியின் உதிரத்தில் பிறந்தவனுக்குக் கொலை பாதக புத்தி ஏற்படுமா ? சிந்தித்துப் பாருங்கள்.

'உரைநடைக் கம்பன்' என்று விருது பெற்றவரே ! இந்த அஜாதசத்ரு ஒரு நிகரிலி சிசுநாகனாக உங்கள் உரைநடைக் காப்பியத்தில் நிமிர்ந்து நடக்க வேண்டும். சிசுநாகர் யார் ? உங்கள் ஆதி தமிழ்ப் பாரம்பரியத்தில் நாகர்களாக உதயம் கண்டு உலகளாவியர்கள்தாமே ?

அருள் கூர்ந்து எனது வேண்டுதலை நிறைவு செய்யுமாறு உங்கள் இறவாத் தமிழை வணங்கிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ராஜகிருகம்
(சிசுநாகர் காலம்) } —அஜாதசத்ரு

16881
3289301

பீடகம்-1

சம்பா நதிக்கரையில்...

புத்த ஞாயிறு வசந்த வருகை தந்த புத்தொளி நிறைந்த பொற்காலம்.

குடவானில் ரத்த ஞாயிறு 'எத்தனை ஞாயிறுகள் வருகை தந்தாலும் அத்தனைக்கும் நானே சுத்த ஞாயிறு' என்று குங்குமச் சிரிப்பில் கீதோபதேசம் செய்கிறான்.

என்ன உபதேசம் செய்து என்ன பயன் ?

பூமியில் அமைதிப் பூ என்று பூக்குமோ ? எப்போது மணக்குமோ ?

—சிறகு படைத்த சாகபட்சிணிகள் 'சம்பவாமி யுகே, யுகே' என்று கீதைக் குரலெழுப்பியும், *'லும்பினி காமே உபாலிகே கதே' என்று கௌதமக் குரல் கொடுத்தும் கூட்டம் கூட்டமாய்க் கூடு நோக்கிச் செல்கின்றன.

அங்க தேசத்துத் தலைநகராம் சம்பா நகரை அணைத்துச் செல்லும் சம்பா நதி, ரத்தப் பிரவாகமெடுத்து ஓடுகிறது.

யுத்த ஞாயிறான மகத சக்ரவர்த்தி பிம்பிசாரன், தோள்களில் தோல்வி குந்தி விட்டதால் நெஞ்சு பதைத்து,

---

* கபிலவஸ்துக்கு 15 கல் தொலைவிலிருக்கும் லும்பினி கிராமத்தில் கௌதம புத்தர் பிறந்தார். காலம் : கி. மு. ஆறாம் நூற்றாண்டின் இடைப் பகுதி.

நினைவு குலைந்து, வெஞ்சமரின் வேதனையுடன், ரதத்தை இடமும் வலமுமாக விரட்டி, வாளைச் சக்ராயுதமாகச் சுழற்றி, அங்க வீரர்களின் அங்கங்களை அங்கமங்கமாகத் துண்டாடி, தலைகளைப் பூப்பந்தாடி... ஓ... எவ்வளவுக்கு கோரமான காட்சி!

என்ன ஆடி என்ன பயன்? இனி ஏதேனும் அற்புதங்கள் நிகழ்ந்தாலொழிய பிம்பிசாரன் புகழை மீட்க முடியாது என்பது போல, போர்க்களத்துக்கு மேலே மாமிசபட்சிணிப் பறவைகள், பிணம் தின்னி விழா நடத்தி இரவு பகலாய் வட்டமிடுகின்றன.

வீரத்துக்கு வேள்வி கண்ட பிம்பிசாரன் தோல்வி காண்பதா?

'எத்துணையும் வேண்டேன்; என் வாள் துணையே போதும்! இவ்வையம் தலைவணங்கும்' என்று சூள் கொட்டிப் புறப்பட்ட சுந்தர பிம்பனாயிற்றே!

செருக்குச் செம்மாப்பிலும் ஒரு நறுக்குத் தெறிக்கும் நளினமிருப்பதை, நாகரிகமிருப்பதை நாடறியும்.

அந்தச் செருக்கே இப்போது சினந்து கேட்கின்றது...

பொருதடக்கை வாள் எங்கே? மணிமார்பெங்கே? போர் முகத்தில், எவர் வரினும் புறங்கொடாத பருவயிரத் தோளெங்கே? பரந்த துணிவுதான் எங்கே? எங்கே?

எங்கு நோக்கினும் கண்களுக்கு எட்டிய தூரம் வரை ஒரே பிணக்காடு; எதிரொலிக்கும் அவல ஒலிகள்; எப்போது ஓயும் என்கிற எதிர்பார்ப்பு.

அங்க தேசத்து அரசன் *பிரம்மதத்தனோ...

---

* காசி அரசர்களையும் பிரம்மதத்தர்கள் என்பர். ததிவாகனன் இவனுக்கு முன்போ, பின்போ இருந்திருக்க வேண்டும்.

வெற்றி வெகு தொலைவில் இல்லை என வெறி கொண்டு கெக்கலிக்கிறான்.

வெற்றிக்குப் பிறகு...

பரிசில் சுமப்பர் கவிகள்; பகடு சுமக்கும் திறைகள்; அரசு சுமக்கும் இறைகள்; பின்...

பின்...

'அவனி சுமக்கும் என் புயத்தை' என்று எண்ணி யெண்ணிக் கர்ஜிக்கிறான்.

"இன்று நடந்த யுத்தம் போதும்; நாளை இரண்டில் ஒன்று தெரிந்து விடும்; யுத்தம் ஓய்வு காண அறிவிப்பு ஓசை எழுப்புங்கள்!" என ஆர்ப்பரிக்கிறான் அங்கராஜன் பிரம்மதத்தன்.

ஆ! போர் ஓய்ந்தது என்று அக்கணமே துகிண்மனை நோக்கி ஓட முனைந்தவர்கள் மகத வீரர்கள். அவர்கள்தாம் என் செய்வர்? யானை போல் திரண்டு வந்த பலம் பூனையாய்ப் புலம்பி பலவீனப்பட்டு விட்டதே!

இந்தக் காட்சி...

மகத சக்ரவர்த்தி பிம்பிசாரன் இதயத்தில் செந்நீர் மல்கச் செய்கிறது.

ஓ... நீடு புகழ் பரப்பி, நித்தம் நித்தம் செம்மாந்து, பீடுடைய பெம்மான் நான் என்று பிலுக்கிய பிம்பிசாரனா?

தொலைவில் திடகாத்திரமான புரவியின் மீது ஆரோகணித்திருந்த மகா சேனாதிபதி ராஜநாகன், 'ஆ! மகதப் புகழ் மங்கி விட்டது' என மனமிடிந்து போகிறான்.

அந்திச் சூரியன் அவலமாய்ச் சாய்ந்த சில நாழிகைக்குள், முந்தி நிலவு வானில் முணுமுணுக்கத் தொடங்கியது.

வண்ணத் துகின்மனையில் வருந்திய நெஞ்சமுடன் அமர்ந்து மோவாயில் கையூன்றி, சில சமயங்களில் மீசையை நீவி, இமையாது எங்கோ கவனித்துக் கொண்டிருந்தார் சக்கரவர்த்தி பிம்பிசாரன்.

வாயிலில் நின்றவண்ணம் கவனிக்கிறான் மகா சேனாதிபதி ராஜநாகன். எவ்வளவு நேரம் தான் நின்றிருப்பான்?

"சக்கரவர்த்திகளுக்கு என் வணக்கம்!"

விழிமலர்ந்த நித்திரையிலிருந்து விழிக்கிறார் சக்கரவர்த்தி.

"ம்ம்!"

ஒரு நெடுஞ் சாண்கிடையான பெருமூச்சு. "வா, ராஜநாகா! நாளைய முடிவு நல்ல முடிவாக இருக்காது என்று தானே சொல்ல வந்திருக்கிறாய்?"

ராஜநாகம் படம் சுருங்கித் தலை குனிகிறது.

நாளைய போர்க்களம் ஓயும்; புகழ் சாயும்; புறமுதுகு மேயும் என்று முடிவு கட்டிவிட்டானோ, ராஜநாகன்?

"என்ன தலை குனிந்து கொண்டாய்? இன்றே இரவோடு இரவாய்ப் புறப்பட்டு விடலாம் என்கிறாயா?"

நாகம் தலை தூக்கியது.

என்ன சொல்லுவான் ராஜநாகன்?

படைத்துணை விரும்பாத பிம்பிசாரன் செருக்கைச் சொல்வானா? பட்டத்தரசியின் தமையனே கோசல நாட்டுக் கோமகனாக இருந்தும், 'படை உதவி வேண்டேன்; அது எனது பௌருஷத்துக்கு இழுக்கு' என பிலுக்கிய பிலுக்கைப் பிட்டு வைப்பானா? அவந்தி நாட்டு அரக்க வேந்தன் சண்டபிரத்தியோத மகாசேனன் நண்பனாக இருந்தும் உதவி நாடாத குற்றத்தை இடித்துரைப்பானா?

"என்ன ராஜநாகா! உனது விஷம் முழுவதும் யுத்த களத்தில் விரயமாகி விட்டதா? எஞ்சியது விசுவாசம் ஒன்று தான் என்கிறாயா? போர் முரசம் கொட்டிப் புறப்பட்டு இன்றைக்கு இருநூறு நாட்களுக்கு மேலாகி விட்டன; ஆகவே, இன்று போய் நாளை வரலாம் என்கிறாயா? சொல் ராஜநாகா, எதையாவது சொல்!"

"நாளைய யுத்தம் குறித்துப் பேசவந்தேன். சக்ரவர்த்திகள் ஏதேதோ கூறுகிறீர்கள்!"

"உண்மையைக் கூறுகிறேன். ராஜநாகா! நாளை பிம்பிசாரன் சிறைப்படுவான் என்று நினைக்கிறேன். நீ என்ன நினைக்கிறாய்?"

"அப்படி ஒரு நிலைமை வரக்கூடாது என்பதற்காகத் தான் வந்து நிற்கிறேன் மகதேஸ்வரா!"

"ஏதேனும் வழி கண்டுபிடித்திருக்கிறாயா?"

"சொன்னால் மன்னித்து ஏற்பீர்களா?"

"சொல்வதைப் பொறுத்திருக்கிறது; சொல்பவரைப் பொறுத்திருக்கிறது."

"ஒரே வழி, நம் நட்பு நாடுகளிடமிருந்து படையுதவி கேட்பது. இது உங்கள் கொள்கைக்கு முரணானதானாலும் இப்போதைய நிலைமைக்கு அரணானது. அதுவரை நாம் அங்க நாட்டு எல்லைக்கு அப்பால் இருந்து மறைந்து வருவோம்."

"ஒரு க்ஷத்திரியனுக்குச் செய்யும் உபதேசமா இது?"

"உபதேசமில்லை சக்கரவர்த்திகளே, உத்தேசம் ! க்ஷத்திரிய குலத்துக்குச் சொல்லவில்லை ; சத்தியத்துக்குச் சொல்லுகிறேன். யோசித்துப் பாருங்கள். நாளையப் பொழுது நல்ல பொழுதாக விடிய வேண்டாமா ? இந்தச் சம்பா தலைநகரை முற்றுகையிட்டு அது மாதக்கணக்கில் நீடித்த போது இவ்வாறு நீடிப்பது நலம் பயக்காது என்றேன். மறுத்தீர்கள். யாரோ நமக்கு முன் பின் தெரியாத ஓர் அந்தணர் சோணதண்டர் மட்டும் உதவி புரியவில்லை என்றால் நமது படை நிலைமை என்னாகி இருக்கும் என்பது உங்களுக்குத் தெரியாததல்ல."

"ஓ... சோணதண்டன் ! அவரைப் பற்றி நானும் யோசிக்கிறேன் ; புரியவில்லை. அவர் எதற்காக நமக்கு உதவ வேண்டும் ? உணவுத் தட்டுப்பாடின்றி நமது பொற் குவியல்களைப் போஜனக் குவியலாக்கியவர். அங்க நாட்டு அரசனுக்குத் தெரிந்தால் தனது அங்கமே அழுக நேரிடும் என்று தெரிந்தும் துணிந்து செயல்பட்டவர் ! இதில் ஏதோ காரண காரியங்கள் அடங்கி இருக்கின்றன... சிந்திக்கிறேன்; முடிவு தெரியவில்லை."

சற்றே கரிய பெரிய விழிகளை மலர்த்தி நோக்குகிறார் மகத சக்கரவர்த்தி பிம்பிசாரன்.

'சிந்தனையாவது ? முடிவாவது ? மூன்று தினங்களாகத் தானே இந்த ராஜ கூடாரத்தில் அப்சரஸ்களின் ஆட்டம் பாட்டம் இல்லாமல் இருக்கிறது ! ஒருத்தியா, இருவரா ? மாதத்தில் முப்பது நாட்களுக்கு முப்பது இளமை கொஞ்சும் ஜீவசித்திரங்களையல்லவா கொண்டு வந்து இருக்கிறீர்கள் ! இதில் சோணதண்டரைப் பற்றிய சிந்தனை வேறா ? முற்றுகையை நீடிக்கவிடாமல், கோட்டையைத் தகர்ப் போம் என்ற போதெல்லாம், செவி சாய்க்காமல் அழகாபி ஷேகத்தில் மூழ்கியவர் சிந்திப்பதாவது ? இந்த முற்றுகை யைத் தனது முழுமைக்குப் பயன்படுத்திக் கொண்ட அங்க தேசத்து ராஜன், போர்முகத்தில் புது முகத்தைக் காட்டி

விட்ட இந்த மூன்று தினங்களாகத்தானே சிந்திக்கிறீர்கள் !' என்று கூறிவிடத்தான் மகா சேனாதிபதி ராஜநாகனின் நெஞ்சு பதைத்தது. ஆனால், கூறிவிட முடியுமா?

இடித்துக் கூறும் முழு உரிமையும், திமிரலும், துணிச்சலும் உடையவர் மகத சாம்ராஜ்யத்து மகா ஆமாத்தியர்— பேரமைச்சர்— வஸ்ஸகாரர். அவரைத் தவிர வேறு யாரால் நாவசைக்க முடியும் ? அசைத்தால் நாவுதான் தேறுமா ?

மகாசேனாதிபதி ராஜநாகன் சிந்தனையில் சொல் மழை பெய்த போது, எதிர் பாராமல் ஒருவன் உத்தரவைக் கிழித்துக் கொண்டு உள்ளே நுழைகிறான். அவன் உடல் முழுதுவம் ரணப்பட்டு ரத்தாபிஷேகமாயிருக்கிறது. அவனைக் கண்டதும் பதறிப் போன ராஜநாகன், "ஜம்பூ" என்று அலறித் தாங்கிப் பிடித்துக் கொண்டான்.

"யார் ராஜநாகா, இவன் ?"

"பிரபோ ! நமது மருத்துவமேதை ஜீவகரை அவந்தி நாடு நோக்கி அனுப்பிய போது உடன் சென்றவர்களில் இவனும் ஒருவன்."

"அப்படியா ?"

உற்றுக் கவனித்துப் பெருமூச்செறிகிறார். ஓ... ஜீவகா ! உன்னை மீட்கப் புறப்பட்ட போர்ப் பயணம் தானே இது?...

"ஜீவகன் என்ன ஆவார் ?"

ஜம்பு சொன்னான் : "அங்க நாட்டுப் பாதாளச் சிறை யில் இருக்கிறார்."

அவனுக்கு மூச்சுத் திணறுகிறது. எந்த நேரத்திலும் அது அவனை விட்டு நழுவி விடலாம்.

"ராஜநாகா ! இவனை முதலில் நம்முடன் வந்திருக்கும் வைத்தியர்களிடம் அழைத்துச் செல் !"

"சக்கரவர்த்திகள் மன்னிக்க வேண்டும். சொல்ல வந்ததைச் சொல்லி முடித்த பிறகு, உயிர் நீடிக்குமானால் அதனைப் பிடித்து நிறுத்த முயலுங்கள். ஆறு மாத கால மாகத் தப்பிக்க முயன்று, இந்த நிலையில் வந்து விழுந்திருக் கிறேன். இந்த முற்றுகை நீடிப்புக்கும் இப்போதைய தோல்விக்கும் காரணம் *சிரீமா! விசாரித்து உடனடித் தீர்வு காணுங்கள். மருத்துவ மேதை ஜீவகர் இட்ட பணியைச் செய்து முடித்..."

முடித்து விட்டேன் என்று சொல்லுவதற்குள் ஜம்புவின் பயணம் முடிந்து விட்டது.

"ஓ... சிரீமா...!"

சக்ரவர்த்தி பிம்பிசாரன் அந்தப் பிராந்தியமே அதிர்ந்து எதிரொலிக்குமளவுக்குக் கர்ஜிக்கிறார்.

குரல் கேட்டு ஏனைய சேனாதிபதிகளும் உபதளபதி களும் ஓடி வர...

"கொண்டு வாருங்கள் அந்த சிரீமாவை...!"

வெறி கொண்ட ஆணை...

பக்கத்துத் துகின்மனையிலிருந்த காமப் பதுமைகளில் ஒருத்தியான சிரீமாவை கொண்டு வந்து நிறுத்துகிறார்கள்.

"இவளை நிர்வாணமாக்கி அந்த மரத்தடியில் நிறுத்துங்கள்!"

உத்தரவு தீப்பொறியாய்ப் பறக்க, செயல்கள் சுறுசுறு வென்று நடக்கின்றன.

அக்கினி மலராய் மணக்க வேண்டிய சிரீமா, ஆசையின் உசுப்பலால், அழுக்குச் சமுதாயத்து அருயை மலராய் அரண்

* பிம்பிசாரனுடன் தொடர்பு கொண்ட ராஜவேசி களுள் இவளும் ஒருத்தி. ('புத்தர் காலத்து வேசிகள்' —மஞ்சரி, 1958.)

மனைகள் தோறும் கூடுவிட்டுக் கூடு பாய்ந்தாள். இப்போது...

சிதைகளில் மெத்தை விரித்ததன் பயனை ஜீரணிக்க முடியாமல் கதறுகிறாள்.

"உனக்கும் அங்கதேசத்து அரசனுக்கும் என்ன உறவு?"

"..........."

"சொல்; என்ன உறவு?"

கண்ணீரே மறுமொழி.

"சொல்லமாட்டாய்? சொல்ல வைக்கிறேன்! ஏன் இவளை நிர்வாணப்படுத்தாது விட்டீர்கள்? ம்ம்!"

கையை நீட்டுகிறார் பிம்பிசாரன். அங்கே கசை வந்து குந்துகிறது.

சிரீமாவின் பொன்சிலிர்க்கும் திருமேனி, பிறந்த மேனி யாகப் போகிறது...

அவளது முழுமதியனைய முகத்தை மட்டும் கண்டு, மோகவலை கொண்டு, பின், இது தாகத்தைத் தீர்க்க முடியாத பன்னீர் என ஒரு காவத தூரம் ஒதுங்கி இருந்த வர்களுக்கு, இப்போது முழுவதையுமே பார்க்கப் போகி றோம் என்கிற நாத்தொங்கல்.

அதற்குள் தீப்பந்தங்களை ஏற்றிக் கொண்டு திபுதிபு வென்று குழுமிவிட்டவர்களுள், இப்படி எண்ணிய கார்த்திகை மாதத்து நாய்களும் இருந்தன.

அந்தப் போக இரவின் சோக நேரத்தில்...

"சக்கரவர்த்தி, மகத சக்கரவர்த்தி!"

பெரிதான குரல் கேட்டுத் திரும்பிப் பார்க்க...

அந்தணர் சோணதண்டன் அலறிப் புடைத்து ஓடி வரு கிறார். ஏன் இப்படிக் குலை பெயர ஓடி வரவேண்டும்?

பிடகம்-2

ராஜரதம்

நெருப்புப் பூக்களைக் கொண்டையில் சூடிய தீப் பந்தங்கள் சுடர் நர்த்தனமிடுகின்றன.

எதிர்பாராத குறுக்கீடும் ஏமாற்றமும் கண்ட கண்கள் எதையெதையோ சபித்துக் கொள்கின்றன.

பிடரி தெறிக்க ஓடிவந்த சோணதண்டன், அப்படியே அயர்ந்து நின்று விடுகிறார். பாதி உரித்த கனியாய் நின்றிருந்த சிரீமாவின் நிலை கண்டு கண்களைப் பொத்திக் கொள்கிறார்.

வெடிபட்ட நெஞ்சின் எதிரொலியால், துடிபட்ட கண்கள் துயர நீரை மல்கின.

"சக்கரவர்த்திப் பெருமானே, இவள் மீது ஆடையை வீசுங்கள்!"

எதற்காக இவர் புலம்ப வேண்டும்?

ஆயினும் அவர் செய்த சேவை, தேவையைப் பூர்த்தி செய்கிறது.

புடவையை மேலே போர்வையாகச் சுற்றிக் கொண்ட புன்னாகவராளிக்குரியவள், இன்னமும் குனிந்த தலை நிமிரவில்லை. நிமிர்ந்தால்தான் கருநாகமாயிற்றே!

"அந்தணரே! இவளுக்காக நீங்கள் இரங்குவதன் காரணம்?"

சக்கரவர்த்தி பிம்பிசாரன், குழம்பிய காரணத்தால் குழைந்து கேட்கிறார்.

"பிரபோ! இவள் என் மகள்! யுத்தகளத்து இன்றைய நிகழ்ச்சியைக் கேள்விப்பட்டுக் கோயிலுக்குச் சென்று பிரார்த்தனை செய்து பிரசாதம் கொண்டு வந்தேன்; இப்போது பிசைந்து போய் நிற்கிறேன்."

"உங்கள் மகளா?"

"விதியின் விபத்து! இதே சம்பா நதிக்கரையில்தான் பிறந்தாள். இவளுக்கு சம்பா என்ற இன்னொரு பெயரும் உண்டு. பருவமடைந்து இதே நதிக்கரையில் நீர் கொண்டு வர வந்தவள், அங்கராஜன் பிரம்மதத்தன் கண்களில் பட்டு விட்டாள். அன்றைக்கு அவன் பறித்துச் சென்ற புஷ்பம் தான் இன்றைக்குப் பூஜைக்கு லாயக்கற்று புலம்பி நிற்கிறது. அன்றெடுத்த சபதம்தான்... இந்தச் சம்பா நதி இரத்தப் பிரவாகமெடுத்து ஓட வேண்டும் என்பது; அந்தப் பிரவாகத்தில் பிரம்மதத்தன் மிதந்து செல்ல வேண்டும் என்பது. அந்தச் சபதம் மூன்றே ஆண்டுகளில் முழுமை பெற்றது. அதுவும் மகதமே எதிர்க்கிறது. சபதம் நிறைவேறியே தீரும் என்று மகிழ்ந்துதான் நான் உங்களுக்கு மறைமுகமாக உதவியது. என் விதி உங்களையும் உற்சாகமிழக்கச் செய்து விட்டது."

நாற்பது வயதைக் கடந்த அந்த உபநிஷதக் கண்களில் கங்கை, புனிதமாய் சலசலக்கிறது.

எவர் கண்கள்தாம் வெடிக்கவில்லை?

"இவள் இங்கிருப்பது உங்களுக்குத் தெரியுமா சோணதண்டரே?"

"நீங்கள் யுத்த பாசறை அமைத்த ஒரு வாரத்துக்குள் இவளைப் பார்க்க நேர்ந்தது. எங்கேயோ சென்று விட்டாள் என்று நினைத்தேன். முடிவில் உங்களிடமிருப்பதில் ஓர் ஆறுதல் கண்டேன்."

"நீங்கள் எங்களுக்கு உதவுவது இவளுக்குத் தெரியுமா?"

"தெரியாது : தெரியாதவாறு நடந்து கொண்டேன்."

"இவள் செய்த குற்றமாவது தெரியுமா ?"

"அதைத்தான் நானும் கேட்கிறேன்."

"எனது மாபெரும் சேனையின் தோல்விக் கதையே இவளது மைவிழிப் பாஷையில் எழுதப்பட்டு விட்டது."

அதிர்ந்து போனார் சோணதண்டர். எரியும் கண்களால் மகளை ஏறெடுத்துப் பார்க்கிறார். சிரீமாவும் அப்போதுதான் மைவிழிகளை மலர்த்திக் கவனிக்கிறாள்.

"அந்தணரே ! இவள் உண்மையைச் சொல்ல அடம் பிடிக்கிறாள். இவள் வாய் திறந்தால் ஒருவேளை நாளைய யுத்தம் மூச்சு விடலாம்."

பிம்பிசாரன் சொற்களை ஏந்திய காதுகள், கால்களுக்கு உத்தரவு பணிக்கின்றன. அருகே சென்று நிற்கிறார் சோணதண்டர் : "நடந்ததைச் சொல் சிரீமா ! உன்னைக் கடத்திச் சென்ற அங்கராஜனைப் பழிவாங்க நான் எடுத்த சபதம் பூர்த்தியாக வேண்டாமா ?"

"வேண்டாம் !"

—பளிச்சென்று அவளது குரல் வெடித்தது.

"வேண்டாமா ?"

"வேண்டாம் ! அங்கராஜன் கடத்திச் சென்றார் என்பது வதந்தி. நானே ராஜபோக வாழ்வுக்கு ஆசைப்பட்டு உடன் சென்றேன். பார்க்கப் போனால் அங்கதேசத்து ராஜன், மகத சக்கரவர்த்தியைவிட மாதர் விஷயத்தில் பாதகம் செய்துவிடவில்லை ! மாடுகளைக்கூட அவிழ்த்து விட்டால், மேய்ந்த இடத்தில் தான் பெரும்பாலும் புல்லை மேயச் செல்லும். அங்கே புல் இல்லையென்றால்தான் அடுத்த நிலத்துக்கு அது அடியெடுத்து வைக்கும் ! மகத சக்கரவர்த்தி அப்படியல்ல ! பிரசித்தி பெற்ற காமாதுரர் ! காம சாஸ்திரம்

இவருக்கு மனப்பாடம் ! அழகிய பெண்களைக் கொள்ளையடிப்பவர் ! அவரது தலைநகரம் ராஜகிருகம் மட்டுமல்லாது வைசாலி, கோசலம் வரைகூட வைப்பாட்டிகளுக்குத் தூது அனுப்புவார். எங்கெங்கே எத்தனை எழிலரசிகளிருக்கிறார்கள் என்பது இவருக்கு நெட்டுரு ! மகத மக்களோ இவரது மதியின்மையைத் தூற்றாது ஆண்மையைச் சொற்களால் அலங்கரிக்கிறார்கள் ! பரிதாபத்துக்குரியவர்கள் ! பட்டியலை நீட்டலாம் ; பதத்துக்குச் சிலவற்றைச் சொல்லுகிறேன் ! எண்திசையிலும் காண முடியாத எழிலரசி- கலையரசி- கவிதை அரசி அம்பபாலியை அல்லோலகல்லோலப் படுத்தியவர் ! பத்மாவதியைப் பழிவாங்க எண்ணிப் பழியை அடைந்தவர் ! சாலவதியை ஓலவதியாக்கியவர். நான் சம்பா தலைநகரின் அந்தப்புரப் பதுமை மட்டுமல்ல ; சரலவதியின் தோழியும்கூட ! எனவே, எனது சிநேகிதிக்காகக் கூடுவிட்டுக் கூடுபாய்ந்தேன் ; அனுபவித்துப் பார்த்தேன் ; பழிவாங்க நினைத்தேன் ; பழிவாங்கியும் கொண்டேன் !"

இரண்டு கருநாகங்கள் படம் விரித்து அவளது கண்களிலிருந்து பாய்ந்து நேரே மகத சக்ரவர்த்தியின் மார்பைத் தீண்ட, அவை விஷத்தைப் பாய்ச்சி, எரிமலையை ஏற்றி வைத்தன.

'சரக்' கென்று கேட்டது சத்தம். அடுத்த கணம்...

உருவிய வாள் சிரீமாவின் மார்பை நோக்கிப் பாயுமுன்...

எங்கிருந்தோ ஆயிரமாயிரம் புரவிகள் குளம்படி ஓசைகள் கேட்கின்றன.

மருண்டு மலைத்துக் கவனிக்கிறார் மகத சக்கரவர்த்தி பிம்பிசாரன்.

சற்றைக்கெல்லாம்—

ஒரு சேனா சமுத்திரமே அவர்களை நோக்கிப் பாய்ந்து வருகிறது.

ஓ... அங்கதேசத்துப் பிரம்மதத்தன் யுத்த தருமத்தையே மீறி, தனது வீரர்களை இரவில் ஏவி, எஞ்சியிருக்கும் மகதர்களை எமப் பட்டினத்துக்கு வழிகூட்ட எத்தனித்து விட்டான். இரவில் போர் புரிவதோ, அறிவிக்காமல் ஆக்கிரமிப்பதோ யுத்த நாகரிகமாகாதே! யுத்தமே ஓர் அநாகரிகம்; இதில் தருமமென்ன, கருமமென்ன, என்று நிர்மானித்து விட்டானோ?

எஞ்சிய மகத வீரர்களை ஆயத்தப்படுத்த தீவிரமாக முனையத் தொடங்கினான் மகாசேனாதிபதி ராஜநாகன்.

ஆனால், நடந்தது?

பாய்ந்து வந்த சேனா சமுத்திரம் ஒரு கட்டத்துக்கு வந்ததும், அப்படியே ஓவியமாய் நின்றது.

'ஏன் இப்படி இவர்கள் நிற்கவேண்டும்?'— சிந்திக்கிறார் பிம்பிசாரன்.

அந்த ஓவியமாய் நின்ற பெருஞ்சேனையிலிருந்து ஒரு ராஜரதம் அசைந்து வருகிறது. அங்கே வந்து நிற்கிறது. அதிலிருந்து மகத சக்கரவர்த்தி வயதொத்த ஆஜானுபாகுவான அரிமாவனைய ராஜவீரன் இறங்கி வருகிறான்; வந்து நிற்கிறான். "இங்கே மகத சக்கரவர்த்திகள் யார் என்பதை நான் அறியலாமா?"

அமைதி நிலவுகிறது. அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு பிம்பிசாரன் குரல் ஒலிக்கிறது: "நான் தான்!"

அடுத்த கணமே அந்த ராஜவீரன் வாளை உருவினான். பாதுகாப்புத் துடிப்புடன் அருகிலிருந்த ராஜநாகனும் வாளையுருவிக் கொண்டான்.

ஓ... இவர்கள் தவறாக எண்ணிவிட்டார்கள் என்பதனையறிந்த ராஜவீரன், தனது இடக்கரத்தை உயர்த்தி அமைதி வேண்டுகிறான். பின்னர் வலக்கரத்து வாளையுயர்த்தி முகத்துக்கு நேரே நிறுத்திப் பிடித்துத்

தலை வணங்குகிறான்: "உதவிக்கு வந்திருக்கிறேன். நான் ஜனகபுரத்து அரசன். என் பெயர் *அஜாதசத்ரு!"

அஜாதசத்ரு...

வாளையுருவிய மகாசேனாதிபதி ராஜநாகன், தேகம் முழுவதும் தேனாய்ச் சிலிர்க்கத் தனது வாளை முகத்துக்கு நேரே நீட்டி, 'அனுப்பி வைத்த ஆண்டவனுக்கு நன்றி கூறுகிறேன்' என்கிற பிரார்த்தனையுடன் பணிகிறான்.

இரண்டு வாட்களும் உறையுள் 'சரக் சரக்' கென்று குடிபுகுகின்றன.

ஆ! எதிர்பாராத உதவி; நாம் கேட்டுப் பெறாத துணை; கௌரவம் பாதிக்கவில்லை என்பதுபோல இரு கரம் நீட்டி, அஜாதசத்ருவை மார்போடு மார்பணைத்துப் பெருமை தந்து பெருமிதம் கொள்கிறார் பிம்பிசாரன்.

இருவரும் ராஜகூடாரம் நோக்கி நடக்கிறார்கள். ராஜநாகன் பின்தொடர்கிறான்.

எதையோ நினைத்துக் கொண்டு திரும்பிப் பார்த்த பிம்பிசாரன், "சிரீமாவை ஒன்றும் செய்யாதீர்கள். பாதுகாப்போடு வைத்திருங்கள். சோணதண்டரையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டாம். அந்த ராஜ விசுவாசிக்கு ஏதும் ஆபத்து நிகழ்ந்துவிடக் கூடாது" என்று ஆணை பிறப்பிக்கிறார்.

சிரீமா என்றதும் ஜனகபுரத்து அரசன் அஜாதசத்ருவின் நெற்றியில் ஆச்சரிய ரேகைகள் நெளிகின்றன:

---

* காசியில் ஒரு ஜனக மரபிருந்தது. அந்தச் சரித்திரத்திலும் ஓர் அஜாதசத்ரு பெயர், பிம்பிசாரனுக்கு முந்திய காலத்திலேயே தென்படுகிறது. (Political History of Ancient India-By Hemachandra Roy Choudhuri P-70) இந்த ஜனக மரபே ஜனகபுரத்தை நிறுவி இருக்கலாம்.

"அங்கராஜனின் கணிகை இன்னுமா உங்களிடம் இருக்கிறாள்?"

"உங்களுக்கு அவளை தெரியுமா அஜாதசத்ரு?"

இருவரும் வண்ணத் துகின்மனையில் நுழைந்து இருக்கைகளில் அமருகிறார்கள்.

அஜாதசத்ரு சொன்னான்:

"எனது ஒற்றர்கள் அவளைப் பற்றிய செய்தி கொண்டு வந்தார்கள். உங்களிடம் சுரண்ட வந்த சாலவதி என்கிற கணிகை உங்களால் பழிவாங்கப்படவே, அங்கிருந்து புறப்பட்டு இந்தச் சம்பாநகர் கோட்டையுள் பிரவேசித்தாளாம். அவளது சிநேகிதிதான் சிரீமாவாம்! அவந்தியிலிருந்து புறப்பட்ட உங்கள் மருத்துவமேதை* ஜீவகனைச் சிறைப் பிடிக்க இந்தச் சாலவதியும் சிரீமாவுமே காரணம்! அதன் மூலம் எதிர்பார்த்த யுத்தம்தான் இது! உங்கள் படை பலத்தை அறிய அனுப்பப்பட்ட ஒற்றள்தான் சிரீமா. இவள்தான் முற்றுகையை நீடிக்கச் செய்திருக்கிறாள். பல சிற்றரசர்கள் உதவியை அங்க நாட்டவனுக்குத் தேடித் தந்தவர்களும் இந்த சாலவதியும் சிரீமாவும்தான்! இந்த மாபெரும் தோல்விக்குக் காரணமே, உங்கள் வீரர்கள் அன்றாடம் அணியும் அடையாளச் சின்னங்களை அங்க நாட்டு வீரர்களும் அணிந்து வந்தனர். அங்கநாட்டு வீரர்கள் மட்டும் ஒரு சமிக்ஞை சின்னத்தை ரகசியமாக அணிந்திருந்தனர். மகத வீரர்கள், அங்க வீரர்களையும் தங்களவர்கள் என்றெண்ணியே தங்களை இழந்தனர். பதினைந்து நாட்களுக்கு முன்புதான் கேள்விப்பட்டேன். உடன் எனது படைகளைத் திரட்டினேன். இமயமலை யடிவாரத்துக்

* இந்த ஜீவகன், சாலவதிக்கும் பிம்பிசாரனுக்கும் பிறந்தவன் என்று ஒரு குறிப்பு உண்டு. அக்காலத்து எத்தனையோ முரண்பாடான கருத்துக்களுள் இதுவும் ஒன்று.

காட்டுவாசிகளைச் சேர்த்துக் கொண்டேன். மல்லர்களிடமிருந்தும் பிரகஜோதிஷர்களிடமிருந்தும் படை உதவி பெற்றேன். உங்கள் மாமனார் தேசங்களான கோசலத்துக்கும் வைசாலிக்கும் தூது அனுப்பிப் படையுதவி கேட்டேன். நீங்களாகக் கேட்டுக் கொள்ளாத வரையில் அவர்களாக உதவமுடியாது என்று கூறிவிட்டனர். புந்தர நாட்டான் எனக்கு உதவுவதாகச் சொல்லி, சாலவதியின் மயக்கத்தில் அங்கனுக்கு உதவி விட்டான்."

இவ்வளவையும் வாசலில் நின்று கவனித்த ராஜநாகன், 'இப்போதாவது சக்ரவர்த்திக்குப் புத்தி வரவேண்டும்' என்று எண்ணிக் கொண்டான்.

சக்ரவர்த்தியோ, தமது ஒற்றர்களின் அசிரத்தையை எண்ணி ஆதங்கப்பட்டுக் கொண்டார்.

"அஜாதசத்ரு! எனக்கு உதவ வேண்டும் என்று உங்களுக்கு எண்ணம் வந்ததன் காரணம்?" என்றார் பிம்பிசாரன்.

அவர் கேட்டது நியாயமான கேள்வி. அஜாதசத்ரு என்ன மறுமொழி புகல்வான்?

உண்மையைச் சொல்லிவிடலாமா?

சொல்ல வேண்டாம் என்று...

ஓ... சொல்ல வேண்டாம். சொல்வதன் மூலம் மகதத்தின் கதை சொப்பனமாக முடிந்து விடுமானால்...

முன்கோபியாயிற்றே பிம்பிசாரன்...

"என்ன யோசிக்கிறீர்கள் அஜாதசத்ரு?"

"ம்ம்! ஒன்றுமில்லை மகத சக்ரவர்த்தி! எனக்கே இந்த எண்ணம் ஏன் வந்தது என்று புரியவில்லை. பொதுவாக மகத சாம்ராஜ்யமோ அதன் மாண்பு மிக்க

தலைநகரம் ராஜகிருகமோ வீழ்ந்து விடுவது வடபுலத்து வரலாற்றின் வாசலையே மூடுவதாகும். மேலும் தெற்கே இலங்கைக்கும் அப்பால் இருந்த *குமரிக் கண்டத்தில் தோன்றிய தெய்வாம்சம் பொருந்திய மரபல்லவா நாக மரபு! அந்த மரபு உலகளாவிப் பரந்து இங்கே **சிசுநாக வமிசமாக வாழ்ந்து வருகிறது! அந்தப் புராதன வமிசம் வாழவேண்டும் என்று தோன்றியது; உதவ முன்வந்தேன்."

பிம்பிசாரன் பிடரி சிலிர்த்தது.

"வாழ்க உங்கள் திருவுள்ளம்! ஜனக வமிசமல்லவா! எனவேதான் வமிசாவளிகளை ஆய்ந்து பேசுகிறீர்கள்! நல்லது. ஓய்வெடுங்கள்! புலர்ந்ததும் போர் முகம் காத்திருக்கிறது. வெற்றி இன்றிரவே உதயம் கண்டுவிட்டதாக எண்ணுகிறேன்."

"சந்தேகமே இல்லை மகத சக்ரவர்த்தி!"

இருவரும் எழுந்து கொண்டனர்.

வண்ணக் கூடாரத்து உச்சியில் நாகக்கொடி காற்றில் படபடக்கிறது.

எங்கோ ஓநாய் அழும் ஓசை.

---

* குமரிக் கண்டத்துத் தமிழர்கள், தங்களுக்குள் மறையவர்கள் தேவை என்று உண்டாக்கிய மரபு நாக மரபு. புராக்கிருதம் (புரா- பழைமை; கிருதம்- செய்யப்பட்டது. பின்னாளில் சமஸ்கிருதம்.) இவர்களது மறை மொழியாகத் தோற்றுவிக்கப்பட்டது; பின்னாளில் இவர்கள், பூசல் காரணமாக உலகளாவி நாடோடிகளாய்ப் பரவினர். உலக மொழிகள் அனைத்துக்கும் புராக்கிருதம் துணை நின்றது. இவர்கள் எழுத்து வடிவம் நாகரியானது (தேவநாகரி).

** Bimbisara the Fifth Sisunaga King (India through the ages—by Flora Annie Steel— Fifth Edition— P.32)

பிடகம்-3

வீரம் வீழ்ந்தது

சூத்திரச் சுத்தமான சுமங்கலியின் புன்னகை போல் பொழுது விடிந்தாலும், நேத்திரமனைய குங்குமம் இழந்த அமங்கலியின் அழுகுரல் போல் போர்க்களம் காணப் படுகிறது.

விடிந்து பத்து நாழிகையைக் கூட அது விழுங்கி இருக்காது. அங்க ராஜனின் போர் முரசம் அகங்காரமாய் ஒலிக்கிறது.

ஜனகபுரத்து அரசன் அஜாதசத்ரு துணைபுரிய வந்திருக்கும் செய்தி, இரவே அவனுக்கு எட்டியிருந்தது.

பிம்பிசாரன் முரசம் இன்று கிழிபடும் என்று அவன் போட்ட கணக்கு தவறி விட்டதில் காலத்தை நொந்து கொண்டான். நேற்றே முடிய வேண்டிய திருப்பம் இன்று வேறு விதமாகத் தொடருகிறது. நெஞ்சத்துக் கபாடத்தை யாரோ 'தும் தும்' என்று உதைப்பது போன்ற ஓசை கேட்கிறது. அதனை மேலும் அச்சுறுத்துவது போன்று மகத முரசம் ஓங்காரமாய் ஒலிக்கிறது.

என்ன அகங்காரம் இந்த பிம்பிசாரனுக்கு?— அங்கன் அயர்ந்து அண்ணாந்து கவனிக்கிறான்.

மேலே வட்டமிடும் பிணம் தின்னிகளின் கரிய பெரிய நிழல்கள் அவன் மீது படிந்து செல்வது பயங்கரத்தை யூட்டுகிறது.

ஒரு சமுத்திரம் இன்னொரு சமுத்திரத்துடன் மோதும் போது ஏற்படுகிற ஊழி இரைச்சலுடன் இரு படைகளும் சந்திக்கின்றன.

உடைவாளை இடுப்பதனில் ஒளிர வைப்பேன் என்று சூளுரைத்து, ரதத்தில் நின்ற வண்ணம் வில்லை ஏந்துகிறார் மகத சக்ரவர்த்தி பிம்பிசாரன்.

ஒரு மருங்கே...

உரைத்து வந்த வாக்கதனை நிறைவேற்றுவேன் என்று கணைகளைச் சரமாரியாகப் பொழிகிறான் அஜாதசத்ரு.

யாருக்கு, எதற்கு உரைத்து வந்த வாக்கு?

நேற்றிரவு பிம்பிசார சக்ரவர்த்திக்கு உரைத்து வந்த வாக்கா?

இல்லவே இல்லை. பின்?

ஆ! சொல்லப் பயப்பட்ட வாக்கு; சொன்னால் மகதம் சொப்பனமாகுமோ என மருண்டு மறைந்த வாக்குறுதி...

ஓ... கோசலாதேவி...

யுத்த களம் அதாகுதமாகிறது.

வீரர்கள் வாட்களைச் சுழற்றியும், அம்புகளைத் தொடுத்தும், உலக்கைகளால் அடித்தும், கதாயுதங்களால் தாக்கியும், ஈட்டிகளைப் பாய்ச்சியும், வேல்களை எறிந்தும் புரிகிற சாகசங்கள், முதல் நாள் யுத்தத்தை நினைவு படுத்துகின்றன.

கனைப்புகளும் பிளிறல்களும் ககனத்தையே கலக்கின. மதநீர் சொறியும் யானைகள்; விலாழி தள்ளும் புரவிகள்!

கடகடத்த தேர்ச் சக்கரங்களின் ஓசை; சடசடத்துப் பிணங்கள் சாயும் சத்தம்!

மகதத்தை அடகு வைத்தோம் என்று மருண்டிருந்த வீரர்கள், மார்தட்டி, தோள்தட்டி, பின்னர் குள்கொட்டிச் சுழன்று சுழன்று சமர் புரிகிறார்கள்.

அன்றைக்கு அந்தி சாய்ந்ததும் அமர்க்களம் ஓய்ந்தது.

இப்படி ஒரு நாளா? இரு நாளா? இருபது நாட்கள் உருண்டும் ஓயாத போர், போர், போர்...

இதற்குள் ஏற்பட்ட சேதங்கள்...

நொறுங்கிய தேர்ச் சக்கரங்கள்; குத்துண்ட குதிரைகள்; துதிக்கை, வெட்டுண்ட யானைகள்: முழங்கால் துண்டித்த ஒட்டகங்கள்; தலை உருண்டு முண்டமாய் துடிக்கும் வீரர்கள்...

ரத்தப் பிரவாகத்தில் நிணங்களும் பிணங்களும்...

ஆ! பார்க்க என்னே பயங்கரம்!

பெருத்த சேதம் அங்கநாட்டுக்குத்தான்...

அம்பு எறிந்தது போதும் என்று இந்த மூன்று தினங்களாக அஜாதசத்ரு, புரவியின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு வளைய வளைய விரட்டி வாளைத் திருமாலின் சக்கரம் போலச் சுழற்றி எதிரிகளைத் துவம்சம் செய்த வீர சாகசம்...

அது ஓர் அங்கத்துப் பரணிக் காப்பியமாகத் திகழ்ந்தது.

அஜாதசத்ருவின் வீர சாகசங்களைக் கண்டு மகத சக்ரவர்த்தியே மலைத்துப் போனார்! இவன் அர்ச்சுனன் மகன் அபிமன்யுவா? ராவணன் மகன் இந்திரஜித்தா?

பிம்பிசாரச் சக்ரவர்த்தியும் புரவியில் ஆரோகணித்துப் பகைவர்களின் தலைகளைக் கொய்து பூச்செண்டாடுகிறார்.

தொலைவில் ரத சகிதமாக நின்று கவனிக்கிறான் அங்கராஜன் பிரம்மதத்தன். அவனது கண்களில் அக்கினி ஜுவாலைகள். துணை வந்தவர்களும் தப்பினால் போதும் என்று ஓட்டம் பிடித்தனர். ஐயகோ! சொர்ண பூமியாம் அங்கத்தின் கதை சொப்பனமாய் முடியப் போகிறது!

இனி ஒரே வழி...

அஜாதசத்ருவையும் பிம்பிசாரனையும் வீழ்த்தினாலொழிய வெற்றி காண்பது முயற்கொம்பு.

தனது சேனாதிபதியைச் சத்தமிட்டு அழைக்கிறான்.

புரவியைத் திருப்பிக் கொண்டு வேகமாக வந்து நிற்கிறான் அங்க சேனாதிபதி. புரவி மூச்சுத் திணறல் கண்டு நுரை தள்ளிய வாயோடு முகத்தை அண்ணாத்திக் கனைக்கிறது.

"சேனாதிபதி! இன்றைய மாலைக்குள் ஒரு முடிவுக்கு வரவில்லையானால், நாளை அங்கம் அஸ்தமித்துவிடும். நீ ஜனகபுரத்தானை நேர்முகமாகத் தாக்கு! முடிந்தால் அவனைக் கொன்றுவிடு. நான் பிம்பிசாரனைக் கவனித்துக் கொள்ளுகிறேன். ஒன்று மட்டும் உறுதி. இன்று அந்தி சாய்வதற்குள் ஒன்று, அவர்கள் சாயவேண்டும்; இல்லை, நாம் சாய்ந்துவிட வேண்டும்... இந்த வஞ்சினத்தோடு செயல்படு! புறப்படு; வேகமாகப் புறப்படு! வேதனைக்கு மாறாகச் சாதனையைக் கொண்டு வா!"

சீற்றமெனப் பிறந்தது அங்கத்தின் ஆணை! இனி கூற்றுவன் யார் பக்கம் நின்றால் என்ன? நடந்தால் என்ன? ஓடினால் என்ன? விழுந்தால் என்ன?— என்ற முடிவுடன் புரவியைப் புயலாக விரட்டுகிறான் அங்க சேனாதிபதி.

அங்கராஜன் பிரம்மதத்தனோ, பிம்பிசாரனைப் பிழிந்தெடுக்கிறேன் அல்லது ஒழிந்து சாகிறேன் என்ற வெறி நிலையில் குதிரையைப் பிடரி சிலிர்க்க விரட்டுகிறான்.

அஜாதசத்ருவை நெருங்கிக் கவனிக்கிறான் அங்க சேனாதிபதி.

எங்கும் இரைச்சல்; இடிபாடு; உலக்கையால் எலும்புகளை நொறுக்கும் ஓலம்!

அஜாதசத்ருவின் சாகசக்கியங்கள், அங்க சேனாதிபதியை அலறச் செய்கின்றன. இவனைத் தனித்து எதிர்த்து வெல்ல முடியாது என்கிற முடிவுக்கே வந்து விடுகிறான்.

யானையைப் பிடிக்கும் ராஜ தந்திரம் இவனுக்கும் தேவை. நரிக்குணமாய்ச் சிந்திக்கிறான் சேனாதிபதி. அந்தச் சிந்தனையைத் தவறு சொல்ல முடியாது என்றும் தன்னைச் சமாதானம் செய்து கொள்கிறான்.

இதற்குள் மகத சக்ரவர்த்தி பிம்பிசாரன் அருகே நெருங்கிய அங்கராஜன் பிரம்மதத்தன், வெறி கொண்ட ஆவேசத்துடன் தாக்க முற்பட்டு விட்டான். வருகிற மரணம் எப்போது வந்தால் என்ன? எப்படி வந்தால் என்ன?

மகத சக்ரவர்த்தி பிம்பிசாரன் மருண்டு போனார். ஓ... இவன் இரண்டில் ஒன்றைப் பார்த்துவிட முடிவு செய்து விட்டான். கவனம் தவறினால் மரணம் நிச்சயம்.

மகத ராஜ வாள், மந்திரமாகப் பேசத் தொடங்கி விட்டது.

மகத சக்ரவர்த்தி தமது குதிகாலைப் புரவியின் விலா எலும்பில் ஓங்கி உதைத்துச் சற்றே பின்வாங்குவது போல பாவனை செய்து, திடுமென்று புரவியைத் திருப்பி வேகமாக வாளை வீசிச் சுழற்றுகிறார். இரு புரவிகளும் சமயத்தில் முட்டி மோதிக் கனைத்துக் கொள்ளவும் செய்கின்றன.

ஓகோ... போர்க்களம் இன்றோடு முற்றுப் பெறும்; ஜயமகள் யார் கழுத்தில் மாலையை அணிவிக்கப் போகிறாள் என்பது தெரிந்து விடும் என்றெண்ணி, சூரியன் கூட ஒரு கணம் தனது பயணத்தை நிறுத்திப் பார்வை யிடுகிறான்.

போரிசைக் கருவிகள் இருபுறமும் இப்போது மும்முரமாகவே முழங்குகின்றன.

சங்கு மட்டும் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறது. அது ஜயமகளின் உத்தரவை எதிர்பார்க்கிறது.

இதற்குள்...

அங்க சேனாதிபதி பொறுக்குமணிகளாகப் பதின் மரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, பக்கத்தே இருந்த சிறிய குன்றை நாடிச் செல்கிறான். அடிவாரத்தில் நெடி தோங்கிய பாறையின் பின்புறமாக அவர்கள் செல்கிறார் கள். கண்களிலிருந்து போர்க்களமும் மறைகிறது.

விடு விடு விடுவென குதிரைகள் குளம்பொலி...

மத மத மதவென மத்தகப் பிளிறொலி...

ஒடுங் கொடுங் கொடுங்கென ஒட்டக நடையொலி...

கிணு கிணு கிணுங்கென வீரர்கள் வாளொலி...

தட தட தடவென ரதங்களின் விரைவொலி...

இந்த ஒலிப் பின்னணி மட்டுமே செவிகளில் பட, பாறைக்குப் பின்னே சென்றவர்கள் அவசர அவசரமாகச் சிந்திக்கிறார்கள்.

அஜாதசத்ருவை எவ்வழியிலும் வீழ்த்திவிட வேண்டும். அதே மூச்சோடு பிம்பிசாரனை நோக்கி விரைய வேண்டும். அவனை எதிர்த்துப் பொருதும் தங்கள் அரசனுக்குத் துணை நின்று இதே வஞ்சகத்தின் மூலம் வெற்றி தேடி விட வேண்டும்.

சுறுசுறுவென்று அவர்கள் ஆலோசனையை முடித்துக் கொண்டு, விறுவிறுவென்று செயல்படத் தொடங்கினர்.

பதின்மரும் பத்துப் புரவிகளில் வேக வேகமாக ஆரோகணிக்கிறார்கள்.

ஒரு குதிரையின் வயிற்றுப் புறமாக ஒல்லியான உப தளபதியைக் குதிரையின் நிறமொத்த துணியால் பிணைத்

திருந்தனர். குதிரையின் மார்பும் உபதளபதியின் முதுகும் இணைந்தாற்போலக் கட்டப்பட்டிருந்தாலும் இரு கைகள் மட்டும் தாராளமாக விடப்பட்டிருந்தன. ஓரமாக நீண்ட வாள்.

அஜாதசத்ரு பகைவர்களைச் சம்காரம் செய்து கொண்டிருக்கிறான்.

மூலைக்கு ஒன்றாக வருவது போல் பாவனை செய்து பத்துக் குதிரைகளும் அவனை நோக்கி வருகின்றன. அஜாதசத்ருவைச் சூழ்ந்தும் கொள்கின்றன. வாட்களின் ஓசை முன்னிலும் சற்றும் கண்டு ஒலிக்கிறது.

ஒரு குதிரையின் மார்புடன், முதுகைப் பிணைத்துக் கட்டியிருந்த உபதளபதியானவன், மெல்ல வாளை எடுத்துச் சரியான சமயம் பார்த்து அஜாதசத்ரு ஆரோகணித்திருந்த குதிரையின் உயிர் நிலை நோக்கிப் பாய்ச்ச...

குதிரை வீரிட்ட கனைப்புடன் தரையில் வீழ்ந்து பட்டது.

ஓ... ஏதோ அசம்பாவிதம் நிகழ்ந்து விட்டது என்பதை அக்கணமே உணர்ந்து கொண்ட அஜாதசத்ரு, தரையில் விழுந்த மறுகணமே வாளையூன்றி எழுவதற்குள், ஒருவன் குத்துவாளை எடுத்துக் குறி பார்த்து வீசினான். அது அஜாதசத்ருவின் இடுப்பில் செருகிக் கொள்ள, அதையும் மீறி அவன் எழ முயல்கிறான்.

ஐந்து குதிரைகள் இமை மூடி இமை திறப்பதற்குள் பிறை வட்டமாக இணைந்து சூழ்ந்து அஜாதசத்ருவை, மற்றவர் கண்களில் படாமல் மறைக்கின்றன. அது போலவே மேலும் ஐந்து குதிரைகள் மேலும் மறைக்க, அங்க சேனாதிபதியின் வாள் அக்கிரமமாக அஜாதசத்ருவின் மார்பில் பாய்ந்தது. அங்கே கவசம் இருக்க, 'நங்'கென்று ஓசை கேட்டது. அடுத்து, கொஞ்சமும் தாமதியாமல் அந்த வாள் நெஞ்சுள் பாய்ந்தது ! அந்தோ...

சுறுசுறுப்பாக இயங்கித் திட்டத்தை நிறைவேற்றி விட்ட பதின்மரும் மகத சக்ரவர்த்தியைக் குறி பார்த்துப் புயலெனப் பறந்தனர்.

ஆனால், அங்கே...

சோணதண்டன் சபதம் நிறைவேறி இருந்தது. மகத சக்ரவர்த்தியின் *வாள் அங்கராஜன் பிரம்மதத்தனை ரத்தப் பிரவாகத்தில் மிதக்கச் செய்து விட்டது.

மகத சங்கம் முழங்குகிறது. ஜயபேரிகை கொட்டுகிறது. நாகக்கொடி கம்பீரமாகப் பறக்கிறது. ஆனால்...

அஜாதசத்ரு விழ்ந்து விட்டான் என்கிற அவலச் செய்தி கேட்டு அலறிப் போனார் மகத சக்ரவர்த்தி பிம்பிசாரன். ஓடோடிச் சென்று அஜாதசத்ருவைத் தூக்கி மடியில் கிடத்திக் குழந்தைபோல் அழுகிறார், ராஜகிருகத்து ராஜன்.

ஓ... சமயத்தில் வந்துதவிய சண்டமாருதனே! உனக்கா இந்தக் கதி...?

அன்று மாலையே சம்பா நதிக்கரையில் மகத சக்ர வர்த்தியே அஜாதசத்ருவுக்கு ஈமக்கிரியைகளைச் செய்தார்.

---

*அங்கத்தைப் பிம்பிசாரன் வென்றது குறித்துப் பலவித முரண்பாடுகள் உண்டு. இவன் யுவராஜனாக இருந்தபோது, தந்தையின் வெற்றியாகக் கொண்டான் என்கிறது. A manual of Buddhism by Hardy— P. 163 N (Account Based on the Tibetan Dulva : Journal and Proceeding of the Asiatic Society of Bengal—1914—321) அங்கத்தை பிம்பிசாரன் வெற்றி கண்டு தனது மகன்களில் ஒருவனுக்கு (அஜாதசத்ரு என்றும் ஒரு குறிப்பு வருகிறது.) தந்ததாக ஒரு செய்தி. அங்கத்தை அஜாதசத்ரு வென்றான் என்கிற இன்னொரு குறிப்பும் வருகிறது. (Hindu Civilization by R.K. Mookerji) எனது புதிய கற்பனைக்கு இந்த முரண் பாடே காரணம்.

உடனிருந்து உதவியவர் அந்தணர் சோணதண்டர். தனது சபதத்தை நிறைவேற்றுவதற்காகவே ஆண்டவன் இவனை அனுப்பினானோ? இவனது ஆத்மா சாந்தி பெறுவதாக!

குங்குமச் சூரியன் குடவாயிலில் சாய்ந்து கொண்டிருந் தான்.

அங்கக் கோட்டையில் நாகக்கொடியைப் பறக்கவிட்டு, அரண்மனையில் பிரவேசிக்கிறார் பிம்பிசாரன். ஜனக புரத்து வீரர்களுக்கு மட்டுமே அரண்மனையிலிருந்த பொன் மணிகளை வாரி வாரிக் காணிக்கையாகத் தருகிறார். அடுத்து சிறையில் அடைப்பட்டுக் கிடந்த மருத்துவமேதை ஜீவகனை விடுவித்து அழைத்து வருகிறார்கள். அவனை மார்புறத் தழுவிக் கொள்கிறார் பிம்பிசாரன். அவனை விடுவிக்கத் தொடுத்த யுத்தமல்லவா இது!

ஒரு வார ஓய்வுக்குப் பிறகு மகத சக்கரவர்த்தி புறப்படுகிறார்.

அந்த அங்க நாட்டையே ராஜ விசுவாசியான அந்தணர் சோணதண்டனுக்கு *தானமாக வழங்குகிறார். அந்த வருமானத்தைக் கொண்டு விரும்பிய வேள்வி செய்ய உத்தரவிடுகிறார்.

மனம் நெகிழ்ந்து போன சோணதண்டன், எதையோ கேட்க வாய் திறக்கிற போது, ஒருசெய்தி நாகாஸ்திரமாய்ப் பாய்ந்து வருகிறது. அது—

'அரண்மனைப் பெண்டிருடன், சாலவதியும், சிரீமாவும் தப்பி விட்டார்கள்...'

பிரமித்துப் போனார் பிம்பிசாரன்.

---

* அங்கத்தை வென்று சோணதண்டன் என்கிற அந்தண னுக்குத் தானமாக அளித்தான் என்கிற குறிப்பு (Political History of Ancient India by Hemachandra Roy Chou-dhuri ; பகவான் புத்தர்- தர்மானந்த கோசம்பி) வருகிறது.

பிடகம்-4

அஜாத நிகாமம்

வானப் பேரரசின் சூரிய மகாசக்ரவர்த்தி பிரகாச நகை புரிந்து கொண்டிருக்கிறான்.

அங்கதேசத்து வெற்றிச் செய்தி பதினைந்து தினங்களுக்கு முன்பே மகதப் பேரரசின் தலைநகராம் *ராஜகிருகத்துச் செவிகளுக்கு எட்டிவிட்டது.

அதோ...

வெற்றி கீதம் ஒலிக்க மகத சக்ரவர்த்தி பிம்பிசாரன், ராஜகிருகக் கோட்டையை நெருங்கிக் கொண்டிருக்கிறார்.

ராஜகிருகம் விழாக் கோலம் பூண்டு அலங்காரத் திருநகராய்த் துலங்குகிறது.

கங்கையெனும் நீரழகி, வடக்கு மேற்காய் வளைந்தோடுகிறாள். எழுந்து நின்று வணங்க முடியவில்லையே என்று அவள் வருந்தினாலும் அலைக்கரம் கொட்டி ஆர்ப்பரிக்கிறாள்.

இயற்கை சித்து விளையாடும் தலைநகர் அது. சுற்றிலும் மலையரண்கள். இவற்றின் அரசச் சிகரம் வைஹாரா. மேலும், ரிஷப மலையும் ரிஷி மலையும்...

படை கொட்டித் தொடை தட்டிப் பகைவர் நுழைய முடியுமா? அந்த மலை அரணுக்கு இருப்பன இரண்டே வழிகள்: கணவாய்கள்! கண்களில் பலத்தைத் தேக்கிய காவல்

* இன்றைய தென் பீஹார்.

கள். ஈ நுழைய முடியாதென்றால் எவர்தாம் நுழைந்துவிட முடியும்?

ஏறத்தாழ பத்து மாதங்களுக்குப் பிறகு, ராஜகிருகக் கோட்டைக் கபாடங்கள் பெருத்த ஓசையோடு திறவுபடுகின்றன. அங்கே பொருத்தப்பட்ட சின்னச் சின்ன பொன்மணிகள் சுரஜாலம் செய்கின்றன.

வாசலில், அரச அந்தணர் கூடதண்டன் குழுவினர், வேத கோஷமெழுப்பித் தங்கள் வேந்தருக்கு நலம் சேர்க்கின்றனர்.

பூரண கும்பங்களையும் பொலம் பாலிகைகளையும் பூவையர் கூட்டம் பொன்முறுவலுடன் ஏந்தி நிற்கிறது.

மகா ஆமாத்தியரான முதலமைச்சர்— அந்தண மகா புருஷர் வஸ்ஸகாரன், சக்ரவர்த்தியை வரவேற்கக் காத்திருக்கிறார். அவரது பக்கத்தில் இரண்டாம் ஆமாத்தியர் சுநீதன்.

ராஜகிருகத்து மங்கல வாத்தியங்கள் முன்னே முழங்கி வர, பின்னே யானைகள் மீது இரட்டை முரசங்கள் ஆர்ப்பரிக்க, சங்குகள் ஒலியெழுப்ப, துந்துபிகள் கோஷமிட, நடுநாயகமாகப் பொன் முகப்படாம் அணிந்த பட்டத்து யானை மீது மகத சூரியன் சிசுநாகப் பிரகாசத்துடன் அம்பாரித்து வருகிறார். இருபுறமும் கவரிச் சாமரங்கள் சேவிக்கின்றன.

சக்ரவர்த்திக்குப் பின்னே அலங்காரச் சிவிகையில் மருத்துவமேதை ஜீவகன்; புரவிகளில் மகாசேனாதிபதி, சேனாதிபதிகள், உபசேனாதிபதிகள், வீரர்கள்...

பிம்பிசாரன் கோட்டைக்குள் பிரவேசிக்கிறார்.

வேத முழக்கமும் நாத முழக்கமும் உச்சஸ்தாயியில் ஓங்கரிக்கின்றன.

ராஜகிருக அரண்மனை ராஜ கும்பீரமாக அலங்கரித்துக் காணப்படுகிறது. மேலே பொன்னாலான கலசங்கள் சூரியப் புன்னகை புரிகின்றன. நெடிதோங்கிய நாகக்கொடி சீற்றமுடன் படபடக்கிறது.

மகத சக்ரவர்த்தி பிம்பிசாரன், அரண்மனை வாயிலை அடைந்ததும் அம்பாரியிலிருந்து இறங்குகிறார்.

வேதமும் நாதமும் மேலும் மேலும் ஓங்கி, விண்ணை எட்டி மண்ணில் எதிரொலிக்கின்றன.

தலைமைப் பணி மகளிர் கண்ணேறு கழிக்கிறார்கள். இரண்டாம் பட்டத்து அரசியான வைசாலித் திருமகள் செல்லனாதேவி ராஜதிலகமிடுகிறாள்.

பக்கத்தே அவள் பெற்ற பாலகர்கள் ஹல்லன், விஹல்லன்.

ஏனைய அந்தப்புரப் பதுமைகளான இராக்கால நட்சத்திரங்கள் தொலைவில் நின்று, பகலில் கண் சிமிட்டி எந்த இரவோ எங்கள் இரவு என்பது மாதிரி புன்முறுவல் பூக்கின்றனர்.

சக்ரவர்த்தி பிம்பிசாரன் கண்கள், சுற்றிலும் வலம் வந்து யாரையோ தேடுகின்றன. இதனை ரகசியமாக நோட்டம் விடுகிறார் மகா ஆமாத்தியர் வஸ்ஸகாரன்.

"சக்ரவர்த்திகள் பட்டத்தரசியாரைக் காணோமே என்று தேடுவது புரிகிறது. அவர் பேறு காலத்தில் இருக்கிறார். நேற்றிரவிலிருந்தே வலி கண்டு தவிக்கிறார்" என்று உரைத்து மகிழ்கிறார் வஸ்ஸகாரன்.

மகத சாம்ராஜ்யமே திரண்டு அதரங்களில் அமர்ந்தது போல மகிழ்வு கண்டு சிரிக்கிறார் சக்ரவர்த்தி பிம்பிசாரன்.

எந்தப் பட்டத்தரசி— கோசல நாட்டுக் குமரி— வைதேகிக்கு மகப்பேறு இல்லையே என்று மகதமே

வருந்தியதோ, எந்த மகதமாதேவி ஆண் மகவைப் பெற்றுத் தருவாள்— மகதத்துக்கு நிறைவான வாரிசு கிடைக்கும் என்று வேள்விகளை நடத்தித் தானங்களை வழங்கி மன்னர் எதிர்பார்த்தாரோ, அந்த மாதேவி மகப்பேறு அவஸ்தைப் படுகிறாளா?

ஓ... நாம் யுத்தத்துக்குப் புறப்படுமுன் அவளது திருவயிற்றில் உதயப் பூவை அர்ச்சித்துப் புறப்பட்டிருக்கிறோம் போலும்! அந்தப்பூ— ஆ! தெய்வமே! ஆணாக மலர வேண்டும்! இந்த வெற்றி விஜயத்தின்போது மலர விருக்கிறது!

பிம்பிசார மகத மன்னர் பூரிப்பால் மேலும் மேலும் சிரிக்கிறார்.

இதனைக் கண்டு ஜீரணிக்க முடியாமல் தவிக்கிறாள் செல்லனாதேவி. தனக்கு இருபிள்ளைகளிருந்தும் இவருக்கு வைதேகிப் பிரசவமல்லவா பிரகாசிக்கிறது!

இந்தத் தேனனைய செய்தி கேட்ட மறுகணமே அந்தப்புரத்தை நாடி விரைந்தான் மருத்துவமேதை ஜீவகன்.

மகத சக்ரவர்த்தியும் வலக்காலை அரண்மனையில் பதித்து வேகமாக நுழைகிறார்.

எங்கும் 'ஜய விஜயீபவ' என்ற வாழ்த்துக் குரல்கள் பெருமிதமாக எழுந்து ஒலிக்கின்றன.

அழகின் சிரிப்பாய் ஒளிர்கிறது அந்தப்புரம்.

வைதேகி மாதேவிக்கென அமைந்த தனி மாளிகையில், தோழிப் பெண்கள் சுறுசுறுப்பாக இயங்குகிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, ஜீவகன் மனைவி மாயாதான் பேறுகால வைத்தியம் பார்க்கிறாள். கணவர் வந்து விட்டார் என்கிற இரட்டிப்பு மகிழ்ச்சி வேறு. மீட்டு வந்த

மகதப் பெம்மானின் பாட்டுடைத் தலைவியின் பிரசவ மாயிற்றே! எனவே, பாசமும் பரபரப்பும் கொண்டு கவனிக்கிறான்.

வெளியே கணவர் வந்து அழைக்கிறார் என்று செய்தி வருகிறது. ஓடோடிச் சென்று கவனிக்கிறாள். அவளது கணகளில் நன்றியின் விசுவரூபம் நளினமாய் விரிகிறது.

"மாயா! மாதேவியார்க்கு எப்படி இருக்கிறது... சுகப்பிரசவம் கண்டு விடுமல்லவா?" என்று பரபரத்துக் கேட்கிறான் ஜீவகன்.

"சுகப்பிரசவம் கண்டு விடும்... பயமில்லை."

அதற்குள் மகத சக்ரவர்த்தி பிம்பிசாரன் அங்கு வந்து விட்டார். செய்தி அறிந்து மகிழ்கிறார். ஓ... தெய்வமே! ஆண் மகவைக் கொடு!

'வீல்' என்ற மழலைநாதம், மூடியிருக்கும் கதவுகளைக் கிழித்துக் கொண்டு ஒரு மாவீரக் கர்ஜனை போல் ஒலிக்கிறது.

பறந்தோடுகிறாள் மாயா.

அடுத்து...

"இளவரசர் உதயம் கண்டு பிரகாசிக்கிறார்!" — என்ற செய்தி வருகிறது.

செய்தியா அது? தேவர்கள் அனுப்பிய சீர்வரிசைச் சொற்கள்! ஒவ்வொரு எழுத்தும் வைர வைடூரியங்கள்.

புளகத்தால் பூரித்துப் போகிறார் மகதத்து மத்தகமான பிம்பிசாரன். கண்களில் நூறு கோடி சூரியப் பிரகாசம்.

ஆனால், செல்லனாதேவியின் கண்கள்...?

வடவாக்கினியையே வரவழைத்துப் புகைகிறது. என் பிள்ளைகளுக்கு என்ன குறை? இவர்களும் மகோன்னதமான வைசாலியின் பேரப் பிள்ளைகள்தாமே?

இத்தனைக்கும் கோசல நாட்டு ராஜமங்கையான கோசலாதேவி எனும் *வைதேகியைத்தான், மகத சக்ரவர்த்தி முதலில் மணந்தார். அடுத்த ஆண்டே நாட்டின் நவன் கருதி விச்சாவிய குலப்புத்திரியான செல்லனாதேவியை மணந்தார். செல்லனாதேவிக்கு விரைந்து ஒன்றுக்கு இரண்டாகப் புத்திர சந்தானம் கிடைத்து விட்டது. இந்த ஏழாண்டு காலமாக வைதேகிக்குப் புத்திர பாக்கியமில்லாதது கண்டு மலடி என்று தீர்மானித்தவர்களும் உண்டு.

இன்று, அந்த அபாக்கிய விருது மறைந்து போனதில் யாருக்குத்தான் மகிழ்ச்சி இராது?

அடுத்து, நடைபெறவிருக்கும் பெயர் சூட்டு விழா வரையில் மகத சாம்ராஜ்யமே மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கி, விழாக்கோலம் காணட்டும்; வேள்விகள் நடக்கட்டும்; தானங்கள் கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று ஆணை பிறப்பிக்கிறார் சக்கரவர்த்தி பிம்பிசாரன். இந்தத் தித்திக்கும் ஆணை எத்திக்கிலும் எதிரொலித்தது.

---

* பிம்பிசாரனின் இரு மனைவியர் குறித்தும் செய்திகள் முரண்படுகின்றன. ஆழ்ந்து ஆராய்ந்ததில், செல்லனாதேவி, வைசாலியைத் தலைநகராகக் கொண்ட வஜ்ஜியர் புதல்வி என்றும், கோசல நாட்டு மன்னன் பிரசேனஜித்தின் தங்கை வைதேகி என்றும் தெரிய வந்தது. 'வைதேகி புத்திரன்' என்ற சொற்களைக் கொண்டு 'லலிதவிஸ்தர'மும், 'ஆசாரங்கசூத்திர'மும் குழப்பினாலும், வைதேகி விதேக நாட்டவளல்ல; 'வைதேகி' என்ற பெயர் வைதேகிக் குலத்துக்குரியது என்பது தெளிவாகப் புலப்படுகிறது.

சுப தினச் சுப ஓரையில் மகதத்துச் சுந்தரச் செல்வனான வைதேகிப் புத்திரனுக்குப் பெயர் சூட்டு விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

வேதியர்கள் வேதகீத மிசைத்து யாகம் வளர்க்கிறார்கள்.

ராஜகிருகத் தலைநகரமே ராஜ புன்னகையில் ராஜ நடை போட்டு ராஜ விழாக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

அனைத்துச் சடங்குகளும் சம்பிரதாயப்படி இனிது நிறைகின்றன.

அரச அந்தணன் கூடதண்டன் பஞ்சாங்க ஓலைச் சுவடியை எடுத்துப் பிரிக்கிறான்.

சித்திரைத் திங்களில் பிறந்த செல்வன்...

மகப்பேற்று நீராடி மஞ்சள் பூசிக் குங்குமமிட்டு, சுகப்பேறு கண்ட சுந்தரச் செல்வனை மடியில் தாங்கிய மகதமாதேவி வைதேகி, வலக்கரத்தில் அபய முத்திரை பதித்து, அன்புக் கணவர் ராஜ பௌருஷமான பிம்பிசார மகத சக்ரவர்த்தியை நோக்கிப் புன்னகை புரிந்து, "பிரபோ! எனக்குள் ஒரு சங்கல்பம்! ஏன், பிராயச்சித்தமென்றும் சொல்லலாம். எடுத்துக் கூறலாமா?" என்றாள்.

சக்ரவர்த்தியும் அன்புடன், "என்ன தேவி?" என்று வினவினார்.

"பிரபோ! உங்கள் அங்க வெற்றிக்குக் காரணமானவர் ஜனகபுரத்து அரசர் அஜாதசத்ரு! வெற்றியையும் கொடுத்து, வீர சொர்க்கமும் புகுந்து விட்டார். அந்த நல்லவரின் திருப்பெயரை நமது செல்வனுக்கு நன்றிக் கடனோடு இட்டு மகிழ்ந்தால் என்ன என்றுதான் கேட்கிறேன்."

கண்களை உருட்டி ஆலோசிக்கிறார் பிம்பிசாரன்.

தொலைவில் சில கண்கள், புண்களுக்குக் கொப்புளம் எங்கு புறப்படுமோ என்று துருவி ஆராய்ந்து இமைகளைச் சாமரமாக்குகின்றன.

அந்தணரை நோக்குகிறார் பிம்பிசாரன்: "பஞ்சாங்கம் என்ன சொல்லுகிறது?"

கூடதண்டன் சொன்னான்: "'கூ' என்ற எழுத்தில் பெயர் வைத்தால் நன்மைகள் கூடிவரலாம்."

தலையசைத்த வண்ணம் மீண்டும் யோசனைகளில் மூழ்குகிறார் பிம்பிசாரன். முடிவாகச் சொன்னார்: "அந்தணர் சொல்வதை நான் ஆதரிக்கிறேன். எனவே, இவன் பெயர் கூனிகா!"

கூனிகா...

குரலில் அழுத்தம் திருத்தம் செய்து, திருத்தம் அழுத்தமானது.

"பிரபோ! அருள் கூர்ந்து என் பேச்சைத் தட்டாதீர்கள். நன்றியுள்ள வமிசம் நாகவமிசம்! நான் சொல்வதைக் கேளுங்கள்!"

"இல்லை, இவனது பெயர் கூனிகா!"

இங்கேயே தகராறு தொடங்கியதில் சின்னதேவி செல்லனாவுக்கு உள்ளூற ஓர் அற்ப மகிழ்ச்சி.

வைதேகி கேட்டாள்: "இந்தப் பெயர் நன்றாகவா இருக்கிறது?"

"ஏன் நன்றாக இல்லை?"

"உங்கள் ஆரம்பகாலப் பெயர்..." என்று நீட்டிச் சற்றே பெயர் சொல்லத் தயங்கி, "பிறகு... என்று வைத்துக் கொள்ள வில்லையா?"

"எனது ஆரம்ப கால சிரேனிகா என்ற பெயர் நன்றாக இல்லை என்று நான் மாற்றியமைத்துக் கொள்ள வில்லை. என் தந்தையார் பின்னால் பிம்பிசாரன் என்ற பெயர் நன்றாக இருக்கிறது என்று வைத்தார். நானும் தட்டாமல் ஏற்றுக் கொண்டேன்."

"இவனது தாயாகிய நான், அஜாதசத்ரு என்ற பெயர் நன்றாக இருக்கிறதென்கிறேன். நீங்கள் ஏற்கக் கூடாதா?"

அந்த நேரத்தில்...

ஒரு பவித்திரமான செய்தியறிந்து அருகே வந்து அறிவித்தார் மகா ஆமாத்தியர் வஸ்ஸகாரன்; "சக்ர வர்த்தி! அண்மையில் கபில வஸ்துவில் துறவு பூண்ட கௌதமர் நம் தலைநகர் எல்லைக்குள் வந்திருக்கிறாராம்! இப்போதுதான் செய்தி வந்தது."

ஆச்சரியம், மகிழ்ச்சிக்குத் தீபமேற்றியது. "சாக்கிய மன்னர் சுத்தோதனரின் மைந்தர் கௌதம சித்தார்த்தர் வருகை தந்திருக்கிறாரா? நல்ல சகுனம்! ஆமாத்தியரே! நானே அவரை எதிர்கொண்டு அழைக்க வேண்டும். எங்கே தங்கி இருக்கிறார்?"

"பாண்டவ மலையில்..."

"பயணத்துக்கான ஏற்பாடுகளைக் கவனியுங்கள்" என்று கூறிய பிம்பிசாரன், பட்டத்தரசியை நோக்கி, "வைதேகி! நமது சர்ச்சைக்கு இன்னும் சற்று நேரத்தில் நல்ல முடிவை கௌதம சித்தார்த்தரே கூறட்டும்" என்று சொல்லிச் சிரித்த வண்ணம் எழுந்து சென்றார்.

அரண்மனைக்கு வெளியே புறப்பாட்டுக்கான மங்கல வாத்தியங்கள் முழங்குகின்றன.

செல்லனாதேவியின் கண்கள் சிவந்து எரிதழலைக் கக்குவதைக் கண்டு, அந்தப்புரத்துக் காமப் பூக்களில் ஏமப் பூவான அஞ்சனாவின் அஞ்சன விழிகளின் மஞ்சுக இமைகள் மர்மமான மன்மதக் கதைக்குக் கட்டியம் கூறிப் படபடத்தன.

பிடகம்-5

கௌதமர் வருகை

ஆ...! இந்த இளம் வயதில் இப்படி ஒரு துறவா...?

கௌதம சித்தார்த்தரை நோக்கிய ராஜகிருக மக்கள் வியப்பின் மூக்கில் விரல் வைத்து வியப்பையே வியக்கச் செய்கிறார்கள்.

அதோ, அரச பரிவாரங்கள் வருகின்றனவே...!

பாண்டவர் மலைப்பகுதியில் ஒரு நாவல் மரத்தடியில் அமர்ந்து காணப்பட்ட கௌதம சித்தார்த்தர், மூடியிருந்த இமைகளைத் திறந்து கவனிக்கிறார்.

'இந்த மண்ணில் சிரமணர்கள் (துறவிகள்) தோன்றிக் கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் ஏதேதோ போதனை களை, வாங்குவாரற்ற மானுடர்களிடம் இலவசமாக விற்பனை செய்து கொண்டே இருக்கிறார்கள். விலையற்ற போதனைகள் என்பதாலோ, விலைக்கு என்றால் மானுடம் விழிகளைப் பிதுக்கும் என்பதாலோ, இவர்களுடைய போதனைகள் இவர்களுடனேயே சவக்குழிக்குள் புகுந்து சண்டை நடத்துகிற துரதிர்ஷ்டம் ஏற்பட்டு விட்டது. இதோ நான் உதயமாகி இருக்கிறேன்' என்பதுபோல, கௌதமருடைய கண்களில் தீட்சண்யம் தீபமேற்றிக் கொண்டிருக்கிறது.

இன்னும் பிடரிக்குப் பின்னே பிரபை தோன்ற வில்லை. உண்மை ஒளி காண, தீப்பந்தம் ஏந்திய ஆரம்ப கட்டம்.

அரண்மனைப் பரிவாரங்கள் அருகே நெருங்கி வந்து நிற்கின்றன.

ஓகோ! மகத மன்னர் பிம்பிசாரன் வந்திருக்கிறார். மக்கள் விலகி நின்று வணங்கி நிற்கிறார்கள்.

நாவல் மரத்தடியில் அமர்ந்திருந்த கௌதமரை நாடி வந்து நின்ற மகத சக்ரவர்த்தி பிம்பிசாரன் அன்புடன் கேட்டார், "சாக்கிய இளவரசே! இந்த வயதில் இப்படி ஒரு துறவை ஏற்கலாமா? இது தேவையா?"

அதரங்களில் ஞானஒளி தெளிய, "எது தேவை? எது தேவையில்லை? உங்களுக்கு ஆடை ஆபரணங்கள் தேவை; எனக்குத் துவராடை தேவை. உங்களுக்கு வீடு, நாடு! எனக்கு வீடு, காடு! இதில் தேவையென்ன? தேவையற்றது என்ன?" என்றார் கௌதமர்.

"யுக யுகாந்திரமாக யாரும் சொல்லாததை நீங்கள் என்ன சொல்லிவிடப் போகிறீர்கள்?"

"அது குறித்துத்தான் சிந்திக்கிறேன்; சொன்னவை அனைத்தும் சொப்பன ஏடுகளாய்ச் சுரைக்குடுக்கையில் புகுந்து கொண்டன. ஏன்? ஏன்? ஏன்? இந்த உண்மையை அறியவே துறவு பூண்டேன். நான் இன்னும் பூரணச் சிரமணனாகவில்லை. பிரவிரஜ்யை— துறவின் முதல் படி! புதியதாக என்ன சொல்லலாம் என்று தேடுகிறேன், கிடைக்கவில்லை. தலைசிறந்த சிரமணர்களைக் காணத் துடிக்கிறேன், அகப்படவில்லை. இந்த ராஜகிருகத்தை மிதித்துவிட்டு உருவேலா நோக்கிச் செல்கிறேன்."

"உருவேலாவுக்கா? இங்கேயே இருக்கலாம்."

"இங்கே பிம்பிசாரனைத் தவிர வேறெதையும் பார்க்க முடியவில்லை. உருவேலாதான் தனிமையில் சிந்திக்கும் ஞானபீடம்! அதற்குமுன், பழம் பெரும் சிரமணர்களான *ஆளாரகாலமனாரையும் உத்தம ராம புத்தரையும் எப்படியும் சந்திப்பேன். பின் தவமியற்றிப் புத்தனாவேன்!"

* புத்தரின் ஆசான்களாகப் பேசப்படுபவர்கள்.

இமைகள் கொட்டினால் ஓசை கேட்கும் அமைதி.

"கௌதம சித்தார்த்தரே! வந்தது வந்தீர்கள். எனது அரண்மனைக்கு எழுந்தருளிச் செல்ல வேண்டுகிறேன். எனது உதவி எப்போதும் உங்களுக்கு இருக்கும்."

கௌதம சித்தார்த்தர் புன்முறுவல் பூத்தவண்ணம் எழுந்து கொண்டார்.

பொற் பல்லக்கைக் கொண்டு வந்து நிறுத்துகிறார் பிம்பிசாரன்.

கௌதமர் மறுத்து விட்டார். அவர் நடக்கத் தொடங்கினார். சக்ரவர்த்தி முதல் அனைவரும் பின்தொடர்ந்து நடந்தனர்.

ராஜகிருகம் முழுவதும் ஒரே கோலாகலமாக விளங்கியதைக் கவனிக்கிறார் கௌதமர்.

"ராஜன்! தலைநகரில் என்ன விசேஷம்?"

"எனக்கு மகன் பிறந்திருக்கிறான்; அவனுக்கு இன்று பெயர்சூட்டு விழா."

"அப்படியா?"

கௌதமரின் நினைவு, அன்று பிறந்த மகனைப் பிரிந்ததை எண்ணிப் பார்க்கிறது. மின்னல் மாதிரி ஒரு பளீரிட்ட நினைவு ரேகைதான்!

ராஜகிருகத்துப் பிரதான சாலையை அடைகிறார்கள்.

அங்கே பெரிதான வேள்வியொன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஓர் ஆட்டுக்குட்டி, தாயாட்டைக் கூவி அலறுகிறது. அதனைப் பலியிடப் போகிறார்கள்.

அக்காட்சியைக் கண்ட கௌதமர் சற்றே நின்று கவனிக்கிறார். அருகே சென்றும் பார்வையிடுகிறார்.

எவனோ ஒரு பூசாரிக்குச் சந்நதம் வந்து, கையில் கூரிய அரிவாளுடன் படபடத்து, உய்ய்ய்... என்று பயங்கரமாகச் சத்தமிடுகிறான்.

அவனருகே சென்ற கௌதமர், அவனிடமிருந்த அரிவாளைப் பற்றுகிறார்.

"யாரடா, நீ?"

பூசாரி கர்ஜிக்கிறான்.

முதல் கேள்வி.

'யார் நீ?'

'யார் நீ?'

கௌதமர் சொன்னார்:

"மானுடத்தைத் தேடியலையும் ஒரு மானுடன்!"

"இப்போது உனக்கு இங்கு என்ன தேவை?"

"ஓர் உண்மை தேவை!"

"என்ன உண்மை?"

தொலைவில் மக்களோடு தம்மை மறைத்துக் கவனித்துக் கொண்டிருக்கிறார் மகத சக்ரவர்த்தி. அவர் தான் வந்திருக்கும் செய்தியை அறிவிக்க வேண்டாம் என்று முன்கூட்டியே பலருக்குச் சமிக்ஞை செய்துவிட்டார்.

கௌதமர் கேட்டார்: "இந்த ஆடு என்ன பாவம் செய்தது? ஏன் வெட்ட வேண்டும்?"

"இது ஒரு வேள்விப் பலி! எங்கள் யுவராஜன் தீர்க்காயுளாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் குட்டி ஆடாகப் பார்த்துப் பலியிடுகிறோம்!"

"ஓர் உயிரைக் கொன்று இன்னோர் உயிரை வாழ வைத்துவிட முடியுமா? அதைவிடப் பிரார்த்தனை மூலம் வாழ்த்தி நலம் சேர்ப்பியுங்கள்! உயிர்ப்பலி பாவத்தையே சேர்க்கும்!"

"இது எங்கள் சம்பிரதாயம். இதில் தலையிட யாருக்கும் உரிமையில்லை."

சந்நதம் கண்டவன் மேலும் சிலிர்த்துக் கூச்சலெழுப்புகிறான்.

அப்போதுதான், "ராஜன்! நீங்கள் வந்து சொல்லக் கூடாதா?" என்று கௌதமர் கேட்டுக் கொள்ள, பிம்பிசாரன் வெளிப்பட்டார்.

மகத சக்ரவர்த்தியைக் கண்டதும் வேள்வி மந்திரம் ஜபிப்பவர்கள் எழுந்து நிற்கிறார்கள். சந்நதம் கண்ட பூசாரியின் ஜடமும் வணங்கியது.

கௌதமருக்கு இன்னொரு உண்மை புரிகிறது அவர் முறுவலித்துச் சொன்னார்:

"பார்த்தீர்களா! இவர்கள் உண்மையில் தங்கள் யுவராஜனுக்கு மந்திரம் ஜபிப்பவர்களாக இருந்தால் தெய்வப் பிரசன்ன ஞாபகமாகவே இருந்திக்க வேண்டும், என்னைக் கண்டதும் நிறுத்தினார்கள்; மன்னனைக் கண்டதும் நிற்கிறார்கள். சந்நதம் எங்கே போயிற்றென்று புரியவில்லை. இவர்கள் கூலிக்கு மாரடிப்பவர்கள். நிஜமான வேள்வி என்பது பிரார்த்தனை. ராஜன்! தயவுசெய்து உயிர்ப்பலியை நிறுத்துங்கள்!"

கௌதமருடைய குரலில் ஒலித்த ஜீவகாருண்யம் யாருக்குத்தான் புரியவில்லை?

"நிறுத்துகிறேன் கௌதமரே! உங்கள் வருகைக்குப் பிறகு இந்த மகதத்திலேயே உயிர்ப்பலி கூடாது என்றும் ஆணையிடுகிறேன். புறப்படலாம்."

கௌதமர், தீனமாக அலறிக் கொண்டிருந்த ஆட்டுக் குட்டியைத் தூக்கிக் கொண்டு நடக்கிறார். "மூலமான—

வேறுபாடுறாத பிரகிருதி, இப்படியான வேறுபாடுகளைச் சுபாவமாகப் போதிக்கவில்லை" என்று முதல் பிரசங்கத்தைத் தொடங்குகிறார்.

பெரிய கருத்து ; யாருக்குப் புரியப் போகிறது ?

வேள்வி ஏன் ஏற்பட்டது? ஆகுதிகளின் அர்த்தமென்ன? பிரமாணங்கள் என்ன ? அளவைகள் என்ன ? இதன் திருஷ்டாந்தம் என்ன ? கர்ம, அகர்ம, விகர்மங்கள் வேள்வியை விரும்புகின்றனவா ? ஆதரிக்கின்றனவா ?

சிந்தித்துக் கொண்டே நடக்கிறது ஞானஒளி.

அரண்மனையுள் கௌதம சித்தார்த்தர் நுழைகிற போது...

மங்கல வாத்தியங்கள், ஏதோ ஒரு புதிய சுர சேர்க்கையில் அபூர்வராகம் பாடி வரவேற்கின்றன.

ஒவ்வொரு வாசலிலும் பணிந்து நின்ற தலைகள்.

பட்டத்தரசி வைதேகி, குழந்தையைத் தொட்டிலிட்டு, அருகே வந்து வணங்கி வரவேற்கிறாள். இரண்டாம் பட்டத்தரசி செல்லனாதேவியும் அந்த மரியாதைக்குக் குறை வைக்கவில்லை.

அதற்குள் கௌதமர் அமரப் பொன்னாசனம் போடுகிறார்கள். சித்தார்த்தர் மறுத்து விடுகிறார்.

கனகமணித் தொட்டிலில் ராஜகுழந்தை, மழலைப் பலாயினன் போல மல்லாந்து படுத்து முறுவலிக்கிறது. விரைந்து எனக்கு ஏதேனும் ஒரு பெயரைச் சூட்டி மகிழுங்களேன் என்பது போலிருக்கிறது அந்தச் சிரிப்பு.

கௌதமருடைய ஒளிக்கண்கள் அந்தக் குழந்தையைக் கவனிக்கின்றன.

அவரது சரணச் சிந்தையில்...

கருங்கும்மென்ற இருட்டிரவில் அரண்மனையை விட்டு வெளியேறிய நினைவு வருகிறது. மனைவி *ராகுலமாதேவி, குழந்தை ராகுலன் நினைவுக்கு வருகிறார்கள்...

துறவின் முதற்படியில் நிற்கும் பிரவிராஜ்யைதானே அவர் ? முழுமை பெற்ற புத்தராக இன்னும் ஒளிரவில்லையே !

"கௌதம சித்தார்த்தரே ! இக்காட்சியைச் சற்றும் இல்லறம் மேலானதாகத் தெரியவில்லை ?" என்றார் சக்ரவர்த்தி பிம்பிசாரன்.

கௌதமர் எதையோ தேடும் சிரிப்புடன் மெல்லத் திரும்பிப் பார்க்கிறார் :

"மகத ராஜன் ! இல்லறம் என்பது தொல்லையும் புழுதியும் நிறைந்த இடம். துறவு ஒரு திறந்தவெளி ! காமநுகர்ச்சி எனக்குக் குற்றமாகத் தோன்றுகிறது. தனிமை வாழ்வு சுத்தமாகத் தெரிகிறது. எனது துறவுக்குக் குறுக்கே நிற்க வேண்டாம் !"

இடைபுகுந்தாள் வைதேகி : "பிரபோ ! துறவைத் தடுத்து நிறுத்துவது, செய்த கொஞ்ச நஞ்சம் புண்ணியத்தையும் இழப்பதற்குச் சமானமானது. அவர் வழிச் செல்லவிடுங்கள்."

மகத சக்ரவர்த்தி பிம்பிசாரன் மௌனமாகித் தலை குனிந்தார்.

"ராஜன் ! நான் புறப்படுகிறேன் !" என்றார் கௌதமர்.

தலை நிமிர்த்திய பிம்பிசாரன், "கௌதம சித்தார்த்தரே ! எங்களுக்குள் ஒரு சர்ச்சை. அதைத் தீர்த்துவைக்க வேண்டுகிறேன்," என்றார்.

---

* அபதானகிருந்தம் மட்டுமே யசோதாதேவி என்கிறது. ஏனைய மகாவம்சமோ, ஜாதக அட்ட கதைகளோ 'ராகுலமாதேவி' என்றே அழைக்கின்றன.

"என்ன மகத ராஜன் ?"

"பிறந்த குழந்தைக்கு நான் 'கூனிகா' என்று பெயர் வைத்தேன். இவளோ 'அஜாதசத்ரு' என்று பெயர் வைக்க வேண்டும் என்கிறாள். நீங்கள் என்ன கருதுகிறீர்கள் ?"

கொஞ்சமும் தயங்காமல் கௌதமர் சொன்னார் : "அஜாதசத்ரு நன்றாக இருக்கிறது. காசியின் புண்ணிய வழியில் வந்த பெயர். அதுவே சிலாக்கியமானது."

வைதேவி மகிழ்ந்து போனாள்.

செல்லனாதேவியோ, நெருப்பாய்த் தகித்தாள்.

கௌதமர் புறப்பட்டார். தொட்டிலில் மழலை நகை புரிந்து கொண்டிருக்கும் அஜாதசத்ருவை நோக்குகிறார்.

"இந்த வைதேகி புத்திரன் என்னையே கவனிக்கிறான். இவனை நான் சந்திக்கும் நேரத்தில் சந்திப்பேன். இவனால் பெற்ற தாய்க்குப் பிற்காலத்தில் பெருமை ஏற்படும்."

இந்த மகிழ்ச்சியான வேளையில் சக்ரவர்த்தி பிம்பிசாரன் பிரகடனம் செய்தார் : "நீங்கள் ராஜகிருகத்துக்கு எழுந்தருளிய நினைவாக எனது வேணுவனத்தையே தானமாகத் தருகிறேன். அங்கே நீங்கள் எப்போது எதை விரும்பினாலும் எழுப்பித் தருவேன்."

ஞான ஒளிபூத்த முகத்துடன் கௌதமர் அரண்மனையை விட்டு வெளியே வந்தார். அவரை எல்லைவரை வழி கூட்டியனுப்ப சக்ரவர்த்தி பிம்பிசாரன் பின் தொடர்ந்தார்.

பகற்போதின் வியர்வையைத் துடைத்துப் பனிப்போதின் இதம் புகட்ட உதயமான இராக்கன்னி, நிலவு நடம் புரிய நட்சத்திரச் சதங்கையணிகிறாள். இருட்டரக்கி பதறியடித்துக் கொண்டு ஓடுகிறாள்.

ராஜகிருகமே மகிழ்ச்சி வீணையில் அஜாதசத்ரு ராகம் மீட்டிக் கொண்டிருக்கிறது.

அரண்மனையின் உப்பரிகையில் சக்ரவர்த்தியும் பட்டத்தரசியும் அங்க தேசத்தில் நடந்த நிகழ்ச்சிகள் குறித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

இதே வேளையில்...

அங்கம் முழுவதும் எரிச்சல் கண்ட செல்லனாதேவி, தனது வலக்கரமொத்த அஞ்சனாவுடன் சதி நிலத்தை உழுது கொண்டிருந்தாள். விதை கைவசமிருந்தும் அதனை எங்கு, எப்படி விதைப்பதென்பதுதான் புரியவில்லை.

"அஞ்சனா ! இன்னும் ஒரு வார காலத்துக்குள் நாம் பின்னும் சிலந்தி வலையில், வைதேகி அகப்பட்டுக் கொள்ள வேண்டும். அஜாதசத்ரு என்று அமர்க்களப்படுத்தும் குழந்தை தலை வேறு, முண்டம் வேறாக வேண்டும்" என்றாள் செல்லனாதேவி.

காமப் பதுமைகளில் ஏமப் பதுமையான அஞ்சனாவோ, "ஏற்பாடுகளிருக்கின்றன. எப்படி அணுகுவது என்பது தானே புரியவில்லை தேவி ! இப்படிச் செய்து பார்த்தால் என்ன ?" என்றாள்.

"சொல் அஞ்சனா !"

"நமது கங்காவை இதற்குப் பயன்படுத்தலாம். அவள் தான் வாயாடி ; துணிச்சல்காரி ! ஆனால் அவளது உயிருக்கு உத்தரவாதம் தேவை. 'ராஜகிருகத்தில் என்ன ராஜசுகம் கண்டோம்' என்று கரித்துக் கொட்டிக் கொண்டிருப்பவள்."

"திட்டத்தைச் சொல் !"

அஞ்சனா திட்டத்தை அடுக்கிக் கொண்டு போகப் போக...

வியர்த்துக் கொட்டியது, மகதத்து விலாசத்தையே கடைவிரலால் கலைக்க முனைந்துவரும் செல்லனாதேவிக்கு! அவளது இமைகள், முதலில் படபடத்துப் பின்னர் படமெடுத்துச் சீற்றம் கொண்டன.

1682
228930

பிடகம்-6

ஜாதகக் கதை

எங்கும் அஜாதசத்ரு, அஜாதசத்ரு, அஜாதசத்ரு...

இந்த மூன்று நாட்களாக இதே கோஷமா? பெருந்தனக்காரர்கள் காணிக்கைகளுடன் வருவதும் போவதும், அரண்மனைக்கு வெளியே ராஜகிருக மக்கள் நின்று தங்கள் ராஜகுமாரனைப் பார்க்க வேண்டும் என்று கூச்சலிடுவதும், ராஜராணி வைதேகி உப்பரிகையில் நின்று குழந்தையைக் காட்டுவதும், வாழ்த்தொலிகள் செவிகளைக் கிழிப்பதும்...

சே! என்ன இது?

அச்சமில்லாத ஊரில் ஆண் குழந்தை பிறந்ததாம்; அது கொப்பூழ் அறுப்பதற்குள் கொம்பு முளைத்துப் போய்விட்டதாம் என்கிற கதை போலல்லவா இருக்கிறது?

இந்த வட்சணத்தில் வைதேகி பிறந்த கோசல நாட்டிலிருந்து சீர்வரிசைகள் மகதம் வியக்க வரப் போகிறதாம்...!

ஓ......

இளையராணி செல்லனாதேவி, கூந்தலைப் பிய்த்துக் கொள்கிறாள். அவளது இதயத்தில் எரிகிற தீக்கு மேலும் எண்ணெய் வார்க்கிறாள் அஞ்சனா.

எவ்வளவு நாட்களுக்கு?

கறுவிக் கொண்டனர். கங்கா என்கிற பூகம்பம் வெடிக்கிறபோது யார் மிஞ்சுவார்களோ? அரண்மனை தான் மிஞ்சுமோ?

ஏ, சந்தர்ப்பமே! நீ எப்போது கிடைக்கப் போகிறாய்?

இளையராணி செல்லனாதேவியின் இதயம் வெடித்து விடும் போலிருந்தது.

சக்ரவர்த்தி பிம்பிசாரன், தமது மகன் பிறந்த நேரம் எப்படி இருக்கிறது என்பதனையறியத் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தார். ஒரு நிலையான அரசனின் நியாயமான துடிப்பு அது!

நவக்கிரகங்களின் சரியான முகவரிகளைக் கூறவல்ல மேதைகள் இருவர் இருந்தும் ஏன் இப்படி எழுதி எழுதி அழிப்பது போன்ற மௌனம்...

இந்த மௌன நாடகத்தை நடத்துபவரே மகா ஆமாத்தியர் வஸ்ஸகாரன். அவருக்கு நேற்றே ஜாதகத்தின் நிழல், கிரகங்கள் திசைப்பயணம் செய்கிறபோது எப்பக்கம் நீளுகிறது, எப்பக்கம் குறைகிறது என்பது புலனாய் விட்டது. அதனை மறைக்கும் மௌனமல்லவா இது?

ஜாதகத்தில் பிதுர்க்காரகன், பிதுங்கிய நிலையில் பேசப்படுகிறானாமே! அஜாதசத்ருவின் வாள் பிம்பிசாரன் ரத்தத்தில் அபிஷேகிக்க வேண்டி இருக்கிறதாமே! மேதைகளான கூடதண்டனும் ஜீவகனும் கூசாமல் கூறி விட்டார்களே!

இதனைப் பேசாமல் மறைப்பதா? சொல்லிவிடுவதா?

மறைப்பதே மேல் என்றான் ஜீவகன். எனவே, சக்ரவர்த்தியிடம் பொதுவாகக் கூறி வைத்தான்: "மகதேஸ்வரா! நல்ல அம்சமான ஜாதகம். எதிர்காலத்தில் எதிரிக்கு எதிரியாக விளங்குவார் இளவரசர். மகத சாம்ராஜ்யமே இவரால் ஒரு சரித்திரம் படைக்கப் போகிறது."

சக்ரவர்த்தி பிம்பிசாரன் ஓரளவு நிறைவு கண்டார்.

பின்னர் விளக்கம் தெரிந்து கொள்ளலாமே!

மூன்று நாட்களை, நாழிகைகள் நூற்று எண்பது மடிப்பாக மடித்துத் தாம்பூலம் தரித்துக் கொண்டன.

அஞ்சனாவும் கங்காவும் ஏன் மௌனம் சாதிக்கிறார்கள் ?

இளையராணி செல்லனாதேவி, நாழிகைகள் மடிய மடிய நரம்புகள் 'விண் விண்' என்று தெறிக்க அலமருகிறாள்.

குழந்தை அஜாதசத்ருவின் அழுகுரல் கேட்கிறது...

அஞ்சனாவும் கங்காவும் கார்த்திகைப் பிறை தெரிவது கேள்விப்பட்டது போலக் கால் தெறிக்க ஓடுகிறார்கள். கவனித்துவிட்ட செல்லனாதேவி, என்னவென்று பார்க்கப் பின்தொடருகிறாள்.

குழந்தை அஜாதசத்ரு, தொட்டிலில் 'குவாகுவா' என்று ஓயாமல் அலறிக் கொண்டிருக்கிறான். காவல் நின்ற பணி மகளிர் எங்கு போயினர் ?

இரண்டு குரூரக் கண்கள் இமைகளின் மூலம் ஏதோ பயமுறுத்துகின்றன.

அடுத்து...

ஒரு புயலின் பிரவேசம் போல உள்ளே நுழைந்த கங்கா, "குழந்தை வீறிட்டு அழுகிறது ; எங்கே போனார்கள் பணிப் பெண்கள் ?" என்று இரைந்த வண்ணம் குழந்தை அஜாதசத்ருவைத் தூக்கி, கிலுகிலுப்புக் குரலெழுப்பித் தேற்றுகிறாள்.

விதியோடு ஒப்பந்தம் செய்துகொண்ட அவளது விழிகள் அரண்மனையோடு ஒப்பந்தம் செய்துகொண்ட வாசற்படிகளை ஒசிந்து கவனிக்கின்றன.

ஆ ! பெற்றவள் வருகிறாள். பெரிய்ய ராணி...!— மனத்தின் வெம்பல்.

நாவில் நெருப்பு பத்மாசனமிட்டது. நாசியின் காற்று, ஊதிப் பொறி பறக்கச் செய்தது : "பெற்றவளுக்கே அக்கறை இல்லாதபோது, மற்றவளுக்கு என்ன வந்துவிடப்போகிறது? ஏதோ அவசரத்தில் முந்தானை போட்டு, ஆண் பிள்ளையைப் பெற்று அஜாதசத்ரு என்று கடமைக்குப் பெயர் வைத்தாய்விட்டது. குழந்தையைக் கவனிக்கவாவது பாசம் வேண்டாமா ?"

குழந்தையை மார்பில் அணைத்துத் தேற்றி வாயோடு வாயழுந்த முத்தம் கொடுக்கிறாள்.

"கங்கா !"

இக்காட்சியைக் கண்டு பொறுக்க முடியாமல் கதறினாள் ராஜராணி வைதேகி.

கொஞ்சமும் அதிராமல் பதறாமல் இமைக்காத கண்கள், இடிதாங்கும் பார்வையுடன் வைதேகியைக் கவனிக்கின்றன. அந்த நோக்கு, 'என்ன ?' என்று திமிரை முதுகில் சுமந்து கேட்பது போலிருக்கிறது.

"குழந்தையை இப்படிக் கொடு ! என்ன தைரியமிருந்தால் முத்தம் கொடுப்பாய் ?"— வைதேகி குழந்தையைப் பெற்றுக் கொண்டாள் என்று சொல்வதைவிட, பிடுங்கினாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

அந்த வேகத்தில்...

இடிதாங்கிக் கண்களுக்குரிய கங்காவின் மேலாடை விலகிக் கொண்டது. அவளது கண்களுக்கு அது தெரியவில்லை. 'எங்களைக் கொஞ்சம் கவனியேன்' என்கின்றன அந்த மார்பகங்கள் ! ஏங்கித் துடித்த காமத்துக்குத்தான் என் இறைத்தாய் விட்டதே ! இனி அவை இருந்தென்ன, அழிந்தென்ன ? இது எப்போதைக்கோ வந்துவிட்ட முடிவு.

கிடக்கிறது கழுதை என்று இடக்கரடக்கான பார்வை யுடன் இரண்டடி முன்னே வந்து நின்ற கங்கா, "கத்தி யழுதபோது ஒரு கழுதையும் இங்கே வந்து தூக்கிச் சமாதானப்படுத்தவில்லையே! இதில் உயர்வு தாழ்வு வேறா ராணி...? என்ன கேட்டீர்கள் ? 'என்ன தைரியமிருந்தால் முத்தம் கொடுப்பாய் ?' முத்தம் கொடுப்பதற்கு ஒரு தைரியம் வேண்டுமா? அதுவும் குழந்தைக்கு? ஒரு நப்பாசை; சக்ரவர்த்திக்குத்தான் முத்தம் கொடுக்க முடியவில்லை; இளைய சக்ரவர்த்திக்காவது முத்தம் கொடுத்து ஆசை தீர்த்துக் கொள்ளலாமே என்று! மேலும், சக்ரவர்த்தியின் உதட்டு வாசனையும் உமிழ்நீர் சுவையும் ஒட்டு மொத்த மாக உங்கள் வாயைக் குத்தகை எடுத்துக் கொண்டிருக் கின்றன. அந்த வாசனையும் சுவையும் உங்கள் மூலம் இந்தக் குழந்தையின் பிஞ்சு உதடுகளில் ஒட்டி உறவாடுவதால், எனது பாவம் செய்த பாலையுதடுகள் இந்தக் குழந்தையை முத்தமிட்டாவது பதம் பார்த்து ஆசை தீர்த்துக் கொள்ள விரும்பியது. விளக்கம் போதுமா ? இன்னும் வேண்டுமா ?"

அக்கினி வார்த்தைகள். ராஜராணியின் அடிவயிற்றைப் பற்ற வைத்துவிட்டன.

பளீர்...

கங்காவின் கன்னத்தில் வைதேகியின் விரல்கள் சிவப்புக் கோடிட்டன.

வெகு தொலைவில் மறைந்திருந்த அஞ்சனா, 'ஓ... சூடு பிடித்துவிட்டது: இனி அரண்மனை எரியும்' என்று பிடரி யில் வியர்த்த வியர்வையைத் துடைத்துக் கொள்கிறாள்.

இதற்குள் இளையராணி செல்லனாதேவி, சமயம் நோக்கிச் சக்ரவர்த்தியை, 'அந்தப்புரத்தில் ஏதோ எரிமலை வெடிக்கிறது' என்றளவில் கூறி, வேகமாக அழைத்து வருகிறாள்.

கன்னத்தில் விழுந்த அறை கண்களில் மின்னலாய்ப் பொறி பறக்க, கனன்று போனாள் கங்கா: "நானும் உங்களைத் திருப்பி அறைய அதிக நேரம் பிடிக்காது. என்னிலும் நீங்கள் அப்படியொன்றும் உயர்ந்து விடவு மில்லை."

"கங்கா !"

நாணத்தால் வைதேகியின் நாவு அலறுகிறது. சுற்றிச் சூழ்ந்திருந்த பணிமகளிர் தலை தாழ்த்திக்கொள்கின்றனர், பின்னே, பதுமைகளின் குறும்பு நகைச் சாயல் எறும்பாய்க் கடிக்கிறது.

"உன்னை என்ன செய்கிறேன் பார் !"

"இந்தக் கங்காவும் அதைத்தான் கேட்க இருந்தாள்! நான் அரசு நிலாவல்ல, அவசரத்துக்கு மினுக்கும் நட்சத் திரம்தான்! ஆனால், நிலவு மாதிரி களங்கப்பட்டுச் சிரிக்கவில்லை."

"பேச்சு அத்துமீறிச் செல்கிறது."

"ராஜராணியே அத்துமீறிச் சென்றுவிட்ட பிறகு? நாங்கள்— அந்தப்புர காமப் பதுமைகள்! அரசமஞ்சம் கிடைக்காமல் இருந்தும் அத்துமீறி எவனையும் அணைக்க விரும்பவில்லை. ஆனால், நீங்கள்...?"

"நீங்கள் ? ஏன் நிறுத்தி விட்டாய் ? மேலும் நீண்டால் நாவு துண்டாகி விடும் என்கிற பயமா ? கேவலம்..."

"உஸ் ! நிறுத்துங்கள் பெரிய ராணி ! நான் கேவலமா, நீங்கள் கேவலமா என்பதைப் போட்டே உடைக்கிறேனே ! உங்களுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம் என்ற எண்ணமா ? ஜனகபுரத்து அரசன் அஜாதசத்ருவைத் தெரியுமா ? அது தான் உங்கள் பழைய காதலர் ! அவரை நள்ளிரவில் சந்தித்தது ஞாபகமிருக்கிறதா ? பத்து மாதங்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சிதான் மறந்து விட முடியுமா ? அந்த அஜாதசத்ருவிடம் அத்துமீறி, அரசப் பெருமானை மறந்து, மஞ்சத்தில், உங்கள் நெஞ்சத்தில், இடம் தந்தீர்கள். இதன்

காரணமாக அவருக்குப் பிறந்த குழந்தைக்கும் நன்றி என்றும் பிராயச்சித்தமென்றும் நாவை நர்த்தனமிடச் செய்து, பெயர் சூட்டியும் மகிழ்ந்தீர்கள்! இப்போது சொல்லுங்கள், கங்கா உயர்ந்தவளா? நீங்கள் உயர்ந்தவரா?"

கங்கா பேச்சை நிறுத்திய மறுகணம்...

"கங்கா!"

ஒரு மதம் கொண்ட களிற்றின் பிளிறலைப் போல ஒலித்த குரல் கேட்டுப் பல செவிப்பறைகள் அறுந்து பட்டன. கண்கள் இமைக்க மறந்துபட்டன. அங்கே...

சக்ரவர்த்தி பிம்பிசாரன், கண்களில் எரிமலை வெடிக்க நின்றிருந்தார்.

கேள்விப்பட்ட மகா ஆமாத்தியர் வஸ்ஸகாரன், ஆமாத்தியர் சுநீதன், மகாசேனாதிபதி ராஜநாகன், ஜீவகன், கூடதண்டன் ஆகியோர் ஓடோடி வந்தனர்.

அஞ்சனாவும் இப்போது துணிவாகவே ஒரு பக்கமாக வந்து நின்றாள். அவளது கண்கள் ரகசியமாக இளைய ராணி செல்லனாதேவியைக் கவனித்து, 'நமது திட்டம் நிறைவேறி வருகிறது' என்று இமை மொழியில் பேசுகின்றன.

வஸ்ஸகாரன் கண்களில் இந்த ரகசிய நாடகம் கவரி விசுகிறது. ஓ... ஏதோ உற்பாதம் நிகழப் போகிறது.

கங்காவின் அருகே பாய்ந்த சக்ரவர்த்தி, இடுப்பிலிருந்த குறுவாளை உருவிக் கொள்ள, இடை புகுந்த செல்லனாதேவி அவரது கரத்தைப் பலமாகப் பற்றிக் கொள்கிறாள்: "விசாரித்து உண்மையறியாது உணர்ச்சி வசப்படுவது அரச தர்மமாகாது. உண்மையைக் காணப் புறப்பட்ட கௌதமர் காலடிபட்டு இன்னும் ஒரு வாரம் கூட முழுமையாகவில்லை: அதற்குள் அந்த 'உண்மையறிதல்' என்கிற சொற்களை அரண்மனையில் புதைக்கலாமா பிரபோ?"

"எது உண்மை? இவள் சொல்வது யாவும் உண்மையா?"

சக்ரவர்த்தி குரலில் பிடரி சிலிர்த்த சீற்றம்.

உடனே கங்கா சற்றும் தயங்காது, "உண்மை! உண்மை! சத்தியமான உண்மை! இந்த பூமாதேவியறிய உண்மை!" என்றலறிக் குனிந்து, ஓங்கி ஓங்கித் தரையில் அறைந்து சத்தியம் செய்கிறாள். ஒரு நாகத்தின் சீற்றமே போல இருந்தது அக்காட்சி.

அதன் பிறகு சில கணங்கள் வரை ஐயுறத்தக்க அமைதி.

பல கண்களில் பல்வேறுபட்ட மெய்ப்பாடுகள்!

சக்ரவர்த்தி பிம்பிசாரன் கண்களில் ரத்தப் பிரவாகம். உடல் பூகம்பமாய் நடுங்குகிறது. அக்கினிப் பார்வை அரசமாதேவியை நோக்குகிறது.

மனிதர் கைபட்டால் பறவைக் குஞ்சு நடுங்குமே அப்படி நடுங்கிப் போனாள் ராஜராணி வைதேகி.

இதுவே தருணம் என்று இடைபுகுந்த இளையராணி செல்லனாதேவி, "கங்கா! நீ கூறும் இந்த அபாண்டச் செய்தியை நிரூபிக்க ஏதேனும் சாட்சி உண்டா?" என்றாள்.

கங்காவும் சற்றும் தயங்காமல், "அஞ்சனா!" என்றாள்.

அனைத்துக் கண்களும் அஞ்சனாவை நோக்குகின்றன. அஞ்சன விழிகளில் நடுங்குவது போன்ற ஒரு பாவனை...

"அஞ்சனா!"

இளையராணியின் அழைப்பு.

அஞ்சனா தலைகுனிந்து அருகே வந்து நிற்கிறாள்.

"அஞ்சனா! இது அரச விவகாரம். கங்கா ஏதோ புதிர் போடுகிறாள். இந்த அரண்மனையே சில நாட்களாகப் புதிராக விளங்கி வருவது கண்டு ஏன், எதற்கு என்று புரியாமல் விழித்தேன். என்ன நடந்தது? உயிர் மேல் ஞாபகம் வைத்து உண்மையைச் சொல்! கங்கா சொல்வது உண்மையா?"

செல்லனாதேவியின் மிடுக்கு நிறைந்த பேச்சு, 'இனி நான்தான் பட்டத்தரசி' என்பது போல விளங்கியது.

அஞ்சனா நடந்ததை நாநயத்துடன் விவரிக்கத் தொடங்கினாள்.

இப்படியா ஒரு பட்டத்தரசியைப் பலர் முன்னிலையில் விசாரிப்பது? விமரிசிப்பது? என்று விதிர்த்துப் போனார் வஸ்ஸகாரர். ஓ... ஏதோ ஒரு நிகழ்ச்சி, எதுவோ ஒரு திட்டத்துக்கு வழி வகுக்கிறது...

அஞ்சனா விவரிக்க விவரிக்க...

பலருக்கு வியர்த்துக் கொட்டியது.

மகத மன்னர் மலைத்துக் கவனிக்கிறார். அவரது நெஞ்சில் மலைப்பாம்பு நெளிகிறது.

ராஜராணி வைதேகியோ, விவரிப்பு முடியு முன்னமே, மயக்கமுற்றுச் சாய்ந்தாள்.

பிடகம்-7

நிவேத சூக்தம்

பொன்னெடுக்கத் தோண்டிய சுரங்கம், புதை குழியானது போல...

விசாரணை, விசாரணை, விசாரணை...

ஆலோசனை, ஆலோசனை, ஆலோசனை.

விசாரம் ஆவேசத்துக்கும், ஆவேசம் விசாரத்துக்கும் விருந்து வைத்ததுதான் மிச்சம்.

"நீ ஜனகபுரத்து அரசன் அஜாதசத்ருவைச் சந்தித்தாயா வைதேகி?"

"சந்தித்தேன்: அந்தச் சந்திப்பு ஒரு தூய்மையின் சந்நிதானம். உங்கள் வெற்றிக்கு நிவேதித்த..."

"உஸ்! போதும்! நீ அவனைச் சந்தித்தாய்! மறைமுகமாகச் சந்தித்தாய்! அதுவும் நள்ளிரவில் சந்தித்தாய்! அது போதும்! அவன் உனது பழைய காதலன் என்பதை ஒப்புக் கொள்கிறாய் அல்லவா?"

"............"

"ஏன் தயக்கம்?"

"பிரபோ! காதல் என்பது மானுட வாழ்வில் சிலருக்கு நிர்பந்தமாவதுண்டு; சிலருக்கு இயல்பாவதுண்டு; சிலருக்கு ஒருதலை நிலையில் ஏக்கமாவதுண்டு. எங்கள் காதல் இந்த மூன்றுமேயல்ல. ஒரு யுகத்தின் குப்பைகளையே சுமந்து காதலைக் கொச்சையாக்கும் வெறித்தனமுமல்ல! இது

ஊமை ஆத்மாக்கள் ஊஞ்சலாடிய காதல்! மற்றபடி எந்தப் பாவத்தையும் அல்லது பாவத்தையும் நினைவின் அலைகளில்கூட மிதக்க அனுமதியாத காதல்!"

"உனது பாண்டித்தியம் நன்றாகவே சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பூவாய்ப் பறிக்கிறது. ஏன் மறைத்தாய்? அஜாதசத்ருவைச் சந்தித்ததை ஏன் மறைத்தாய்?"

"உங்களுக்குப் படை உதவி செய்யவே..."

"உஸ்! இது ஒரு சமாதானம். எனது கௌரவப் பிரச்சினையைக் காரணமாக வைத்து ஆடிய காம சூதாட்டம்!"

"பிரபோ!"

"நள்ளிரவில்தான் படையுதவி கேட்கச் சொன்னதோ? பகலில் கேட்டால் அஜாதசத்ரு மறுத்து விடுவானா, என்ன?"

'அன்று...

'விதி, நேரத்தை அவ்வாறு ஒதுக்கிவிட்டது! இதோ அனுபவிக்கிறேன்' என்று பொங்கி வந்த உணர்வைக் கட்டுப்படுத்தித் தலைகுனிந்து கொண்டாள் வைதேகி...

எத்தனையோ விசாரணைகள். அவற்றின் சாரத்தை மட்டும் எண்ணி அலகுகிறார் பிம்பிசாரன்.

வெற்றிக்குச் செய்த நிவேதனம் என்றாளே...

என்ன நிவேதனம் செய்திருப்பாள்?

நிவேதனம் என்ற சொல்லுக்குள் 'தன்னை' என்பதை ஒளித்துக் கூறினாளோ?

இல்லையென்றால்...

சம்பா நதிக் கரையில் சந்தித்த ஜனகபுரத்து அஜாதசத்ரு, என்னிடம் இது குறித்து ஒரு வார்த்தை

யேனும் பேசியிருப்பானே! ஒன்றையும் அவன் பிரஸ்தாபிக்கவில்லையே!

'நிவேதனம்' இருப்பதால்தான் அவன் மூச்சு விடவில்லை. இவளும் ராஜகிருகத்தையடைந்த இந்நாள் வரை கோடிட்டும் காட்டவில்லையே!

எங்கே தெரியப்போகிறது என்கிற குருட்டுத்தனமான அசட்டை.

மகா ஆமாத்தியர் எதற்காக இதனை வெறும் வதந்தி என்று வாதாடுகிறார்?

மகதத்தைக் காக்க அவர் மன்னாசம் பூசுவது நன்றாகவே தெரிகிறது.

நெருப்பில்லாமல் புகையாது என்று அவர் உணர்த்தும் ராஜவிசுவாசத்தை முன் வைத்து நெருப்புமேல் துணி போட்டு மறைக்க முயல்கிறார்.

பிம்பிசாரன் சிந்தனையில் பின்னலிட்ட மின்னல் சிந்தனைகள்...

மகா ஆமாத்தியர் வஸ்ஸகாரன், மகத ராணி வைதேகியை நன்றாகவே அறிவார்.

ஒரு சமயம் இதே அரண்மனைக்கு அம்பபாலி வந்திருந்த போது, அவளுக்கு மகாராணி வைதேகி உபதேசித்த கற்போபதேசம் அவர் அறிந்ததே! எனவே, அவரால் நம்ப முடியவில்லை.

எனவே...

உண்மையை ரணப்படுத்தும் ஊர்வலம் புறப்பட்டு விட்ட பிறகு, இருட்டில் ஞான வரிகளை வாசிப்பதாவது? எப்படி இயங்க வேண்டுமோ அப்படி இயங்கி, மர்மத்தைக் கட்சுத்தில் அடக்கி மந்திரமாய்ச் செயல்படுகிறார். மகத சக்ரவர்த்தியின் முடிவை அனுசரித்துச் சுறுசுறுவென்று செயல்படுத்தக் கட்டளை பணித்திருந்தார்.

மகத சக்ரவர்த்தி பிம்பிசாரனின் முடிவு எரிமலையாய் வெடிக்கிறது...

"வைதேகியைக் கடுங்காவலுடன் சிறையில் அடைக்க வேண்டும்; குழந்தையை என் கண் முன்னமேயே கண்டதுண்டமாக வெட்டியெறிய வேண்டும்!"

ஆ! எத்துணைப் பயங்கரமான தண்டனை! அநாகரிகமான தண்டனை! வமிசத்தையே கரும்புள்ளி செம்புள்ளியிட்டுக் கழுதைமேல் ஏற்றும் தண்டனை...

இந்த ஆணை...

ஆள் சுமந்து செல்லுமுன், அரவம் சுமந்து செல்லுமுன், காற்று சுமந்து அரண்மனைக் காதுகளில் மோதுகிறது.

மகா ஆமாத்தியர் எவ்வளவோ வாதித்துப் பார்க்கிறார்.

"ம்ஹூம்! அவள், குழந்தைக்கு அஜாதசத்ரு என்கிற பெயரைச் சூட்டப் பிடிவாதம் செய்ததே போதிய சான்று! இது ஒரு சோர நினைவு! காதல் நினைவு!"

"சக்ரவர்த்தி! கௌதமர் ஆதரித்தாரே!"

"அந்த ஞான புருஷனுக்கே உண்மை, தீர்க்க தரிசனமாகத் தெரிந்தே இந்தப் பெயரை அவர் ஆதரித்து இருக்க வேண்டும். இல்லையென்றால், 'இவனைச் சந்திக்கிற நேரத்தில் சந்திப்பேன்!' என்று குழந்தையைப் பற்றிக் கூறியிருப்பாரா?"

என்ன வாதித்தும் சக்ரவர்த்தி பிம்பிசாரன், வெறிகொண்ட தமது முடிவிலிருந்து இம்மியும் இறங்கவில்லையே...!

அடுத்த கணமே...

மகா ஆமாத்தியரின் இரகசிய உத்தரவு இமை மூடி இமை திறக்குமுன் வேகவேகமாக நடைபெறுகிறது.

தேர்ந்தெடுக்கப்பெற்ற இரு வீரர்கள்— விசுவாசத்துக்குரிய வீரர்கள் மூலம் குழந்தை அஜாதசத்ருவை ஒரு மூங்கில் பேழையுள் வைத்து, சொல்ல வேண்டிய செய்திகளைச் சொல்லி, ஓலையும் கொடுத்து, முத்திரை மோதிரம் வழங்கிச் சுரங்க பாதை வழியாக வெளியேற்றுகிறார்கள்...

மகா ஆமாத்தியரால் வைதேகியையும் தப்பிக்கச் செய்திருக்க முடியும். அவ்வாறு தப்பிக்கச் செய்தால், ராஜராணி வைதேகியின் கற்புக்கு மாசு ஏற்பட்டு விடுமல்லவா? நடந்த நிகழ்ச்சி உண்மை என்று ஊர்ஜிதமாகிவிடுமல்லவா?

ராஜகிருகத்துப் பட்டமகிஷி, காராக்கிருகத்துக் காவல் மகிஷியானாள்.

வீணையை விற்பனை செய்கிற நிலைமை வந்தால், கலைவாணி எவ்வாறு கண்ணீர் மல்குவாளோ, அவ்வாறு வைதேகியை இழந்த மகதம் செந்நீர் மல்கியது.

ஆனால், செல்லனாதேவி...?

மகிழ்ச்சிக்கு மஞ்சள் குங்குமம் இட்டு ஆராதித்துக் கொண்டிருந்தாள்.

இனி, அவள்தான் ராஜராணி!

ஓ...

நினைக்க நினைக்க செல்லனாதேவியின் மார்பின் மன்மதக் கலசங்கள் நிமிர்ந்தன! மான் விழிகளில் மதம் கொண்ட பிரகாசம்! மகாராணி மகுடம் சுமக்க இருந்த தலைக்கனம் மலைக்கனமான மமதை!

அத்தனையும்...

குழந்தை அஜாதசத்ருவைக் காணோம்; எவரோ ரகசியமாகக் கடத்திச் சென்றாய் விட்டது என்கிற கசப்பான செய்தி பரவ...

சற்றே சரிந்தன.

வெருண்டவள் செல்லனாதேவி.

மருண்டவர் மகத சக்ரவர்த்தி.

யார் செய்த சூழ்ச்சி ? எவர் செய்த வேலை ?

மகா ஆமாத்தியர் வஸ்ஸகாரன், குழந்தையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுபவர் போன்ற பாவனையுடன் சக்ரவர்த்திக்கு இணங்க, சுறுசுறுவென்று இயங்குகிறார்.

மகாசேனாதிபதி ராஜநாகனோ, நானா திசைகளிலும் வீரர்களை விரட்டோ விரட்டென்று விரட்டுகிறான்.

குழந்தை அஜாதசத்ரு, எப்படியோ தப்பிச் சென்றாய் விட்டது என்கிற இனிப்பான செய்தியை, அந்த அடைபட்ட கசப்பான சிறையிலிருந்து அறிந்து, சற்றே பெருமூச்சுடன் மகிழ்ந்து, கண்களை இறுகமூடித் தியானிக்கிறாள் வைதேகி. அங்கே சோக நீர்த்துளிகள் சொப்பனமாய் வெடிக்கின்றன.

கோசல நாட்டின் கோமகளாய் அவதரித்து, மகத நாட்டின் மகாராணியாய் வாழ்க்கைப்பட்டு, எதிர்கால வாரிசை ஏந்தி விட்டோம் என்று மகிழ்கிற வேளையில், சிறைக் கம்பிகள் அவளைக் குறைப்படுத்தி விட்டன.

இரவு நடத்தும் அக்கிரமங்களெல்லாம் பூபாளராஜவின் பொற்கிரணங்கள் பட்டு மன்னிக்கப்படுகின்றனவாம் ! மன்னிப்புக்கே அவசியமில்லாதவை என்று பகல் நேரத்து ஊழல்களை மறைத்து விடவும் முடியாது ! அவற்றைப் பல சமயங்களில் பூரணச் சந்திரிகை ராகம் மன்னித்து ஒளிநகை புரிந்துமிருக்கிறது.

இங்கே வைதேகி...

தன்னைப் பூபாளம் என்பாளா ?

பூரணச் சந்திரிகா என்பாளா ?

அன்றிரவு...

ஜனகபுரத்து அரசன் அஜாதசத்ருவைச் சந்தித்தபோது, இவ்வாறு காலம் சிறைக்கூடத்தின் அகல நீளத்தை அளவெடுக்கும் என்று எதிர்பார்த்தானா ? போர்க்கன்னியின் கூந்தலில் ஏற்பட்ட சிக்கலை எடுக்கச் சீப்பைத் தேட, இப்போது தனது கூந்தலே சிரைபடும் அளவுக்கு வந்து விட்டதே அவலம் ! இப்படி ஏற்படும் என்பது எதிர்பாராதது. எதிர்பார்த்திருந்தால்...

அந்த ராகத்தையே அவன் வேறு விதமாகப் பாடியிருப்பான்.

"இச்செய்தி மகத சக்ரவர்த்திக்குத் தெரிய வேண்டாம். போரில் பிறர் உதவுவது கௌரவக் குறைவு என்று மதிப்பவர். இந்த நிலையில் நான் கேட்டுக் கொண்டேன் என்பது தெரிய வந்தால் என்னைக் கசந்து கொள்வார். எனவே, நீங்களாகத் தருணமறிந்து உதவியதாகச் சொல்லுங்கள் !" என்று அவள் அன்றிரவு ஜனகபுரத்து அஜாதசத்ருவிடம் கேட்டுக் கொண்டதன் பயன்...

இருட்டில் விளக்கேற்றுவதற்கு மாறாக, ஆத்மாவையே எரித்துக் கொண்டு தவிக்கிறாள்.

செய்த தருமத்தால் பெய்த மழை போல, மகா ஆமாத்தியர் வஸ்ஸகாரன் நம்பிக்கை நிறைந்த துணை மட்டும் இல்லாதிருந்தால்...

குழந்தை அஜாதசத்ருவுக்குக் குருதி முழுக்கு நடந்திருக்கும் ; சிறையில் பிச்சாம்தேகியாய்விட்ட வைதேகி, விஷம் குடித்து நச்சாம்தேகியாயிருப்பாள் !

எவ்வழியிலும் கேள்விப்பட்டுக் கோசல நாட்டுக் கோமகன்— அருமைச் சகோதரன் பிரசேனஜித் குமுறிக் கொண்டு வரப்போகிறார். என்ன கூத்து, எப்படி நடைபெறவிருக்கிறதோ ? ஓ... விதியே...!

நாட்கள், நாழிகைகளின் தலையில் குட்டிக் குட்டி ஏழு சூரியோதத்துக்கு எச்சரிக்கைப்படுத்தின.

இருந்தும் எட்டுத் திசைகளுக்குமாகப் பறந்த வீரர்களிடமிருந்து எந்தச் செய்தியும் எட்டியபாடில்லை.

ஒன்பதின் தலைமேல் பத்து குந்தியது.

பத்தாம் நாள்...

பதறித் துடிக்கிறார் மகத மன்னர்.

"இன்னுமா, தேடுகிறார்கள்? குழந்தையைப் பிடிக்க முடியாதவர்கள், கோட்டையையா பிடிக்கப் போகிறார்கள்?"

பிம்பிசாரன் அரண்மனையே கிடுகிடுக்கக் கர்ஜிக்கிறார். அவரது கால்கள் வீரக் கழலொலிக்க, சிறைப்பட்ட வைதேகியைச் சித்திரவதைப்படுத்தக் காராக்கிருகம் நோக்கி விரைகின்றன.

அங்கே...

கணவர் வருகையறிந்து அலைந்துபட்ட கண்ணீரைத் துடைத்துக்கொண்டு எழுந்து நிற்கிறாள், கலைந்துபட்ட சித்திரமனைய வைதேகி.

"குழந்தையை எங்கே கொண்டு போய் மறைத்தாய்?"

"எனக்கென்ன தெரியும்? உங்கள் ஆணைக் குரல் ஓயுமுன் சிறைக்குள் தள்ளப்பட்டு விட்டேன். எவனோ ஒரு ராஜவிசுவாசிக்கு எனது கற்பின் மீது நம்பிக்கை ஏற்பட்டிருக்கலாம். அவன் குழந்தையைக் காக்க முனைந்திருக்கலாம்."

"என்னைக் கொலை செய்யப் பிறந்த குழந்தை என்பது நீ குறிப்பிடும் அந்த ராஜவிசுவாசிக்குத் தெரியாமல் போனதென்ன?"

வைதேகி வெறுமையாய்ச் சிரிக்கிறாள்.

"சிரிப்பு வேறா?"

"காலம் முழுவதும்தான் சிறையில் அழப் போகிறேன். இப்போதாவது ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததே என்று சிரித்துக் கொண்டேன்! மகத சக்ரவர்த்தி! சுயமான வித்துக்குப் பிறந்த எந்த மகனும் எவ்வளவு பெரிய நிர்ப்பந்தமேற்பட்டாலும், பெற்றவர்களை வஞ்சிப்பானே யொழிய வதைக்க மாட்டான். நீங்கள் சொல்வதோ கொலை! நினைத்தும் பார்க்க மாட்டான்!"

"அவன் நிஜமான மகனில்லை; அதனால்தான் ஜாதகம் நிஜத்தைச் சொல்லவில்லை."

"சிரிப்பதா, அழுவதா என்றே புரியவில்லை. குழந்தையின் சிரசோதயத்தின்போது, ஜீவகனின் மனைவி மாயா வெளியில் இருந்தாள். பின்னரே ஓடி வந்தாள். எனவே, சரியான நாழிகைக் கணக்கெடுக்கத் தவறிய ஜாதகம் அது என்று இப்போதுதான் தெரிகிறது. செல்லனாதேவிக்கு என் அனுதாபங்களைச் சொல்லுங்கள்!"

வைதேகி பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறாள்.

"அவளுக்கேன் அனுதாபம்? அனுபவிக்கப் போகிறவள் நீ! நீ உண்மையைச் சொல்லாத வரையில் உனக்கு ஒருவேளை உணவுதான்!"

"அதுகூடத் தேவையில்லையென்றாலும் நான் கவலைப்படவில்லை. நான் மரித்துக் கொள்ள அதிக நேரம் பிடிக்காது. அது எனது தூய்மையான கற்புக்குக் களங்கப் பல்லக்கை அலங்கரித்துவிடும்!"

"நீ தூய்மையானவள் என்று இன்னமும் வாதாடுகிறாய்!"

"வழக்கே முடிந்து விட்டது ! இனி வாதமென்ன ? சேதமென்ன ? போய் வாருங்கள் !"

அந்த நேரத்தில் சிறையதிகாரி சிம்மநாகன் வந்து பணிந்து நின்றார்.

"மகா ஆமாத்தியர் அரண்மனையில் உங்களுக்காகக் காத்திருக்கிறார். குழந்தையைத் தேடிச் சென்ற வீரர்கள் வந்து விட்டார்களாம் !"

"குழந்தை கிடைத்து விட்டதா ?"

"நானறியேன் மகத நாயகமே !"

கனன்ற கண்களுடன்] வைதேகியை நோக்கிய சக்ரவர்த்தி பிம்பிசாரன், அரண்மனை நோக்கி விரைந்தார்.

வைதேகியின் இமைகளோ, கண்களைத் தழுவிப் பிரார்த்திக்கின்றன. நீர்ப் பூக்கள் அர்ச்சனையாய் நிவேதிக்கின்றன.

பிடகம்-8

அம்பபாலி

ராஜவிசுவாசத்துக்குரிய மகத வீரர்கள் இருவரும் எப்படியோ தங்கள் உயிரைப் பணயம் வைத்து, ஆங்காங்கே மறைந்து, தங்கி, குழந்தைக்குப் பால் புகட்டி ஒருவாறு கோசல நாட்டுத் தலைநகரம் சிராவஸ்தியை அடைந்தனர்.

அப்போது இரவு மங்கை ஐந்து நாழிகை அடி எடுத்து வைத்திருந்தாள்.

அன்றிரவே குழந்தையைச் சேர்க்க வேண்டிய இடத்தில் சேர்த்து விடுவது என்று அந்த அரச விசுவாச வீரர்கள் முனைந்தனர்.

எங்கே இருக்கிறது அந்த அம்பபாலியின் மாளிகை ?

விசாரித்துப் பார்த்ததில், தலைநகரை அணைத்துச் செல்லும் *அசிரவதி நதிக்கரையின் வடகோடியில் அந்த மாளிகை இருப்பதாகத் தெரிய வந்தது.

வீரர்களிருவரும் அந்த மாளிகையை அடைந்தனர்.

இரவிலும் அந்த மாளிகை அம்பபாலியைப் போலவே ஒரு சௌந்தரியக் கவிதையாய் விளங்கியது. தவழ்ந்து வந்த அகிற்புகை அந்த வட்டாரத்தையே தெய்வீக மணத்தில் ஆழ்த்தும். அப்பக்கம் செல்வோர் அதனைப் 'பாலி வாசனை' என்றே புகழ்வர்.

சிராவஸ்தி தலைநகருக்கு அம்பபாலி வந்து பல மாதங்களாகி இருக்கும்.

---

* இன்றைய ராப்தி நதி.

இன்றளவும் அவள் பாவை அம்பபாலியாக வாழ்ந்தாளேயொழிய, பரத்தை அம்பபாலியாகத் தனது வாழ்வைப் புதுப்பித்துக் கொண்டாளில்லை. அதுவே அவளைப் பெருமைப்படுத்தியது.

ஆனால், கோசல நாட்டுக் கோமான் பிரசேனஜித் மட்டும் இந்த ஓராண்டு காலமாய்...

ஓ...! அவரது பாதங்கள் அந்த மாளிகை வாசற்படிக் கட்டுகளை எத்தனை முறை பித்தனைய வணங்கி இருக்கும்!

ஓராண்டு காலத்துக்கு முன்...

இதே நாளில்...

கோசல நாட்டு மன்னர் பிரசேனஜித் பிறந்த நாள் விழா! அந்த வெள்ளணி விழாவுக்குப் பலர் வருகை தந்திருந்தனர்; பாலியும் வருகை தந்திருந்தாள். மன்னர் அழைப்பு; மறுக்க முடியுமா? மதித்து, அரண்மனையை மிதித்து, மன்னரைத் துதித்ததே மனத்துக்கு ஏற்பட்ட பெருங் கவலையாய் முடிந்தது; ரத்தம் பீரிடாத ரணமாய் முடிந்தது.

அந்த விழாவில்...

ஆடற் கலையழகியான அம்பபாலியை நர்த்தனமாட எவ்வளவோ கெஞ்சினார் பிரசேனஜித். அம்பபாலி ஆடினால் தோகை தோற்றுப் போகுமாமே!

அழகுநிலா அம்பபாலி சொன்ன மறுமொழி: "மகத பிம்பிசாரச் சக்ரவர்த்தியின் எதிரே ஆடியவள்; வாழ்வில் புதிராய்ப் புகுந்தவள்; முடிவில் நிதியாய் நிமிர்ந்தவள். இனி எவர் எதிரிலும் ஆடேன்! எவருள்ளும் புதிராய்ப் புகேன்! எவர் நிதியும் வேண்டேன்! மன்னிக்க மன்னவா!"

இவ்விதம் சூளுரைத்து வெளியேறிய சூத்திரப் பேரழகி அம்பபாலி, இன்னமும் தனி வாழ்வில் தவமிருந்தாள்: வசந்தத்தைக் கசந்திருந்தாள்.

அதன் பிறகு அவளது அழகில் கோசல நாட்டு மன்னர் மயங்கி முயன்ற முயற்சிகள்; ஏங்கிய ஏக்கங்கள்...

பரத்தையானாலும் இப்படி ஒரு பவித்திரச்சூளுரையா? ஐயோ! மாற்றிக் கொள்ளேன்!

அன்றைக்குப் போலவே இன்றைக்கும் அதே வெள்ளணி விழாதான். ஆனால், அம்பபாலி அரண்மனைக்குச் செல்ல மறுத்து விட்டாள். அதற்கான காரண காரியங்கள் அவளறிந்தவையே!

ஆனாலும் இன்றிரவு மன்னர் பிரசேனஜித் எப்படியும் வருவார்; என்றும் போல் கெஞ்சுவார்; தனது பிறந்த நாள் விழா பரிசாக என்னைக் கேட்பார். என்ன மறுமொழி கூறுவது?

"இனி எனது வாசலை மிதிக்க உங்களை நான் அனுமதிக்க முடியாது" என்று சொற்களை நெருப்பாக்கிச் சொல்லிவிட வேண்டியதுதான்.

மகதப் பேரரசர் பிம்பிசாரன் அந்தப்புரத்தை அலங்கரித்த அழகோவியமாயிற்றே அம்பபாலி! ஓர் உடன் படிக்கையின் பேரில் இந்தக் கலையோவியத்துக்கு ஒரு குழந்தை ஓவியத்தையும் பெற்றுக் களித்தார் பிம்பிசாரன்.

அதன் பிறகு...

அவளுள் ஒரு நெட்டநெடிய பெருமூச்சு...

மகதராணி வைதேகி, முன்னமும் அம்பபாலியைப் பராமரித்தாள்; பின்னரும் பாதுகாத்தாள். இன்றைக்கு அவள் வாழ்கிற இத் தனி வாழ்வின் வசதியே வைதேகி கொடுத்த வைபவம் தானே?

அம்பபாலியின் அபரிமிதமான பேரழகு பற்றி, சுருங்கச் சில வரிகளில் சொல்ல வேண்டுமானால்...

பின்னாளில்— வயதான பின்னாளில் இவளைக் கண்ட புத்த பகவானே தமது சீடர்களை எச்சரித்தார்.

"ஓ... பிக்குகளே ! இது ஒரு தேவ சௌந்தரியம் ! கணத்துக்குக் கணம் கவனம்."

போதாதா ?

எந்த நேரத்திலும் கோசலநாட்டு மன்னர் பிரசேனஜித் வருவார் ; இன்றோடு இந்தப் படலத்துக்கு நிறைவு செய்து விடவேண்டும் என்று அம்பபாலி எதிர்பார்த்துக் கொண்டிருந்த போது...

கதவு தட்டும் ஓசை.

ஓகோ, பிரசேனஜித் ராஜன்தான் வருகை தந்திருக்கிறார்.

கீழே இருந்த பணிப் பெண்களை மாடத்துக்குச் சென்று விடுமாறு பணிக்கிறாள் அம்பபாலி. மன்னர் வந்து வழக்கம் போல் மன்மத வேள்விக்குக் கெஞ்சுவார். இதனைப் பணிப்பெண்கள் பார்வையிடுவதாவது ?

அவள் கலைக்கருவூலமட்டுமல்லாது கனத்த சிந்தனைக்கும் உரியவள். எனவே, உரிய மரியாதைகளுக்கு எப்போதுமே மாலையிட்டுக் கௌரவிப்பாள்.

கதவைத் திறக்கிறாள் அம்பபாலி...

அங்கே...

எதிர்பார்த்த பிரசேனஜித் இல்லை. யாரோ எதிர்பாராத இரு வீரர்கள். கையில் ஒரு மூங்கில் பேழை.

"யார் நீங்கள் ?"

"மகதத்திலிருந்து வந்த அபயம்" என்றான் ஒருவன். மற்றவன், "அபாயம்" என்றான்.

"எதற்காக அபயம் ? ஏன் அபாயம் ?"

"வைதேகி மகாராணியார் அனுப்பி இருக்கிறார்கள்."

வைதேகி மகாராணியார்... தனது நன்றியின் நாயகி...

"இதை எடுத்த எடுப்பில் சொல்ல வேண்டியதுதானே ? உள்ளே வாருங்கள்."

கதவு மூடித் தாழிடப்படுகிறது.

ஒரு வீரன் மூங்கில் பேழையைக் கீழே வைத்துத் திறக்கிறான். அங்கே கொழு கொழுவென்று ஆண் குழந்தை உறங்கிக் கொண்டிருக்கிறது. இடையில் மழலை இதழ் விரித்துச் சிரிக்கிறது. தூக்கத்தில் நரி மருட்டுகிறதாம் !

"தாயே ! நிற்பதற்கும் நேரமில்லை. எங்களை ஆட்கள் துரத்திக் கொண்டு வருகிறார்கள். இதோ, மகா ஆமாத்தியர் கொடுத்தனுப்பிய ஓலை."

ஓலையைப் பெற்றுக் கொள்கிறாள் அம்பபாலி. அதன் மீது நாக முத்திரை பதித்திருக்கிறது.

மற்றவன் சொன்னான் : "அம்மையே ! மகாராணியார் வாய்மொழியாகச் சொல்லியனுப்பிய செய்தி. இக்குழந்தை இனி உங்கள் குழந்தை ; மகாராணியார்க்கு நீங்கள் ஏதேனும் கைம்மாறு செய்ய எண்ணினால், இக் குழந்தையைக் காப்பதே சிலாக்கியமானது ; சிகரமானது. இது குழந்லையல்ல ; எதிர்காலக் கோமகன். ஏனையவற்றை ஓலை விளக்கும். நாங்கள் விடைபெறுகிறோம்."

மறுமொழிக்கும் எதிர்பாராமல் வணங்கி விடைபெற்றுக் கதவைத் திறந்து விரைந்து வெளியேறுகிறார்கள்.

மீண்டும் கதவைச் சாத்தித் தாழிடுகிறாள் அம்பபாலி. குதிரைகள் விரையும் ஓசை கேட்கிறது.

செக்கச்செவேலென்றிருந்த அக்குழந்தையைக் கவனிக்கிறாள் செம்பொன் திருமேனியாள் அம்பபாலி. ஆ ! என்ன ராஜப் பிரகாசம் !

குழந்தையை மீண்டும் நரி மருட்டுகிறது.

ஓலையைப் பிரித்துப் படிக்கிறாள்.

படிக்கப் படிக்க அவளது நீல நயனங்கள் சினந்து சிவக்கின்றன ; வியந்து மலைக்கின்றன ; பயந்து துடிக்கின்றன.

பிம்பிசாரனுக்கு இப்படி ஒரு சந்தேகப் புத்தியா ? காமாதுரர்கள் மனைவியைச் சந்தேகிப்பவர்கள் ; மாற்றாள் சொற்களுக்கு மண்டியிடுபவர்கள். மகத மாதேவி ! உங்களுக்கா இந்த நிலை ?

மகா ஆமாத்தியர் வஸ்ஸகாரன் தெளிவாகவே எழுதி இருந்தார். அத்துடன் சில நிபந்தனைகளையும் குறிப்பிட்டிருந்தார்.

'அஜாதசத்ரு என்ற இவனது பெயர், உண்மை வெளிச்சமிடும்வரை இருட்டில் உறங்கட்டும். நீ எந்தப் பெயரிட்டும் இவனை அழைத்துக் கொள்ளலாம். ஆனால், இவனை உனது பிள்ளை போலக் கண்ணுங்கருத்துமாய்க் கவனித்துக் கொள்ள வேண்டும். இதுவே நீ மகாராணி வைதேகி தேவியார்க்குச் செய்யும் கைம்மாறு. எதிர் காலத்து மகத சக்ரவர்த்தியான இக் குழந்தையைச் சான்றோனாக, சமர் வல்லோனாக ஆக்குவது உனது தலையாயக் கடமை. சிறைப்பட்டிருக்கும் மகாராணியாரை மீட்க எங்களாலும் முடியும். ஆனால், கறைபட்டிருக்கும் 'மகதக் களங்கம்' என்ற வரிக்கு வரலாறு பயப்படுகிறது. எனவே, நீ வளர்க்கும் இச் செல்வன் வந்து மீட்கிறபோதே அக்களங்கம் கலைக்கப்படும். அப்போது இவன்தான் அஜாதசத்ரு என்று வெளிப்பட வேண்டும். அதுவே மகத மகுடத்தின் மாணிக்கப் பிரகாசம். அதுவரை ரகசியம் பாதுகாக்கப்பட வேண்டும். இவனது வளர்ச்சிக்கு உனது தியாகம் எதுவானாலும்—எதுவானாலும் என்று குறிப்பிடச் சொன்னவர் மகாராணியார்— இது மகத தியாகமாகும் ! உன் மகன் அபயகுமாரன் இருக்கவேண்டிய இடத்தில்

பெறவேண்டிய கௌரவத்துடன் வளர்க்கப்பட்டு வருகிறான். எதிர்கால மகதத்தையே மகாராணியார் உனது கையில் ஒப்படைக்கிறார்...'

நீண்ட பெருமூச்சுடன் இமைகள் அவளது கண்களைத் தழுவுகின்றன.

ஓ...! எப்பேர்ப்பட்ட பொறுப்பு !

இமயவெற்பையே தனது இதயத்தில் இறக்கி வைத்து விட்டார்கள்...

டக், டக், டக்...

இம்முறை பிரசேனஜித் ராஜன்தான்.

விழிப்பு நிலையடைந்த வேல்விழிகள், வினாக்குறிக்கு விடையறிந்து, அடுத்து கொஞ்சமும் தாமதியாமல் குழந்தை அஜாதசத்ருவைத் தூக்கிக் கொண்டு போய், தனதறையின் மஞ்சத்தில் கிடத்துகிறாள். மூங்கில் பேழையை அகற்றி விடுகிறாள். கையிலிருந்த ஓலையை மறைமுகமான ஓரிடத்தில் ஒளித்து விடுகிறாள். ஏதோ ஒரு முடிவுக்கு வருகிறாள்.

கதவு தட்டும் சத்தம் நாடிக்கு நாடி அதிகரித்தது.

என்ன அவசரம் இந்தக் கோசல நாட்டு மன்னருக்கு ? தேசுத்தை நெருப்பிலிட்டு வந்திருக்கிறாரா ?

ஒரு மயிலின் கம்பீரமே போல எழுந்து நின்று பளிங்கு (கண்) ஆடியை நோக்குகிறாள். பின்னர், தனக்குத் தானே தனது பொன்னாடியைக் கண்டு பூரித்துக் கொள்கிறாள்.

ஆ ! அழகா அது ?

சூரியன் பெற்றெடுத்த சுப்ரஜோதி போல...

வசந்தம் வார்த்த வார்ப்படம் போல...

செதுக்கிச் செய்யாத ஆணிப் பொன்சிலை போல...

சுந்தரக் காப்பியங்களுக்கெல்லாம் ஒரு சுகமான பாயிரம் போல...

ஆயிரமாயிரம் பொன்னைக் குவித்தாலும் இந்த அழகு ஆயிரம் ஆண்டுகட்கு ஒரு முறையே உதயமாகும் என்று சொல்வது போல...

எழுந்தடங்கிய பெருமூச்சால், எந்தச் சொற்களுக்கும் வருணனையில் பிடிபடாத— பிடிபட முடியாத அந்த மன்மத மகுடங்கள் மார்பில் விம்மியடங்குகின்றன.

அப்படி ஒரு பெருமிதத்துடன் ஒசிந்து நடந்து கதவைத் திறக்கிறாள் அம்பபாலி.

அங்கே...

அலங்கார புருஷனாகக் கோசல நாட்டு மன்னர் பிரசேனஜித்.

"வாருங்கள்! பிறந்த நாள் வாழ்த்துக்கள் மன்னர் பெருமானே!"

அம்பபாலியின் குரல் நயமும் மெய்ப்பாடுகளும் ஏதோ புரிந்து கொள்ள முடியாத வேறுபாட்டில் வீணை வாசிக்கிறது. அந்த மெய்ப்பாட்டுக்கு— பாவனைக்குப் பொட்டிட்டுப் புன்னகைக்கிறாள்.

பிளந்த வாயில் ஏதோ பலாச்சுளை நுழைந்தது போன்ற பிரமை பிரசேனஜித்துக்கு!

மாளிகையினுள் பிரவேசித்த பிரசேனஜித், அங்கிருந்த ஆசவமொன்றில் அமருகிறார். "என்ன பாலி! இன்றைக்கு ஒரு மாற்றம் தெரிகிறது?"

"எவ்வளவு நாட்களுக்குத்தான் இந்த ஏமாற்றம்?"

பிரசேனஜித்தின் அதரங்களில் பிறை நகை.

"சென்ற பிறந்த நாளன்று நீ என் அரண்மனைக்கு வந்தாய் அம்பபாலி!"

"இந்தப் பிறந்த நாளன்று நீங்கள் என் அரண்மனைக்கு வந்திருக்கிறீர்கள்!"

"இன்று மட்டும்தானா வந்தேன்?"

"இன்றைய வருகையில்தான் ஒரு புதிய இலக்கியம் பிரகாசம் பெறுகிறது!"

கோசல நாட்டு மன்னர் கம்பீரமாக நிமிர்ந்து நோக்குகிறார்.

"பிரபோ! இவ்வளவு நாட்கள் ஏன் அலைக்கழித்தேன் தெரியுமா? நீங்களும் பிம்பிசாரச் சக்ரவர்த்தி போலக் காமத் தவமியற்றுகிறீர்களா என்று சோதிக்கத்தான்! அதனால் ஒரு வெள்ளணி விழா வரை வெறுப்பேற்றினேன். நீங்கள் அவ்வாறு காம வயப்படவில்லை. பட்டிருந்தால் உங்கள் பலாத்காரம் பந்தலிட்டிருக்கும்! செங்கோலுக்கு முன் என்கோல் என்ன செய்ய முடியும்? அதனால்..."

"அதனால்...?"

"இந்தப் பிறந்த நாள் பரிசாக அம்பபாலி, தனதழகை உங்கள் காலடியில் கொட்டுகிறாள்!"

ஓ... அம்பபாலி...!

ஒரு கணம் கண்களை இறுக மூடித் திறக்கிறார் கோசல நாட்டுக் கோமான் பிரசேனஜித்.

"அம்பபாலி! நான் எதிர்பாராத காணிக்கை இது! வழக்கமாக வருகை தருவது போல வந்திருந்தால் உன்னைச் சேர்த்து அணைத்து எனது அன்பைத் தெரிவித்திருப்பேன். நான் இப்போது கவலையுடன் வந்திருப்பவன். என்னருமைத் தங்கை வைதேகியை, பிம்பிசாரன் சிறையிலடைத்து விட்டானாம்! அந்தக் கதையைப் பிறகு சொல்லுகிறேன். இப்போது நான் மகதம் நோக்கிப் பயணமாகிக் கொண்டிருக்கிறேன்!"

"மகத உத்தமியைச் சிறையிலடைத்து விட்டாரா பிம்பிசாரச் சக்ரவர்த்தி? படைதிரட்டிச் செல்கிறீர்களா?"

"இல்லை; முதலில் நானாகச் சென்று காரண காரியங்களை ஆராய்வேன். மீட்க முயல்வேன். மறுத்தால் யுத்தம் நிச்சயம்."

பிரசேனஜித் கண்கள் கலங்கி விட்டன.

அதுவரை ஒன்றுமேயறியாதவள் போலப் பாவனை செய்த அம்பபாலி, மன்னர் கண்கலங்கவே, தனது முந்தானை முனை கொண்டு துடைத்தாள். அதுவே முந்தானை மூழக்கத்துக்கு முதல் ஓசையாக அமைந்தது.

கோசல மன்னர் எழுந்து கொண்டார்.

"வந்ததற்கு பழரசம் அருந்திச் செல்லுங்கள்."

"அவசியமில்லை அம்பபாலி! அது மனச் சஞ்சலத்துக்கு இனிமை தராது."

அவர் இயல்பாகத்தான் இதனைச் சொன்னார். அம்பபாலியோ வேறுவிதமாகப் புரிந்துகொண்டு அருகே சென்று, "நான் வேறு ரசம் தருகிறேன்; அது நிச்சயம் இனிக்கும்" என்று கூறி, அணைத்துத் தனது கனியிதழ்களைக் காவலன் இதழ்களில் பொருத்தி முத்தக் கவிதை எழுதிக் கொண்டிருந்தபோது...

குழந்தை அஜாதசத்ரு வீறிட்டழும் ஓசை கேட்டது.

பீடகம்-9

சிறைக்கோட்டம்

சிங்கக்குட்டியின் மழலைக் கர்ஜனை போலிருந்தது. குழந்தை அஜாதசத்ருவின் வீறிட்டெழுந்த அழுகைக் குரல்.

பிரசேனஜித்தின் கண்களில் கேள்வியின் பிரசன்னம்.

அம்பபாலியின் விழிகளிலோ மான் மருளாத மருட்சி.

"என்ன, குழந்தை அழுகிறது?"

"என்ன குழந்தையல்ல; என் குழந்தை!"

பிரசேனஜித் கேட்ட கேள்விக்கு மறுமொழி பகர்ந்த அம்பபாலி, சொற்களுக்கு ஒப்பனை செய்து, பற்களுக்கு முறுவல் முலாம் பூசுகிறாள்.

"உன் குழந்தையா?"

"தெரியாத மாதிரி கேட்கிறீர்களே?" என்று கூறிய அம்பபாலி, மாடத்தை நோக்கி, பணிப்பெண் விசாலியை அழைக்கிறாள்.

அவளது குரல் படியேறுமுன் விசாலி படியிறங்கி ஓடோடி வருகிறாள்.

"அறையினுள் அழும் குழந்தையைச் சமாதானப் படுத்து! பாலைச் சூடு பண்ணிப் புகட்டு."

அம்பபாலியின் சமிக்ஞையின் அர்த்தம் புரிந்து அறை நோக்கி விரைகிறாள் விசாலி.

குழந்தையின் அழுகுரல் மெல்லத் தேய்கிறது.

பிரசேனஜித்தின் கண்களில் இன்னமும் கேள்வியின் பிரசன்னம் விசுவரூபமாகத் தெரிகிறது.

பாலியின் நாவு பதமாய் அசைகிறது :

"எனக்கும் மகத சக்ரவர்த்திக்கும் பிறந்த குழந்தை இது. ஓராண்டு ஒப்பந்தத்தில் கர்ப்பத்தைக் கிழித்த மகதச் சின்னம். இதுவரை ஓரிடத்தில் வளர்ந்து வருமாறு செய்தேன் ; வளர்த்து வந்தவள், பூமிக்குள் புதையாக் குறையாகி விட்டாளாம். இப்போது இது உரிய இடம் தேடி வந்து விட்டது."

"குழந்தையின் பெயர் ?"

அம்பபாலியின் கனத்த சிந்தனை ஒரு கணம் உருண்டு புரண்டது.

"பிம்பிசாரச் சக்ரவர்த்தி இட்ட பெயர் அபயகுமாரன்; வளர்த்தவள் இட்ட பெயர் விமல கோதண்டன் ; நான் இட்ட பெயர் *அசோகசந்தா !"

"ஓகோ ! எனக்குக் குழந்தையைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறது."

"வேண்டாம் ; நம் காதல் அரும்பு வெடித்து மணம் பரப்பும் வேளை பார்த்து இது வந்து என் தலையில் விடிந்திருக்கிறது ! குழந்தையை நீங்கள் பார்ப்பதன் மூலம் மகத சக்ரவர்த்தி நினைவு வரும். ஆசையின் மாற்றுக் குறையும். நீங்கள் அம்பபாலி என்கிற முழு நிலவைப் பார்த்தால் போதும் ! அவளைச் சூழ்ந்த மேகங்களைப் பற்றி நினைக்கவும் வேண்டாம்."

* 'கதாகோசா' எனும் நூல் அஜாதசத்ருவுக்கு அசோக சந்தா, தேவனாம்பிரியன் என்ற பெயர்களும் உண்டு என்று பேசுகிறது.

பாலியின் நாசியில் சிறு புயலாய் ஒரு பெருமூச்சு ! குழந்தையின் வளர்ப்புக்காக எந்தத் தியாகத்தையும் ஏற்க வேண்டி மகத மகாராணியாரே குறிப்பிட்டு விட்டாரே !

பிரசேனஜித்தும், அம்பபாலியின் எரிபட்ட பிரச்சினைகளுக்கு மீண்டும் தீ மூட்ட விரும்பாது, "விடை கொடு பாலி !" என்றார்.

"சென்று வாருங்கள் பிரபோ ! மகத மகாராணியின் கண்ணீரை வென்று வாருங்கள் !"

தும்பைப் பல் விரித்தாள் அம்பபாலி.

மகத சக்ரவர்த்தியின் மீது இரட்டிப்புக் கோபம் கொண்டு புறப்பட்டார் கோசல மன்னர் பிரசேனஜித்.

அழகு ஊர்வலம் வரும் அந்தச் சிராவஸ்தி தலைநகரம், இரவில் மேலும் அழகாக விளங்கியது.

ரதம் அரண்மனையை அடைந்து நிற்கிறது.

வெளியே, மகதப் பயணத்துக்காக இருநூறு வீரர்கள் ஆயத்தமாக நின்ற வண்ணம் இருக்கிறார்கள்.

அரண்மனையுள் நுழைந்த பிரசேனஜித், தமது இளம் மனைவியைத் தேடி விரைகிறார்.

புன்முறுவல் பூக்க அருகே வந்துநிற்கிறாள் பதினெட்டே வயது நிரம்பிய இளம் மனைவி வாசபத்தியா. மன்னர் பிரசேனஜித்* 'வாசவி' என்று செல்லமாக அவளை அழைப்பார்.

மகத சக்ரவர்த்தி பிம்பிசாரனின் தமக்கையை மணந்த பிரசேனஜித், இரண்டாம் மனைவியாகப் புகழ் வாய்ந்த சாக்கிய குலத்திலிருந்து எடுக்க விழைந்தார். மேலும் கௌதமபுத்தர் பிறந்த குலமல்லவா ? அந்தக் கதையே ஓர் அலாதியானது.

* வைதேகியை வாசவி என்பாருமுண்டு.

வாசவி என்கிற வாசபத்தியா இப்போது கருவுற்றிருந்தாள்.

"வாசவி! நான் மகதம் சென்று தங்கையின் நிலைமையை விசாரித்துக் கொண்டு உடன் திரும்பி விடுவேன். உன் வயிற்றிலிருக்கும் கோசலச்செல்வம் கேட்டால், அப்பா உடனே வந்து விடுவார் என்று சொல்!"

பிரசேனஜித், வாசவியின் கன்னத்தைக் கிள்ளி, விடைபெறுகிறார்.

வாசவியின் முகம் வாசனைப் பூவாய் மலர்ந்தது.

நேரே பட்டத்தரசியும் அன்பு மனையாளுமான ராஜதேவியைக் காணச் சென்றார் பிரசேனஜித்.

பட்டத்தரசியும் அப்போது கர்ப்பிணியாக இருக்கவே, அவளுக்குத் தனி மாளிகை தந்து இருக்கச் செய்தார். வாசவி வருகைக்குப் பிறகு ஏற்பட்ட வயதான கர்ப்பமானாலும் வாசனைக் கர்ப்பம், வாரிசுக் கர்ப்பமல்லவா? எனினும், பெற்றுத்தருவதில் வாசவி முந்திக் கொண்டாளே என்கிற வருத்தம் இருக்கத்தான் செய்தது.

ஒரே இடத்தில் கர்ப்பமுற்ற இரு மனைவிகள் இருந்து முகங்களைப் பார்த்துக் கொள்ளக் கூடாதென்பது சம்பிரதாயம். அதன்படி, அவ்வாறு தனி சௌகரியங்களை அளித்திருந்தார். என்ன இருந்தாலும் இளமைக்கு முதலிடம் என்பது போல, வாசவி அரண்மனையில் வாசம் செய்தது இயல்புதானே?

தனது பட்டத்தரசியும், மகத பிம்பிசாரன் தமக்கையுமான கோசல ராஜதேவியிடம் சென்று, உள்ளுக்குள் குமைந்து கொண்டிருக்கும் சினத்தைக் காட்டிக் கொள்ளாது அன்புடன் விடை பெற்றார் பிரசேனஜித். கர்ப்பிணியின் மனம் கலங்கக் கூடாதல்லவா?

கோசல நாட்டுக்குத் தென் கிழக்கே மகத நாடு பரந்து விரிந்து கிடந்தது.

அயோத்தி நாட்டுக் கிழக்கெல்லை வழியாகச் சென்று அசிரவதி நதிக்கரையோரமாகவே கௌசாம்பியின் கிழக்கெல்லையைக் கடந்து மகதத்தையடைய ஏறத்தாழ இருபது நாட்கள் தேர்ச் சக்கரங்களிலும் குதிரைகளின் குளம்புகளிலும் நசுங்கின.

ஓர் அற்புதமான காலைப் போதில், கோசல மன்னன் பிரசேனஜித் ராஜகிருகத் தலைநகரில் நுழைந்தார். ஆனி மாதத்துக் காற்று இதமாக வீசிக் கொண்டிருந்தது.

கோசல மன்னன் வருகிறார் என்கிற செய்தியறிந்து ராஜகிருகக் கோட்டைக் கதவங்கள் அடங்கி ஒடுங்கித் திறவு படுகின்றன.

ராஜகிருக அரண்மனை வாயிலில் நின்று வரவேற்கிறார் மகத சக்ரவர்த்தி பிம்பிசாரன்.

தமது மைத்துனர் இத்தனை அவசரமாக எதற்காக முன்னறிவிப்பின்றி வருகை தந்திருக்கிறார் என்கிற சிந்தனை, பிம்பிசாரன் நெஞ்சில் அழுத்தமாக ஆணி போலிறங்குகிறது.

"வாருங்கள் மைத்துனரே!"

உபசரணையுடன் அழைப்பு தந்த பிம்பிசாரன், அரண்மனையுள் அழைத்துச் செல்கிறார்.

இந்தக் கோசல வருகை...

ஓர் உற்பாத வருகை என்பதை மகா ஆமாத்தியர் வஸ்ஸகாரன் புரிந்து கொள்கிறார். இதனை எவ்வாறு கழுவேற்றிச் சமாளிப்பது என்பதில் அவரது நெஞ்சம் முரண்பாடாகச் சிந்திக்கிறது. இதனை மென்மையாகச் சிந்திக்க முடியாது. ராட்சஸமாகச் சிந்திக்க வேண்டும்!

அரண்மனையின் சித்திரக் கூடத்தில் அமருகிறார்கள்.

"பழரசம்..."

"வேண்டாம்."

கோசலச் சினம் புரிகிறது. ஆயினும் பிம்பிசாரன் அமைதியாகவே கேட்டார் :

"அறிவிக்காமலேயே வருகை தந்திருக்கிறீர்களே, மைத்துனரே !"

—பிம்பிசாரன் சொல்லி முடித்த அடுத்த கணம்...

"எனக்கு அறிவித்தா என் தங்கையைச் சிறையிலடைத்தீர்கள் ?"

கோசல நாவில் நெருப்புப் பொறி பறக்கிறது.

சில கணங்கள் அமைதி.

மகா ஆமாத்தியர் வஸ்ஸகாரன் மௌனமாக அமர்ந்து பரிசீலிக்கிறார்.

பிம்பிசாரன் சொன்னார் : "இது, கேட்டு அடைக்க வேண்டிய பூட்டல்ல ! கற்பின் குற்றச்சாட்டு !"

கற்பின்... குற்றச்சாட்டு...

"மைத்துனரே !"— பிரசேனஜித்தின் உறுமல் !

"மைத்துனரே ! ஆத்திரப்படாமல் பொறுமையாக நடந்ததைக் கேளுங்கள். பிறகு உறுமலாம் ; கர்ஜிக்கலாம்!"

பிரசேனஜித்துக்கு மூச்சு வாங்கியது.

பிம்பிசாரன் நடந்ததை நயமாக எடுத்துச் சொன்னாலும், இடையிடையே உணர்ச்சி வயப்பட்டுப் பற்கள் நறநறக்கத்தான் செய்தன.

செவிசாய்க்கச் சாய்க்கக் கோசலக் கோமான் பிரசேனஜித், ஆத்திரத்தின் செவிட்டில் மேலும் ஆத்திரம் கொண்டு அறைந்ததால் அது மேலும் மேலும் ஆத்திரம் கொண்டு அவரை ஆவேசப்படுத்தியது.

"என் தங்கை வைதேகி கோசலப் புத்திரி ! ஜனகபுரத்து அஜாதசத்ருவை அவளுக்கு மணம் முடிக்க எண்ணியது என்னவோ உண்மைதான். மகத சம்பந்தம்

வரவே, ஜனகபுரம் மறுக்கப்பட்டது. இதனால் நீங்கள் சந்தேகிப்பது...'

"மைத்துனரே ! சொல் வல்லாளான வைதேகியைவிட நீங்கள் ஒன்றும் சொல்லி என்னை மயக்கிவிட முடியாது. கோசல குலம் இழிவான மாதங்க குலம் என்பதை உங்கள் தங்கை நிருபணம் செய்து விட்டாள் !"

"பிம்பிசாரா !"

அந்தச் சித்திரக்கூடமே ஒரு கணம் அதிர்ந்து அடங்கியது.

இனியும் மௌனம் சாதித்தால் ஒரு மகாயுத்தமே மூண்டு விடும் என்பதைக் குறிப்பால் உணர்ந்து கொண்ட மகா ஆமாத்தியர் வஸ்ஸகாரன் இடைபுகுந்தார் :

"கோசல மன்னா ! சினம் தவிர்க்க ! அது தன்னையே கொல்லும் ! நடந்த உண்மையை விசாரித்தே எங்கள் சக்ரவர்த்தி இந்த முடிவுக்கு வந்திருக்கிறார். நீங்கள் விசாரணை நடத்த வேண்டுமானால் இங்கே சாட்சியங்கள் உண்டு. தேவைதானா ?"

சிறிது நேரம் தாடையை ஆள்காட்டி விரலால் உரசிக் கொண்டிருந்த பிரசேனஜித், "குழந்தை எங்கே ?" என்றார்.

"இறந்து விட்டது !"

மகா ஆமாத்தியர் இவ்வாறு கூறியதும் பிம்பிசாரன் மலைத்துப் போனார். ஏன் இப்படி மறுமொழி பகர வேண்டும் ?

"இறந்து விட்டதா ? கொல்லப்பட்டதா ?"

"கொல்லப்பட்டது என்பது புரளி ; இறந்து விட்டது என்பது உண்மை !"

"நல்லது ; நான் என் தங்கையைப் பார்க்க வேண்டும் ஆமாத்தியரே !"

"அவசியம் பார்க்கவேண்டும். கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள், பார்க்கலாம்."

"இங்கே நான் ஓய்வெடுக்கவோ உணவெடுக்கவோ வரவில்லை. உயர்ந்த மகத குலத்தில் இந்த இழிந்தவன் தண்ணீரும் அருந்தலாமா ? உடனடியாகத் தங்கையை பார்க்க வேண்டும்."

"நான் ஏற்பாடு செய்கிறேன் கோசலமன்னா ! அது வரை அரண்மனையில் ஓய்வு கொள்ளுங்கள் !"

"அவசியமில்லை. நாங்கள் வெளியே வராக மலையடி வாரத்தில் இருக்கிறோம் ; சொல்லியனுப்புங்கள் !"

கோசல மன்னர் எழுந்து, விறுவிறு வென்று வெளியேறினார்.

மகா ஆமாத்தியர் வஸ்ஸகாரனின் சிந்தனை ராட்சஸத் தனமாகச் சுழன்றது.

"வஸ்ஸகாரரே ! ஏன் இப்படிப் பயந்து சாகிறீர்கள் ?" என்றார் மகத சக்ரவர்த்தி.

"பயப்பட வேண்டியதற்குப் பயந்தே தீரவேண்டும். அங்க நாட்டு யுத்தம் ஓய்ந்து மகதம் ரணப்பட்டிருக்கிறது. இந்நிலையில் கோசல யுத்தம் மூண்டால் என்னாவது ?"

"என்னாகும் ?"

"நீங்கள் அடுத்த தேசத்தான் உதவியை நாடுவது அகௌரவம் என்று நினைப்பவர். கோசலன் அடுத்த நாடு களை அணைத்து நம்மை அகௌரவப்படுத்தி விடக் கூடாதல்லவா ?"

பிம்பிசாரன் பிதுங்கிப் போனார்.

"குழந்தை இறந்ததாக ஏன் சொல்லவேண்டும் ?"

வஸ்ஸகாரன் ஒரு கணம் விழித்து மறுகணம் விடை காணுகிறார் :

"குழந்தையைத் தேடிப் பிடித்து நமக்கு எதிரியாக உருவாக்கலாம் அல்லவா ?"

"ஓகோ ! அதுவும் உண்மைதான். ஆனாலும் சிறையில் வைதேகி தன்னை நிரபராதி என்றுதான் சொல்லப் போகிறாள் ; குழந்தையைக் கடத்திச் சென்ற செய்தியைச் சொல்லத்தான் போகிறாள். யுத்தம் மூளத்தான்போகிறது. அதைவிடச் சிறையைப் பார்வையிட வரும் பிரசேனஜித்தை, தங்கையின் பக்கத்து அறையில் பாதுகாப் பாக அடைத்து விட்டால்...?"

"சக்ரவர்த்தி !"

பதறிப்போனார் வஸ்ஸகாரன்.

"சக்ரவர்த்தி ! இது அரசப் பண்பாகாது. உயர்ந்த மகதத்துக்குத் தலை குனிவு ஏற்படும். எப்படிச் சமாளிக்க வேண்டுமோ அப்படிச் சமாளிக்க முயல் கிறேன். நான் மகாராணியாரை முதலில் பார்த்தாக வேண்டும்"

"ஏன் ?"

"தயவுசெய்து இப்போதைக்கு எதையும் கேட்க வேண்டாம் ; அனுமானித்துச் சொல்லவும் முடியாது. நான் விடைபெறுகிறேன் !"

மகா ஆமாத்தியர் வஸ்ஸகாரன் ஒரு பயங்கர முடிவுடன் சிறைக்கோட்டம் நாடிச் சென்றார்.

சிறைக் கோட்டத்துக் கதவுகள் திறந்தே இருந்தன.

அழைப்பின் பேரில் அங்கு வருகை தந்த கோசலராஜன் பிரசேனஜித், வாயிலில் மகத சக்ரவர்த்தி பிம்பிசாரன் நிற்கக் கண்டு ஆத்திரம் கொண்டார்.

"பிம்பிசாரனே! என் தங்கையின் வாக்கு மூலத்தை வைத்திருக்கிறது மகதத்தின் முடிவு! நீங்கள் நினைத்தால் என்னையும் சிறையுள் தள்ளலாம். அதன் பின்விளைவு என்னாகும் என்பதையும் யோசியுங்கள்! எங்களை இழிந்தவர் என்றீர்! உமது தமக்கையை எனக்களித்த போது எங்கே போயிற்று இந்த இழிகுலம்? எனது தங்கையை நீர் மணந்தபோது எங்கே போயிற்று இந்த இழிகுலம்? சொல்லப்போனால், சிசுநாகர்கள் பாவிகள் என்றும், ராஜகிருகம் பாவபூமி என்றும் ரிக்வேதம் சொல்கிறது. மறந்துவிட வேண்டாம்!"

மகத சக்ரவர்த்தி கடகடவென்று பூதாகாரமாகச் சிரிக்கிறார். அந்த சிரிப்புக்குப் பின்னே ஏதோ மர்மம் அடங்கி இருக்கவேண்டும் என்றே கருதுகிறார் கோசலக் கோமான் பிரசேனஜித். ஆயினும் வருவது வரட்டும் என்கிற துணிவுடன் சிறைக்கோட்டத்துள் நுழைந்தார்.

சிறைக் கோட்டத்து அதிகாரி சிம்மநாகர், மிக்கவும் மரியாதையுடன் பிரசேனஜித்தை அழைத்துச் சென்று, ஒரு கட்டத்துக்கு வந்ததும் நின்று வைதேகி அடைப்பட்டிருந்த சிறையறையைக் காட்டுகிறார். பின்னர், அவர் அங்கே நில்லாது திரும்பி விடுகிறார்.

அங்கே ஆள் நடமாட்டமே இல்லாத அமைதியின் கனமான அழுத்தம் தெரிகிறது.

சிறையறை நாடி நடக்கிறார்.

சிறையறையில், கண்ணீருடன் காணப்பட்ட தங்கை வைதேகியைக் கண்ட அடுத்த கணம்...

பிரசேனஜித்தின் ஆஜானுபாகுவான தேகத்துக்குள் அரக்கன் புகுந்து கொண்டிருந்தான்.

பிடகம்-10

அண்ணா, ஓ, அண்ணா!

மகதத்தை யுத்த மேகம் சூழ்ந்து கொள்கிறது.

நாலா திசைகளிலும், வேலாலும் வாளாலும் ஈட்டிகளாலும் அம்புகளாலும் போரிடும் காட்சி...

ஐயகோ, கோசல நாட்டுக்கும் மகத நாட்டுக்கும் மூண்ட கோர யுத்தம், பயங்கரத்துக்கு மாமிச விருந்து படைத்துக் கொண்டிருக்கிறது.

மகதத்தின் செம்மாப்பு மிகுந்து படுமோ, அன்றி தோல்வியில் புகுந்து படுமோ என்று அஞ்சாதார் யார்? அலறாதார் யார்?

பிம்பிசாரன் பக்கம் துணை வருவாரின்றித் துவண்டன படைகள். இவர்தாம் எவர் உதவியையும் நாடாத எந்தலாயிற்றே! எவர் வருவர்? துணை புரிவர்?

எப்படியோ செவிமடுத்த சேதகன்— வைசாலியைத் தலைநகராகக் கொண்டு வஜ்ஜி நாட்டையாளும் மன்னன் —லிச்சாவிக் குடியின் தலைவன்— மகத இளையராணி, இப்போதைய ராஜராணி செல்லனாதேவியின் தந்தை, தனது மகள் பொருட்டு அவளது மக்கள் பொருட்டுத் தானாகவே வலிந்து பெரும் படையனுப்பி உதவியிருக்கிறார்.

பொங்குமாங்கடல் முன்னே போதுமா இச்சங்கை வெள்ளம்?

அலை போன்ற வீரர்களைக் கொண்டு, மலை போன்ற படையெடுத்து மகதத்தை வீழ்த்தவந்தவராயிற்றே கோசல மன்னர் பிரசேனஜித். அவர் பக்கம்...

மல்ல நாடு மார் தட்டியது! தட்டிய மார்பைத் தழுவி மகிழ வந்தது சேதி நாடு! சேதி கேட்டுச் சினந்து வந்தது வத்ச நாடு! குறுக்கே குருநாடு! குருவை மீறிய பாஞ்சாலம்! சூறையெனச் சூழ்ந்தது சூரசேனம்! அஸ்ஸகமும் காம்போஜமும் அடக்குவோம், ஒடுக்குவோம் என்று புயல் போலப் புறப்பட்டு வந்து சேர்ந்து கொண்டன!

பிரசேனஜித்துக்குப் பலரும் உதவினர் என்றால், அதில் ஒரு பரிசுத்த காரணம் இருந்தது. இது ராஜ மகுடங்களுக்கு மரியாதை செலுத்தும் கௌரப் போராயிற்றே!

ஒரு தேசத்து ராஜகுமாரியை-ராஜ மாதாவைச் சிறை வைக்கலாமா? அதுவும் பொற்பமை கற்பில் பொல்லாங்கு சொல்வது, பொதுவில் மாதர்க்கு இழிவாகுமன்றோ? இனியொருவர் இவ்விதம் செய்யக்கூடாது! தனியொரு பெண்ணுக்குக் களங்கம் கற்பிக்கப்படுமெனில், தரணியை அழித்திடுவோம் என்கிற முறையில் கேட்டுக் கொண்டதும் அதற்கிணங்கி உதவ வந்ததுமான உக்கிரப் போராயிற்றே!

நாகக் கொடி நலிந்துபட்டது; சிசுநாக வமிசமும் கோசலத்துக் காலடியில் குனிந்துபட்டது; பிம்பிசாரன் பிடிபட்டுப் போனார்!

புகழ்பெற்ற ராஜகிருகம் இகழ்பட்டு-இருந்துபட்டு, பின், குறைப்பட்டு முடிவில் குழிபட்டுப் போகுமோ என்று குமைகிறாள், சிறையில் அடைபட்டிருந்த செம்மணியாள் வைதேகி.

அவளை மீட்க வந்த அண்ணன் பிரசேனஜித், அதே சிறையறையில் பிம்பிசாரனைத் தள்ளி கர்ஜிக்கிறார்: "பிம்பிசாரா! எனது தங்கை ஜனகபுரத்து அஜாதசத்ருவைக் காதலித்தது உண்மை! ஆனால், நீ சித்திரிக்கும் அபாண்டங்கள்— அநியாயங்கள் உண்மையல்ல! காதல் என்பது வாலிபத்தில் வந்து போகும் வாடிக்கையான வசந்தக் கனவுகள்! அதனை நீ புயல்போல் சேதமாக்கி

னால், அது உனது அறியாமை, புரியாமை, தெரியாமை, அதுவே உன் அரண்மனையில் புகுந்துவிட்ட ஆமை! நீ மட்டும் என்ன யோக்கியன்? நடு வீட்டில் குலமகள் கும்பி பொசுங்க, நடுத் தெருவில் விலைமகளின் அங்கங்களை விலை பேசினாய்! குல கௌரவத்தைக் குனிய வைத்தாய்! அழகுச் சித்திரமான அம்பபாலியை நீ படுத்திய அசிங்கம்... தூ! நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகவேண்டும்! நீ சாக மாட்டாய்! ஏனென்றால், சாக்கடை; மனைவியைச் சந்தேகித்த சாக்கடை! உன்னைச் சிறையில் நிரந்தரமாக வைக்கவேண்டும் என்பதில் எனக்கொன்றும் அதருமமான ஆசையில்லை. என்னரும் தங்கை வைதேகியைக் கற்பின் கனலி என்று நாவார, மனமாரக் கூறி, மன்னிப்புக் கோரி நீ ஏற்கவேண்டும். பிறகு ராஜ கிருகத்தை ஒப்படைத்துத் திரும்புகிறேன்!"

"அண்ணா!"

மேற்கண்ட கோரக் காட்சியை அந்த ஒரு கணப் போதில் எண்ணிப் பார்த்த வைதேகி, பெரிதாக அலறிவிட்டாள். அவள் உடல் வியர்த்துக் கொட்டியது.

அதுவரை நின்று கவனித்துக் கண்ணீர் மல்கி, அரக்கா வேசம் கொண்டு நின்ற பிரசேனஜித் அரண்டு மருண்டு போனார்.

"வைதேகி! ஏன் அலறுகிறாய்? எப்படி வளர்த்த தங்கை! ஓ..."

பிரசேனஜித் உடலை முறித்துத் தலையை அண்ணாத்திக் கண்களைத் துடைத்துக் கொள்கிறார்.

நெட்ட நெடிய பெருமூச்சுடன், "எப்போது வந்தீர்கள் அண்ணா?" என்றாள் வைதேகி, குரலில் சமனம் சம்மணமிட்டிருந்தது.

"நான் வந்தது கிடக்கட்டும் வைதேகி! நான் கேட்பதற்கு உண்மையான மறுமொழி தேவை. நான் உன்னைப் பற்றிக் கேள்விப்பட்டதெல்லாம் உண்மையா?"

"..............."

"உண்மையா?"

வைதேகி தலை குனிந்து கொள்கிறாள். தொண்டையில் யாரோ புகுந்து அடைப்பது தெரிகிறது. யாருமல்ல. மகா ஆமாத்தியர் வஸ்ஸகாரன்.

"உண்மையா வைதேகி?" நீ ஜனகபுரத்து அஜாதசத்ருவிடம் கற்பைப் பறிகொடுத்தது உண்மைதானா? மௌனம் சாதிக்காமல் வாயைத் திற!"

பிரசேனஜித்தின் அதட்டல், 'சொல்! இப்போதே மகதத்தைத் துகளாக்குகிறேன் என்பது' போலிருக்கிறது.

எரிதழலில் வைதேகி எரிந்து கொண்டிருந்தாள்.

"சொல் வைதேகி!"

"உண்மை அண்ணா!"

வைதேகியின் இதயம் நின்று விடும் போலிருக்கிறது; இல்லையென்றால், பக்கத்துச் சிறையறை அண்ணனுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறதே! இதன் பின்விளைவு...

முன்னம் மகதம் துகளாக எண்ணிப் பார்த்து 'அண்ணா' என்றலறியதை நினைத்துப் பெருமூச் செறிகிறாள்.

பிரசேனஜித்தின் கண்களில் அக்கினி மூட்டம். தேகத்தில் புயல் பிரவேசம்.

பொங்கி வந்த கண்ணீரை மடை போட்டுத் தடுக்கிறாள் வைதேகி.

"குழந்தை எங்கே?"

"கொன்று போட்டு விடும்படி செய்துவிட்டேன்! வேசிகளின் குழந்தைகளுக்கு மகத மன்னர் மான்யம் வழங்குவது போல எனது குழந்தையும் அதனைப் பெற நான் நான் விரும்பவில்லை. அவன் அஜாதசத்ரு!"

"சீ! நீ கோசலத்துக் கௌரவத்தையே குலைத்து விட்டாய்! இனி உன் முகத்தில் விழிக்கவும் நாணப்படுகிறேன்!"

கோசல மன்னர் பிரசேனஜித், அதே மூச்சுடன், அதே நடையுடன் ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் கோசலம் நோக்கிப் பயணப்பட்டு விட்டார்.

வைதேகியின் கண்களில் மடை திறந்து விட்டது. புழுவாய்த் துடித்துப் பூஞ்சையாய்க் கேவினாள்.

அண்ணா, அண்ணா! ஓ... அண்ணா...!

என்னை விடுதலை செய்யவந்த உங்களுக்குக் கெடுதலைச் செய்து விட்டேன்! வேறு வழியே இல்லை! வேறு வழியே இல்லை!

"ராஜராணி!"

அதுவரை மறைவில் ஒரு மௌன நெருப்பாக நின்று வைதேகியின் மன உணர்வுகளைக் கவனித்த மகா ஆமாத்தியர் வஸ்ஸகாரன், கனிவோடு அழைத்தார். அவரது கண்களும் கலங்கி விட்டன.

"நான் சொன்னபடி நீங்கள் நடந்து கொண்ட இந்தத் தியாகத்துக்குப் பின்னால் நல்ல சரித்திரமே அடங்கியிருக்கிறது."

"மானம் போய்விட்ட பிறகு சரித்திரம் தேவையா மகா ஆமாத்தியரே?"

"மானம் எங்கும் போய்விடவில்லை. அது சத்தியத்தின் பேழைக்குள் மூடிப் பத்திரமாக வைக்கப்பட்டிருக்கிறது ராஜராணி !"

"கனவு காண்கிறீர்களா ? அண்ணன் சிறைப்படுவார் : இதனால் ஒரு யுத்தம் தேவையா என்று நீங்கள் குறிப்பிட்டதைச் சீர்தூக்கிப் பார்த்து, வேறு வழி தெரியாமல் ஒப்புக் கொண்டேன். இனி எல்லாமே கனவுதான் !"

"யாரும் கனவு காணவில்லை."

சுற்றும் முற்றும் நோக்கிய வஸ்ஸகாரன் அருகே வந்து மெல்லிய குரலில், "அம்பபாலி கண்டு வருகிறாள் ! அஜாதசத்ரு அங்கே பத்திரமாகச் சேர்க்கப்பட்டு விட்டான் ! அந்த ராமாயண வைதேகியை மீட்க ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி வந்தது போல, இந்த மகதாயண வைதேகியை மீட்க அஜாதசத்ரு அடலேறு போல உருவாகி வருவான் !" என்றார்.

"அதுவரை நான் உயிருடன் இருக்க வேண்டுமே ஆமாத்தியரே ?"

"இருந்துதான் ஆகவேண்டும் ! இது உங்களுக்கு ஓர் அக்கினிப் பிரவேசம் ! ஏகபத்தினி விரதனான அந்த ஸ்ரீராமனே சீதையான அந்த வைதேகியைச் சந்தேகித்து விட்ட பிறகு, போக லோலரான மகத சக்ரவர்த்தி உங்களை சந்தேகித்தது சாதாரணம் ! அந்த வைதேகிக்குப் பதினான்கு ஆண்டு வனவாசம் ! இந்த வைதேகிக்கு மேலே இரண்டு அல்லது நான்காண்டு சிறைவாசம் ! உங்கள் கௌரவத்தின் விலை உங்கள் உயிர்தான் ! நான் மறைமுகமாக உங்களுக்கு என்ன ஆவனம் செய்யவேண்டுமோ அனைத்தையும் செய்வேன். காரணம், நான் உங்களை அந்த ராமாயண வைதேகி ரூபத்தில் பார்க்கிறேன் !"

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கரம் கூப்புகிறாள் வைதேகி.

"ராணி ! நான் அந்தணன். எனது பாஷையில் சொல்ல வேண்டுமானால் இது கர்மா ! அனுபவித்துத்தான் தீர வேண்டும். தெய்வங்களையே கர்மாக்கள் தொட்டுப் பார்த்தன என்றால், நம்மையா விட்டு வைக்கும் ? தைரியமாக இருங்கள். பகவான் அஜாதசத்ரு உருவில் வருவான்."

"அம்பபாலி செய்தி அறிவித்திருக்கிறாளா ?"

"அறிவித்திருக்கிறாள். இந்நாள் வரை கணிகையாக மாற விரும்பாது மன்மதனைப் பகைத்து வந்தவள், அஜாதசத்ரு பொருட்டு உங்கள் அண்ணாரின் நெடுநாளைய காமக் கோரிக்கையை நிறைவேற்ற முனைந்து விட்டாளாம் !"

"ஐயையோ !"

"இது, அவள் உங்களுக்குச் செய்யும் பிராயச்சித்தம் என்கிறாள் ; பிம்பிசார சக்ரவர்த்தியைப் பழிவாங்க எடுத்த சபதம் என்கிறாள். தனது மகன் என்றே கூறி, அசோகசந்தா என்ற பெயரில் வளர்த்து, மாவீரனாக்கி, படை உதவியுடன் இங்கே உங்களை மீட்க அனுப்பி வைப்பாளாம் ! மகத சக்ரவர்த்தியின் ஆணவத்தை அடக்கவில்லையென்றால், தான் கற்ற கலை பொய்யான கலை என்று அறைகூவல் விட்டிருக்கிறாள் ! நான் அடிக்கடி அஜாதசத்ரு வளர்ச்சி குறித்து அறிந்து வந்து உங்களிடம் சொல்வேன் ! நான் வருகிறேன் ராஜராணி !"

மகா ஆமாத்தியர் வஸ்ஸகாரன் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

வைதேகியின் கண்களில் மீண்டும் கடல் பொங்கியது.

என்ன கர்மாவோ, கர்மா...

ஜனகபுரத்து அஜாதசத்ருவைச் சந்திக்க முனைந்ததே கர்மாதானா...?

நான் மட்டும் அன்றிரவு அவரைச் சந்தித்திராவிட்டால், இத்நேரம் மகதம் வீழ்ந்துபட்டிருக்கும் ! கணவர் உயிருக்குக்

காலம் மரண சாசனம் இட்டியிருக்கும் அல்லது அங்க நாட்டுச் சிறையில் அடைத்து வைத்திருக்கும்!

கைம்பெண்ணாய்க் கௌரவத்தை இழந்து வாழ்வதை விட...

அங்கநாட்டுச் சிறையில் கணவர் அவதிப்படுவதைவிட...

இந்தக் களங்கத்தைச் சுமப்பது மேல்? காராக்கிருகத்தில் அடைபட்டு அவதிப்படுவது மேல்?

ஓ...! எப்படியெல்லாம் வாழ்ந்தோம்!

ஒரு சிம்மத்தின் நிமிரலைப் போல் வாழ்ந்த வாழ்க்கை...

எண்ணிப் பார்க்கிறாள்...

ஏழாண்டுக்கு முன் ஏமமுற்ற வாழ்க்கை தெரிகிறது...

சிராவஸ்தி தலைநகரின் புகழ்பெற்ற சோதிடர் சொன்ன ஜாதகக் குறிப்பு நினைவுக்கு வருகிறது.

"இப்போது குரு மகாதிசை! உங்களுக்கு மகோன்னதமான சக்ரவர்த்தியே கணவராக வருவார். இந்தப் புவனமே வியக்கத் திருமணம் நடக்கும். ஆனால், அடுத்து வரும் சனி மகாதிசை ஆபத்து நிறைந்தது. கவனமாக நடந்து கொள்ள வேண்டும் சனி பகவான், உங்களுக்குப் பகைவீட்டில் அமர்ந்து குடும்பத்தைப் பார்க்கிறான். உலுக்கி எடுத்தாலும் எடுப்பான்; உயிரைப் பறித்தாலும் பறிப்பான். அந்த நேரத்தில் நீங்கள் புத்திசாலித்தனமாக நடந்து கொள்வது சாலப் பொருத்தமானது."

சோதிடன் கூறிய அன்றே ஜனகபுரத்து அஜாதசத்ருவின் காதல் நிறைவேறக் காரணமே இல்லை என்று அதை மறக்கத் தொடங்கினாள் வைதேகி.

சோதிடம் பொய்யாகவில்லை.

சனிதிசையின் சுயபுத்தியில்தானே இந்த அங்க நாட்டுப் போரே மூண்டது.

அப்போதுதானே ஜனகபுரத்து அஜாதசத்ருவைச் சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்பட்டது! மகதத்துக்கு நற்பாக்கியமானாலும் தனக்குத் துர்ப்பாக்கியம்தானே?

சுயபுத்தியிலேயே சனி பகவான், தனது சுயபுத்தியை இழக்கச் செய்து சிறையிலடைத்துவிட்டானே!

பகவானே! நீ என்னை விட்டு நீங்க பதினெட்டு ஆண்டுகள், ஏதோ பின்விளைவு இரண்டு ஆண்டுகளுமாகச் சேர்ந்து இருபது ஆண்டுகளாகும் என்று சொன்ன கணக்கு எவ்வளவு பொருத்தமாக அமைந்து விட்டது!

நாளைய முதல் உன்னையன்றி வேறு யாரையும் வழிபடேன். உன்னை மட்டுமே ஈசுரன் என்றும் பகவான் என்றும் அழைக்கிறார்கள். கெடுப்பவனும் நீயாம்! கொடுப்பவனும் நீயாம்! கொடுக்க வேண்டாம்; கெடுக்காமலிருந்தால் போதும்! எனது குமாரன் அஜாதசத்ருவை அரிமா நெஞ்சனாக்கினால் போதும்! அவனால் இந்த மகதம்—சிசுநாக வமிசம் சரித்திரச் சிறப்புப் பெற்றால் போதும்! என் எண்ணம் நிறைவேறுமா? சனீஸ்வரா சரணம்!

மனக் கவலைகளைப் பந்தலிட்டு, அதன் நடுவே அமர்ந்து கொண்டு கண்களை இறுக மூடிக் கரம் கூப்பிப் பெருமூச்செறிகிறாள் வைதேகி.

நெருப்புப் புயலாய் அந்த மூச்சு நீண்டு பறிகிறது.

கண்களின் ஓரத்தில் இரு நீர் முத்துக்கள் அரும்பி, வெடிக்கின்றன.

16881
3289301

பீடகம்-11

அம்பபாலியின் ஆவேசம்

கோசல நாட்டின் இதயமான சிராவஸ்தி தலை நகரம், நள்ளிரவில் நட்சத்திர நடம் புரிந்து கொண்டிருந்தது.

எந்தவித முன்னறிவிப்போ, அட்டகாசமோ இல்லாமல் மகதம் சென்ற கோசல மன்னர் பிரசேனஜித், தலைநகருள் நுழைந்து கொண்டிருந்தார்.

குதிரைகளின் குளம்படியோசை கேட்டு ஒவ்வோர் வீட்டுச் சாளரங்களும் திறந்துபட்டு, மக்கள் கவனிக்கின்றனர்.

ஆ! மன்னர் திரும்பிவிட்டார்.

அவர்களுக்குக் கோசல மன்னர் எதற்காக மகதம் நோக்கிச் சென்றார் என்பது தெரிய நியாயமில்லையானாலும், ஏதோ தங்கையைக் காணச் சென்றார்; திரும்பியிருக்கிறார் என்கிற அளவில் மட்டும் செய்தி தெரியும்.

அரண்மனையில் மட்டும் சில காதுகள் விழித்தன: கண்களில் கேள்வி, வேள்வி நடத்தியது. போர் முகமோ? சுமுகமோ? புரியவில்லை...!

அந்தப்புரத்தில் நயனங்களுக்கு உறக்கோபதேசம் செய்து கொண்டிருந்த வாசபத்தியா என்கிற வாசவி, உபதேசத்தைப் பாதியில் உதறிவிட்டு வயிற்றைச் சுமந்து கொண்டு ஓடோடி வந்தாள்.

அரண்மனையுள் பிரவேசித்த பிரசேனஜித், தமது தனியறையில் அமர்ந்து ஓய்வு கண்டார். ஓய்வா அது?

கோபத்துக்குக் கவலை வண்ணம் பூசி மேலும் சிவந்து போவதைவிட, கவலையைப் பிடித்து இருட்டறையில் அடைத்துக் கருப்பு வண்ணம் பூசி அமைதி காண முயன்று கொண்டிருந்தார்.

அருகே வந்து நின்றாள் வாசவி.

மன்னரின் கரம்பற்றிக் கண்களில் ஒற்றிக் கொள்கிறாள்.

"பிரபோ! சென்ற காரியம் என்னவாயிற்று?"

ஆசைநாயகியும் இரண்டாம் பட்டத்து அரசியுமான வாசவியை அண்ணாந்து கவனிக்கிறார் பிரசேனஜித். வாசவி என்றாலே வாய் திறப்பவர், அந்த வாசனையில் மாற்றுக் குறைந்திருந்தது. என்ன சொல்வார்?

அவர் கண்கள் அவளது கலசங்களை ஆராய்கின்றன. ஆயினும் நிறைமாதக் கர்ப்பிணி. எழுந்து கொண்டார். "நீ ஓய்வு கொள்!"

வாசவிக்கு சற்று ஏமாற்றம். ஏதோ நடந்திருக்க வேண்டும்!

அந்தப்புரத்துக்கு விரைந்து சென்ற பிரசேனஜித், தமது பட்டத்தரசியின் அறையினுள் நுழைந்தார். கணவர் திரும்பி விட்டார் என்கிற செய்தி அறிந்து கோசலமாதேவி எதிர்பார்த்திருந்தாள். மன்னரைக் கண்டதும் எழ முயற்சிக்க, "தேவி, உடம்பை அலட்டிக் கொள்ள வேண்டாம். எனது வாரிசு உள்ளே இருக்கிறான். அவன் என்னைச் சினந்து கொள்வான்" என்று கூறியவாறு பக்கத்திலமர்ந்து கொள்கிறார்.

என்ன நடந்திருக்குமோ என்கிற பதைப்பும் படபடப்பும், நாடியில் மகிழ்ச்சியைத் தீயிட்டுப் பொசுக்கிக் கொண்டிருக்கின்றனவே! தாய் வீடாயிற்றே மகதம்! தம்பி பிம்பிசாரன், ஏன்தான் வைதேகியைச் சிறையில் வைத்

தானோ ! கணவர் திரும்புகிறவரை, கண்கள் தூங்குவதற்கு மாறாகக் கவலைகளையல்லவா கடன் பெற்றுக் கலங்கின.

“பிரபோ ! சென்ற காரியம் என்னவாயிற்று ?” கோசலமாதேவியின் கேள்வியில் அவசரத்தின் நடுக்கம் தெரிந்தது.

இவளும் இதையே கேட்கிறாள். ஆனால், இவள் கேள்வியில் உரிமை ஒலிக்கிறது. இயல்பான ஒலி. காரணம்...

பிம்பிசாரன் இவளது தம்பி...!

வைதேகி, தனது தங்கை...

பேச்சைத் திசை திருப்ப முயல்கிறார் பிரசேனஜித். “தேவி ! என் சாம்ராஜ்யத்தைவிட உனது மணிவயிறு புனிதமானது. எனது செல்வன் முதலில் அங்கல்லவா ஆட்சி செய்கிறான் ?”

கோசலமாதேவி மெல்லச் சிரித்துக் கொள்கிறாள்.

எங்கிருந்தோ நரியின் ஊளை கேட்கிறது.

“பிரபோ ! பேச்சை ஏன் திசை திருப்ப வேண்டும் ? என் வயிற்றிலிருப்பது நீங்கள் நினைப்பதுபோல ஆண் அல்ல ; உங்கள் தங்கை வைதேகியைப் போன்ற பெண். அது எப்படி எனக்குத் தெரியும் என்கிறீர்களா ? இடப்புற வலப்புற அசைவைக் கண்டு மருத்துவச்சி சொன்னாள். போகட்டும். வைதேகி எப்படி இருக்கிறாள் ?”

என்ன மறுமொழி கூறுவார் பிரசேனஜித் ?

நன்மைக்குச் சொல்லும் பொய், தெய்வத்துக்கு அர்ச்சிக்கும் பூப்போன்றது. அவர் தயங்கிச்சொன்னார் : “எல்லாவற்றையும் சுமுகமாக முடித்துத் திரும்பியிருக்கிறேன். பின்னால் சொல்கிறேன். ஆணோ, பெண்ணோ, அழகாகப் பெற்றுக் கொடு !”

அவர் எழுந்து கொண்டார்.

ஒரு பொய் சொன்னது போதும். மேலும் பொய்யைச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாமே என்று புறப்பட்டு விட்டார்.

அவரது நெஞ்சில் அம்பபாலி கற்கண்டாக இனித்துக் கொண்டிருந்தாள். கண்ணிமைகளில் நர்த்தனம் புரிந்தாள்; எனவே, கால்களில் சக்கரமாகச் சுழன்றாள்.

அழகுக்கு அழகு செய்வதில்லை ; ஆனால், செய்து கொண்டிருந்தாள் அம்பபாலி. பிரசேனஜித்தின் பிரவேசம் நிச்சயம் என்பது அவளுக்குத் தெரியும்.

ஈசான மூலையில் பல்லி பலபலக்கிறது.

தொடர்ந்து கதவு தட்டும் ஓசை.

தொட்டிலைக் கவனிக்கிறாள் அம்பபாலி.

குழந்தை அஜாதசத்ரு சுகமான நித்திரையில் மூழ்கி இருக்கிறான்.

சில காலம்வரை இக்குழந்தையைக் கோசல மன்னர் பார்க்கவே கூடாது. அம்மான் தோஷம் என்பதல்ல ; அவள் குழந்தை— ஓராண்டுக் குழந்தை என்று கூறிய பொய் ! அது மெய்ம்முகம் காட்டிவிடக் கூடாதல்லவா ?

தன் நம்பிக்கைக்குரிய பணிப்பெண் விசாலியைக் காவல் நிறுத்தி விட்டுக் கதவைத் திறக்கிறாள் அம்பபாலி.

“வாருங்கள் பிரபோ எதிர்பார்த்தேன் !”

அந்த இரவு கடந்த நேரத்தில்...

அம்பபாலியின் அழகுச் சுடரொளி பட்டு, பிரசேனஜித்தைப் பிரகாசப்படுத்தியது.

கதவைத் தாழிட்டுவிட்டு, கோசல மன்னரை மாடம் நோக்கி அழைத்துச் செல்கிறாள் அம்பபாலி. இருவருமே நிலாமுற்ற ஆசனங்களில் அமருகின்றனர்.

"குழந்தை அசோகசந்தா எப்படி இருக்கிறான்?"

"பிம்பிசாரனைப் பழிவாங்கத் துடித்துக் கொண்டிருக்கிறான்!"

பனிச்சென்று பார்ந்த அம்பபாலியை நோக்குகிறார் பிரசேனஜித்.

"ஏன் இப்படிப் பார்க்கிறீர்கள்?"

"இவனுக்கு நான் இந்திரஜித் என்று பெயர் வைக்கலாம் என்றிருந்தேன்!"

"வேண்டாம்; அவன் தந்தைக்கு உயிர் கொடுத்த தனயன். ஒரு கால் உங்களுக்கும் எனக்கும் அப்படி ஒரு பிள்ளை பிறந்தால் அதற்கு அவ்வாறு பெயர் வைக்கலாம்!"

பிரசேனஜித் ஒரு பெருமூச்சுடன் உதட்டைக் கடித்துக் கொள்கிறார். அடுத்துச் சொன்ன மறுமொழி அவருள் ஓர் அமைதியை உருவாக்குகிறது.

"பிரபோ! நான் கொஞ்சம் பதட்டமாகப் பேசி விட்டேன். பொறுத்தருளுங்கள். தாயைப் படுத்திய பாட்டுக்குப் பழிவாங்க வல்லவன் தனயன்தானே? எனவே தான் அவ்வாறு சொன்னேன்! ஆனால், ஈஸ்வர சித்தம் ஏதாக இருக்கிறதோ, நானறியேன்!"

—அம்பபாலி, தாடையைத் தடவி விட்டுக் கொண்டு வாயில் பக்கம் தனது நீல விழிகளை நிமிர்த்தி நோக்குகிறாள்.

அங்கே, கனத்த திரிகளுடன் கூடிய ஐந்து முகத் தொங்கும் திரிவிளக்கு, சத்தியோசாதமாய், வாமதேயமாய், அகோரமாய், தற்புருடமாய், ஈசானமாய் ஈச்சுரத் தத்துவத்தை விளக்குவது போல எரிந்து ஒளி வீசிக் கொண்டிருந்தது.

"பிரபோ! மகதம் சென்ற செய்தி அறிய ஆசைப்படுகிறேன்!"

இவளும் இதையே கேட்கிறாள். பிம்பிசாரன் இவளது விரோதி. இயல்புதானே?

இவளிடம் ஏன் மறைக்க வேண்டும்?

"பாலி! தவறு என் தங்கை மீது. எனவே, தடம் புரண்டு வந்துவிட்டேன்" என்றார் பிரசேனஜித்.

"தவறா? வைதேகி தேவியாரா? உலகிலுள்ள அத்தனை தவறுகளையும் மன்னித்து வரும் மகதமாதேவியிடம் தவறா? என்ன சொல்லுகிறீர்கள் பிரபோ?"

"அம்பபாலி! இது குறித்து நாளை பேசலாம்! எந்த நேரத்திலும் விடிசேவல் குரல் கொடுக்கலாம்! வா, மஞ்சத்தில் அமர்ந்து சற்று நெஞ்சுக்குப் புஷ்பாஞ்சலி செய்வோம்!"

சில கணங்கள் மௌனம் வெப்பமாய் நிலவுகிறது.

"பிரபோ! நான் எடுத்த எடுப்பில் தடங்கல் சொல்வதாக நினைக்க வேண்டாம். அப்படி இருந்தால் நான் இந்திரஜித்தைப் பற்றிப் பேசியிருக்க மாட்டேன். நீங்களும் பிம்பிசாரனாகி விடக்கூடாதே என்று அஞ்சுகிறேன்! முறைப்படி எனக்கு ராஜ அந்தஸ்து வழங்குங்கள்; பிறகு சத்திய சபதம் செய்யுங்கள். இன்றுவரை நான் ஒருவர்க்கே முந்தானை விரித்த விரதை! விரதைக்கு முன் நான் 'பதி' என்ற சொல்லைச் சேர்க்கவில்லை. காரணம், எனக்குப் பதியில்லை. இனிமேலும் நான் பதியிலார் மரபைச் சார்ந்துவிடக் கூடாதல்லவா? எனவே, நான் பார்த்து, கோள் பார்த்து, பிறகு உங்கள் தாள் பார்த்து, அதன் தடம் பார்த்து, தருணம் பார்த்து, தடையிலா மஞ்சம் பார்த்து, உங்கள் முகத்தைக் கொஞ்சம் பார்த்து, முழுமையான பிறகு, கொஞ்சிப் பார்த்து..."

அம்பபாலியின் முகம் குபீரென்று வியர்த்து விட, அவளது இரு கரங்களில் நாணம் குடியேற, அவை முகத்தை மறைத்து நாணச் செய்தன.

வானத்தில் அர்த்த சந்திரனை மேகத்திரை மூடி மறைக்கிறது.

எங்கோ விடிசேவல் கூவுகிறது.

முகத்தை மூடிய விரல்களை அகற்றுகிறார் பிரசேனஜித்.

அவளது கவிதைக் கண்களில் சின்னச் சின்ன நீர் முத்துக்கள்.

"நீ விரும்பியபடியே ஆகட்டும் அம்பபாலி! ஒரு நல்ல நாளில் உன்னை ராஜநர்த்தகியாகப் பிரகடனப்படுத்துவேன்! ஒரு ராஜயோகத்தில் உன்னை என் மன்மத அரசியாகச் சாசனம் தீட்டுவேன்; சபதம் செய்வேன்! நான் பிம்பிசாரனல்ல; பிரசேனஜித்! அவனது காமம் மோகத்துக்குரியது! எனது காமம் யாகத்துக்குரியது!"

"அப்படியானால்... நீங்கள் யாகமானால்... மகதத்தில் நடந்ததென்ன? மகதமாதேவி செய்த தவறு என்ன? ஒரு யாகத்தின் நடுவே நின்று நாவை அசையுங்கள்!"

பிரசேனஜித் விழி பிதுங்கிப் போனார்.

இனி சொல்லித்தானே தீரவேண்டும்?

"சொல்ல நாக் கூசுகிறது பாலி!"

"நாவாவது, கூசுவதாவது? வைதேகி என்ற பெயரைச் சொன்னாலே, சொன்ன நாவைத் தேடிக் கங்கை ஓடி வருவாளே...!"

"பாலி! நீ நினைக்கும் வைதேகி வேறு! அவள் ஸ்ரீராமன் மனைவி! இவள் பிம்பிசாரன் மனைவி! எனது தங்கை என்று சொல்ல வெட்கப்படுகிறேன்!" என்று கூறிய பிரசேனஜித், நடந்ததை நடந்தவாறு விவரித்தார்.

அம்பபாலியும் அதனை அறிந்திருந்தும், உண்மை அவளை உணர்விழக்கச் செய்து ஒரு கணம் உசுப்பிவிட்டது. அவள் தன்னை மறந்து, "கோசல மன்னர் இதனை நம்புகிறார்; இல்லையா?" என்று பேயாக இரைந்து எழுந்து நின்றாள். அவளது நின்ற கோலம், கொற்றவைக் கூத்தின் கொடும் நாயகிக் கோலமாக இருந்தது. கண்கள் அக்கினிக் குண்டங்களாக எரிந்தன.

"பாலி! பதற்றப்படாதே! நானா நம்பினேன்? வைதேகியே இதனை என்னிடம் ஒப்புக்கொண்டாளே! அதன் பிறகு நான் என்ன செய்ய முடியும்?"

"அங்கேதான் மகதமாதேவியின் கற்பின் விசுவரூபம் தெரிகிறது...!" என்று இரைந்து கூச்சலிட்டவள், ஏனோ மின்னலால் பாதிக்கப்பட்டவள் போன்று தன்னுணர்வு பெற்று வாய் மூடிச் சிலைத்துப்போனாள். அடுத்து அவள், 'கோ' வென்று அழவும் தொடங்கி விட்டாள். அந்த இரவின் நிசப்தமும் அவளுடன் சேர்ந்து அழுதது. சேமே குழந்தை அஜாதசத்ருவின் அழுகுரலும் இணைந்து கேட்டது.

'கற்பின் விசுவரூபம் தெரிகிறது...'

அந்த ஒரு வரி, ஒரே ஒரு வரி...

அவளது நாவாகிய வீணையிலிருந்து சப்தசுரங்களாய்ப் பேதலித்து உதிர்ந்து விட்ட சுரச் சொற்கள்...

ரிஷபம் தைவதமாகவும், நிஷாதம் காந்தாரமாகவும், ஏன்? சட்சமமும் பஞ்சமமும் ஆதாரத்தை மீறி அலை மோதுவதைக் கண்டு மத்தியமம் மத்தியஸ்தம் செய்ய முடியாமல் மருட்சி காண்கிறது.

நினைவலைகள் விந்நியாசிக்கின்றன.

ஓ...!

இந்த விசுவரூபத்தை வியாக்கியானம் செய்யப் புகுந்தால்...

யுத்த முரசம் முழங்கிவிடும்...

அன்றொருநாள், ராஜகிருகம் நோக்கிவந்த ஜனகபுரத்து அஜாதசத்ரு— அங்க நாட்டுப் போரில் தன்னைத் தியாகம் செய்த அஜாதசத்ரு— ஒரு காலத்தில் என்னை அரசியாகவும் ஏற்றுக் கொள்ளச் சித்தமாயிருந்த அஜாதசத்ரு, எனது வாழ்வாகிய வாசல் இடிந்து விழுந்த போதும், நேரே இந்த அம்பபாலியை நாடியல்லவா கோசலத்துக்கு வந்தார்.

மறு வாழ்வளிக்கவும் மனம் கசக்காமல் வந்தாரே ! ஓ... அஜாதசத்ரு...

இதனைப் பிட்டு வைத்தால், இதனால் ஏற்படும் பாதிப்புகள், ஒரு தேசத்தையே தாறுமாறாகக் கிறுக்கி விடுமேயானால்...

"என்ன பாலி ! ஏதோ விகவரூபம் என்று விசுவரூபமெடுத்தாய் ; முடிவில் பஸ்பரூபமாய் அழத் தொடங்கி விட்டாயே ?"

பிரசேனஜித் மூக்கை ஆள்காட்டி விரலால் உரசிக் கொண்டு கேட்கிறார்.

தோகையனைய பாலி இமைகள், கண்களைத்தொட்டுப் பார்க்காமல் கவனிக்கின்றன.

'பிரபோ ! ஆழமாகச் சிந்தித்துப் பாருங்கள் ! நான் சொன்ன விஸ்வரூபம் புரியும் ! மகதமாதேவி, தம்மைக் கற்பின் கனலி என்றும், நடந்த உண்மைகளை நடந்தவாறு சத்தியம் செய்தும் கூறியிருந்தால் அடுத்து என்ன நடந்திருக்கும் ? நீங்கள் பதட்டமடைந்திருப்பீர்கள் ; படபடப்புடன் சினந்து இருப்பீர்கள் ; உங்களுக்கும் அங்கு ஆபத்து நேர்ந்திருக்கும் ! அடுத்து ஒரு மகாயுத்தம் சந்திக்கும். மகதம் அழிவுபட்டிருக்கும். மகதம் அழிவுபடுவதோ, மகத மன்னர் சிறைப்படுவதோ, சரித்திர மாசு ஆகுமல்லவா ! அதைவிடத் தம்மையே மாசுபடுத்திக் கொள்ள மகதமாதேவி ஏன் மனத்தைக் கல்லாக்கி இருக்கக்கூடாது ?'

—இவ்விதம் கூறத்தான் வாய் திறந்தாள் அம்பபாலி. இதன் பின்விளைவுகள் அடுத்த கணமே மின்னலாய்ப்பறிய, வாய் புதைத்து, அந்தப் புயலே அழுகையில் பூத்துப் போனது.

முந்தானையால் முகத்தை ஒற்றிக் கொள்கிறாள் அம்பபாலி.

வானத்தில் மேகத்திரை விலகி, நிலவு அவளைக் கண்டு சந்தர்ப்பம் நோக்கிச் சிரிக்கிறது.

கடல்போல் பொங்கி ஆமைபோல் அமைதி கண்ட அம்பபாலியை நோக்கி வியந்து போனார் பிரசேனஜித்.

அம்பபாலி சொன்னாள் : "பிரபோ ! எனக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. ஆத்திரமடைந்து விட்டேன் நேரயாகிறது ; புறப்படுங்கள்."

கோசல மன்னர் பிரசேனஜித், சற்று நேரம் அம்பபாலியை உற்றுக் கவனித்து விட்டுப் புறப்பட்டுச் சென்றார்.

ஆவேசம் கொண்ட அம்பபாலியோ, 'உண்மை சிறைப்பட்டிருக்கிறது ! அந்தச் சிறைக் கதவை நானே உடைப்பேன் !' என்று கறுவிக் கொள்கிறாள்.

பொழுது பலபலவென்று விடிந்து கொண்டிருந்தது.

பிடகம்-12

ராஜ நர்த்தகி

கோசல நாடு முழுவதும் பறை சாற்றப்படுகிறது.

உலகப் பேரழகி அம்பபாலி, அரசு ஆணைப்படி ராஜ நர்த்தகியாக அமர்த்தப்படுகிறாள்.

அந்நாள் வரை அம்பபாலியின் ரதி மகோத்சவக் கபாடபுரம் திறவாதா? தரிசனம் கிடைக்காதா? என்று சோங்கியும் ஏங்கியும் சொப்பனாவத்தை பெற்ற பலர் இப்போது அந்த அழகுத் துறைமுகத்தில் மன்னர் பிரசேனஜித், தமது மோகக் கலத்தை நிறுத்தி நங்கூரமிட்டு விட்ட செய்தி கேட்டுக் கசப்புடன் முகங்களைச் சுழித்துக் கொண்டனர்.

அந்தச் சுழிப்பில்...

சுந்தரக் கனவுகளெல்லாம் சொப்பன அவலமாய் முடிந்த நெருப்பு ரேகைகள் நெளியத் தொடங்கின.

என்ன செய்ய முடியும்?

செங்கோலுக்குச் செவிகளிருந்தபோது சங்கீதத்துக்கு மரியாதை தெரிந்தது. செங்கோலே சங்கீதமாகிவிட்ட பிறகு...

சங்கீதம் செவிடாவதைத் தவிர வேறு வழி?

அவரவர் அமைதிகண்டு வேறெங்கேனும் அம்பபாலிகள் இருக்கிறார்களா என்று விலாசம் விசாரிக்க முனைகிற போதுதான்...

அவர்களுக்கு ஓர் அந்தரங்கச் செய்தி அவசர அவசரமாகப் பறந்துவந்தது. மகதத்திலிருந்து வந்த மர்மச்செய்தி.

பிம்பிசாரன்பால் தொடர்பு கொண்ட சீமான்களுக்கு வந்த சதிச்செய்தி, அந்தச் செய்தி...

அம்பபாலி, கோசல ராஜமண்டபத்தில் ராஜநர்த்தகி விருது பெற்று, நாட்டியத்துக்கு நவரத்தினக் கிரீடம் புனைகிற போது...

உயிரைத் திரணாக மதிக்கும் இருவர் கொலு மண்டபத்தில் மறைந்திருந்து, அம்பபாலியின் உச்சக்கட்ட நாட்டியத்தின்போது பலரும் மயங்கிக்கிடக்கும் வேளையில் குத்துவாள்களைப் பாய்ச்சிக் கொன்றுவிட வேண்டும். ஒன்று தவறினாலும் மற்றொன்று மரண சாசனம் தீட்டி விடுமல்லவா?

ஆ! எப்பேர்ப்பட்ட அவசரச் சூழ்ச்சி இது?

அம்பபாலி வேசியானாலும் கவலையில்லை; அவள் கோசலத்து ராஜ வேசியாகக் கூடாது என்பதில் இப்படி ஒரு பொறாமைக் கவலை பிம்பிசாரனுக்கு!

ஒரு ராஜ நாளில்...

கோசல கொலு மண்டபம் இந்திரசபை போலக் கோலாகலமாக விளங்கியது.

இனிப்பு இங்கே தேனாபிஷேகம் செய்து கொள்ளப் போகிறதே! மாமரத்துக்கு மன்மதாலயம் என்கிற பெயரிருக்கிறபோது, அந்த மரத்தடியில் புதையலாகக் கண்டெடுத்த மாமரக் கன்னியான அம்பபாலியும் ஒரு மன்மதலாயம்தானே?

ராஜ மண்டபமே கிழியுண்டு சிதறி விடும்போலக் கூட்டமோ கூட்டம்!

வழக்கமாகச் சூரியனோடு ஒப்பந்தம் செய்து கொள்ளுகிற அந்தக் கொலு மண்டபம், அன்று பார்த்து

நிலவோடு நிர்ப்பந்த உடன்படிக்கை செய்து கொண்டது.

அன்றைக்குப் பொலிவார்ந்த பூர்ணிமை.

வித விதமான விளக்குகள், அம்பபாலி சலங்கை கட்டு முன், தங்களால் முடிந்தவரை ஒளி நர்த்தனமிட்டு விடுவோம் என்று அசைந்தசைந்து ஆடுகின்றன. சலங்கை யொலிக்குப் பிறகு ஸ்தம்பித்து நின்று ஒளிவீச நேரிட்டு விடுமே !

மன்னர் பிரசேனஜித் வருகிறார் என்கிற செய்தியைக் கட்டியம் கம்பீரச் சொற்கள் கொண்டு முழங்குகிறது.

அலங்காரத் திருமாரனாகத் தமது இரண்டாம் பட்டத்தரசி வாசவியுடன் பிரவேசிக்கிறார் பிரசேனஜித்.

அவரைத் தொடர்ந்து...

கால்களில் சலங்கை கலீரென ஒலிக்க, கண்களில் மீன்கள் பளீரெனத் துள்ள, இடுப்பில் உடுக்கை இதோவென அசைய, அங்கே இருக்கும் மேகலை இழும்மென தொனிக்க, சிகையலங்காரம் கண்டு சிற்பி கலங்க, சிந்தனை வல்லோன் புலம்ப, சித்திரக்காரன் நெஞ்சு சிதைய...

ஓ... அந்த முதிர்ந்த புகையனைய தவத்தின் பகையனைய காமக் குகையனைய, குலுங்கும் கொங்கை களில் முத்துக்கள் சரங்கோத்து மோகமாய்ச் சிரிக்க வந்து கொண்டிருப்பவள்...

* இந்துமதியழகுக்கு நான் ஒன்றும் ** பிந்து மதியல்ல, *** பிந்துமல்ல, பிந்தியவளுமல்ல என்று கூறு மளவுக்குச் செம்மாப்புச் சௌந்தரியம் படைத்த வெண் தோகைப் பொன்மயிலாள் அம்பபாலி !

கொலுமண்டபமே எழுந்து நிற்கிறது.

---

* தசரதன் தாய். ** சசிபிந்தன் மகள். *** புள்ளி.

அரியணையில் அமருகிறார் மன்னர் பிரசேனஜித். பக்கத்திலமர்ந்தாள் வாசவி.

வலப்புறமாக ஆமாத்தியர்களான மிருதாரன், ஸ்ரீ வத்சகன்.

இடப்புறமாக மகாசேனாதிபதிகளான திக்கசாரண்யன், ராஜசிம்மன் அமர்ந்திருந்தனர்.

தலையலங்காரமென புறப்பட்டுப் பொதுவில் வந்து நின்று வணங்குகிறாள் அழகு தேவதை அம்பபாலி.

ஓ...

வாசவி அக்கணமே மயங்கி விடுபவள் போல மருண்டு போனாள். அது அழகா? அழகுக்கு அழகா?

மகா ஆமாத்தியர் எழுந்து நின்று அம்பபாலியை அறிமுகம் செய்கிறார்.

அடுத்து......

மன்னர் பிரசேனஜித், ராஜ நர்த்தகி விருதுவைச் சட்டப்படிப் பிரகடனப்படுத்திச் சிறப்பிக்கிறார்.

மண்டபம் முழுவதும் கரவொலிகள், வாழ்த்தொலிகள் இணைந்து தூணுக்குத் தூண் எதிரொலிக்கின்றன.

ராஜ நடம் தொடங்கப் போவதறிந்து கொலு மண்டபம் அமைதிக்கு ஆரத்தியெடுக்கிறது.

சுருதியாக தம்பூர் சுத்தமாக ஒலிக்கிறது. ச ச ப ச... இடையில் அந்தரக் காந்தாரம் பிரம்மமாய் மறைந்து இழைகிறது.

வாத்திய வகைகளான கீதாங்கமும் நிருத்தியாங்கமும் சுருதியுடன் ஒத்திகை பார்த்துக் கொள்கின்றன.

அமுதமனைய ஒரு பெண்ணின் குரல் நாதம், அலங் காரப் பிரியா ராகத்தை ஆலாபிக்கிறது.

தா...

சலங்...

தை...

சலங்...

தா, த தை...

ஜல், ஜ ஜல்...

ஆலாபனைக்கடுத்து, அம்பபாலி இயற்றிய சாகித்தியம் பல்லவியாய் முழங்க...

ஆ! அம்பபாலி ஆடத் தொடங்குகிறாள். அந்த அவையே ஆட முயன்று விட்டது.

அப்போது...

சதிக்கன்கள் குத்துவாளைத் தொட்டுக் கொண்டு குறித்த சமயத்தை எதிர் நோக்குகின்றன.

நர்த்தனம் ராஜ நர்த்தனமாகிறது; அவளை ராஜ நர்த்தகியாக்குகிறது.

அந்த நர்த்தனம் ஒரு புது மாதிரியாக இருக்கக் கண்டு, கலைஞர்கள் கதிபேதம் கொண்டு கதி கலக்கம் கொள் கின்றனர்.

இது பிரணவத்தாண்டவமா? பிரளயத்தாண்டவமா?

எங்கும் மகிழ்ச்சியும் மருட்சியும் அலைமோதுகின்றன.

தீம்... தீம்தீம்... தித்த தீம்தீம்...

நான்... பாலி... அம்ப... பாலி...

தத்தகிட தித்த தீம்தீம்

தித்திக்கும் தெம்பு பாலி...

தத்திகிட தகஜனுத ஜ~ம்த தீம்தீம்...

எத்திக்கும் புகழ்பரவும் ஏற்ற பாலி...

தநித்த தநித்த தநித்த தத்தீம் தித்த தீம்தீம்...

எதிர்த்து வளைத்துப் பிடிக்க வந்தால் வம்பு பாலி!...

தா ஜ~ம்ஜ~ம்... தக ஜ~ம்ஜம்... தக ஜ~ம்ஜ~ம்...

இதையுணர்க... நிஜமறிக... நலம் பெறுக...

தக தாதஜம்... தக தாதஜம்... தகதிமி தாதஜம்...

என ஆடினாள்; பதம் பாடினாள்; பலரைச் சாடினாள்!

அந்த ராஜமண்டபத்துக் கண்ணாட, கருத்தாட, கவனமெல்லாமாட...

ஓ... குத்துவாளை ஏந்திக் குறிப்பார்க்க வந்தவர்களும் தம்மை மறந்து ஆடிவிட்டனரே!

அம்பபாலி, ஒற்றைக் காலையூன்றி, மற்றைக் காலை யுதைத்து, மேலே உயர்த்தி, விழி மலர்த்தி, ஏற்பட்ட அவல வாழ்வின் சினத்தையுணர்த்தி, சுழன்றும், துள்ளியும் ஆடுகிறபோது...

கரங்களின் முத்திரை லாவண்யங்களுடன், கடும் சினத்தின் பாவனைகளும் சினந்து ஆடிய அந்தப் பிரளயம் போன்ற தாண்டவம்...

பிம்பிசாரன் மீது கொண்ட கோபாவேசத் தாண்டவம்...

ஊழித்தாண்டவம்...

கோசல மன்னரையே குழப்பமுறச் செய்து விட்டது.

இது என்ன ஊழிக்கூத்து?

பிம்பிசாரன் மீது இருக்கும் ஆவேசத்தைப் பிரசேனஜித்தின் முன், காட்டி ஆடுவதாவது ?

அம்பபாலி ஆடிய தாண்டவம் அதுவா ?

அல்லவே அல்ல ; அது, அஜாதசத்ரு தாண்டவம் !

ஜனகபுரத்து அஜாதசத்ருவின் மனிதாபிமானம் மண்ணில் புதைந்து பட்டதே என்கிற அக்கினித் தாண்டவமா ? இல்லை, இப்போது ஜனனமாகி அனாதையாய்த் தனது வீட்டில் வளரும் மகத அஜாதசத்ரு தாண்டவமா ?

இரண்டும், இரண்டும், இரண்டும்...

தகதீம், தகதீம், தகதீம்...

நர்த்தனம் முடிந்ததும்...

அவையில் எழுந்த கரவொலிகள் விண்ணை அதிரச் செய்தன ; மண்ணை மகிழச் செய்தது.

அவளைக் கொன்றுவிட வேண்டும் என்று வந்தவர்களோ, தங்களை ஏவியவர்களைக் கொன்றுவிட வேண்டுமெனத் திரும்பினர்.

ஏவியச் சீமான்களுக்கு அவர்கள் தூவிய சொற்கள் :

"எப்பேர்ப்பட்ட கலைப் பொக்கிஷத்தை அழிப்பதாவது? அந்த எழிலரசி அம்பபாலிக்கு ஏதேனும் தீங்கு நிகழ்ந்துவிடுமேயானால், நாங்களே மன்னர் முன் சாட்சியங்களாக நிற்போம் ! எங்கள் பணியிலிருந்து நாங்கள் விலகிக் கொள்கிறோம்."

சீமான்கள் கனவுகள் சிதைந்து போயின ; செவிமடுத்த பிம்பிசாரன் செயல் மறந்து போனான்.

ஏ, அம்பபாலீ...!

இரவின் முதல் யாமத்து மணியோசை இனிதாகக் கேட்கிறது.

நிலாவழகி வானவீதியில் உலா வந்து கொண்டிருக்கிறாள்.

அம்பமாளிகையின் அழகுத் திருக்கதவங்கள் ஆனந்தமாகத் திறந்திருக்கின்றன.

பிரசேனஜித் எந்த நேரத்திலும் பிரவேசிக்கலாம் ; இரவு முழுவதும் தங்கலாம் ; பாதி இரவில் எழுந்தும் போகலாம். குழந்தை அசோகசந்தனான அஜாதசத்ருவைப் பாதுகாக்கும் பணியை விசாலியிடம் ஒப்படைத்திருந்தாள் அம்பபாலி. கவனிப்பில் கடுமையான கட்டளை இருந்தது.

வாயிலில் ரதம் வந்து நிற்கும் ஓசை.

மன்னர் பிரசேனஜித்தை மலர்தூவி வரவேற்கிறாள் மங்கைமலராள் அம்பபாலி.

"வரவேண்டும் கோசல ராஜா ! வாருங்கள் மாடத்துக்குச் செல்லலாம் !"

"எப்போதும் மாடம்தானா ?"

"கீழே என்பது என் மகனுக்கு ஒதுக்கப்பட்டுவிட்ட இடம். அவன் அசோகசந்தனாகவே வளர வேண்டும். தந்தை பிம்பிசாரன் போல அசட்டுக் காமாதுரனாக வளரக் கூடாது."

சற்றே நின்று கவனிக்கிறார் பிரசேனஜித்.

அம்பபாலி விளக்கினாள் : "பிரபோ ! காமத்தை அர்ச்சிப்பது வேறு ; அசிங்கப்படுத்துவது வேறு ! நீங்கள் இப்போது என்னை அர்ச்சிக்க வந்திருக்கிறீர்கள். மேலும் இன்று முதல் நான் காணிக்கையாகிறேன். ஆயினும் இந்தக் கோசலத்தின் ராஜ நர்த்தகி ! மன்னரின் ஆசை நாயகி ! கோசலப் பெருமானே ! அசோகசந்தன் வீரனாக வளர

வேண்டியிருப்பதாலேயே—அப்பனைப் போலக் காமலீலைக் சூரியவனாக இருக்கக் கூடாது என்பதனாலேயே நான் கூட அவனை அதிகம் தூக்குவதில்லை; எவரையும் பார்க்க அனுமதிப்பதுமில்லை."

"நான் கூடவா?"

"ஒரு தக்க தருணத்தில் நான் அவனை உங்களிடம் ஒப்படைப்பேன். அவனை மாவீரனாக்குவது உங்கள் பொறுப்பு! இதுவே எனது முதல் நிபந்தனை. நாளை அவன் பிம்பிசாரனைப் பழி வாங்கத் துடித்தால் உதவுவதும் உங்கள் கடமை! இது இரண்டாம் நிபந்தனை. வாருங்கள்! நமது கனவுகளுடன் போராடிய மஞ்சம் காத்திருக்கிறது."

இருவரும் மேன் மாடம் சென்று சயன அறையுள் பிரவேசிக்கிறார்கள்.

ஓ... என்னே அலங்காரம்! ஒரு முதலிரவு காவியம் போல அந்த அறை, கவினுறக் காட்சி தருகிறது.

மஞ்சத்திலமர்ந்த இருவருக்குமே அது முதலிரவல்ல வானாலும், இரு உள்ளங்களின் முதல் சந்திப்பல்லவா?

"பிரபோ! எனது நிபந்தனைகளுக்கு நீங்கள் சத்தியம் செய்து சாசனம் பண்ணித் தரவேண்டும்."

"என்னென்ன? சொல் பாலி!"

"முதலிரண்டு நிபந்தனைகளைச் சொல்லியாய் விட்டது. மூன்றாவது: மாதம் இரு முறைதான் மஞ்சம் அனுமதிக்கும். நான்காவது: எனக்குக் காமம் போதும் என்று நறக்கிறபோது நீங்கள் அனுமதித்து விடவேண்டும்—அதன் பிறகு நான் ஒரு தவயோக நிலைக்கு ஆயத்தமாகி விடுவேன். ஐந்தாவது: என்னை எந்த மன்னர் முன்பும் நர்த்தனமிடச் செய்யக்கூடாது. உங்கள் பிறந்த நாள் விழாவில் இது தளர்த்தப்பட்ட நிபந்தனை."

"நல்ல நிபந்தனைகள் பாலி! இப்போது சத்தியம் செய்வேன்; நாளை சாசனம் தருவேன்."

"விளக்கை அணைக்கலாமா?"

"தேவையில்லை. சித்திரத்தை இருட்டில் ரசிப்பதாவது? நான் பிம்பிசாரனல்ல; பிரசேனஜித்!"

அம்பபாலி கலகலவென்று நகைக்கிறாள்.

அடுத்து...

அம்பபாலிச் சித்திரத்தை, பிரசேனஜித்தின் தூரிகை, காம வண்ணத்தால் அசிங்கப்படுத்துவதற்கு மாறாக, ஆத்ம வண்ணத்தால் மேலும் அழகு படுத்தியது.

பொழுது விடிவதற்கு முன்பே மன்னர் பிரசேனஜித் புறப்பட்டு விட்டார்.

மஞ்சத்தை விட்டு எழுந்து வந்த மன்மத நாயகி அம்பபாலி, தனது தோற்றத்தை பளிங்காடியாம் கண்ணாடியில் கவனிக்கிறாள். கூடுவிட்டு கூடுபாய்ந்த மேனியைக் கூர்ந்து கவனிக்கிறாள். மகதத்தைப் பழிவாங்க மகத மாதேவிக்காக ஏற்ற மாபெரும் தியாகம் இது!

சிறையில் வதைபடும் வைதேகியைச் சிந்தித்துப் பார்க்கிறாள்.

இதே நேரத்தில்...

ராஜகிருகச் சிறையில் அடைப்பட்டுக் கிடக்கும் வைதேகியும் அம்பபாலியை எண்ணிப் பார்க்கிறாள்.

ஓ... அந்த நாட்களே...

பிம்பிசாரன் அம்பபாலியைப் பிழிந்தெடுத்த அருவருப்பான நாட்கள்...

எண்ணியது ஒன்று; நடந்தது ஒன்றான ஏமாற்ற நாட்கள்...

ஜனகபுரத்து அஜாதசத்ருவை ராஜ கிரகத்துக்கு, விதி, வழி கூட்டியனுப்பிய சத்துருவான நாட்கள்...

வைதேகி, அம்பபாலி...

இரண்டு நெஞ்சங்களிலும் இடம் மாறி, இடம் மாறிக் காட்சிகளாய் விரிகின்றன.

அந்தக் கடந்த காலத்துக் கசப்பான நிகழ்ச்சிகள் —

பிடகம்-13

தேவ மாங்கனிகள்

ஒரு மகா சிருஷ்டிகர்த்தனின் உதயம் மாதிரி கோவில் போன்ற ராஜ திசையில், மணியான கதிரவன் ஒளியைச் சேகரித்துக் கொண்டு எழுகிறான்...

'கதிரவன் காலைதோறும் உதயமாகிறான்; கற்பனையோன் காலத்துக்கு ஜனிப்பவன்' என்று பெருமை பேசி, சிறகு கொட்டிப் பறக்கின்றன, 'பாதி நேரத்துக்கு நாங்கள் பூமிக்குப் பாரமாய் இருப்பதில்லை' என்று பூபாரத் தத்துவம் பேசும் புள்ளினங்கள்.

அவந்தி நாட்டின் அழகிய தலைநகராம் உஜ்ஜயினி, தாமரையாய் மலர்ந்து கொண்டிருக்கிறது.

நீடு புகழ்பெற்ற நெடி துயர்ந்த அரண்மனையில், தேடிவந்த நிலவு போலத் தேன் குரலில் பாடிக்கொண்டிருக்கிறாள் பனுவலனைய தேவதை அம்பபாலி.

அந்தக் கொலு மண்டபமே நிறைந்து வழிகிறது.

அம்பபாலியின் ஆடல்பாடல் என்றால், விபத்துக்குள்ளான சேவகர்கள் கூட விடுமுறை எடுக்க மாட்டார்கள் என்றால், முக்கிய அலுவலர்களா வீட்டில் முடங்கிக் கிடக்கப் போகிறார்கள்?

அவள்...

பகலில் கலை நிவேதனம் செய்தால் கதிரவன் குளிர்ந்து போவானாம்; இரவில் நிலவு எரிச்சலுறுமாம்!— இப்படிப் பாடியவன் அந்த அரண்மனையின் ஒரு வாலிபக் கவிஞன்.

உண்மையும் அதுதானே ?

ஓ...

எங்கோ, யாருக்கோ, எப்படியோ பிறந்துவிட்ட அவள் ஒரு மாமரத்தடியில் அனாதைக் குழந்தையாகப் போட்டு விட்டவளா, இப்படி அருங்கலை அரசியாக—பெருங்கவிதை யழகியாகப் பரிணமித்து விட்டாள் ?

குண்டக்கிரியா ராகத்தை அம்பபாலி, குழையக் குழைய ஆலாபிக்கிறாள். குண்டக்கிரியாதான் அவளது குரலோ, அல்லது அவளது குரல்தான் குண்டக்கிரியாவோ என்று அந்த அபூர்வ ராகத்தைப் பிரித்துக் காண முடியாத அளவுக்குப் பிழிந்து கொண்டிருக்கிறாள்.

கல்லைக் கரைக்கும் ராகமாயிற்றே ! எல்லார் நெஞ்சத்தையும் அது கரைத்துக் கொண்டிருந்தது.

அரக்கத் தனமுடையவன் என்று சொல்லத்தக்க அவந்தி மன்னன் சண்ட பிரத்தியோதனன் கூட, தேவகுணம் கண்டு தேகம் சிலிர்க்க ரசிக்கிறான். அந்த ரசனையைப் பார்க்கிறபோது ‘சண்ட’ என்கிற அரசக விருது இந்தப் பிரத்தியோதனனுக்குத் தேவைதானா என்று எண்ணுகிறாள், ஆலாபனை முடித்து நோக்கிய அம்பபாலி.

அவளைப் பொறுத்தமட்டில் பிரத்தியோதனன், சத்தியோதனன்தான். அவன் அடுத்தவர்களுக்குச் சண்டாளனோ என்னவோ, அவளைப் பொறுத்தமட்டில் பெண்டாளனில்லை.

அபரிமிதமான அழகு படைத்த சௌந்தரிய தேவதையான அம்பபாலியை, பிரத்தியோதனன் இதுவரையிலும் விட்டு வைத்திருப்பதிலிருந்து அது நிரூபணமாகி இருந்தது. இதற்கான காரணமே வேறு.

சௌந்தரியக் கலைக் கருவூலமாக அம்பபாலி, ஒரு தேவ மலராகவே அழியா நித்திய மலர்ச்சியுடன் அந்த

அரசவையில் மணத்து மகிழ்விக்கட்டுமே என்கிற பவித்திரக் கொள்கை போலும் ! ராகத்தை வித்தாரமாகப் பாடி முடித்த அம்பபாலி, மன்னன் மீது அதே கருத்தை வைத்துப் பாடிய பாடலைப் பாடத் தொடங்கினாள்.

அப்போதுதான் எவருமே எதிர்பாராத அந்த நிகழ்ச்சி நடந்தது.

அரியணையில் அமர்ந்திருந்த மன்னன் சண்ட பிரத்தியோதனன், திடுமென்று மயங்கிச் சாய்ந்தான். அதைக் கண்டு கொலு மண்டபமே அதிர்ந்தது. அரசியல் முக்கியம் வாய்ந்தவர் விரைந்தெழுந்து ஓடினர். பாட ஆரம்பித்த அம்பபாலி பல்லவியுடன் நிறுத்தி விட்டாள்.

ஓ... அவளது அடுத்த அநுபல்லவியை, இந்தப் பல்லவி ஏன் அபகரித்துக் கொள்ளவேண்டும்? விதி ஏதோ ஒரு சரண சித்தாந்தத்தை நிர்ணயிக்கிறதோ ?

அரண்மனைத் தலைமை மருத்துவர் பரிசோதிக்கிறார். நாடி பிடித்துப் பார்க்கிறார் ; வாத நாடியும், சிலேத்தும நாடியும் நன்றாகவே இயங்குகின்றன. பித்த நாடியில்தான் சின்னப் பிதற்றல் !

உடம்பில் நெருப்பு யாகம், வளர்த்திக் கொண்டிருந்தது.

அன்றையபோது முழுவதும் அரண்மனையில் ஓர் அவல அமைதி.

மறுநாள் வரை பசியே இல்லை.

மூன்றாம் நாள்...

காட்டிக் கொடுத்தன கண்கள் ; மாட்டிக்கொண்டது மஞ்சள்காமாலை. கொடிய நோயாயிற்றே !

தலைமை மருத்துவர் எவ்வளவு முயன்றும், அவந்தி மன்னனைக் காக்க முடியாது என்கிற முடிவுக்கு வந்து விட்டார்.

ஒரே வழி...

மகத நாட்டு மகா மருத்துவமேதையான *ஜீவகனை வரவழைக்க வேண்டியதுதான். அதுவும் மிகமிக அவசரமாக வரவழைத்தாலன்றி மன்னர் பிழைப்பது மானுக்குப் பிடரி தேடும் படலமாகிவிடும்.

ரத்தம் பாதிப்பதற்கு முன், ஜீவகன் வந்தாக வேண்டும்.

நடவடிக்கைகள் துரித கதியில் நடந்தாலும் இது நடைபெறக்கூடிய காரியந்தானா?

நடைபெற்றே தீரவேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொள்கிறாள் அவந்தி மாதேவி. அவளது மின்னல் பார்வை அம்பபாலியின் சந்தன தேகத்துள் நுழைகிறது.

எவ்வழியிலும் ஜீவகன் வந்தே ஆகவேண்டும்.

ஆனால் மகத சக்ரவர்த்தி, தமது மருத்துவ மேதை ஜீவகனை அனுப்புவாரா? இது சாத்தியமா? கடத்தி வரவோ களத்தில் இறக்கிக் கொண்டு வரவோ காலம் எங்கே இருக்கிறது? பவித்திர நண்பர்களாய் இருந்தவர்கள் பகைத்துப் பகைவர்களாய் விட்டார்களே! இதற்கு வினை பொருளாய் அமைந்தவளே, காமன் கணையுருவாய் அவதரித்த அம்பபாலிதானே?

வைசாலி நகரின் லிச்சாவிக் குடியில் வளர்ந்த அம்பபாலியின் கதை உண்மையிலேயே ஒரு காப்பியத்துக்குரியது.

ஒரு மாமரத்தடியில் அனாதைக் குழந்தையாய் அலறிக் கொண்டிருக்க, அதைக் கவனித்து குழந்தையற்ற ஒரு வணிகப் பெருங்குடி மகனார் எடுத்து வளர்க்க நேர்ந்தது.

*When the king of Avanthy (Sanda Prathyothanan) was suffering from jaundice, Bimbisara sent his physician Jivaka— Political History of Ancient India— H. Roy choudhuri, P. 182.

மாமரத்தடியில் இருந்து கண்டெடுத்ததால் * ஆம்ர பாலிகை என்று பெயர் சூட்டினார். அதுவே பின்னாளில் அம்பபாலியாயிற்று.

செல்வக்குடியில் செல்வமாய் வளர்ந்த அம்பபாலி, செவ்வனவே கலைகள் பல கற்றாள்; பாலி மொழியில் பாண்டித்தியமடைந்தாள்; **பனுவல் புனையும் பக்குவமடைந்தாள்; பருவமடைந்தாள்; திருவுருவமடைந்தாள்.

ஒரு நாள்...

அவந்தி மன்னன் சண்ட பிரத்தியோதனன், வஜ்ஜி நாட்டுத் தலைநகராம் வைசாலிக்கு வருகைதர, அவனது பொய்சாலிக் கண்கள் பூரணக் கும்பமாய் விளங்கிய அம்பபாலியின் பொன்னுடலைத் தரிசித்துவிட, மேலும் அவனது போற்றுதலுக்குரிய கலாம்சங்களைக் காது கொண்டு கேட்டுவிட, தனது மோக விருப்பத்தை மன்மதச் சொற்களால் வைசாலி மன்னன் சேதகனிடம் முறையிட, அந்த முறையீடு, வளர்த்து வார்ப்படமாக்கிய வணிகர் வீட்டுக் கதவைத் தட்டியது.

மறுக்க முடியுமா? மதித்துக் கேட்பவன் ***மன்னன். அதுவும் சண்டமாருதச் சக்ரவர்த்தி.

அவந்தி மன்னன், அம்பபாலியை இலவசமாகப் பெறவில்லை.

* ஆம்ரம் என்றால் மாமரம்.

** பின்னாளில் அம்பபாலியின் புத்த சம்வாதம் ஒரு பிரசித்திப் பெற்ற செய்தி. இவள் எழுதிய 'உடல் நிலையாமை' பற்றிய இருபது பனுவல்கள், தேரிகள் பாட்டுத் தொகுதியில் (திரிபிடகம்) அடங்கிக் கிடக்கின்றன.

*** அன்றைய வடக்கில் இது இயல்பு. மன்னன் கேட்டால் மறுக்கக் கூடாது. பால்ய விவாகமே இதனால் வந்தது. மணமான பெண்களை மன்னன் கேட்கக் கூடாது.

கலைக்கருவூலமாயிற்றே !

எடைக்கு எடை பொன்னையும் மணிகளையும் வாரி வழங்கியே பெற்றுச் சென்றான்.

ஆனால் அம்பபாலியின் மாதுளை நெஞ்சில் செம் மணிகளாய்ச் சிரித்துக் கொண்டிருப்பவர் பிம்பிசாரன். அவரது மாற்று மனைவியாகவாவது வாழ மாட்டோமா என்கிற நினைவின் காரணமாகக் கனவில் அவள் பலமுறை தவறு செய்திருக்கிறாள்.

விதிதான் அவளது கதையை வேற்று ரூபத்தில் எழுதி யிருக்கிறதே...

அவந்திநாட்டு ஆடலரசியாகவும், பாடலரசியாகவும் வந்து சேர்ந்தாயிற்று ! ஒரு நிறைவு. அது, மன்னன் சண்ட பிரசண்டனே யொழிய சண்டாளப் பிரசண்டனாக மாறாததுதான் !

அம்பபாலியின் புகழ் அவந்தி மட்டுமல்லாது பதினாறு நாடுகளிலும் பரவத் தொடங்கி விட்டது. ஆனால் மகதக் கண்களில் மட்டும் அது மதுவை வார்த்தது.

ஆ ! அவந்தி மன்னன் சண்ட பிரத்தியோதனன் ஆத்ம நண்பன். கேட்டால் மறுக்கவா போகிறான் ?

ஆனால் அம்பபாலியின் அகத்தில் பிம்பபாலி எவ்வாறி ருக்கிறது என்பதையும் அறிய வேண்டாமா ?

அடுத்த நாளே இரு வேறுபட்ட தூதுக்குழுவை அனுப்பி வைக்கிறார் பிம்பிசாரன்.

ஒன்று :

அம்பபாலியை மகதத்துக்கு அனுப்பி வைக்கவும் ; அவளது கலாரூபங்களைத் தரிசித்து விட்டுத் திருப்பி அனுப்பி வைக்கிறேன் என்கிற பகிரங்கத் தூது.

மற்றொன்று :

அம்பபாலியின் நெஞ்சத்தை யறிந்து வர அனுப்பிய இரகசியத் தூது.

அம்பபாலியின் நெஞ்சில் மகத பிம்பம் இருக்குமே யானால், நிருத்தியம் காண அழைத்த அவளை நித்திய மாக்கி நிரந்தரமாக்கிக் கொள்ள வேண்டியதுதான்.

உஜ்ஜயினிக்குச் சென்ற இரு தூதுக்குழுக்களும் உடனடி யாகத் திரும்பின.

இரகசியத் தூது இயம்பியது.

'பாலியின் நெஞ்சில் பிம்பிசாரன், பாலாறாகப் பாய்ந்து படகு வீடு கட்டிக் கொண்டு பயணம் செய்து கொண்டிருக்கிறாராம் !'

பகிரங்கத் தூது பகர்ந்தது :

'அம்பபாலி விஷயத்தில் ஆத்மநட்புக்கு இடமில்லை. அவள் அவந்தியின் கலைப் புதையல் ! அதனை இழக்க விரும்பவில்லை.'

செய்தியறிந்த மறுகணம்...

பொங்கி எழுந்தது மகதமாக்கடல்.

பிம்பிசாரன் பேய்ச்சாரனானார்.

முரசு கொட்டும்படி முழங்குகிறார்

அச்சமயத்தில் அங்கு வந்து அமைதிக்கு அடிகோலினர், மகதமாதேவி வைதேகி, மகா ஆமாத்தியர் வஸ்ஸகாரன் !

"பிரபோ ! இது ஒரு மூர்க்க முடிவு. பெண்ணாசையால் மூண்ட போர்கள் மண்ணை இழக்கச் செய்திருக்கின்றன."

சக்ரவர்த்தியின் கண்கள் நெருப்புத் துண்டங்களாய் எரிகின்றன.

மகா ஆமாத்தியர் தொடர்ந்து சொன்னார்: "சக்ரவர்த்தி! மகாராணியார் நடைமுறையைச் சொன்னார்கள். இந்திரன் முதல் ராவணன் வரை எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. உங்கள் மூதாதையர்களே இதற்குச் சான்றாக இருக்கிறார்கள். என்கடமை; சொல்லி விட்டேன். பிறகு வருவதைத் தடுக்க முடியாது."

எண்ணிப் பார்த்ததில் நியாயமிருப்பதைக் கண்டு பிம்பிசாரன் ஓரளவு அமைதி கண்டார். எங்கே போய்விடப் போகிறாள் அம்பபாலி?

அவளது நெஞ்சாடியில் பிம்பிசாரப் பிம்பம் கொஞ்சாடுவது தெரிகிறது என்று தெரிந்துவிட்ட பிறகு, மார்க்கம் ஏற்படாமலா போய்விடப் போகிறது?

அந்த மார்க்கம்...

வேற்றுருவில் இப்போது நாற்றங்கால் நட்டுக் கொண்டிருந்தது.

அம்பபாலியின் தனி மாளிகை நோக்கி அவந்திமாதேவி வருகை தந்திருந்தாள்.

அம்பபாலியின் ஆச்சரியத்தில் ஒரு புதிய புல்லாங்குழல் ரிஷபத்தை சட்சமாக்கிச் சுருதி பேதம் செய்து பார்க்கிறது.

"வாருங்கள் மகாராணி! உங்கள் பாதம்பட்டு, பாலி மாளிகை பளிங்கு மாளிகையாகிறது!"

அவந்தி மாதேவியின் கண்களில் யாரோ மேக ராகம் பாடுகிறார்கள்.

காலைக் கதிர்க் கிரணங்கள் அந்த அறையினுள் காலைப் பதித்து இளம் வெயில் நடம்புரிகிறது.

அவந்தி மாதேவிக்கு ஆசனமளித்து அமரச் செய்கிறாள் அம்பபாலி.

"நீயும் அமரலாமே அம்பபாலி!"

"பரவாயில்லை, மகாராணி!"

அம்பபாலியின் பணிவும் பண்பும் அவந்திப் பிரசித்தம்.

"பாலி! உன் மூலம் ஓர் உதவி தேவைப்படுகிறது என்று கூறுவது சாதாரணம்; ஓர் உயிர் தேவைப்படுகிறது என்பதுதான் அசாதாரணம்!"

அவந்தி ராணியின் நயனங்களில் அவல நீர்த்திரை.

அம்பபாலியின் திராட்சைக் கண்கள் திரண்டு கவனிக்கின்றன. சொல்லின் பொருள் புரிகிறது; பூடகம் புரியவில்லை.

"தேவி? புரியும்படியாகச் சொல்லலாமே!"

"இன்னுமா புரியவில்லை பாலி? பாலி மொழியில் பாண்டித்தியம் பெற்றவளுக்கு இது புரியவில்லையா? நமது மன்னர் உயிருடன் போராடிக் கொண்டிருப்பது புரியவில்லையா?"

"எல்லாமே புரிகிறது; நான் என்ன செய்ய வேண்டும் என்பதுதான் புரியவில்லை."

அவந்தி மாதேவி, அம்பபாலியை உற்றுக் கவனிக்கிறாள். உண்மையிலேயே இவளுக்குப் புரியவில்லையா? அல்லது புரியாதது போல நடிக்கிறாளா?

"பாலி! மன்னர் குணமாக வேண்டுமானால் மகதத்திலிருந்து மருத்துவமேதை ஜீவகன் வந்தே ஆகவேண்டும்."

"நான் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்லுங்கள்."

"உன் விஷயத்தால்தானே மகதத்துக்கும் அவந்திக்கும் மாளாத பகை ஏற்பட்டு விட்டது. இதை நீ அறியமாட்டாயா?"

"அறிவேன்; நன்றாகவே அறிவேன்."

"நீ மகதத்துக்குச் செல்வது, உனது நாட்டியத்தை, ஜீவகனை அழைத்துவர அடகு வைக்க! ஜீவகன் இங்கிருந்து திரும்பியதும் நீயும் அங்கிருந்து திரும்பி விடலாம்!"

"மகதர் என்னைத் திரும்ப அனுப்பி வைப்பார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா, மகாராணி?"

"பிம்பிசாரன் ஸ்திரீலோலன்தான். ஆனால் அவந்தியின் மாவலிமை என்னவென்பதை நன்றாகவே அறிந்தவர். மேலும், உனது சாமர்த்தியமும் இருக்கிறது. மீறி நீ நினைப்பதுபோல் நடக்குமானால், மகதம் மண்மேடாகும்!"

'ஐயகோ' என்று அம்பபாலியின் மனம் அலறுகிறது. இப்படியும் நடக்குமா?

ஆனால் அவளது உள்மனம்...

'அடி, பாலி! இப்படி ஓர் எதிர்பாராத யோகமா? மகத பிம்பத்தின் மாணிக்க மார்பகத்தில் மணி முகத்தைப் புதைத்து மகிழ்ச்சியுறப் போகிற இப்படி ஒரு வாய்ப்பா? ஓ...'

மாமரத்துக் கன்னியான— ஆம்ரபாலிகையான— அம்பபாலி, நெஞ்சம் முழுதுமாகப் படர்ந்த மகிழ்ச்சியினை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

ஆ! பிம்பிசாரன், பிம்பிசாரன், பிம்பிசாரன்...

தேவமாங்கனிகள், மேலும் தித்திப்புச் சாறு ஏறி, மேலும் மேலும் கனிந்தும், கனத்தும், களித்தும் குலுங்கின. அன்றே பயணம் ஆயத்தமாகியது.

பிடகம்-14

நிலா மாளிகை

ஒரு மகத்தான [வேள்வியின் மிகப்பெரிய விசுவரூபப் பிரசன்னமே போன்றிருந்தது அந்தச் செய்தி.

ஓ...! அம்பபாலி வருகிறாள்: அழகுக் கலாப மயில் தனது தோகை விரிக்க வருகிறது: அரண்மனையை நெருங்கிக் கொண்டிருக்கிறாளாம்...

பிம்பிசாரன், பூமிக்கும் வானத்துக்குமாய் நிமிர்ந்து அம்பபாலியை வரவேற்பதில் துடியாய்த் துடிக்கிறார்.

இவளென்ன ஒரு மகா சாம்ராஜ்யத்துச் செங்கோலேந்தும் மகாராணியா என்று அதிசயிக்கின்றனர், மன்னரின் துடிப்பையும் மகிழ்ச்சியின் வெடிப்பையும் கண்டவர்கள்.

உண்மைதானே?

அஷ்டபுஷ்பங்களுக்கு மேலான அழகு புஷ்பமாயிற்றே அவள்! அந்த அழகில் அஷ்டகர்மங்களுள் முதலாவதான வசியம், அவள் பார்வை சென்ற இடத்து வாசலைத் திறந்து வைத்துவிடுமே!

பட்டத்தரசிகள் பக்கத்துக்கொருவராக நின்று பார்வையிடுகிறார்கள்.

ஓ...! கணவர் அழகின் கலாரசிகனாக இருப்பதில் தவறில்லை; அந்த அழகை அனுபவித்தே ஆகவேண்டும் என்கிற விடாப்பிடி...

இவரைப் படைத்தவன் பிரமனல்ல; மன்மதன். அரவிந்தம், அசோகம், மாம்பூ, முல்லை, நீலம் ஆகிய

பாணங்களின் உன்மாதம், ரோதனம், சம்மோகனம், சோடணம், மாரணம் ஆகிய செயல்களைப் பிழிந்து பயன்களை அனுபவிக்கப் பிறந்தவர் பிம்பிசாரனோ?

அந்தக் காமனை நெற்றிக்கண் எரித்தது! இந்தக் காமத்தை எந்தக் கண் எரிப்பது?

யோசித்த செல்லனாதேவிக்கு எதும் புரிபடவில்லை; ஆனால் வைதேகி...

காமத்தைக் காமத்தைக் கொண்டே எரிக்க வேண்டும்.

ஓ...! இதே காமம் பெண்களுக்கு மட்டும் இருக்குமானால்...

இருக்குமானால் என்ன? ஆதிபடைப்பே இதுதானே? பெண்ணாட்சி காலத்துக் கண்ணாட்சியே காமத்தில் உருண்டு புரண்டதுதானே? பிறகுதானே ஆணாட்சி உதயம் கண்டது! பெண்ணை அடக்கியதுதானே ஈச்சுரத் தத்துவம்! பெண் அடங்க அடங்கத்தானே நாகரிகம், கலை, பண்பாடுகள், தத்துவங்கள் பூமியைப் பிளந்து சக்தியாய்ப் புறப்பட்டன; மானுட வாழ்க்கைக்கு வானத்தைக் கிழித்து மலர் மாரி பொழிந்தது!

பண்டிதை வைதேகி எண்ணிப் பார்த்துக் ம்காள் கிறாள்...

வாலிபத்து வசிய மையே போல வருகை தந்த அம்பபாலியை நோக்குகிறார் மகத மன்னர் பிம்பிசாரன்.

இதே நேரத்தில்...

தன்னுள்ளே தவம் கிடந்த பிம்பருபத்தைத் தரிசிக்கிறாள் அம்பபாலி.

ஓ...! இவர்தான் பிம்பிசாரனோ! நாகமும் நாகமும் நாண நடக்கும் நாகக்கொடி நாயகனோ? ஆ! மேருமலை வெட்கும் தோன்கள்! மேதினியே நாணும் மேனி! மத்தக

நடையும் மதர்த்த மார்பகமும் சிற்றின்பச் சித்து விளையாடும் சிரோன்மணி இவர்தானோ?

அம்பபாலியின் மின்னலைய முகம் நோக்கி மீசையை நீவி விட்டுக்கொண்ட பிம்பிசாரன், "வா, அம்பபாலி!" என்றார்.

"மகத சக்ரவர்த்தி! நான் உங்கள் அரண்மனையில் காலடி வைக்குமுன் ஒரு வேண்டுகோள்! உங்கள் நினைவின் அனுபந்தம் புரிகிறது. எனது நெஞ்சின் அனுபூதியும் உங்களுக்குப் புரிய வேண்டும். ஆனால், நிபந்தனையின் அனுஷ்டானங்கள் முக்கியம். எதையும் பின்னர் பேசிக்கொள்வோம். அவந்தியின் மணிமுடி, மஞ்சள்காமாலையில் அவஸ்தைப்படுகிறது. எவராலும் எதுவாலும் தீர்க்க முடியவில்லை. உங்கள் அரண்மனை மருத்துவமேதை ஜீவகன் சென்றால்தான் அவந்தி மன்னர் ஜீவன் பிழைக்கும். ஒரு நாழிகைக்கு மூன்று காவத விரைவில் செல்லும் புரவிகள் பூட்டிய ரதத்தில் அனுப்பி வைப்பீர்களேயானாலும் காலதாமதம்தான் என்றால், பிரத்தியோதனருடைய உயிர் எந்த அளவுக்கு ஊசலாடிக் கொண்டிருக்கிறது என்பதை யூகிக்கலாம். தெற்கே *அரவநாடாம் த்ரமிள நாட்டில் வானவூர்தி இருக்கிறதாம்! அந்த வசதி நம்மிடமில்லை. எனவே, எவ்வளவுக்கு விரைந்து ஜீவகனை அனுப்ப

---

* அரவம்- நாகம்- நாகர் நாடு. தமிழரை அரவர் என்பர். தெலுங்கில், இன்றும் தமிழரை அரவர் என்பர். பிராக்கிருத மொழியில் 'ழ' கரமில்லாததால், தமிளம் என்றனர். த்ரமிளம் -த்ரமிடம்- திராவிடம் என்று பின்னால் மருவியது.

வானவூர்தியைப்பற்றி சிலப்பதிகாரச் சான்று மட்டுமல்லாது, பாரத்வாஜ முனிவர் எழுதிய விமான சாத்திரத்தில் (வைமானிக சாஸ்திரா) ஆறு வகையான ஆகாய விமானங்கள் பற்றியும் அவை எப்படி இயங்குகின்றன, எவ்வாறு இயக்க வேண்டும் என்பன குறித்தும் பேசுகிறார்.

முடியுமோ அவ்வளவுக்கு விரைந்து அனுப்பி வையுங்கள். அதற்கான அடகு முடங்கல் இதோ! அதாவது, என்னை அடகுவைத்து, ஜீவகனை அனுப்பி வைக்கும் ஓலை இது!"

மகரயாழ் குரல் கேட்டு மகதமே மயக்கமுற்றது.

ஓலையைப் பெற்ற பிம்பிசாரன், பளிரிட்ட ஒரு பரிமாணத்தின் கீழ் காமத்துக்கு ராஜ விருந்து நடத்துகிறார்:

"உள்ளே சென்று பேசலாம் அம்பபாலி."

உள்ளே சென்று ராஜகூடத்தில் அமருகிறார்கள்.

அவந்தி மன்னன் அனுப்பிய ஓலையைப் பார்வையிடுகிறார் பிம்பிசாரன்.

இளையராணி செல்லனாதேவியின் கண்கள் செருக்கோடு அம்பபாலியைக் கவனிக்கின்றன. இந்நாள்வரை இந்த பிம்பிசாரச் சூரியனைச் சுற்றிக் கணிகை மேகங்கள் சூழ்ந்திருந்தன. இனி இந்த இந்துமதியைச் சுற்றி...

இந்துமதி...

ஓ... இந்துமதி! இந்து என்றாலும் சந்திரன்; மதி என்றாலும் சந்திரன்; இரு பொருள் இனிப்புத் தொகை! அந்தத் தசரதனைப் பெற்றெடுத்த விதர்ப்ப ராஜகுமாரியை இவளுக்கு உவமை கூறுவதா? சே...! அது ஒரு ராஜப் பிரகாச அழகு தீபம்!

இந்த ராஜ புஷ்பத்தைச் சுற்றிப் பிம்பிசார வண்டு ரீங்கரிக்கப் போகிறது.

பற்களை நறநறத்துக் கொண்டாள் செல்லனாதேவி. அவளது பத்துக் கை விரல்களுக்குள் அடங்கியவரல்லவா பிம்பிசாரன்?

ஜீவகன் என்கிற அரண்மனை மருத்துவனை, எட்டுப் புரவிகள் பூட்டிய ரதத்தில் அமர்த்தி, வாயு பகவானே சாரத்தியம் செய்வது போல விரட்டி வைத்தார் மகத சக்ரவர்த்தி பிம்பிசாரன்.

அம்பபாலிக்குப் பயணக் களைப்பு.

அன்றைக்கு முழுவதுமாகப் பூரண ஓய்வு கொண்டாள். அவளுக்கென சிறப்பாக அளிக்கப்பட்டிருந்த நிலா மாளிகையில் நிம்மதியாக உறங்கினாள். அவளுக்குத் தொல்லை தராமல் கவனிக்கவும் கண்காணிக்கவும் ஆட்கள் அமர்த்தப் பட்டிருந்தனர்.

பகல் கரைந்து இரவு கனிந்தது.

இருப்புக் கொள்ள முடியாத மகத சக்ரவர்த்திக்குக் காமத்தின் இடுப்பு வலி கண்டது. ஓவியங்களையெல்லாம் உயிர்ப்பித்துக் காமக் காப்பியங்களாக்கிச் சில காப்பியங்களுக்குக் குழந்தைப் பாயிரமும் வழங்கியவராயிற்றே!

சித்திரங்களுக்கெல்லாம் சித்திரமாய், ஜீவ சித்திரமாய், சிகர சித்திரமாய் வந்து உதயம் கண்டிருக்கும் அம்பபாலி, நெஞ்சுள் நெருப்பாய் நெருடுகிறாள். எவ்வளவோ கட்டுப் படுத்திக் கொள்கிறார் பிம்பிசாரன். அவசரப்பட்டு ஆரம்பத்திலேயே புயலை விதைத்துவிடக் கூடாது. பின்னர் தென்றலை அறுவடை செய்ய முடியாது. எதிர்பார்த்த தேவதையாயிற்றே அவள்!

இரவின் முதல் யாமக் கால மணி ஓசையெழுப்புகிறது.

அரண்மனையின் உப்பரிகையிலிருந்து நிலா மாளிகையைக் கவனிக்கிறாள் பட்டத்தரசி வைதேகி. கூப்பிட்டால் குரல் கேட்கும் தூரத்திலிருந்தது அந்த நிலா மாளிகை.

முத்துப்பல்லக்கு ஆயத்தமானது.

தனது அந்தரங்கப் பணிப்பெண் சுதமதியுடன் நிலா மாளிகை நோக்கிப் புறப்பட்டாள் வைதேகி.

நிலா மாளிகை நோக்கி மகத மாதேவி வருகை புரிந்திருக்கிறார் என்பதையறிந்த அம்பபாலி, ஒரு கணம் அதிர்ந்து போனாள். ஏன் இந்த இரவு நேர விஜயம் ?

சுவரிலிருந்த சித்திரம் பெயர்ந்தோடி வருவதுபோல ஓடி வந்து வரவேற்கிறாள் அம்பபாலி. முதலில் கரம்கூப்பி வணங்க எண்ணிய அவள் என்ன நினைத்தாளோ, ஏது கண்டாளோ, தன்னை மறந்து தாள் பணிந்து, "தஞ்சம் !" என்றாள்.

தஞ்சம்...

"எழுந்திரு பாலி !"

அம்பபாலியின் தோள்களைப் பற்றித் தூக்கிய வைதேகி வியக்க நோக்குகிறாள்.

தோகையனைய பாலியின், தோகை இமைகள் படபடக்கின்றன.

"உள்ளே வாருங்கள் மகததேவி !"

அந்தரங்கப் பணிப்பெண் சுதமதி அங்கேயே நிற்க, இருவரும் இரண்டாம் கட்டிலிருந்த வட்ட வடிவமான நிலாக் கூடத்தில் அமருகின்றனர்.

"மகததேவி ! என்னைத் தவறாக எண்ணி இங்கு வருகை தந்திருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்."

"தவறாக நினைக்க என்ன இருக்கிறது ?"

"உங்களுக்குப் போட்டியாக நான் வந்திருக்கின்றேனே !"

"முடிவு செய்துவிட்டாயா ?"

"அந்த முடிவு கூடாது என்பதுதான் அவந்தி மன்னர் ஆணை. எந்த ஆணைகளையும் யானையின் காலடியில் போட்டு மிதிப்பவராயிற்றே மகத சக்ரவர்த்தி ! எனது சிணுங்கல் இங்கு செல்லுபடியாகாது என்றுணர்ந்தே இவ்வாறு சொன்னேன்."

"ஆமாம் ; அவந்தி மன்னர் பிரத்தியோதனர் எப்படி ? சண்டப்பிரசண்டராமே ? கொடியவராமே ?"

"கொடியவருக்குக் கொடியவர் ; அடியவருக்கு அடியவர். இன்றளவும் என்னை ஒரு தேவமலராகவே ரசிக்கிறாரே யொழிய, தேக மலராக்கி முகர்ந்தது கிடையாது. அவர் அவ்வாறு நினைத்துக் கூடப் பார்த்தது கிடையாது."

"அப்படியா ? ஆச்சரியம்தான் ! அது சரி, உனது கன்னிமை பற்றி நான் தெரிந்து கொள்ளலாமா ? இப்படிக் கேட்பதற்காக வருத்தப்படாதே ! உன்னை ஒரு ராஜ மோகினியாகப் பலர் பிரஸ்தாபிக்கக் கேள்விப்பட்டிருக்கிறேன்."

"எனது அபரிமிதமான அழகு பலரை இவ்வாறு பிரசாரிக்கச் செய்துவிட்டது. நான் தேவ கங்கை ; பூர்ணிமையின் புத்திரி தேவகுல்லியா எப்படி விஷ்ணுவின் பாத பிரசன்னத்தால் தேவகங்கையானாளோ, ஆகாய கங்கையானாளோ அப்படி, அவந்தி மன்னர் நிழல்பட்டு தேவநர்த்தகியாகி இருக்கிறேன் ! நான் ஓர் அநாதை. அவந்தி மன்னர் என்னைப் பெற்றுவந்து, இதுவரை என்னை ஒரு கவித்துவமாக வாசித்து வருகிறாரேயொழிய, * அவித்துவமாக நேசித்ததில்லை."

அயர்ந்து போனாள் வைதேகி. ஆ ! என்ன பாண்டித்தியமாய்ப் பேசுகிறாள் ! எனது பாண்டியத்தியத்தை அறிந்தே இப்படிப் பேசுகிறாளோ ?

---

* அவித்தை-பஞ்ச மாயைகளில் ஒன்று.

"இன்னும் ஒன்றைக் கேட்பேன். மனம் திறந்து மறுமொழி சொல்ல வேண்டும்."

"கேளுங்கள் தேவி !"

"நீ எவரையும் விரும்பியது கிடையாதா? அவ்வாறு இருப்பின் அதற்கு நான் துணை புரியலாம் என்றுதான் கேட்கிறேன் !"

"நான் மனம் திறந்து சொல்லலாமா ?"

"அதைத்தான் நானும் எதிர்பார்க்கிறேன்."

"நான் விரும்பித் தவமிருப்பது மகத சக்ரவர்த்திக்காக !"

வாய் பிளந்து மலைத்துப் போனாள் வைதேகி.

"என்னை மன்னிக்கவேண்டும் தேவி !"

"சே, சே ! நீ பொன்னுக்கும் மணிகளுக்கும் சிரிக்க வரவில்லை ! ஒரு பெண்ணுக்குரிய அவளது மணியான பண்புக்குரிய சிரிப்பாக வந்தது கண்டு மகிழ்கிறேன்."

"மகததேவி ! தொடக்கத்திலேயே தஞ்சம் என்று தாள் பணிந்துவிட்டேன். இனி நீங்கள் தொட்டதுதான் எனது வேதப் புத்தகம் !"

"அம்பபாலி ! எப்படிப் பார்த்தாலும் எனது கணவரும் உன்னை விட்டு வைக்கமாட்டார். ஆனால், சில நிபந்தனைகளுடன் நீ அவரை ஏற்க வேண்டும்."

"அவந்தி மன்னர் பகைமையைச் சம்பாதிக்க நேருமே !"

"நீயே மனம் விரும்பி உடன்பட்டு விட்டதாக உன் கைப்படச் செய்தி சென்றால், அவந்தி அமைதி கண்டு விடும்."

"ஜீவகன் திரும்ப வேண்டாமா ?"

"திரும்பிய பிறகுதானே திருப்பியனுப்பப் போவதாக அடகு சாசனம். அதன் பிறகு இதனை வைத்துக் கொள்ளலாம்."

"ஆமாம் ; மறந்து போனேன். தேவி ! நிபந்தனைகளைச் சொல்லிக் கொடுங்கள்."

"நீ மன்னரிடம் சத்தியம் வாங்கிக் கொள்ள வேண்டியவை : அம்பபாலியைத் தொடவேண்டுமானால் இனி வேசையர் ஆசையையே மன்னர் வேரோடு கிள்ளி எறிந்துவிட வேண்டும் ? கடைசிவரை அம்பபாலி ராஜ நர்த்தகி அந்தஸ்துடனேயே இருக்கவேண்டும் ! இந்த நிபந்தனைகளைப் பெற்றுவிடு. உனக்கு என்னென்ன நலன்கள் தேவையோ, அனைத்தையும் நான் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறேன்."

அம்பபாலியின் கண்கள் கலங்கி விட்டன. இப்படி ஒரு பட்டத்தரசியா ?

"தேவி ! இன்னொன்றையும் நான் மறைக்கக்கூடாது என்று நினைக்கிறேன்."

"என்ன பாலி ?"

"நான் மகத சக்ரவர்த்தியை விரும்பியது போல என்னையும் ஓர் அரசர் விரும்பி மனைவியாகவே ஏற்று அரியணையில் அமர்த்தத் தவமிருந்தார். ஆனால், ஏனோ என் மனம் ஏற்கவில்லை. எனக்கு ராஜமோகமில்லை ; ராஜகிருக மோகமிருந்தது. சிறுத்தையின் தலையாக இருப்பதைவிடச் சிங்கத்தின் வாலாக இருக்கவே ஆசைப் பட்டேன். ஆனால் அவந்திக்குச் சென்ற பிறகு அதுவும் கெட்டு இதுவும் கெட்டு, முடிவில் ராஜநர்த்தகி புகழ் போதும் என்று அமைதி கண்டேன். அதிர்ஷ்டம் இப்படித் திசை திருப்பும் என்பது நான் எதிர்பாராதது."

"உன்னை விரும்பிய அந்தச் சிறுத்தை யார் ?"

"ஜனகபுரத்து அஜாதசத்ரு !"

அஜாதசத்ரு...

தனது அதிர்ச்சியைக் காட்டிக் கொள்ளாமலிருக்கப் பெரிதும் முயலுகிறாள் வைதேகி.

"நல்லது அம்பபாலி ! நீ ஓய்வெடுத்துக் கொள். நாளை சந்திப்போம். நிபந்தனைகள் நினைவிருக்கட்டும்."

ராஜராணி வைதேகி விடைபெற்றுச் சென்றாள்.

தனது சொர்ணக் கனவு சுந்தரக் கோலம் புனைந்து, சுகமான பாதையமைத்து, சொர்க்க நடை போடும் என்பது அம்பபாலி எதிர்பாராதது.

அவள் அந்த நிலா மாளிகையில் நிலாவென ஒளிநகை புரிந்தாள்.

வானிலோ, முழு நிலவு அவளைக் கண்டு விதி நகை புரிந்து வெளிச்சமிட்டது.

பிடகம்-15

நாக நர்த்தனம்

திருமாலின் மார்பில் ஒளிரும் கௌத்துப மணியே போல, அலைகள் ஆர்ப்பரிக்க எழுகிறான் ஆதவன்.

பிம்பிசாரன் இரவு முழுவதும் உறங்கினாரோ, இல்லையோ ? கண்களை மூடினால்தான் அம்பபாலியின் கனவு வந்து கனிச்சாற்றைப் பிழிய வைக்கிறதே !

ஐந்தே நாழிகைப்போதுதான் அடியெடுத்து வைக்கிறது. அதற்குள்...

அலங்காரப் புருஷனாக நிலா மாளிகைத் தரிசனம் நோக்கிப் புறப்பட்டு விட்டார் மகத சக்ரவர்த்தி.

காலை புலரியத்தின்போதே மன்னர் வருகிற செய்தி வந்து, நிலா மாளிகையின் கதவுகளிடம் கிசுகிசுத்து விட்டது.

அம்பபாலியோ, அப்சரஸ்களை விழுங்கி ஏப்பம் விடுகிற அளவுக்குத் தன்னை அலங்கரித்துக் கொண்டு எதிர்பார்த்தாள். அவளுள்ளும் ஓர் அவர் நிலை அலைமோதுகிறதல்லவா ?

தேர்ச் சக்கரங்களின் அரவம் கேட்கிறது.

குதிரைகள் நின்று கனைக்கும் குரலொலி.

ஓ...! பிம்பிசாரன் வந்துவிட்டார்.

புள்ளிமான் துள்ளி வந்து நிற்கிறது.

இரண்டு மீன்கள் ஏதோ கிசுகிசுக்கின்றன.

பவளப் பேழையில் ஜாதி முத்துக்கள் பாதி தெரிகின்றன.

"வாருங்கள் பிரபோ !"

யாழ்நரம்பின் பஞ்சம சுர நாதம்.

ஒரு தேவதையின் பின்னழகே, முன்னழகுக்கான கட்டியம் போல நடக்கிறாள் அம்பபாலி.

அவளது மெல்லிய இடையும், அந்த இடையைத் தாங்கும் வீணையின் குடம் போன்ற பிருஷ்டபாகங்களும், சேலையைத் தாறு பாய்ச்சிக் கட்டியதால் முழங்காலுக்குக் கீழே கனக நிறங்கொண்ட கண்டசத்தையும், காலில் நூபுரங்களும்... ஓ...! பிம்பிசாரன் ஒரு கணம் கருண்டு பின்னர் சுதாரித்துக் கொள்கிறார்.

இடைக்கு மேலே கச்சு அணிந்த கனிந்த முதுகு அதற்கு மேலே சங்குக் கழுத்து : அதனைத் தழுவிப் பெருமை கொள்ளும் கரிகுழல்கள்.

வட்ட வடிவமான நிலாக்கூடத்தை அடைந்த பிம்பிசாரன், தாக்குண்ட விரகம் தாங்க முடியாமல் அமருகிறார்.

"நீயும் அமரலாமே அம்பபாலி !"

மோப்பக்குழையும் அனிச்சம் போல நாணியும் நாணா தவளுமாக அம்பபாலி நிற்க...

ஊடுவேனோ, கூடுவேனோ என்பது போலப் பசலை படருகிறது.

கொஞ்சமும் எதிர்பாராதவண்ணம் அம்பபாலியின் கரம்பற்றி அமரச் செய்தார் பிம்பிசாரன்.

ஓ...! முதல் தொடுகை ; ஸ்பரிசம்...

மின்னலாய்ப் பாய்ந்து கன்னலாய் இனிக்கிறது.

"அம்பபாலி ! எப்போதுமே நிற்க முடியுமா? நின்று தான் அனைத்தையும் சேவிக்க முடியுமா ? மடியில் அமரப் போகிறவள்; பின், மார்பில் அமரப் போகிறாள். இப்போது எதிரில்தானே அமரச் சொன்னேன் ! எதிரியாகித்தான் அமரக் கூடாது."

பாலிக் கண்கள், சாரக் குரலைப் பதம் பார்க்கின்றன.

பார்வைகளின் வேறுபாடு, வேரின் அடிப்பாகத்தில் அரும்பாய் வெடித்துக் கரும்பாய் இனிக்கச் செய்கிறது.

"பாலி ! உன்னைப் படை கொண்டு சிறையெடுக்க நினைத்தேன். காலம் காமாலை ரூபத்தில் கனியச் செய்து விட்டது.

"பிரபோ ! ஜீவகன் திரும்பியதும் நான் திரும்ப வேண்டியதுதானா ?"

இடியெனச் சிரிக்கிறார் பிம்பிசாரன் !

"திரும்புவதாவது அம்பபாலி ! ஜீவகனைச் சற்றுக் காலதாமதம் எடுத்தே திரும்பச் சொல்லியிருக்கிறேன். எனது உத்தரவு அங்கு செல்கிறவரை, அவன் பிரத்தியோதனனை எழுப்பி உட்கார வைத்துவிட மாட்டான். அவன் நினைத்தால் ஒரு நாள் போதும். நினைக்க மறுத்தால் ஓராண்டு நீடிக்கும். காமாலை ரூபத்தில் அல்ல ; வேறு பூமாலை எத்தனை நோய் ரூபத்தில் உண்டோ, அத்தனையையும் அணிவிப்பான் ; கழற்றியும் எறிவான் !"

அம்பபாலி, மௌனித்துத் தலைகுனிகிறாள்.

"நிலவு குனியக்கூடாது. குனிந்தால் பிம்பிசாரன் இருண்டு போகிறான்."

நிலவு நிமிர்கிறது.

பிம்பிசாரன் பிரகாசமாகிறார்.

"பிரபோ ! உங்கள் மனத்தைத் திறந்து காட்டலாம்."

"முதலில் நீ..."

"இல்லை : கோயில் வாசல் திறந்தால்தான் விக்ரகம் வாய் திறக்கும்."

"கோபுரமே இங்கு வந்துவிட்ட பிறகு வாசல் திறந்தது மாதிரிதானே அம்பபாலி ? இக்கணம் முதல் நீ எனது பாலி; இதய பாலி ! ஆனால், ராஜநர்த்தகி விருது பிரகடனம் மட்டும் ஜீவகன் திரும்பிய பிறகுதான் ! அவந்தியின் செவிகளுக்கு எட்டிவிடக்கூடாதல்லவா ? அதுவரை நீ எனது ராஜமோகினியாக இருக்கலாம்."

"மகத ராஜ்யமே ! உங்கள் நிபந்தனைகளை நான் ஏற்கிறேன். இது போல நானும் சிலவற்றை யாசிக்கலாமா ?"

"சொல் பாலி !"

"பாலி மொழியிலா ?"

"பாலி, எந்த மொழியில் பேசினாலும் அதற்குப் பெயர் பாலிதான் ! நாம் நமது மாகதி பாஷையிலேயே பேசுவோம் !"

அம்பபாலியின் முகத்தில் அமுதம் சொரிகிறது.

"மகத சூரியனே...!"

அவள் தயங்குகிறாள்...

"சொல்லடி, என் சொப்பன நிலவே, சொல் !"

"இந்த அரண்மனையில் எத்தனை ராஜவேசிகள் இருக்கிறார்கள் ?"

"எனக்கு இரு மனைவியர் என்றளவில் கணக்குத் தெரியும். மற்றதை எண்ணிப் பார்ப்பதில்லை."

"ஒகோ ! நான் மூன்றாவதாக நினைவில் இருப்பேனல்லவா ?"

"சந்தேகமே இல்லை."

"அப்படியானால் இந்த அரண்மனையில் வேசிகள் என்ற கூட்டமே இருக்கக்கூடாது. குழந்தை முத்திரை குத்திக்கொண்ட மான்யங்கள் மரணிக்க வேண்டும்."

பிம்பிசாரன் கண்கள் வியப்பின் விளிம்பில் வியர்க்கின்றன.

"ஏன் அம்பபாலி ?"

"நிலவு வந்த பிறகு நட்சத்திரங்கள் ஏன் ?"

ஒரு நீண்ட பெருமூச்சு.

"ம்ம் ! அடுத்து ?"

"நான் போடும் முந்தானை முதன் முறையானது இந்தச் சத்தியவாக்கை நீங்கள் நம்ப வேண்டும்."

"எனக்குத் தெரியும் ! அடுத்து ?"

"வாரத்துக்கு இரு முறைதான் இந்த நிலவு உங்கள் இதயவானில் உதயமாகும். இது மகாராணிகளுக்கு நான் தரும் மரியாதை !"

"இவ்வளவுதானா ? இன்னும்..."

"இது போதும் : ஆனால், இது குறித்துச் சத்தியம் வேண்டும் ; சாசனம் வேண்டும் "

சத்தியம், சாசனம்...

சிந்தனை, சிந்தனை, சிந்தனை...

அறத்துன்பமான கட்டுக்கள் ; ஆனாலும் அறமான கட்டுக்கள்.

"அம்பபாலி ! இப்போதைக்குச் சத்தியம் செய்வேன் ; நீ ராஜநர்த்தகியானதும் சாசனம் தருவேன். ராஜ

வைப்பாட்டி என்று சாசனம் எழுதினால் மகத வரலாறு மாசு கண்டுவிடும். ராஜநர்த்தகி சாசனம் அப்படியான தல்லவே? யோசித்துப்பார்!"

நியாயமாகவே தெரிந்தது. ஆனாலும் வேற்று ரூபத்தில் சற்றுச் சிந்தனைக்குத் திசை திருப்பம் கண்டிருக்கலாம். எங்கே சிந்திக்க முடிகிறது அல்லது சிந்திக்க வைக்கிறது? அவன்தான் நீண்ட நாட்களாகவே சிந்தனையில் பிம்பிசாரக் குடும்பம் நடத்துகிறாளே!

இங்கே அம்பபாலி ஒரு சராசரிப் பெண்ணுக்குரிய பலவீனப் பட்டாள்; மேலும் படவிருக்கிறாள். விதிமட்டுமா வலிது? காமம் அதனிலும் வலிது!

வலக் கரத்தின்மீது வாள் கரம் பற்றிச் சத்திய சங்கம் முழக்குகிறது.

"பாலி! மஞ்ச அறைக்குச் சென்று பேசுவோமே!" என்றார் பிம்பிசாரன்.

வியப்பு கண்களில் வெளிப்படாது, சிரிப்பில் சிந்தியது. இதுவும் பலவீனத்தின் ஒரு தூது மாதிரியே என்பதும் அவளுக்கே புரிகிறது.

"நான் முதல் சந்திப்புக்குரியவள் பிரபோ! நிலவு தாலாட்டட்டும்!"

பிம்பிசாரன், காமக்குடையில் பல நிழல்களைச் சந்தித்தவர். அவர் மெல்லியதாகச் சிரித்துக் கொள்கிறார்.

"அம்பபாலி! இரவில் முதல் சந்திப்பு— அதாவது முதலிரவு இருப்பதால்தான் மிகுந்த பெயர்கள் வாழ்க்கை இருட்டாகப் போய் விடுகிறது. எந்தத் தாம்பத்தியம் வெளிச்சத்தில் ஆரம்பமாகிறதோ, அது பிரகாசமுடையதாக இருக்கிறது. அதே நேரத்தில் பிரகாசபதியான கதிரவனின் ஆசியோடு யோகமடைகிறார்கள். இது ஒரு ரவித் தத்துவம்! பிரமனுக்கு மட்டுமா பிரஜாபதி என்கிற பெயர்? கதிரவனுக்கும் அந்தப் பெயருண்டு."

ஒரு பிரசாதம் போலவேயவே பிரமித்துப்போன தோடல்லாது, பின்வாங்கவும் தயங்கினாள், பிம்பிசாரத்தோடு அம்பசாரம் சங்கமிக்கத் துடித்த பிரபஞ்சப் பேரழகி அம்பபாலி!

ஓ... அம்பபாலி! நீயும் சராசரிப் பெண்மைக்குடையவளே என்று உள்ளுக்குள் ஆத்மபாலி அலறுகிறாள். 'பிம்பிசாரன் ஒரு காமப் பிரசித்தனாயிற்றே!'

மஞ்சத்து அறைக் கதவுகள், கிண்கிணி யோசையுடன் திறந்தன; மூடிக் கொண்டன.

விதி, வெளியில் நின்று வேடிக்கை பார்க்கிறது.

மஞ்சத்தின் கதை முடிந்தது; கொடி முந்திரியாம் திராட்சாபாகத்துக்குரிய அம்பபாலிக்கும் வெளிச்சம் தெரிந்தது.

ஓ...! இது ஒரு சூரிய ஒப்பந்தம்!

"அம்பபாலி! நாளை நமது ராஜ மண்டபத்தில் நர்த்தனமாடுகிறாய்!"

"பேறு பெற்றேன் பிரபோ!"

மூடிக் கிடந்த கதவு எதிரொலித்த சாரமிக்க பிம்பப் பிரகடனம்.

ராஜகிருக ராஜமண்டபமே ரசனைக் கடலில் மூழ்கி அலைமோதுகிறது.

ஆ! இது நாட்டியமா என்றும், இதுவே நாட்டியம் என்றும், இதுவல்லாது வேறு நாட்டியம் ஏது என்றும் சொற்பூவால் அர்ச்சிக்கின்றனர், நாட்டியச் சுகம் தெரிந்த நல்லோர்!

அழகு தேவதை அம்பபாலி ஆடுகிறாள்.

பொன்னை உருக்கிப் புதியதோர் வார்ப்படத்தில், தன்னை மறந்து படைத்தெடுத்த நான்முகனை நாவார வாழ்த்துகிறார்கள்.

ஊர்வசி, இவள் முன்னே தூர்வசி !

அரம்பை, இவள் முன்னே வெறும் குறும்பை !

திலோத்தமையும் மேனகையும் நாட்டியப் பலாத்காரப் பலகாரங்கள் !

அம்பபாலி ஆடுகிறாள், ஆடுகிறாள், ஆடுகிறாள்...

அந்த மண்டபம் ஆடுகிறது ; அதன் தூண்கள் ஆடுகின்றன ; அங்கே படர்ந்த துரும்பும் தூசும் ஆடுகின்றன !

கூத்துவகையில் பதினொன்று என்ற கணக்கென்ன ? விந்நியசித்தால் விநோதங்கள் பல விகசிக்குமே !

பரத முறைக்கே அப்பாற்பட்ட நாகமுறை இது ! அந்த நாகம் செய்யும் போகம் உயிரின் நுண்ணியலில் உன்னதமானது மட்டுமல்ல, உற்சாகமானதும்கூட என்று பலருக்கும் போதையூட்டி ஆடுகிறாள்...! அந்த மண்டபத்தையே படம் எடுத்து ஆட வைக்கிறாள்...! தூண்களெல்லாம் நெளிகின்றனவா என்கிற பிரமையால் சிலர் விழி பிதுங்கிப் பயந்து போயினர் !

ஓ...! இவளது சீற்றம், கொத்தும் பாணி, வளைந்தும் நெளிந்தும் ஊர்ந்தும் ஆடுகிற பாங்கு...

பிம்பிசாரன், தமது மணிமுடியிலிருக்கும் நாகமணியையே பெயர்த்துப் பரிசாக வழங்கி விடுவாரோ ?

தும்புரு நாதத்துடன் இசை மரபைச் சார்ந்த கஞ்சக் கருவிகளும் துளைக் கருவிகளும் தோற்கருவிகளும் நரம்புக் கருவிகளும்...

திடுமென முழவும் திமிலையும் இடியென முழங்க...

பளீர் பளீரென சல்லரியும் மல்லரியும் சத்தமெழுப்ப...

இடியும் மின்னலும் தோன்றுகின்றனவாம்...

நாகம் நடுங்குகிறதாம்...

அந்த இடி— பிம்பிசாரன் !

அந்த நாகம்— அம்பபாலி !

பதுங்கிப் பதுங்கி அஞ்சிச் சிலிர்க்க...

இடியும் மின்னலும் ஓய்கின்றன.

கொலுமண்டபமே குதூகலிக்கிறது.

ராஜநாகம் மீண்டும் கூடு நோக்கி நுழைகிறது. புற்றில் வசிக்காத புரவல நாகமாயிற்றே !

"அம்பபாலீ...!" என்று மகிழ்ச்சிப் பெருக்குடன் அழைப்புக் கொடுத்து அரியணையிலிருந்து எழுகிறார் பிம்பிசாரன். அவையே எழுகிறது.

"உனக்கு எந்தப் பரிசை அளித்தாலும் அது உன்னை நாணச் செய்வதாகும். நான் கொடுத்து உனது கலையை இழிவு படுத்துவதைவிட, நீ கேட்டு என்னைப் பெருமைப் படுத்து ! என்ன வேண்டும் ?"

அம்பபாலியின் கண்கள் அவையை வலம் வருகின்றன.

அவள் கேட்டாள் :

"ராஜமாதா பட்டத்தரசியின் பாதங்களில், இந்த அவை முன் நான் பணிய வேண்டும் !"

ஓ...! எங்கோ போய்விட்டாள் அம்பபாலி ! அவள் விரும்பியது நிறைவு பெறுகிறது. கொலுமண்டபமும் கலைகிறது.

அடுத்துச் சில நாட்களில்...

அம்பபாலியின் கோரிக்கை நடப்புக்கு வருகிறது.

அரண்மனையிலிருந்த அத்துணை கணிகையர்களையும் வெளியேற்றுகிறார்கள்.

அதுவரை பிம்பிசார மன்னருக்குப் பிறந்ததாகச் சொல்லி மான்யம் பெற்று வந்த குழந்தைகளை, முத்திரையிட்டுச் சொல்ல முடியாது என்று உத்தரவாதத்தைத் திரும்பப் பெறுகிறார்கள், அரண்மனை அதிகாரிகள். மான்யங்கள் மரணிக்கின்றன.

அம்பபாலியின்மீது பொறாமை கொண்ட இளைய ராணி செல்லனாதேவிகூட, 'இவள் வருகையில் இப்படி ஒரு திருப்பமா!' என்று வியந்து கொள்கிறாள்.

ஏன்? அரண்மனையே அவளை வாழ்த்திக்கொள்கிறது.

அரசமாதேவி— ராஜமாதா வைதேகியின் நெஞ்சம் பெரிதாகப் பூரித்தது.

பிம்பிசாரன் பஞ்சாங்கத்தில் ஒரு வாரத்துக்கே இரு நாட்களாயின. எட்டு நாட்களில், சில சமயம் ஒன்பது நாட்களில் ஒரு மாதம் எப்படி முடிகிறது?

நாட்கள் நகரும் ரகசியமே தெரியாமல் நாழிகைகள் தோரணம் கட்டித் தொங்க விடப்பட்டன.

எல்லையற்ற இன்பப் போதைக்கு, ஒரு வருடமே ஒரு நாளாக மறைகிற போது...?

அம்பபாலியின் கருவில் பிம்பிசாரன் குரல் கொடுத்தார்.

1688.1
3289301

பிடகம்-16

வேள்வியும் கேள்வியும்

அவந்தி தேசத்திலிருந்து ஜீவகன் புறப்பட்டு விட்டான் என்கிற செய்தி, அழகுதேவதை அம்பபாலிக்கு ஒரு நிறைவான நெடுமூச்சைப் பறியச் செய்தது.

ஆ! தனது இந்த நிறைமாதக் கர்ப்பிணி நிலை இன்னும் அவந்தி அரசர் சண்டப் பிரத்தியோதனருக்கு எட்டவில்லை. எட்டியிருந்தால், இந்நேரம்...

ஜீவகன் திரும்புவதாவது?

இப்போது தனது நிலையென்ன? அவந்தி தன்னை எதிர் பார்க்குமே! தனது நிலைகுறித்து எத்தோரணையில் எழுதி அனுப்புவது? அதன் எதிருணர்வுகள் எந்நிலையில் யக்ஞம் வளர்த்தும்? அதன் பிரசன்னம் போரா? அமைதியா?

இந்தச் சரணத்துக்கு முடிவு தெரியவில்லை.

பல்லவி, எடுத்து வளர்த்த வணிக தனவந்தரோடு முடிந்துவிட்டது. அனுபல்லவியை அவந்தியில் பாடி, இப்போது சரணம் மகதத்தில் சரணாகதியடைந்து விட்டது. ஆனால் சரணமல்ல; சரணங்கள்; அது எத்தனை கட்டங்களாக வேண்டுமானாலும் இயற்றப்படலாமே!

ஓ... தெய்வமே! எனது சரணம் ஒரே சரணமாக— மகத சரணாகதித்துவமாக இருந்து விடட்டும். வேறு கட்டமே வேண்டாம்.

அம்பபாலியின் நெஞ்சு அலமருகிறது.

அந்த நேரத்தில் பணிப்பெண் விசாலி வந்தாள்.

"பட்டத்தரசியார் இன்னும் சற்று நேரத்தில் வருவதாகச் சொல்லியனுப்பி இருக்கிறார்கள். ஏதோ மிக அவசரச் செய்தியாம்."

சிந்திக்கிறாள் அம்பபாலி. இந்தப் பகல் நேரப்போதில் என்றுமே மகதராணி வந்ததில்லை. அவர்கள் வரும் நேரம் முதலில் மாலையாக இருந்தது; பிறகு காலையாய் மாறியது.

"அவர்கள் இச்செய்தியைச் சொல்கிறபோது முகம் எப்படி இருந்தது விசாலி?"

"சிவந்தும் கண்கள் படபடத்தும் காணப்பட்டன. முதலில் உங்களைத்தான் அழைத்து வரச் சொன்னார்கள். பின்னர் எதையோ யோசித்து, 'வேண்டாம் அவள் பூரண கர்ப்பிணி; நானே அங்கு வருகிறேன்' என்றார்கள்," என்றாள் விசாலி.

அம்பபாலியின் நெஞ்சு மேலும் அலமருகிறது.

ஏதேனும் அவந்தி பற்றிய செய்தியா? அவந்தி மன்னர் செய்தியறிந்து படை திரட்டி விட்டாரா? ஓ... தன்னால் இப்படி ஒரு மகாயுத்தம் மூண்டதாக சரித்திரம் தேவைதானா?

அவளது கர்ப்பம் கலங்கிவிடும் போலத் தெரிந்தது.

நேற்றைய மாலை...

ஓர் எதிர்பாராத நிகழ்ச்சி அரண்மனையில் நடந்தது.

அது கலக்கிய கலக்கல்...

அதுவரை சக்ரவர்த்தி பிம்பிசாரன், உருத்திராட்சப் பூனை வேடம் தாங்கி வந்தாரோ என்று எண்ணச் செய்து விட்டது. காமலீலை தடம் புரண்டது; இடம் பெயர்ந்தது.

விளக்குகள் ஒளி நர்த்தனம் புரியத் தொடங்குகின்றன.

அப்போது...

அரண்மனை வாயிலில் யாரோ ஓர் இளம் பெண், தனது அண்ணனுடன் வருகை தந்து சக்ரவர்த்தியை அவசரமாக— மிக அவசரமாகப் பார்க்க வேண்டும் என்று அடம் பிடிக்கிறாளாம்; தீக்குளிப்பேன் என்று அச்சுறுத்துகிறாளாம்.

அவசரமென்றால் அதற்கென ஓர் ஆராய்ச்சி மணியுண்டு. அதனைப் பயன்படுத்தலாமே! அபாய நிலைமை என்றால் அதன் நாவு அசையலாம். அகாரணமாய்ப் பயன்படுத்திவிட்டால் அதன் தண்டனையே வேறு.

இவ்வாறு அகாரணமாய் அடம் பிடிக்கும் பெண்ணைக் காவல் வீரர்கள் அடித்தும் விரட்டலாம். அதுவும் நேரம் கெட்ட நேரத்தில் சக்ரவர்த்தியைப் பார்ப்பதாவது?

காவற்காரர்கள் ஏதோ அதட்டுவது போல அதட்டி விட்டு, மகத சக்ரவர்த்திக்குச் செய்தி சொல்லியனுப்பி விட்டார்கள். அழைத்து வருமாறு உத்தரவும் வாயிலை நோக்கி வந்தது.

இந்த நிகழ்ச்சியை ஓர் அதிசய அல்லது அபூர்வ நிகழ்ச்சியாகவே கவனித்தது அரண்மனை.

மகா ஆமாத்தியர் வஸ்ஸகாரன் வேறு தலைநகரில் இல்லை. அவரது ஊருக்கு ஒரு நடை சென்று திரும்பலாமே என்று சென்றிருக்கிறார்.

அரண்மனைச் சித்திரக்கூடத்தில் இரண்டாம் ஆமாத்தியர் சுநீதன் மட்டுமே அமர்ந்து ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறார். அந்த நேரத்தில் அவருக்கும் அங்கு வேலையில்லை. வீட்டில் இருக்க வேண்டியவர். அவரை அவசியமில்லாமல் அமர்த்திக் கொண்டு ஏதோ சம்பந்த

மில்லாமல் பேசிக் கொண்டிருக்கிறார் சக்ரவர்த்தி பிம்பிசாரன். அப்போதுதான் அந்தச் செய்தி வந்தது.

வைதேகிக்கு ஒன்றுமே புரியவில்லை.

என்ன இது ? இன்று பார்த்து இப்படியான நேர்வுகள் ? இங்கே சுநீதன் : அங்கே ஒரு சுந்தரி !

சற்றைக்கெல்லாம்...

உதயத்தில் ஒப்பந்தம் செய்து அஸ்தமனத்தில் ஆலாபிக்க வேண்டிய யாழ் போன்ற நங்கையொருத்தி, தேன்பிலிற்றும் மலரனைய கண்களுள் வண்டுகள் ரீங்கரிக்க வந்து நின்று வணங்கினாள். அவளுடன் ஓர் ஆண் மகன்.

அயர்ந்து போனாள் அரசமாதேவி வைதேகி.

யாரிவள் ?

அம்பபாலி அருகிலிருந்தால், பொறாமைப்பட வைக்கும் அழகு படைத்த இவளுக்கு நேர்ந்த அவலம் என்ன ?

"யார் பெண்ணே நீ ?"

சக்ரவர்த்தி பிம்பிசாரன் குரல் ஏதோ பாதியிலிருந்து தொடங்கும் ஆலாபனை போல ஒலித்தது.

அடுத்து அந்த அழகிய இள நங்கை...

வாய் திறக்க முடியாத உணர்ச்சிப் பாவனையுடன், பேயறைந்து, பிடிதளர்ந்து ஓடி வந்தவள் போல, பிம்பிசாரன் கால்களில் பணிந்து 'கோ'வென்று அழுதாளே யொழிய சொற்களைப் பற்களில் கடித்துக் கொண்டாள்.

"யார் பெண்ணே நீ ?"

மீண்டும் இதே கேள்வி.

அந்த அழகிய தேன்சிட்டு— அப்போதுதான் பருவமடைந்து, காமதேவனுக்கு, ரதி நிவேதனம் செய்யப் புறப்

பட்டவள் போன்ற இள நங்கை— தொலைவில் நின்றிருந்த தனது அண்ணனை நோக்க அண்ணனாக வந்து நின்றவன் அதிர்ச்சியடைந்தவன் போன்ற நடுக்கத்துடன் நடந்ததை விவரித்தான் :

"சக்ரவர்த்திப் பெருமானே ! இந்த ஏழையின் தண்டம் ! நாங்கள் காசி தேசத்தைச் சேர்ந்தவர்கள். ஏழை அந்தணர் குடும்பத்தில் பிறந்தவர்கள். இவள் என் தங்கை. பருவமடையாத காலம் முதற்கொண்டே மகத தேசத்தைப் பார்க்க வேண்டும் ; மகத சக்ரவர்த்தியைத் தரிசிக்க வேண்டும் என்று வேடிக்கையாகச் சொல்லி வந்தாள். நாங்களும் இவளது ஊமைக் கனவை உதாசீனப் படுத்தினோம். உங்கள் மாபெரும் புகழும் மகோன்னத அழகும் மத்தகம் நிகர்த்த வீரமும் எங்கள் காசியில்தான் கங்கையாக ஓடிக் கொண்டிருக்கிறதே ! எவளோ ஒருத்தி இவளது இளமையில், இவளைச் சீதையாகவும் உங்களை ஸ்ரீராமபிரானாகவும் வருணித்து ஓதி வைத்து விட்டாள். அதன் பிறகு இவள் வான்மீகியின் வயிற்றெரிச்சலையே கொட்டிக் கொள்கிற அளவில் அந்த வருணனையில் மூழ்கி வசைமாரி பொழியத் தொடங்கி விட்டாள்."

"அந்தகு பாண்டித்தியம் உடையவளா ?"

"வேதங்கள் பயின்றவள் ; விநோதக் கலைகள் அறிந்தவள் ; இவளது பாதங்கள் சலங்கையணிந்தால், அழகு தேவதை அம்பபாலியே அயர்ந்து போவாள் !"

"அப்படியா ?"

பிம்பிசாரன் வாய் மட்டுமல்ல, கண்களும் பிளக்கின்றன.

ராஜராணி வைதேகி மட்டும் எந்தவித எதிருணர்வுகளையும் காட்டாது, வந்தவர்களின் நோக்கத்தையும், அங்கிருப்பவர்களின் பாவனைகளையும் கண்டுணர்வதில் கவனம் செலுத்துகிறாள்.

பிம்பிசாரன் கேட்டார் : "உன் பெயர் ?"

அவன் சொன்னான் : "சண்டீசன் !"

"நல்லது சண்டீசா ! நீ பேசாமல் இரு ! இவளை நான் விசாரணை செய்ய வேண்டும். எதற்காக அநியாயமாக என்னை இவள் நெஞ்சில் கொண்டாள் என்பதை இவளே சொல்லக் கேட்க வேண்டும்..."

சக்ரவர்த்தி பிம்பிசாரன் இவ்வாறு சொல்லி முடித்த அடுத்தகணம், பளீரென்று யாழ் நரம்பு தெறித்தது போல நாவசைத்தாள் அந்த இளநங்கை : "நானும் எனது இதயத்தைக் கூறுகூறாகப் பிளந்து உங்கள் காலடியில் வைக்கவே விரும்புகிறேன் சக்ரவர்த்திப் பெருமானே ! நான் கண்களால் உங்களைக் கண்டதில்லை ; ஸ்ரீராமனைக் கண்டேன் ! காதுகளால் உங்களைக் கேட்டறிந்தேன், கவிஞர்கள் சொல்ல ! எண்ணத்தால் எனையழித்தேன் ; இல்லை, வான்மீகி அழித்தான் ! எனது தேகத்தைத் தழுவியது 'நீரே'யன்றி— மீண்டும் சொல்லுகிறேன் நீரே யன்றி வேறேதுமில்லை."

அனைவருமே வியந்து போயினர்.

ஓ... சொற்களை இவள் பூச்சரம் கோப்பது போலக் கோக்கிறாள். அடுத்து ஒரு பூவுக்கே இருமணம் வீச நிருபிக் கிறாள். நீர்... தண்ணீர் ; நீங்கள்...

பிம்பிசாரன் மெல்ல எள்ளல் நகைப்புடன் கேட்டார் : "பெண்ணே ! உன் தேகத்தை நீர்தான் தழுவியதோ? இதோ, உனது ஆடைகள் தழுவிக் கொண்டிருக்கின்றனவே !"

அவள் கவிதா பிரகாசமாய்ச் சிரிக்கிறாள் : "இவை உடலைத் தழுவுவன ; 'நீர்' ஆத்மாவைத் தொடும்..."

அவள் முடிக்காமல் 'ம்' காரத்தை நீட்டி ஓர் இசையே போல நிறுத்துகிறாள். முற்றுப் பெறவில்லையாம்.

"பெண்ணே ! என் பொருட்டு ஆசைபட்டவர் பலர் : தவமிருந்தவர் சிலர். என்னைப் பார்க்க முறைப்படி அனுமதி கேட்டுக் கொலு மண்டபத்தில் சந்திக்காமல் இப்படி முறைகெட்ட நேரத்தில் அடம்பிடித்து நுழை வானேன் ?"

"முயன்றோம் ; முடியவில்லை. அனுமதி வழங்க மறுத்து விட்டனர். காசியிலிருந்து பல கஷ்டங்களை அனுபவித்து ராஜகிருகம் அடைந்தோம். உங்கள் தரிசனம் கிடையாது என்கிற நிலை ஏற்பட்ட பிறகு? முடிவே செய்துவிட்டேன். ஒன்று தரிசனம் ; இல்லை, தீக்குளிப்பு. என் முயற்சி திருவினையாக்கியது. உங்கள் தரிசனமே எனதுகற்பை இழக்கச் செய்துவிட்டது !"

கனத்த சொல்லை இப்போதுதான் அவள், பிம்பிசாரன் தலையில் ஏற்றுகிறாள். கண்கள் பல விரிந்து வியக் கின்றன.

"இப்படி இருக்க, உன்னை எப்படிச் சீதைக்கு ஒப்பாகப் பேசுகிறாய் பெண்ணே ?"

—அதுவரை அமைதியாக இருந்த ஆமாத்தியர் சுநீதன் இவ்வாறு கேட்டார்.

அவள் சொன்னாள் : "ஐயா ! சீதையானவள் ராமனைக் கரம் பிடிக்காமலேயே களவு கொண்டது அதருமமானால், நான் சொன்னதும் தருமமாகாது !"

"நீ சீதையா ?"

"சீதை மிதிலையில்தான் பிறக்கவேண்டுமா ? காசியில் பிறக்கக்கூடாதா ? எனது கனமான வார்த்தைக்கு ஒரு சமாதானம் சொல்வேன். சீதையானவள் சென்ற பிறவியில் வேதவதியாகப் பிறந்து— அதாவது, என்னைப் போல வேதம் ஓதும் அந்தணர்த் தந்தை குசத்துவருக்குப் பிறந்து, பிறகு ராவணனால் தீண்டப்பட்டுத் தீக்குளித்தவள்.

அவளுக்கே முன் பிறவியில் இக்கதி ஏற்பட்டதென்றால் இப்பிறவியில் எனக்கு எப்பிறவி ஏற்பட்டால் என்ன என்கிற முடிவுக்கு வந்து சொன்னதில் என்ன தவறு ?"

அமைதி, அங்கே அதிர்ச்சி வைத்தியம் பார்க்கத் தொடங்கியது.

பட்டத்தரசி வைதேகி இப்போது தான் எரிச்சலுற்றுக் கேட்டாள் : "பெண்ணே ! வேதவதி மறு பிறவியில் சீதையாகப் பிறந்து அதே ராவணனைப் பழிவாங்கி விட்டாளல்லவா ?"

"அது ஒரு பலாத்கார சாபம் ! இது அவ்வாறானதல்ல! மகத சக்ரவர்த்தி, ராவணனுமல்ல ; நான் வேதவதியுமல்ல ; இங்கே சாபமில்லை ; தாபமிருக்கிறது."

"ஸ்ரீராமன் ஏக பத்தினி விரதன் !"

இவ்வாறு சொன்ன தமது பட்டத்தரசியைப் பிம்பிசாரன், எரிச்சலாகக் கவனிக்கிறார். அந்த எரிச்சலுக்கு ஏற்ற மறுமொழியை அந்த இளநங்கை பகர்ந்தாள் :

"ஏகபத்தினி விரதம் என்பது ஒரு பொய்யான—கற்பனையான நாகரிக யாகம் ! இது எனது சித்தாந்தம். ராமரானவர் மிதிலைக்கு வருகிறபோது தலைநகர்ப் பெண்டிரெல்லாம் அவரது அழகுத் திருமேனி கண்டு, தலை சுற்றி மயங்கிப் போயினர் என்றாலே ஏக பத்தினி விரதம் அடிபட்டுப் போகிறது. பெண் தான் பிற ஆடவர் நெஞ்சில் புகக்கூடாது என்பதில்லை ; ஆண்களுக்கும் இந்தத் தருமம் பொருந்தும். எப்போது ஸ்ரீராமன், தலைநகர்வாழ் பெண்கள் நெஞ்சில் புகுந்துவிட்டாரோ, அங்கேயே விரதம் வீண் பட்டுப் போகிறதே ?"

'ஓ... இவள் நன்றாகவே விதண்டாவாதம் புரிகிறாள். அபாயத்துக்குரியவள்' என்று தீர்மானித்துக் கொள்கிறாள் வைதேகி.

பிம்பிசாரன் மகிழ்ச்சியுடன் ஒரு வெற்றிப் பெருமிதப் புடன் வைதேகியை நோக்குகிறார். பின்னர் அந்த இளநங்கையை நோக்கிக் கேட்டார் :

"பெண்ணே ! உன் பெயரை இப்போது தான் கேட்க வேண்டும் போலத் தோன்றுகிறது. உன் பெயரென்ன ?"

"சிரீமா !"

சிரீமா ...

"சிரீமா என்றால் அர்த்தம் ?"

"மேன்மைக்குரியவள் !"

"ஓ...! உனது முடிவு ?"

"நீங்கள் நிர்ணயிக்க வேண்டியது."

"இங்கே ஏற்கெனவே அம்பபாலி என்கிற நிலவு உதயமாகி, அதன் சத்திய ஒளியில் நான் சங்கடப்பட்டுக் கொண்டிருப்பவன் !"

"தெரியும் ; விரட்டியடிக்கப்பட்ட வேசையர்களுள் ஒருத்தியான சாலவதி மூலம் கேள்விப்பட்டிருக்கிறேன். மகத சக்ரவர்த்தி ! தேய்வதும் வளர்வதுமான நிலவு நானல்ல ; தேயாது சிரிக்கும் நிரந்தர நட்சத்திரம் நான் ! நிலவு சற்று பெரியதாக இருக்கலாம். அது துருவ நட்சத்திரத்துக்கு ஈடாக முடியாது. நான் துருவம் !"

'ஓகோ' வெனக் குரல் கொடுத்து இடியிடியெனச் சிரிக்கிறார் பிம்பிசாரன்.

இவ்வளவையும் தொலைவில் நின்று கவனித்த இளையராணி செல்லனாதேவி, சிரீமாவைப்பற்றிச் சிந்திக்கிறாள்.

பிம்பிசாரன் கேட்டார் : "இவளது கருத்துக்கு எவரேனும் மறுமொழி கூற முடியுமா ?"

அம்பபாலியை விரட்ட ஏதோ சதி நடந்திருக்கிறது என்பது மட்டும் வைதேகிக்குத் தெளிவாகத் தெரிகிறது. அவள் சொன்னாள் :

"அம்பபாலி ஒரு வேள்விக்குரியவள் ; இவள் கேள்விக் குரியவள் !"

இப்போது செல்லனாதேவி குறுக்கிட்டாள் : "வேள்வியில் மிஞ்சுவது நெருப்பு—கேள்வியில், நீடிப்பது பொறுப்பு. சக்ரவர்த்திக்கு இது ஒன்றும் புதியதல்ல ; எனவே, இது புதுமையுமல்ல! இவளை ஏற்பதில் எனக்குத் தடையுமில்லை. சத்தியம் என்பது ஆன்மாவின் பூட்டு. சிலர் திறவு கோலை வீசியெறிந்து விடுகிறார்கள்; சிலர் பாதுகாத்தும் வைத்திருக்கிறார்கள்."

செல்லனாதேவி கூறி முடித்த மறு கணம்...

ஓடோடிச் சென்று அவளது கால்களில் பணிந்து கண்ணீர் மல்கினாள் சிரீமா.

"பிரபோ ! நீங்கள் சத்தியம் தவறலாமா ?"

—வைதேகி சொல்லி முடிப்பதற்கு முன், செல்லனா தேவியே குறுக்கிட்டாள் : "தேவர்களில் எத்தனை பேர் சத்தியம் மீறி இருக்கிறார்கள் என்பதைப் பட்டியல் போட்டுத் தரட்டுமா, அக்கா ! நமது கணவர் மானுடர் ; மன்மத சொரூபம் கொண்ட மானுடர் !"

செல்லனாதேவியின் இந்தச் சமாதானம் கேட்டுச் சிலிர்த்த சிங்கம் போன்று கர்ஜனை நகை புரிந்தார் பிம்பிசாரன்.

பிடகம்-17

மராமரா மந்திரம்

மகதமகாராணி வைதேகி நடந்து முடிந்த செய்திகளைச் சொல்லச் சொல்ல...

அழகுமகாராணி அம்பபாலியின் அடிவயிறு, எரிமலைக்கு அடியில் குழம்பும் தீப்பிழம்பாய் அலைமோதியது.

பிறக்கப் போவது குழந்தையா ? நெருப்புத் துண்டமா? அஞ்சி நடுங்கினாள் அம்பபாலி.

ஒரு பொன் விடியலில் வைரமணியை வார்ப்படத்தைப் பெற்றெடுத்துப் பிம்பிசாரப் பிரகாசமாய் வளர்ப்போம் என்று அவள் கண்ட கனவு, இருநூற்றுத் தொண்ணூற்றெட்டுச் சூரியோதயங்களுக்குள் பனித்துளிகளாய் எரிந்து போகும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

நிலவின் வெடிப்பில் நெருப்பு உதயமாகும் என்று யார் தாம் எதிர்பார்த்தார்கள் ?

அம்பபாலியின் அவத்தா பேதம் அரசமாதேவி வைதேகிக்குப் புரிகிறது.

இனி அரண்மனையைப் பொறுத்தமட்டில் சத்தியம் விலங்கிட்டுக் கொண்டது. அந்தப்புரத்தைப் பொறுத்த மட்டில் சிற்றின்பங்கள் நித்தியமாய் விடுதலை கண்டு விட்டன.

"அம்பபாலி ! நீ எதற்கும் அஞ்சவேண்டாம். உனக்கு ஏதேனும் ஏற்படுமாயின், உனது உயர்ந்த குணத்துக்கு வாழ்நாள் முழுவதும் சுகமாக இருக்க நான் ஏற்பாடு செய்வேன் !"

"இனியும் நான் இங்கு இருப்பதா மகதமாதேவி ?"

"நானில்லையா, அம்பபாலி !"

"உங்கள் கதை வேறு. நீங்கள் பெயர்ந்து பறக்க முடியாத அரண்மனை. நான்... நான்... பறந்து பறந்து கூடு கட்டும் பறவை ! ஆனாலும் சக்கரவாளப் பறவை. துணையிழந்து துன்பியல் குரல் கொடுத்துத் துடித்து வாழ்கிற பறவை !"

அம்பபாலி ! பொங்கி வந்த துயரம் தாளாது குமுங்கிக் குமுங்கியழுகிறாள். காணமுடியாத அவளது காப்பிய மனம் கண்டு, நாணமுடியாது நாணுகிறாள் வைதேகி.

"அம்பபாலி, நடந்ததை ஒரு கனவாக எண்ணிவிடு ; நடக்கப் போவதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். உனக்கு இது புது அனுபவம். எனக்கு மரத்துப்போன அனுபவம். எப்போது கொலுமண்டபத்தில் என் பாதங்களைப் பரிசாகக் கேட்டாயோ, அந்தப் பாதங்கள் உன்னைப் பார்த்துக் கொள்ளும். என்னதான் நடக்கப் போகிறது பார்ப்போமே !"

"இல்லை மகாராணி ! நானே ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். எனது பிரசவம் முடிந்ததும் எங்கேனும் சென்று விடுகிறேன். இருந்த பதுமை என்ற இழிச் சொல்லைத் தாங்குவதைவிட, இல்லாது மறைந்த புதுமை என்ற புகழ்ச் சொல் புனிதமானது."

"நடப்பதைக் கவனித்து நானே ஒரு முடிவுக்கு வருவேன். அதுவரை மன்னரைப் பகைத்துக் கொள்ளாமல் ஒன்றுமே அறியாதவள் போல் நடந்து கொள். நேரமாகிறது. நான் புறப்படுகிறேன்."

மகதமாராணி வைதேகி விடைபெற்றுச் சென்றாள்.

அம்பபாலி புயல்கண்ட கடல்போலப் பொங்கிக் குமுறினாள்.

அரண்மனையுள் ஓர் ஆவேசப் பிரவேசமாய் நுழைகிறாள் மகதேவி வைதேகி.

எதிரில் சுதமதி பணிந்து நிற்கிறாள்.

"என்ன சுதமதி ? ஏதேனும் புதிய செய்திகள் ?"

"ஏதோ அவசரம் என்று நமது மருத்துவர் மனைவி மாயா உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் மகாராணி !"

ஓ...இன்னும் ஏதேதோ செய்திகள் கொம்பு முளைத்து முட்டக் காத்திருக்கின்றன.

வேகமாக நடக்கிறாள் வைதேகி.

அந்தப்புரத்துத் தனியறையுள் நுழைகிறபோது, வெளியே காத்திருந்த மாயா பணிந்து நிற்கிறாள்.

"உள்ளே வா மாயா !"

அது அறையேயானாலும் விசாலமான அலங்காரம் நிறைந்த அழகிய கூடம். அதனுள் ஒரு சின்ன மாளிகையே அடங்கி இருந்தது. மேன்மாடம் செல்லவும் அதனுள்ளேயே மாடப்படிகளிருந்தன. இந்த வசதி செல்லனாதேவியின் அறைக்குக் கூடக் கிடையாது.

"என்ன செய்தி மாயா ?"

"சக்ரவர்த்தினி ! சக்ரவர்த்தியே சத்தியம் தவறிய போது, நான் ஏன் தவறக்கூடாது என்று ஓர் இரகசியத்தைச் சொல்ல வந்தேன் !"

சக்ரவர்த்தியே சத்தியம் தவறுகிறபோது...

இந்தச் சொற்கள் உதிரலாமா ? ஆ...! கோல் தாழக் குடி தாழும்...

"சொல் மாயா ! தன்மையை முன்னிட்டுக் கற்பைத் தவிர வேறு எதையும் தவறவிடலாம். ஆண்களுக்கு அது

இல்லை. அதற்குப் பெயர்...மகத சக்ரவர்த்தி. என்ன செய்தி?"

"அம்பபாலியை, பிரசவத்தின்போது ஜன்னி காணுமாறு செய்து, சாகடித்து விடும்படி சக்ரவர்த்தி உத்தரவிட்டிருக்கிறார்."

ஆ...!

ராஜகிருகத்தைச் சூழ்ந்த அனைத்து மலைகளும் பூகம்பத்தால் படீர் படீர் என்று வெடித்துச் சிதறி உருளுவன போன்ற அதிர்ச்சிப் பிரமை...

அம்பபாலியைக் கொன்றுவிடுவதா?

சிந்திக்கிறாள் மகதமாதேவி வைதேகி.

"மாயா! இது அநீதி. நாம் ரகசியமாய் அம்பபாலியைக் காப்பாற்ற வேண்டும். இப்போது சக்ரவர்த்தி எங்கே இருக்கிறார்?"

"நேற்று வந்த சிரீமாவுக்குக் கணிகையர் மாளிகையையே தனி மாளிகையாக அளித்து, அங்கேயே குடிகொண்டிருக்கிறார். இன்னொரு செய்தியும் கேள்விப்பட்டேன் மகாராணி! நேற்று இந்தச் சிரீமா நுழைந்ததே ஒரு நாடகமாம்! நமது சக்ரவர்த்தி, மலைவாசல் மாளிகைக்குச் சென்று ஓய்வெடுக்கிற நாளைத் தெரிந்து கொண்டு, அங்கு சென்று நாடகமாடி இருக்கிறாளாம் சிரீமா. அவளுடன் வந்தவன் அண்ணனா என்பது சந்தேகம்!"

"நான் சந்தேகித்தது உண்மையாய் விட்டது. போகட்டும். நீ உடனடியாக ஒன்று செய்யவேண்டும். நமது ரிஷிமலைச் சிரமணர் சோமதேவரைச் சந்தித்தாக வேண்டும். நான் சொன்னதாக மாலை அவரை எப்படியும் அம்பபாலியின் மாளிகைக்கே அழைத்து வந்துவிடு. நான் வந்துவிடுகிறேன். அது சரி; அம்பபாலியின் பேறுகாலம் எத்தனை நாளில் நிகழலாம் என்று நினைக்கிறாய்?"

"ஓரிரு தினங்களில் நிகழலாம் மகாராணி."

"நீ புறப்படு. மிகக் கவனமாக நடக்க வேண்டிய செயல் இது. கவனம்."

மாயா புறப்பட்டுச் சென்றாள்.

கண்களில் பொங்கிய நீரைத் துடைத்துக் கொள்கிறாள் மகதமாதேவி வைதேகி. தனது மணிவயிற்றில் ஓர் உருவத்தைத் தெய்வம் வரைந்து மகிழ மறுக்கிறதே என்று மனம் கலங்கியது. இதனை எதைக் கொண்டு துடைப்பது?

வானவீதியில் சூரியன் சிவப்புச் சித்தாந்தம் பேசிக்கொண்டிருக்கிறான். ஒவ்வொரு நாளும் விடைபெறுகிறபோது, இப்படிப் பேசுகிறான் இதன் அர்த்தம்தான் என்ன?

எவருக்குப் புரிகிறது? புரியப்போகிறது? என்றெண்ணியவாறு நிலா மாளிகை நோக்கிப் புறப்பட்டாள் பட்டத்தரசி வைதேகி.

நிலா மாளிகையில் ரிஷிமலைச் சிரமணர் சோமதேவரும் மாயாவும் காத்திருந்தனர். எதற்காக இவர்கள் வந்திருக்கிறார்கள் என்பது புரியாமல் கயல் விழிகளில் கவலை தவழ கவனித்துக் கொண்டிருந்தாள் அம்பபாலி.

மகதமாதேவி வந்துவிட்டாள்.

எழுதாச் சித்திரம் எழுந்து வந்து வணங்கி நிற்கிறது. அவளைக் காண வைதேகிக்கே கண்கலங்கி விட்டது. ஆ! எப்போதோ ஒரு யுகத்துக்கு அரும்பும் மணமுள்ள பொன் மலரல்லவா அம்பபாலி!

"அம்பபாலி! உனது சித்திரத்தையே அழித்துவிடக் கிரீடம் ரகசிய உத்தரவிட்டிருக்கிறது. இந்தச் சித்திரத்தைக் காத்தே தீருவது என்று வைதேகி மனம் சபதம் ஏற்றுக் கொண்டது. ஆகவே, எனது உத்தரவுக்குக் கட்டுப்பட்டு நீ நடந்தே ஆகவேண்டும்."

பொறி கலங்கிப் போனாள், இதுவரை எந்தப் பொறியி லும் அகப்பட்டறியா அம்பபாலி.

"என்ன பாலி ?"

"நீங்கள் மகத மகாராணியல்ல ; பாலி வணங்கும் பவித்திர தெய்வம் ! தெய்வத்தின் ஆணையைச் சிரமேற் ஏற்பேன் !"

வைதேகியின் கண்கள் சிரமணரை நோக்குகின்றன :

"சோமதேவ சிரமணரே ! இவள் அம்பபாலி ! ஒரு யுகத் தின் பொன் மின்னல் ! இதனை!வழக்கமான மின்னல்களைப் போலப் பூமியில் நுழைந்துவிட அரசு ஆணைபிறப்பித்திருக் கிறது. ஆகவே, இவளை நீங்கள் ரிஷிமலைப் பக்கம் அழைத் துச் சென்று மகப்பேறு பார்க்க ஆவன செய்யுங்கள் ! போயும் போயும் சிரமணர்களிடம் இதனை ஒப்படைப்பதா என்று நினைக்க வேண்டாம். சிரத்தையுடன் மட்டுமல்லாது ரகசியமாகவும் இதனைக் கவனிக்க வேண்டும். உங்கள் குழாமுக்கு நான் இதுவரை செய்த தானங்களின் பேரில் இதனை இறைஞ்சுகிறேன் ! ஏனையவர்களை என்னால் நம்ப முடியவில்லை. மகப்பேற்றுக்கான பணிப்பெண்களை மாயா அனுப்பி வைப்பாள். அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்லியனுப்புகிறேன்."

சிரமமான பணியானாலும் வாழ்வித்த வைதேகிக்காக சோமதேவர் ஏற்றுக்கொண்டார்.

அபலையாகிவிட்ட அம்பபாலியின் கண்களில் நீராஞ்சலி.

"தெய்வமே! மீண்டும் இந்தத் தரிசனம் கிடைக்குமா ?"

'ஓ'வென்று கதறியழுதாள் அம்பபாலி. வைதேகியின் கண்கள் பொலபொலத்து விட்டன.

"எனது தரிசனம் எப்போதும் உனது இதயத்தில் இருக்கும் அம்பபாலி ! ஒரு வேளை, மீண்டும் சந்திக்கலாம்; சந்திக்காமலும் போகலாம் !"

பிரிவில் துன்பியல் புழுவாய்த் துடித்தது.

அன்றைய நள்ளிரவில் வைதேகியின் கட்டளை மிகக் கவனமான முறையில் நிறைவேறியது.

காலை இளம்போது கதிரவனுக்கு ஆரத்தி எடுத்துக் கொண்டிருந்த வேளை...

சிரீமாவின் இன்பத்தில் ஒரு சிறப்பான சிகரம் கண்டு புறப்பட்ட மகத சக்ரவர்த்தி பிம்பிசாரன் செவிகளில், அம்பபாலி இரவோடு இரவாக எங்கோ புறப்பட்டு விட்ட செய்தி அடிபடுகிறது.

சீற்றம் நிறைந்த வேகத்துடன் அரண்மனை நோக்கி ரதத்தில் பறந்தோடி வருகிறார்.

அரண்மனையை அடைந்ததும் தூணுக்குத் தூண் எதிரொலிக்கக் கர்ஜிக்கிறார்.

அம்பபாலி, கடைசியாக எழுதி விட்டுச் சென்ற கவிதை ஓலையைக் கொண்டு வந்து நீட்டுகிறாள் இளையராணி செல்லனாதேவி.

பெற்றுக் கவனித்த பிம்பிசாரன் விழிகள் பெரிதாக விரிகின்றன.

அதில்...

நீதி விழித்திருக்கும் வரை

சத்தியங்கள்

சாகாவரம் பெறுகின்றன.

நீதி உறங்கிவிட்டால் ?

சத்தியங்கள்

சாபங்களாகின்றன !

இங்கே,

நீதியே செத்துவிட்டது !

பிம்பிசாரன் களிக்கிறார் : "நீதியாவது : நேர்மையாவது !"

"பிரபோ ! எப்படியோ அவளாக ஓடிவிட்டது ஒருவிதத்தில் லாபம்தானே ? அவந்திப் பகையிலிருந்து நாம் தப்பிக்க இது ஒரு நல்ல ஆதாரம்."

செல்லனாதேவியின் சமாதானம் ஏற்கத்தக்கதாக இருந்தது. அமைதி காண்கிறார் பிம்பிசாரன்.

அந்தச் சமயம் பார்த்து—

மகத சாம்ராஜ்யத்துக்குப் போதனையே போன்ற ஒரு செய்தியும், சோதனையே போன்ற ஒரு செய்தியும் ஒருமிக்க அரண்மனையுள் நுழைந்து அதிர்ச்சி தந்தன.

போதனையாக நுழைந்த செய்தி, அவந்தி மன்னன் சண்டப்பிரத்தியோதனன் அனுப்பியது அதன் சாரம் :

'நீங்கள் அம்பபாலி என்கிற அழகை ஆக்கிரமித்துக் கொண்டதை நான் அறிவேன். ஆராய்ந்து நோக்கியதில் தவறு அம்பபாலியினுடையது. வேலி இடம் தராமல் ஆடு நுழையாது. ஆனாலும் நீங்கள் இவ்வாறு நடந்திருக்கக் கூடாது. உங்கள் குணச்சித்திரம் என் விஷயத்திலும் விசுவரூபம் எடுத்துவிட்டது. ஆனாலும் உயிர்காக்க மருத்துவனை அனுப்பியதால் மன்னித்து, மனிதாபிமானத்துடன் ஜீவகனை வழியனுப்பி இருக்கிறேன். இத்துடன் நமது நட்பு கண்மூடிக் கொண்டது.'

சோதனையாக நுழைந்த செய்தி :

'அங்க நாட்டரசன் பிரம்மதத்தன், அவந்தி தேசத்திலிருந்து புறப்பட்ட மருத்துவன் ஜீவகனை வழிமடக்கிக் கடத்திச் சென்றுவிட்டான். அவனது * குழந்தைக்கு இடதுபுறம் பாரிசம் கண்டு அவதிப்படுவதால் இதனைச் செய்ய நேர்ந்தது. ஜீவகன் மருத்துவம் பார்த்தும் குழந்தை இறந்து விட்டது. ஜீவகன் என்ன செய்ய முடியும் ? விதிக்கு அவன் மருத்துவம் பார்க்க முடியுமா ? ஆனால் பிரம்மதத்தன் ? வேண்டுமென்றே குழந்தையைப் பழி வாங்கி விட்டான் என்று ஜீவகனைச் சிறையிலடைத்து விட்டான்.'

ஓ...

ஜீவகன் சிறைபட்டு விட்டானா ?

இது என்ன எதிர்பாராத செய்தி ?

பிரம்மதத்தனுக்கு இப்படி ஒரு மதங் கொண்ட போக்கா ?

அவந்தி மன்னன் செய்யப் பயந்ததை இந்தச் சிலந்திப் பூச்சி செய்து விட்டது.

அந்தப் பூச்சியை நசுக்க முழங்கட்டும் போர் முரசம் !

அம்பபாலியைப் பற்றிய கவனம் எங்கோ பறந்து போனது.

போருக்கான ஆயத்தங்களைப் பெரிதளவில் கவனிக்குமாறு மகாசேனாதிபதி ராஜநாகனைப் பணிக்கிறார். அத்துடன், தமது கேளிக்கைக்காக சிரீமாவின் தலைமையின் கீழ், அழகின் சிறப்புமிக்க கணிகையர் முப்பது பெயர்களை நேமிக்க அந்தரங்கச் செயலாளனான அபிநவநீதனை ரகசியமாக ஏவுகிறார்.

இதுவே தருணமென்று அஞ்சனா முதல் கங்காவரை, கணிகையர் மாளிகையை மீண்டும் குத்தகை எடுத்துக் கொள்ள முனைந்து விட்டனர்.

* குழந்தை மருத்துவத்திலும் வல்லவன் என்று சரித்திரம் பேசுகிறது.

பொழுது விடிந்தால் போர்ப் பயணம்.

நாளும் கோளும் பாராது இப்படிப் போரை நடத்திச் செல்கிறாரே சக்ரவர்த்தி! இன்றைக்குப் பூரண முகூர்த்த மிருக்கிறது. சுபக் கிரகமான சந்திரவோட்டம் பிரமாதமாக இருக்கிறது. இன்றே பயணப்பட்டிருக்கலாமே! ஆனாலும் இன்று உத்தரவாலது பிறந்ததே என்றளவில் சமாதானம் செய்து கொண்டார் அரண்மனை அந்தணர் கூடதண்டன்.

அன்றைய வளர்பிறை நிலவு வருகைக்குப் பிறகு...

இளையராணி செல்லனாதேவி, இனிக்க இனிக்க அலங்கரித்துக் கொண்டு, மகத சிங்கத்தை எதிர் பார்த்தாள்.

ஆனால், பிம்பிசாரச் சிங்கமோ, தமது கம்பீர நடையை ராஜராணி வைதேகி அறை நோக்கித் திருப்பியது.

ஒவ்வோர் இரவும்...

வருவாரா? தரிசனம் தருவாரா? என்கிற ஏக்கம் வைதேகிக்கு உண்டு. ஆனால், அன்றைக்கு அவள் எதிர் பார்க்கவில்லை. சிங்கம் நுழைந்து விட்டது. எதிர்பாராது கிடைக்கிற இன்பம்தானே இன்பத்துக்கெல்லாம் தலை!

ஓ... இன்று உதயமான சந்திரன் இனிக்கும் சந்திரன்! இதய சந்திரன்!

ஹே... இராமச்சந்திரமூர்த்தி! இரட்சிப்பாயாக! ராம ராம ராம...

மராமர மந்திரம் மனத்தே மங்கலமாய் ஒலிக்கிறது!

மஞ்சத்தின் மடியிலே மன்மதன் மான்மதச் சாந்து மணக்க அமர்ந்து கொண்டான்.

கொஞ்சும் குரல்களில் குழல் இனித்தது; பின் யாழ் இனித்தது.

எங்கோ மத்தளம் கொட்ட, வரிசங்கம் நின்றூதும் மெல்லிய ஓசை...

கைத்தலம் பற்றும்போது கனவுகளெல்லாம் கனகாபி ஷேகங்கள்...

மெய்த்தலங்கள் சிலிர்த்தன!

மேனிக்குள் ஒருமேனி...

பொய்த்துப் போகுமோ, போகாதோ என்று பொழுதும் புலர்ந்து கொண்டிருந்தது.

சூரியப் பயணத்தோடு போர்ப் பயணமும் சூழ்ந்து நின்றது.

மங்கல வாத்தியங்கள் முழங்க, மகதமாதேவி குங்குமத் திலகமிட, மகத மகா சக்ரவர்த்தி பிம்பிசாரன் பட்டத்து யானை மீதமர்ந்தார்.

கடல் போன்ற சேனை திடலதிர வாழ்த்தொலி யெழுப்பப் போய்ப் பயணம் புறப்பட்டது.

பிடகம்-18
வீரக் கவரிமான்

ராஜகிருகம் திரும்பிய மகா ஆமாத்தியர் வஸ்ஸகாரன் பெரிதாக வருந்தினார். தாம் தலைநகரில் இல்லாதபோது என்னவெல்லாம் நிகழ்ந்து விட்டது !...

இந்த யுத்தம் தேவைதானா ?

இனி என்ன செய்ய இயலும் ?

இந்நேரம் படைகள் பாதி வழியைக் கடந்திருக்கும்.

அம்பபாலியின் கதை, அவரை மேலும் அலமரச் செய்தது. அவளுக்கு ஆண்குழந்தை பிறந்தது. அபயகுமாரன் என்று அபயமளித்த சிரமணர்களே பெயர் வைத்து, அவர்களே அக்குழந்தையை வளர்த்துக் கொள்ளவும் முடிவு செய்து விட்டனர்.

அம்பபாலியோ மகதத்தில் இனி ஒரு கணமும் இருக்க மாட்டேன் என்று அரற்றுகிறாள்.

ஒரு விதத்தில் அது நியாயமே! இருந்து, இளைய ராணி செல்லனாதேவிக்குத் தெரியவந்து இசகுபிசகாக ஏதும் நிகழ்ந்துவிடக் கூடாதல்லவா ?

"என்ன முடிவு செய்தீர்கள் மகா ஆமாத்தியரே ?" என்று கேட்டுக் கொண்டே வந்தமர்ந்தாள் மகத மாதேவி வைதேகி.

"உங்கள் முடிவே உன்னத முடிவு மகதமாதேவி! உங்கள் பிறந்த நாடான கோசலத்துக்கே அனுப்பி வைக்கலாம். தேவையான அளவுக்குப் பொருளைத் தந்து

அனுப்பலாம். எப்படி அனுப்பி வைப்பது என்பதுதான் புரியவில்லை" என்றார் வஸ்ஸகாரர்.

"அதை என்னிடம் விட்டுவிடுங்கள். உங்கள் துணையிருந்தால் போதும். நமது மலைக் கணவாய்க்கு அப்புறத்திலுள்ள காவல் தெய்வமான ஆதிசேஷக் கடவுளுக்கு, யுத்தம் வெற்றி பெற அபிஷேகம் செய்யப் போகிறேன். அந்தச் சாக்கில் அம்பபாலியையும் மறைமுகமாக அழைத்துச் சென்று, இரவோடு இரவாக வழிகூட்டி அனுப்பித் திரும்புகிறேன்."

"அற்புதமான வழி: நான் இங்குள்ள காதுகளைக் கவனமாகப் பார்த்துக் கொள்கிறேன்."

அடுத்து...

அம்பபாலிக்குச் செய்தி பறந்தது.

அன்றைய மாலைப்போதில்...

குறிப்பிட்ட சில பரிவாரங்களுடன் புறப்பட்டாள் மகதமாதேவி வைதேகி.

செல்லனாதேவிக்கு சின்ன சந்தேகம். தனது அதிகாரத்துக்குட்பட்ட ஒற்றன் ஒருவனை ரகசியமாக ஏவினாள். இத்தனை நாட்களாக இல்லாத அபிஷேகம் இப்போது எப்படிக் குடம் குடமாகக் குதித்தது ? வழியப் போகிறது ?

ரிஷிமலைப் பக்கமாகச் செல்கிறபோது நிலவு உதயம் கண்டது. நிலவனைய அம்பபாலியும் மலைப் பகுதி மாறலில் இருந்து தோழிகளோடு தோழியாகச் சமயம் பார்த்துக் கலந்து கொண்டாள். விடுதலை கிடைத்தது போன்ற விநயமான பெருமூச்சு !

குழந்தை அபயகுமாரன் பிரிவில் சற்று மனம் கலங்கினாலும், பெரிதான பாதிப்பை ஏற்படுத்திவிடவில்லை. காயமே பொய்யாகிவிட்ட பிறகு மாயவாழ்வாவது ? மழலைக் கீதமாவது ?

அன்றிரவு முழுவதும் பயணம் நீண்டது.

விடியலுக்கு ஒரு நாழிகை இருந்தபோது, ராஜகிருக மலைவாசல் பின்புறத்து எல்லையை அடைந்தனர். அங்கிருந்த சிறிய ராஜமாளிகையில் ஓய்வு கண்டாள். மற்றவர்களையும் ஓய்வு காணச் செய்தாள்.

பயணக் களைப்பில் உடன்வந்த வீரர்கள், எதிரேயிருந்த படைவீடுகளில் ஓய்வுகொள்ளச் சென்றனர்.

சுதமதியை விட்டு அம்பபாலியை ரகசியமாக வரச் செய்தாள் வைதேகி.

ஏனைய ஓரிரு பணிப்பெண்கள் தொலைவிலிருந்த மடைப்பள்ளிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். உணவுக்கான ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டுமே!

அம்பபாலியை ஓர் எளிய தோழிப் பெண்ணைப் போல அழைத்து வந்து உள்ளே அனுப்பிய சுதமதி, வெளியே சென்று படுத்துக் கொண்டாள். அவளது அந்தச் செய்கை அந்த நிகழ்ச்சியைப் பொறுத்தமட்டில் நல்வினையாக அமைந்தது.

செல்லனாதேவி அனுப்பிய ஒற்றன், 'ஓ... ஓய்வு கொண்டு விட்டார்கள்; தோழிப் பெண் காவலுக்கு வெளியே வந்து படுத்துக் கொண்டாள்; பொழுது விடியட்டும், கவனித்துக் கொள்ளலாம்' என்கிற முடிவுடன், ஒரு கோட்டுவாய் விட்டவண்ணம் மறைவான ஓரிடம் நாடி மறைந்து போனான்.

படுபயங்கரமாயிருந்தது அந்த மலை வாசல் எல்லைக் காடு. சில மிருகங்களின் சத்தமும் கேட்கத்தான் செய்தது.

மகதமகாராணி வைதேகியின் தரிசனம் மீண்டும் கிடைத்ததில் மகிழ்ந்து போனாள் அம்பபாலி. கழல் பணிந்து எழுந்த அம்பபாலியின் கண்ணீரைத் துடைக்கிறாள் வைதேகி.

"பாலி! இது நல்ல சமயம். காலதாமதம் செய்யக் கூடாது. நீ கவலையின்றி வாழ அனைத்து ஏற்பாடுகளையும் கவனித்து இருக்கிறேன். உன்னுடன் விசாலியும் சில வீரர்களும் வருகிறார்கள். இவர்களை நீ திருப்பியனுப்ப வேண்டியதில்லை. எனது அந்தரங்க வீரர்கள் சிலர் மட்டும் உன்னை மகத நாட்டு எல்லையைத் தாண்டச் செய்து விட்டுத் திரும்புவர். அதுவரையில் நான் இந்த மாளிகையில் தானிருப்பேன். உனக்கு ஏதும் நடுவழியில் நிகழ்ந்துவிடக் கூடாது. கோசல நாட்டுத் தலைநகரம் சிராவஸ்திக்குச் சென்றதும், உன்னைக் காண ஒரு தனவந்தர் ஆபத்பாந்தவராக வருவார். வேண்டிய வசதிகளைச் செய்து தருவார்."

அம்பபாலியின் கண்களில் நீர் மாலை இடுகிறது. இங்கேதான் அவளது பிரிவாற்றாமை பெரிதாகப் பாதித்து விட்டது. "மகாராணி!" என்று தொண்டை விம்ம, வைதேகியின் கரங்களைப் பற்றிக் கண்களில் பதித்துக் கண்ணீரால் கழுவுகிறாள்.

"குழந்தைதான் அழும்; ஒரு குழந்தையைப் பெற்றவள் அழலாமா? அழ வேண்டியவள் நான். போகட்டும். இங்கிருந்து வடமேற்கே கால்காவதத் தொலைவில் க்ஷேமதர்மன் பள்ளிப்படை இருக்கும். அங்கே கோசலம் செல்லப் பல்லக்குடனும் பொருட் பொதிகளுடனும் ஆட்களும் உனது பணிப் பெண்களும் காத்திருப்பர். அந்தப் பள்ளிப் படையுள் மீளாத் துயில் புரியும் க்ஷேமதர்மர், எனது கணவரின் முன்னோர்; சிசு நாக குலத் திலகம். பலரையும் க்ஷேமமுற வைத்ததால் அவருக்கு அப்படி ஒரு பட்டப் பெயர். அந்த க்ஷேமத்தை வணங்கிப் புறப்பட மறக்காதே!"

அம்பபாலி தலையசைக்கிறாள்.

தொண்டையை யாரோ அடைக்கிறார்கள்.

அம்பபாலி, பிரிவாற்றாமை தாங்காத விம்மலுடன் புறப்படுகிறாள். அவளை ரகசிய மார்க்கமாக இருட்டில்

அழைத்துச் செல்கிறார்கள். எங்கோ சஞ்சலமாய்ச் சக்கரவாகப் பறவை குரல் கொடுக்கிறது.

பொழுது விடிந்து வெகுநேரம்வரை நித்திரையில் மூழ்கி இருந்தாள் மகதராணி வைதேகி. படுக்கிறபோதே, அந்தரங்கப் பணிப்பெண் சுதமதியிடம் சொல்லிவிட்டுத் தான் படுத்தாள். அபிஷேகம் மாலையில் வைத்துக் கொள்ளலாம்.

அம்பபாலியை வழிகூட்டச் சென்றவர்கள் திரும்ப வேண்டுமே!

மாலை மலர்ந்தது. ஆதிசேஷக் கடவுளுக்கு அபிஷேகமும் நிறைந்தது. இன்னும் அம்பபாலியை வழிகூட்டச் சென்றவர்கள் திரும்பவில்லையே?

'பூபாரத்தைத் தாங்கும் ஆதிசேஷப் பெருமானே! எனது பாரத்தையும் சற்றே தாங்குவாயாக!'— மனம் முனகுகிறது.

ஆதிசேஷன் என்ன செய்வான்?

ஊழினும் வலிது எங்கே இருக்கிறது?

இரவு உணவை முடித்துக் கொண்டு ஆழ்ந்த ஆலோசனையில் மூழ்குகிறாள் வைதேகி.

இன்னும் வீரர்கள் திரும்பவில்லையே!

எங்கோ ரதப் பரிவாரங்களுடன் யாரோ வருகிற சத்தம் கேட்கிறது.

அந்தச் சின்ன மாளிகையின் சாளரத்தைத் திறந்து கவனிக்கிறாள். ஒன்றும் புரியவில்லை. என்ன சத்தம் அது?

வெளியிலிருந்த சுதமதியை நோக்கி, என்ன சத்தமென்று அறிந்துவர, ஏவுவதற்குள், காவல் தலைவனே புரவியில் பறந்து வந்து சுதமதியிடம் செய்தி கூறத்

தொடங்கினான். அதனைச் சுமந்து கொண்டு உள்ளே நுழைந்தாள், சுதமதி.

"மகதமாதேவி! ஜனகபுரத்து அரசராம்: பெயர் அஜாதசத்ருவாம்! அவர் தமது பரிவாரங்களுடன் ராஜகிருக எல்லையில் நுழைகிறபோது, எல்லைக் காவல் படையினர் தடுத்து நிறுத்தி விட்டனர். சக்ரவர்த்தி இல்லாத நேரத்தில் யாரையும் அனுமதிக்கமுடியாது என்று கூறிவிட்டனர். அரண்மனையிலிருந்து அனுமதி வர வேண்டும். நல்லவேளையாக நீங்கள் இங்கு இருக்கவே, உங்கள் உத்தரவை எதிர்பார்த்துக் காவல் படைத்தலைவர் காத்திருக்கிறார்."

நல்லவேளையா இது?

ஓ... அஜாதசத்ரு, ஊழ்வினை போல் வருகை தந்து விட்டான்...

சுதமதி கூறிய செய்தி, கொஞ்சங்கூட எதிர்பாராதது. என்ன மறுமொழி பகர்வாள் வைதேகி?

நீண்ட காலத்துக்குப் பிறகு, மறந்துவிட்ட ஒன்றை, யாரோ சூட்டுக் கோலால் கிளறிவிடுவது போன்ற தடுமாற்றம்...

ஓ... அஜாதசத்ரு!...

தன்னை மணக்க வேண்டும் என்று தவமிருந்த வீரமாச் செல்வர்...

எதற்காக ராஜகிருகம் நாடி வரவேண்டும்? ஜனகபுரத்துக்கும் ராஜகிருகத்துக்கும் எந்தச் சம்பந்தமுமில்லையே!

என்ன மறுமொழி சொல்லியனுப்புவது?

சிறிது நேரச் சிந்தனைக்குப் பிறகு...

"சுதமதி! அஜாதசத்ருவை இங்கே வரச்சொல்! நானே விசாரித்துக் கொள்கிறேன்!"

சுதமதி வெளியே சென்று செய்தி அறிவித்தாள்.

இரு நாழிகைப் போதுக்குப் பிறகு அங்கே ஜனகபுரத்து அரசன் வருகை புரிந்தான்.

ஓ... ஊழ் சந்திக்கப் போகிறது...

"சுதமதி! நீ வெளியில் சென்று அவரை உள்ளே அனுப்பி வை! அஜாதசத்ரு வருகை ஏதோ அரசியல் காரணமாக இருக்கவேண்டும். யாரையும் அனுமதிக்கவே கூடாது. காவல் கவனம்."

சுதமதி வெளியில் செல்ல...

வைதேகியின் நாடியில் சூடேறித் துடிக்கிறது.

ஜனகபுரத்து அஜாதசத்ரு உள்ளே நுழைகிறான்.

கதவுகளை மூடுகிறாள் சுதமதி.

எழுந்து நின்று வரவேற்கிறாள் வைதேகி.

இருவரும் சில கணங்கள் இதயம் துடிப்பதை மறந்தனர்.

ஓ... எத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு இப்படி ஒரு சந்திப்பு!

"வாருங்கள்! நலமா?"

"நலம், மகதராணி!"

இருவருமே அமர்ந்தனர்.

"மன்னிக்க வேண்டும் மகதராணி! சந்தித்து நீண்ட நாட்களாய்விடவே இப்படி ஒரு மலைப்பு!"

"நானும் அவ்வாறே மலைத்து விட்டேன். நான் எதிர் பாராததல்லவா?"

"நானும் நீங்கள் இங்கிருப்பீர்கள் என்று எதிர்பார்க்க வில்லை."

"சக்ரவர்த்தி தலைநகரில் இல்லை."

"புறப்பட்டுப் பாதி வழி வந்த பிறகுதான் செய்தியறிந் தேன். அதனால் என்ன? வந்த நோக்கத்தை உங்களிடமே பேசி விடுகிறேனே!"

"என்ன நோக்கம்?"

"அம்பபாலிக்கு நேர்ந்த கதியினைக் கேள்விப்பட்டேன். அவளை என்னுடன் அழைத்துச் செல்ல யாசிக்க வந்தேன்!"

அம்பபாலி...

ஆ! இந்த அஜாதசத்ரு ஒரு சமயம் அம்பபாலியின் கலாசொரூபத்தில் மயங்கி, ஏங்கி, அரசியாக்கிக் கொள்ள வும் விழைந்த செய்தி...

அம்பபாலி கூறியது நினைவுக்கு வருகிறது.

"என்னிடம் அவள் உங்களைப் பற்றிச் சொல்லியிருக் கிறாள். அவளது தலைவிதி இப்படி இருக்க, அன்று உங்களை எப்படி ஏற்றிருக்க முடியும் ஜனகபுரத்தரசே?"

"இப்போதும் அவளது தலைவிதி முடிந்து போக வில்லை. அவள் ஓர் அழித்து எழுதிய சித்திரம்; அவ்வளவே! ஆனால், அழியாச் சித்திரம்! அந்தச் சித்திரத்தைத் தெய்வ மரியாதையுடன் எடுத்துச் செல்ல வந்திருக்கிறேன்!"

வைதேகியின் மனத்தில் சூட்டுக்கோல் கரீலென்று தகிக்கிறது. ஒரு நாகரிகத்தின் தோற்றமே மனச்சாட்சி யிலிருந்துதானே ஆரம்பமாகிறது என்பது போலிருந்தது அந்தத் தகிப்பு.

"ஜனகபுரத்தாரே! அம்பபாலி மகத சக்ரவர்த்திக் காகப் பிறந்தவள்; அவர் பொருட்டு அழிவையும் தேடிக்

கொண்டவள். இதனை நான் முற்றுமாக அறிவேன். உங்களது முயற்சி வீணானது !"

மகதமகாராணி ஏதோ தனது மனச்சாட்சியைப் பிட்டு வைப்பது போலிருந்தது அஜாதசத்ருவுக்கு.

வைதேகி, அம்பபாலியின் கதையை விவரிக்கலானாள்... அம்பபாலியின் நெஞ்சில் பிம்பிசாரன் எப்படியெல்லாம் குடி கொண்டிருந்தார் என்பதை மறைக்காமல் சொன்னாள். ஏன்? அஜாதசத்ரு பற்றி அவள் கூறிய உதாரணங்களையும் உடைத்துப் போட்டாள்.

ஜனகபுரத்து அரசன் அஜாதசத்ரு, நீண்ட பெருமூச்சுடன் எழுந்து கொண்டான்.

"என்ன எழுந்து கொண்டீர்கள் ?"

வைதேகியும் எழுந்து கொண்டாள்.

"நான் அம்பபாலியைப் பின்தொடர வேண்டும். அவளைக் கெஞ்சி யாசிப்பேன் !"

"தேவையற்ற முயற்சி ! ஜனகபுரத்து அரியணையில் அவள் அமர்ந்து சரித்திரக் களங்கம் ஏற்பட வேண்டுமா ஜனகபுரத்தாரே ?"

"மகத ராணி ! நான் இவ்வாறு சொல்வதற்காக நாணப்படுகிறேன்! மன்னிப்பும் கோருகிறேன்! அந்த எனது அரியணை உங்களுக்காகவே பிறந்தது என்று எண்ணிப் பூரித்த வேளையில், நீங்கள் மகத பாக்கியத்தைப் பெற்று விட்டீர்கள் ! இனி அதில் அசல் அம்பபாலி அமர்ந்தால் என்ன ? இப்போது அழிந்துபட்ட நகல் அம்பபாலி அமர்ந்தாலென்ன ?"

அஜாதசத்ருவின் சொற்களில் மெல்லிதான அனல் தழுவியது.

"பழைய காதல் நினைவை இன்னுமா மறக்க வில்லை ?"

"அந்த நினைவோடு அழிவது என்ற முடிவுக்கு வந்து விட்டவன் நான். மதுவால் அழிகிறேன். ஆனால், இன்னும் மாதர்களைத் தொட்டறியேன் ! நெஞ்சில் மட்டும் உங்களுக்குப் பிறகு அம்பபாலியைத் தொட்டுவிட்டேன்."

சூட்டுக்கோல், வைதேகியின் முதுகில் பட்டையாகச் சூடு வைத்தது போன்ற துடிப்பு. அஜாதசத்ரு புறப்பட்டான்.

"ஜனகபுரத்துக் கனகமே ! உங்களிடம் ஒன்றை யாசிக்கலாமா ?"

அவன் சற்று தூரம் சென்றதும், அவனைப் பின் தொடர்ந்த வைதேகி வாய் திறந்தாள்.

நின்று கவனிக்கிறான் அஜாதசத்ரு.

"கேளுங்கள் மகதராணி ! ஒரு பாக்கியமாகக் கருதி உயிரை வேண்டுமானாலும் தருகிறேன் !"

"என் வீரமாப் புருஷர் அங்க நாட்டுப் போர்முனை நோக்கிச் சென்றிருக்கிறார். அவரது பிடிவாதக் கௌரவப் பிரச்னைகள், பலரறிந்த பிரகடனங்கள் ! அவரிடம் எவ்வளவு தீய குணங்கள் உண்டோ, அவ்வளவு நல்ல குணங்களும் உண்டு. அங்க நாட்டான் மாற்றான் பலமறிந்தே பகைத்திருக்கிறான் ! அதே நேரத்தில் படையுதவி கோராத மகத சக்ரவர்த்தியின் பலவீனமறிந்தும் பகைத்திருக்கிறான் ! நல்ல பக்க பலத்துடனேயே பகைத்திருக்க வேண்டும் என்பது எனது அனுமானம் ! மகத சக்ரவர்த்தி வெற்றியுடன் திரும்பவே பிரார்த்தனைகள் நடத்துகிறேன். ஒருகால் யுத்தத்தின் முடிவு வேறு மாதிரியானால்... நிகழக் கூடாது... நிகழுமானால்..."

"நிகழாது ; நிகழுமானால்...? சொல்லுங்கள் !"

"நீங்கள் சமயமறிந்து உதவ வேண்டும் ! இப்படி நான் உதவி கேட்ட உண்மை ஒருவருக்கும் தெரியக்கூடாது. வீரத்தில் எனது கணவர் ஒரு கவரிமான் ! எனது குங்குமம் நிலைக்க இந்த வரத்தை யாசிக்கிறேன் !"

ஜனகபுரத்து அஜாதசத்ரு குமுங்கிப் போனான் ! மகத மாராணி எங்கோ உயர்ந்து உயர்ந்து தென்படுகிறாள்.

"சத்தியமாக நிறைவேற்றுவேன் ! நீங்கள் கேட்டது யாசகமல்ல; வீர வாசகம் ? உங்களை நான் கண்ணீர்க் கோலத்திலும் விதவைக் கோலத்திலும் காண்பதைவிட, எனது ஜனகபுரத்தையே எரித்துச் சாம்பலாக்கி, அதனை உடல் முழுவதும் பூசிக்கொண்டு பைத்தியமாகத் திரிவேன் ! இந்த வேளையில் உங்களைச் சந்திக்கச் செய்த தெய்வத்துக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன் !"

"நேரே ஜனகபுரத்துக்குத்தானே ?"

"இல்லை, கோசலத்துக்கு ?"

வைதேகி குறுக்கே நிற்கவில்லை.

அஜாதசத்ருவின் பிடிவாதம் அம்பபாலியைச் சந்தித்துத் தான் அறிந்து கொள்ளட்டுமே ! எது நடக்க வேண்டு மென்றிருக்கிறதோ, அது நடந்தே திரும். தடுத்து நிறுத்தி விட முடியாது.

அஜாதசத்ரு. அந்தச் சின்ன மாளிகையை விட்டு வெளியே வருகிறபோது இரவு, நடுநிசியைக் கடந்து விட்டது.

இரு கண்கள் ரகசியமாக நோக்குகின்றன.

மாளிகையின் ஓரப்பகுதியின் அடர்ந்த புதர்களில் மறைந்திருந்த செல்லனாதேவியின் ஒற்றனின் கண்களே அவை.

ஓகோ ! ஏதோ நடந்திருக்கிறது; ஏதோ நடந் திருக்கிறது...

அஜாதசத்ரு இரவோடு இரவாகப் புறப்பட்டு விட்டான்.

அம்பபாலியை வழிகூட்டச் சென்ற வீரர்களும் திரும்பி விட்டனர்.

பொழுது விடிகிறது; மகதராணியும் ராஜகிருகம் நோக்கிப் புறப்பட்டாள்.

அதன் பிறகு உருவான புயல்...

அங்கவெற்றியுடன் பிம்பிசாரன் மகதத்துக்குத் திரும்பி யதும் உருவான புயல்...

அஜாதசத்ரு என்ற மழலைக்கீதம் உதயமான பிறகு உருவான புயல்...

ஓ... அஜாதசத்ரு...!

பிடகம்—19

வஜ்ஜிரை

ஓ... அஜாதசத்ரு...

கடந்த காலத்துக் கசப்பான நாட்கள்...

கண்மூடிக் கண் திறந்தது போலத் தானிருக்கிறது. ஆயிற்று, இருபது ஆண்டுகள். காலப் புரவிக்கு மட்டுமே கடவுள் ஆகாயமளவுக்குச் சிறகைப் படைத்து விட்டான்.

அழகு தேவதை அம்பபாலி, தன்னுள் சூன்யமாய்ச் சிரித்துக் கொள்கிறாள். அந்த நாற்பது வயதிலும் அவளது முகவிலாசத்தில் மோகன முத்திரை! தேகலாவண்யத்தில் பத்தரைமாற்றுரை!

சூன்யமான சொப்பனத்தைச் சுமந்து சுமந்து அவதிப் பட்டாலும், ரேகை சுருக்கம் காணாது, கருவில் காயகல்பம் உண்ட கனத்த பேரழகல்லவா அது! பொற்சிலைக்குக் காப்பேது? மூப்பேது?

பளிங்குக் கண்ணாடி அவளது பனுவலனைய அழகைப் பதம்பிரித்துக் காட்டியதும், அலங்காரம் போதுமென்ற நிறைவுடன் ஓர் அவசரத்தை முன்னிட்டு அரண்மனை நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள், அம்பபாலி.

"விசாலி! அசோகசந்தன் எங்கே?"

"தோட்டத்தில் கேட்கும் வாட்சத்தம் அவருடையது தான். ஐம்பது வீரர்களுடன் போராடிக் கொண்டிருக் கிறார்!"

அது வாட் சத்தமல்ல; நாளைய அவன் தலைவிதியின் சத்தம். சொன்னால் கேட்க மறுக்கிறான். அடக்க முடியாத

முரட்டுக் காளை; ஆனால், அடக்கமுள்ள வாலிபப் பண்பு.

நெட்ட நெடிய பெருமூச்சுடன் பல்லக்கு அம்பபாலி யைச் சுமந்து சென்றது.

அம்பபாலி சென்ற அரை நாழிகைப் போதில்...

கதவு தட்டும் ஓசை.

விசாலி கதவைத் திறக்க...

அங்கே, சற்றும் எதிர்பாராத கோசல நாட்டு இளவரசி வஜ்ஜிரை, வாலிப வசந்தம் போலவருகைதந்து முறுவலித்து நின்று கொண்டிருந்தாள்.

"வாருங்கள் இளவரசி!"

விசாலியின் கரங்கள் மட்டுமல்ல; உதடுகளும் நடுங்கு கின்றன.

"ராஜநர்த்தகியார் இருக்கிறார்களா?"

கோசல மண்ணுக்கே உரிய கம்பீரக் குரல்.

"அரண்மனைக்குப் போயிருக்கிறார்கள்."

"இவ்வளவு காலையிலா?" என்று கூறிக்கொண்டே மாளிகையினுள் பிரவேசித்துக் கவனிக்கிறாள். அந்தப் பாலி மாளிகையே நடன அலங்காரத்துடன் நர்த்தன மிட்டது. அகிற்புகை சூழ்ந்து மணத்தது.

இடையிடையே 'நங்... நங்' கென்ற வாட்சத்தம் சற்று அச்சம் தரும் வகையில் பின்னொலியாகக் கேட்கிறது.

"எங்கே பயங்கர வாட்சத்தம்...?"

"தோட்டத்தில் அசோகசந்தா வாட் பயிற்சி எடுக்கிறார்."

"ஓ... நாளை எமனோடு போராட இன்று மனிதர்களோடு பயிற்சி எடுக்கிறாரா ?"

"இளவரசி ! முதன் முறையாக வந்திருக்கிறீர்கள், கொஞ்சம் பழரசம்..."

"வேண்டாம் ; நான் வீர ரசத்தைப் பருகலாம் என்று நினைக்கிறேன்."

வஜ்ஜிரை தோட்டக்கதவுகளை நோக்கிக் கம்பீரமாக நடந்து செல்வதை விசாலி ஆழ்ந்த ஆலோசனையோடு கவனிக்கிறாள்.

கோசல குமரியின் நூபுரங்களின் ஓசை, அந்த நடையழகுக்கு ஒரு நான்முகம் பேசுகிறது.

கொல்லைக் கதவைத் திறந்து எட்டிப் பார்த்த கோசலக்குமரி வஜ்ஜிரை, எல்லையற்ற அச்சத்தால் கல்லாய்ச் சமைந்து போனாள்.

அசோகசந்தா- அஜாதசத்ரு, ஐம்பது மாவீரர்களுடன், வாளை மந்திரமாகச் சுழற்றிப் போர் புரிந்து கொண்டிருக்கிறான்.

ஓ...

குண்டலம் செவியில் மின்ன, குலமணி மார்பில் அசைய, மண்டலம் ஆளும் மன்னன் மரபுக்கோர் இலக்கணமாகப் போரிடும் அந்தக் காட்சி, சமைந்து நின்ற வஜ்ஜிரையை, 'போதுமடீ சமைந்தது ; இனி சமைய என்ன இருக்கிறது ? இந்தச் சமயத்தைச் சமையச் செய் !' என்று சீண்டிச் சிலிர்க்கச் செய்தது.

சக்கரமாகச் சுழலும் அந்த வாள், இந்திரனின் வஜ்ஜிராயுதமா ? அல்லது வஜ்ஜிரையின் வாலிபாயுதமா ?

ஓ... அடலேறு போன்ற அட்டகாசத் தோற்றம் ! அரிமாவின் பிடரி சிலிர்த்த வீரம் !

ஒரு நெட்டநெடிய பெருமூச்சு.

அவளது மண்ணிய மார்பகங்கள், அவனது திண்ணிய தோள்களில் திணறு நீங்க அல்லது நினவு நீங்க சயனிக்காவா என்று ஏங்குகிறாள் ; இமைமூடி இளைப்பாறுகிறாள் ; பின் கண்விழித்துக் களிப்புறுகிறாள்.

கொஞ்ச நாட்களாகவே வஜ்ஜிரையின் வைர நெஞ்சத்தை அஜாதசத்ரு பட்டை தீட்டிக் கொண்டிருந்தான். திராட்சைக் கண்களில் மதுவைப் பிழிந்து கொண்டிருந்தான். தித்திக்கும் அவளது உதடுகளில் கனவில் தேனாபிஷேகம் செய்து கொண்டிருந்தான்.

கனவில் கௌரவிப்பது ஒரு கௌரவமா ? பணிவு, வாழ்வின் கிரீடம் என்றால், துணிவன்றோ அதன் வாள் ?

இங்கே வாளுடன் வாட்கள் மோதுவன போதாவென்று இவள் வேறு வாளை ஏந்தி வந்து நிற்கிறாளே...

வஜ்ஜிரையின் நாசியில் வசந்தம் தவழ்ந்தது.

அஜாதசத்ரு, அமர்ந்தும் எழுந்தும் வளைந்தும் ஒசிந்தும் ஒளிந்தும் துள்ளியும் பாய்ந்தும் போரிடுகிற பாணி...

ஒரு யுகத்தின் புதுப் பிறவியே போன்று பிரமிக்கச் செய்கிறது.

ஒரு வாள் ஐம்பது வாட்களைச் சடசடவென்று சாய்க்கின்றன. ஓர் உன்னதமான மாவீரத்துக்கு இது சாத்தியமாகிற சமரிலக்கணம்தான். இது ஒரு நிதரிசனமான வீரத்தின் பூதாகாரமான விசுவரூபம் !

வஜ்ஜிரையின் நீலநயனங்களில் அரும்பிய நித்திலங்களில், காதல், முகம் பார்த்துத் தெளிகிறது.

பயிற்சி முடிந்தது.

ஐம்பதின்மரையும் அனுப்பிவிட்டுத் திரும்பிய அஜாதசத்ருவிடம் உடலைத் துடைத்துக் கொள்ளத் தனது கச்சை

யணிந்த மார்பகங்கள் மீது போர்த்தியிருந்த பட்டுத் துணியைப் பதவிசாக எடுத்து நீட்டுகிறாள் வஜ்ஜிரை.

மையல் கவிதைகளை மான்விழியில் எழுதும் வஜ்ஜிரையை நோக்குகிறான் அஜாதசத்ரு. மயக்கம் அவனை மருளச் செய்தாலும், தயக்கம் அவனைத் தடுமாறச் செய்கிறது.

"ம்ம்! பெற்றுக் கொள்வதற்கென்ன?"

அஜாதசத்ருவின் கண்களில் வஜ்ஜிரை வலம் வருகிறாள்.

"பாலிகுமாரா! இங்கே நிற்பவள் வஜ்ஜிரையல்ல; அசோகசந்தாவின் காதலி! பெற்றுக்கொள்ளுங்கள்."

இருவர் கண்களிலும் கணத்துக்குக் கணம் மின்னல், வேகத்துக்கும் தாகத்துக்கும் இடையே விளையாடுகிறது. பட்டாடையைப் பெற்றுக் கொள்கிறான் அஜாதசத்ரு.

மறைவிலிருந்து கவனிக்கிறாள் விசாலி.

வஜ்ஜிரையின் மார்பகத்தை மணக்கச் செய்த அந்தப் பட்டுத் துணி, அஜாதசத்ருவின் மார்பகத்தில் மெத்தென்று துவண்டு, பிறகு மேனி முழுவதும் துவண்டு வியர்வையோடு சங்கமித்து ஈரமாய் நனைகிறது. ஓ... ஈரமான காதலே...

அஜாதசத்ருவின் திரண்ட புயமும் திண்ணிய மார்பகமும் வஜ்ஜிரையின் மருண்ட விழிகளை மகிழ்வித்தன; மன்மத மகுடங்களை நெகிழ்வித்தன.

"அதை இப்படிக் கொடுங்கள்."

"அரசகுமாரி..."

"உஸ்! வஜ்ஜிரை என்றே அழைக்கலாம், பாலிகுமாரா! உங்களை நான் நெஞ்சில் வைத்திருக்கிறேன்; நீங்கள் நினைவில்கூட வைக்க..."

மீண்டும் ஒரு தென்றல் நாசியில் தவழ்கிறது. "அந்தப் பட்டுத் துணியை இப்படிக் கொடுங்கள்."

"துவைத்துத் தரச் சொல்கிறேன்."

"காதலைத் துவைப்பவர்கள் அழுக்கு நேசமுடையவர்கள். இதில் மணப்பது உங்கள் வியர்வையல்ல; எனது விரகதாபம்! இப்படிக் கொடுங்கள்."

வாட்கரம் நீட்டுகிறது; வளைக்கரம் சிணுங்கிப் பெறுகிறது; தொட்டுச் சிணுங்கிச் சிலிர்க்கிறது.

அதைப் போர்த்திக் கொண்டு, ஒரு தேவ வாசனையில் மகிழ்ந்தவளேபோன்று கண்களை மூடித் திறக்கிறாள் வஜ்ஜிரை. 'ஆ! மான்மதச் சாந்தின் மணம் இதன்முன் மண்டியிட்டு வணங்க வேண்டும்!'

"உள்ளே சென்று பேசலாம் வஜ்ஜிரை!"

"வேண்டாம்; உள்ளே பணியாளர்கள் இருக்கிறார்கள். விசாலி வேறு இருக்கிறாள். ஆமாம்; நாளைய உங்கள் வீரச் சபதம் தேவைதானா?"

"அவசியம் தேவை; எட்டுத் திசைகளையும் எனது வீரம் வெட்டி முறிக்கும் என்பதைப் பறைசாற்றும்!"

"அதற்காகச் சமயம் கிடைத்தால் உயிரைப் பறிக்கும் கொலை பாதகர்களுடனா சபதமிட்டுச் சமர்புரிய வேண்டும்?"

"இவர்களை வீழ்த்த முடியாத என்னால் பிம்பிசாரனை எப்படி வீழ்த்த முடியும்? நாளை என் சபதம் என்னை வாழ்த்த வேண்டும்; இல்லை; வீழ்த்த வேண்டும்!"

"இது ஒரு பிடிவாதம்!"

"இல்லை, இடிவாதம்! வஜ்ஜிரை! உனது தந்தையின் நெஞ்சில் நான் சத்ருவுக்குச் சத்ருவென்று இடம்பெற

வேண்டும். ஆயினும், நான் எவருக்கும் சத்ருவல்லாத வனாகவும் விளங்க வேண்டும்."

"என் தந்தையின் உதவியை நானே பெற்றுத் தருவேனே !"

"பிறர் பெற்றுத் தருகிற உதவியில் பெருமையில்லை."

"என்னதான் நீங்கள் பிம்பிசார மன்னரை வீழ்த்த சபதம் கொண்டிருந்தாலும், பிம்பிசாரப் பிடிவாதம் உடம்போடு பிறந்து இருக்கிறது பார்த்தீர்களா ?"

அஜாதசத்ரு, தனது அரும்பு மீசையை நீவி விட்டவாறு தலைகுனிய, வஜ்ஜிரை மெல்லக் கலகலத்துச் சிரித்துக் கொள்கிறாள்.

"வஜ்ஜிரை ! நீ சிரிக்கிறாய் ; நான் சிந்திக்கிறேன். நீ பிம்பிசாரனின் தமக்கை மகளானாலும், என்னால் உன்னை அத்தை மகள் என்று சொல்லிக் கொள்ள முடிய வில்லையே !"

"ஏன் ?"

"நான் என்ன உன் அத்தை வைதேகியின் புத்திரனா ? ஒரு கணிகையின்..."

அவன் சொல்லி முடிக்குமுன், அவளது தளிர்க்கரம் அவனது வாயைப் பொத்துகிறது.

"நான்தான் உங்களுக்கு ஒரு ரகசியத்தைச் சொல்லியிருக்கிறேனே ! அதை வைத்து எவ்வாறு செயல்படுவது என்பது குறித்துச் சிந்தியுங்கள். நாளை மாலை நாம் அசிரவதி நதிக்கரையில் சந்திப்போம் !"

'ஒ...' என்று கர்ஜனையாகச் சிரிக்கிறான் அஜாதசத்ரு! "நாளைய மாலை நாம் சந்திக்கலாம் என்பதிலிருந்து நாளைய காலை எனது வீரசபதம் வெல்லும் என்று புரியவில்லையா, வஜ்ஜிரை ?"

நயனங்கள் நான்கும் பயனுள்ள பார்வை முத்தங்களைப் பதித்துக் கொள்கின்றன.

வஜ்ஜிரை விடைபெற்றுச் செல்கிறாள்.

விசாலியின் கண்கள் வியப்பில் வெடித்துச் சுழிப்பில் சுழன்றன.

மூங்கில் இலைமேல் தூங்கும் பனிநீர் போன்ற காதல் செய்தியைக் கேள்விப்பட்டது முதல், மூங்கிலோடு மூங்கில் உரசி எழுப்பும் எரிதழலாய்த் துடித்துப் போனாள் கரிகுழலாள் அம்பபாலி.

"எங்கே அசோகசந்தா ?"

எரிந்து விழுந்து அலறுகிறாள்.

"ஏனம்மா ?"

மாடப் படிகளிலிருந்து மான்மதச் சாந்து மணக்க மன்மதனாய் இறங்கி வருகிறான் அஜாதசத்ரு.

ஓ...

அப்படியே பிம்பிசாரனை உரித்து வந்த பிம்பம் ! ஆனால், இவன் வசந்தத்துக்கு வசந்தம் ; புயலுக்குப் புயல்! ஆனாலும் தனக்குச் சத்துரு இருக்கக்கூடாது என்று விரும்புகிறவன் ; தானும் பிறருக்குச் சத்ருவாக இருக்கக்கூடாது என்று நம்புகிறவன் ; தருமத்தின் புத்திரன் என்று திகழ வேண்டும் என்று எண்ணுகிறவன், இயற்பெயருக்கேற்ப !

"அம்மா ! நீங்கள் என்ன கேள்விப் பட்டீர்கள் ? ஏன் இப்படி அலறுகிறீர்கள் ? என்பது எனக்குப் புரியாமலில்லை. பிம்பிசாரனைப் பழிவாங்க வேண்டும் என்றுதான் வளர்த்தீர்களேயொழிய, காதலிக்கக் கூடாது என்று உபதேசிக்க வில்லையே ?"

"நீ காதலிப்பது தவறு என்று நான் சொல்லவில்லை ; அந்தஸ்துக்கு மீறிய காதல் ஆபத்தானது என்றுதான் சொல்ல வந்தேன். அசோகசந்தா ! வஜ்ஜிரை ராஜகுமாரி ! நீயோ..."

அம்பபாலியின் கண்கள் கலங்குகின்றன...

அருகே வந்து கண்ணீரைத் துடைத்த அஜாதசத்ரு, "தாயே ! நான் கணிகைக்குப் பிறந்தாலும் ஒரு காவலனின் ரத்தத்துக்குப் பிறந்தவன். அப்படிப் பார்த்தால், அரியணைக்கு ஆயத்தமாக இருக்கும் கோசலநாட்டு இளவரசன் விதுர்த்தபன் கதை மட்டும் என்ன வாழ்கிறதாம் ?"

ஆயிரம் தேள்கள் கொட்டினாற்போல அரண்டு போனாள் அம்பபாலி.

"அசோகசந்தா ! இந்தச் செய்தி உனக்கு எப்படித் தெரியும் ?"

மெல்ல வினவிய மெல்லியலாள் அம்பபாலியின் குரலில், சொல்ல முடியாத ஒரு சூட்சும நடுக்கம் தென்பட்டது. இதனை அஜாதசத்ருவால் அறியமுடிகிறது.

"அம்மா ! இதுகூட எனக்குத் தெரியவில்லையென்றால், நான் மகத சாம்ராஜ்யத்தை ஆட்சி செய்யத் தகுதியற்றவன்."

"உன் நண்பன் கோசல இளவரசன் விதுர்த்தபனுக்கு இந்த ரகசியம் தெரியுமோ ?"

"தெரியாது ; தெரிவிக்க வேண்டிய சந்தப்பம் வந்தால் தெரிவிப்பேன். அப்படி ஒரு சந்தர்ப்பம் வராமலும் போகலாம். தாயே ! வஜ்ஜிரை என்கிற அழகிய மலர்ச் செடியை எனது நெஞ்சில் பதிய விட்டவனே விதுர்த்தபன். அவளைக் காதலிப்பதன் மூலம் கோசல உதவியை முழுமையாகப் பெறலாம் என்று சொன்னவனும் அவன்தான். நானே அவனைக் கேட்டேன். 'என் பிறப்பின் ரகசியமறிந்த கோசல மன்னர், தமது மகளைத் தருவாரா ?' என்று ! அதற்கு அவன் சொன்ன மறுமொழி : 'முதலில் நீ காதலி! நடப்பதை நான் கவனித்துக் கொள்கிறேன்...!' — காதல் என்பது மீன் பிடிக்கிற வலையா என்ன ? ஆனாலும் பல சந்தர்ப்பங்களில் வஜ்ஜிரையின் மீன் விழிகள் என்மீது பட்டுத் துள்ளியதுண்டு. அப்போது எனக்கு அதன் அர்த்தம் புரியவில்லை. அந்தக் காதல் ஜோதியின் உதயம் புரிந்த பிறகு, மகிழ்ந்து போனேன். சுய நலத்துக்கல்ல ; துணை நலத்துக்கு ! இனி அது அஸ்தமனமாகாது. வேண்டுமானால் கோசலம் அஸ்தமனமாகும் ! அதன் அஸ்திவாரம்தான் நாளைய எனது வீரப்போர் !"

அம்பபாலி, பெரிதாக மருண்டு சுற்று முற்றும் கவனிக்கிறாள். ரகசியம் ராட்சஸமாகிவிடக் கூடாதல்லவா ?

"அசோகசந்தா ! மெல்லப்பேசு. உனது முரட்டுத்தனம் முட்டாளாக்கி விடக்கூடாது. நான் உன்னை வளர்த்தது..."

"பிம்பிசாரனைப் பழிவாங்க ; மறந்து விடவில்லை."

"பழிவாங்க வேண்டியவரானாலும் உன் தந்தை. மரியாதையாகப் பேசு !"

"மரியாதை என்ற சொல்லை நெஞ்சில் விதைத்து விட்டால், பழிவாங்கும் மனோபாவம் பாவப்பட்டுப் போய் விடுமே, தாயே !"

அஜாதசத்ருவின் உள் மனத்தின் கோரப் பற்கள் நற நறக்கின்றன.

"அசோகசந்தா ! 'விதுர்த்தபன் கதையை அறியமுடியாதவன்' மகதத்தையா ஆட்சி செய்யப் போகிறான் ?"—

என்று சற்றுமுன் சொன்னாயே... மகதத்துக்கும் ஒரு வாரிசு உண்டு என்கிற ரகசியம் உனக்குத் தெரியுமா?"

"தெரியும். வைதேகி பெற்ற புத்திரன் காணாமல் போன செய்திதானே?"

அம்பபாலியின் அலங்காரத் தலை, அடிவயிற்றைக் கலக்கி அசைகிறது.

"அவன் வேறு யாருமல்ல தாயே... இந்த அசோகசந்தன் தான்! இந்தக் கூனிகா தான்! இந்த அஜாதசத்ரு தான்."

அந்தப் பாலி மாளிகையே ஒரு கணம் அசைத்து மறு கணம் நிலைத்தது.

பீடகம்-20

புருஷமேத யாகம்

செக்கச் சிவந்த அம்பபாலியின் செம்பொன் திருமுகத்தில் ரத்தம் பாய்ந்த ரண அதிர்ச்சி.

"எனக்கு இது எப்படித் தெரியும் என்று அதிர்ச்சியிடம் காரணகாரியங்களை விசாரித்துக் கொண்டிருக்கிறீர்களா அம்மா? இரண்டாண்டுகளுக்கு முன்பே தெரியும். அதன் பிறகு நான் எடுத்துக் கொண்ட முயற்சிகள்தாம் இந்த அசுர வீரப் பயிற்சிகளும் ராஜதந்திரப் பயிற்சிகளும்! நான் எப்படித் தெரிந்து கொண்டேன் என்று மட்டும் கேட்க வேண்டாம். தூணுக்குத் தூண் ஒற்றர்களை மறைத்து வைக்கும் ராஜதந்திரம் சாதாரணம்; துரும்புக்குத் துரும்புக் கண்களை ஒற்ற வைக்கும் கலை அசாதாரணம்! இந்த அஜாதசத்ருவும் அசாதாரணமானவன்!"

"அஜாதசத்ரு" —மெல்லிய குரலில் அதிர்ந்து அழைத்த அம்பபாலி, சுற்று முற்றும் நோக்கி, "அசோகசந்தா! அந்தப் பெயரை உச்சரிக்காதே, எனது முயற்சிகள் வீணாகி விடும்."

"இன்றைக்குத்தான் முதன்முதலில் உங்கள் காதுகளில் உச்சரித்திருக்கிறேன் தாயே! வேறு எவருக்கும் தெரியாது. நீங்கள் எனக்காகச் செய்துவரும் தியாகத்தை முற்றுமாக அறிந்து அவல நெருப்பில் துடித்து வருபவன் நான்! சிறையில் வாடும் எனது தாய்க்காக நான் கண்ணீர் சிந்துவதுண்டு. ஆனால், அம்மா... அம்மா... அம்மா..."

ஒவ்வோர் அம்மாவுக்கும் குரலில் சினச்சுருதி கூடுகிறது; கண்களில் செந்நிறம் படருகிறது; உடல் ஆவேசமாய்ச்

சிலிர்க்கிறது. பிடித்திருந்த ஆசனத்தில் அவனது ஆவேச உணர்வுகள் இறங்க, ஓங்கி வலது காலை அதன் பீடத்தில் அழுந்த உதைக்க, அந்த ஆசனம் பொடிந்து புலம்பியது. அதன புலம்பலுடன் தனது புண்பட்ட புலம்பல் குரலில் சொல்ல வந்ததைச் சொல்லி முடித்தான் அஜாதசத்ரு. "உங்களின் இந்தத் தியாகத்துக்காக எனது இதயத்தில் ரத்தம் வடிகிறது தாயே !"

பொங்கி வந்த துயரத்தை மடையிட்டு அடக்கிக் கொள்கிறாள் அம்பபாலி. கண்ணீரை மட்டும் அவளால் தடுத்து நிறுத்த முடியவில்லை.

"ராஜா, நீ எனக்கு ஒரு சத்தியம் செய்து தரவேண்டும். உனது அஜாதசத்ரு என்ற இயற்பெயர் முதன்முதலில் என் நாவிலிருந்துதான் அறிமுகமாக வேண்டும். அதற்குரிய காலம்வரும். அதுவரை நீ கூட உனது நெஞ்சில் இந்தப் பெயரை இனி உச்சரித்தும் பார்த்துக்|கொள்ளக்கூடாது."

"எவர்மீது சத்தியம் செய்யவேண்டும் தாயே? சிறையில் இருக்கும் என்னைப் பெற்ற தாய் மீதா? அது முகமறியாச் செவிவழிப் பாசம். தந்தை பிம்பிசாரன் மீதா? அது கொலை செய்யத் துடிக்கும் கொடுமைக்குரிய பாசம் !"

"அசோகசந்தா !" —அரண்டு போய் அலமரல் கண்டாள் அம்பபாலி. "நான் உன்னைப் பழிவாங்கத்தான் வளர்த்தேன் ; கொலை செய்யவும் துணிந்திருப்பது கொடூரமானது."

"உங்களை இந்த நிலைக்கு ஆளாக்கிய கொடூரத்தை விடக் கொடியதல்லம்மா கொலை !"

கொஞ்ச நேரம் தலைகுனிந்து கண்ணீர் மல்கினாள், பன்னீர்ப் பூ போன்ற பாலி, உதடுகளை மெல்லக் கடித்துப் பெருமூச்சைத் தலையசைத்து வெளியேற்றி, ஒருவாறு தன்னைத் தேற்றிக்கொண்டு, "போகட்டும், நீ சத்தியம் செய் ! என்மீதே சத்தியம் செய் !"

"உங்களைச் சத்திய சொரூபமாகவே வணங்கி வருகிறேனே ! இதில் சத்தியம் ஒன்று தேவையா தாயே? நீங்கள் வளர்த்த மகனை நீங்களே சந்தேகிப்பதனால் சத்தியம் கேளுங்கள்."

சிந்தனையில் மின்னல்கள் பந்தலிடுகின்றன.

"வேண்டாம் அசோகசந்தா, வேண்டாம் !" என்று கூறிய அம்பபாலி, அவனை அணைத்து உச்சி முகருகிறாள்.

அஜாதசத்ரு புறப்பட்டான்.

"வஜ்ஜிரையின் காதல் விஷயத்தில் கவனம் இருக்கட்டும் அசோகசந்தா !"

அவன் ஒரு முறுவலை மறுமொழியாகத் தந்து புறப்பட்டுச் சென்றான்.

அன்றைய அந்தி ஞாயிறு மேற்கு முகத்தைச் சந்திக்கிறபோது, சிந்திக்கிற ஞாயிறாகச் சிவந்தது.

காரணம்...

நாளைய அஜாதசத்ருவின் வீர சாகசப் போராட்டத்துக்குச் சோதனையே போல, மகத சக்ரவர்த்தி பிம்பிசாரன் அனுப்பியிருந்த புருஷமேத யாகம் ஒன்று புதுமையாக மூளைத்து, கோசல அரண்மனைமீது கொதி நீரைக் கொட்டிக் கொண்டிருந்தது.

குதிரையைப் பேயாக விரட்டிவந்த இளவரசன் விதுர்த்தபன், பாலி மாளிகை வாசலில் நிறுத்திவிட்டுப் பாய்ந்தோடி நுழைகிறான்.

கூடத்தில் பூத்தொடுத்துக் கொண்டிருந்த விசாலி, எழுந்து நின்று வணங்குகிறாள். அவள் பார்த்துப் பிறந்தவனேயானாலும் அரச குமாரனாயிற்றே !

"அசோகசந்தன் எங்கே இருக்கிறான் விசாலி ?"

"மேன்மாடத்தில் இளவரசே!"

மாடப் படிகளை இரட்டை இரட்டையாகத் தாவி மேலே செல்கிறான் கோசல குமாரன்.

அம்பபாலி, தனது தனியறையில் அலங்காரம் செய்து கொண்டிருந்தாள்.

நன்கு ஓய்வுபெற அப்போதுதான் பகல் தூக்கத்திலிருந்து எழுந்து மஞ்சத்திலமர்ந்தவாறே முகத்தையும் திறந்த உடம்பையும் துடைத்துக் கொண்டிருந்தான் அஜாதசத்ரு.

வேகமாக உள்ளே நுழைந்த விதுர்த்தபன், மஞ்சத்து ஒரு பக்கத்தே வந்தமர்ந்து. "அசோகசந்தா! உன் வீர வேட்கைக்கு ஓர் அற்புதமான விருந்து எதிர்பாராது வந்து முளைத்திருக்கிறது."

விரவேட்கைக்கு அற்புதமான விருந்து...

"என்ன விருந்து விதுர்த்தபா? தெளிவாகச் சொல்!"

"நீ அசுவமேத யாகம் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா?"

"ஓரளவு."

"புருஷமேத யாகம்...?"

"புருஷமேத யாகமா?"

"அசுவமேதத்தைப் பற்றியும் புருஷ மேதத்தைப் பற்றியும் வேதங்கள் பேசுகின்றன. ஆனால், மகத சக்ரவர்த்தி ஒருவிதமான புருஷமேத யாகத்தைத் தமக்கே புரிந்த தனி அர்த்தத்துடன் அனுப்பி இருக்கிறார். அவரது அந்தத் தனி அர்த்தமாவது: ஒரு பலசாலியான புருஷ லட்சணமுடைய யுத்த மல்லனை நாடு நாடாகப் பயணம் செய்துவர அனுப்பியிருக்கிறார். சில நாடுகளுக்குச் சென்று மரியாதைகளைப் பெற்று, எதிர்க்க ஆளின்றி செருக்கோடு சிராவஸ்திக்கு வந்திருக்கிறான். அவனை எதிர்க்காமல் மாலையணிவித்து வரவேற்றால், அரசைத் தவிர வேறு எதைக் கேட்டாலும் அவனுக்கு வழங்க வேண்டும். எதிர்த்து வெற்றி பெற்று விட்டால், இதே நிபந்தனைக்கு பிம்பிசாரன் உடன்படுகிறார்.

"கேள்விப்படாத புதுமையாக இருக்கிறதே!"

"நான்தான் சொன்னேனே! இது பிம்பிசாரன் புகுத்தும் புதுமை யாகம். நாளை எந்த பிம்பிசாரன் செவி பிளக்க வீரசாகசம் நடத்த இருக்கிறாயோ, அதை விட்டு இதை நடத்தி 'இமயம் எனது புயங்கள்' என்பதை எடுத்துக் காட்டு!"

அனைத்தையும் வெளியில் நின்றே செவிசாய்த்த அம்பபாலி, இப்போது உள்ளே நுழைந்தாள்.

"விதுர்த்தபா! உன் யோசனை பிரமாதமானதுதான், அந்த யுத்தமல்லன் எப்படி? அவன் பலமறியாது இறங்குவதா?"

"இதற்கு நான் வேறுவிதமாக மறுமொழி கூறட்டுமா அம்மா!" என்றான் விதுர்த்தபன்.

"ம்! அதைத்தானே எதிர்பார்க்கிறேன்."

"வேண்டுமானால், நமது அசோக சந்தாவின் பலத்தைப் புருஷமேத யாகத்துக்கு வந்திருக்கும் அந்தப் புருஷ மல்லனுக்குப் புரியச் செய்ய தூது அனுப்புவோம்!"

கரம் கொட்டிக் கெக்கலிக்கிறான், வீரத்தை மகுடமாகப் புனைந்த அஜாதசத்ரு.

"நான் புறப்படுகிறேன்!"— எழுந்து கொண்டான் கோசல இளவரசன் விதுர்த்தபன்: "நாளைய காலை நானே

உன்னை வந்து அழைத்துச் செல்வேன். அதற்குள் முழு விவரங்களைச் சேகரித்து வருவேன்."

அம்பபாலியின் கயல்விழிகள் அலமருகின்றன.

"அம்மா! ஒரு தாயின் மனம் இவ்வாறு அஞ்சுவது இயற்கையே! இது நல்ல தருணம். எதிர்பாராதது நம்மை எதிர்நோக்கிவந்திருக்கிறது. நாளை எனது இயற்பெயரை உங்கள் நெஞ்சில் நிலை நாட்[illegible] பிம்பிசாரன் ரத்தம் என்பதைப் பல[illegible] நிரூபிப்பேன்!"

அவன் எழுந்து நீராடச் சென்றான்.

1688
3289301

அன்றிரவு...

அம்பபாலிக்கு நித்திரை [illegible]

எப்படி உறங்குவாள்? எந்த அமைதியில் உறங்குவாள்? ஓ... நாளைய பொழுது நலமாக விடிய வேண்டுமே!

மாளிகைப் பூங்காவில் மனக்குமைச்சலோடு அமர்ந்திருந்த அம்பபாலி ஆகாயத்தை நோக்குகிறாள். நிலாவழகி உலா வந்து கொண்டிருக்கிறாள். தன்னைப் போலக் களங்கப்பட்ட நிலவானாலும் காலம் முழுவதும் நிலைத்து நிற்கும் நிலவு.

தானும் காலம் முழுவதும் நிலைத்து நிற்கப் போகிறவளே என்கிற நினைவு அவளுக்கு அப்போதைக்கு ஏற்பட நியாயமில்லை.

அந்த நேரத்தில் அஜாதசத்ரு, யாரோ ஓர் இளம் பிட்சுவுடன் அங்கே வந்துகொண்டிருந்தான்.

பிட்சுவைக் கண்ட அம்பபாலி, எழுந்து நின்று வணங்குகிறாள்.

"தாயே! என்னைக் கண்டு எழுந்திருக்கிற அளவுக்கு நான் ஒன்றும் ஞானம் கண்ட புத்தபிட்சுவல்ல. காலம் என்னை இந்தத் துவராடைக்குள் நுழைத்து விட்டது. உட்கார்ந்து பேசுவோம்."

மூவரும் அந்த அருமையான புல்தரையில் அமருகிறார்கள். தென்திசைக் காற்றும் தேன்மொழியும் நிலவும் அந்தச் சூழலை வசீகரப்படுத்தி வாழ்த்துகின்றன.

"அம்மா! இவர் பெயர் * தேவதத்தன். நாளை நான் மகத மல்லனுடன் மோதப் போவதை அறிந்து என்னைச் சந்தித்தார். பேச வேண்டியதை உங்களை வைத்துக் கொண்டு பேசவேண்டும் என்றார். அழைத்து வந்தேன்..." என்றான் அஜாதசத்ரு.

அம்பபாலி, இளம் புத்த பிட்சுவான தேவதத்தனைக் கூர்ந்து நோக்கிப் பரிசீலிக்கிறாள்.

"தாயே! என்னைச் சந்தேகிப்பதாக நினைக்கிறேன். நான் துவராடை தரித்த ஒற்றனல்ல; சத்தியமான பிட்சு. நாளை எனது கனவை உங்கள் திருக்குமாரன் நிறைவேற்றி விட்டால், உங்கள் குமாரனின் கனவுகளை நிறைவேற்ற நான் பாடுபடுவேன். நாளை முதல் நான் நண்பனாகவுமிருப்பேன்."

"கனவைச் சொல்லலாம்."

"சிராவஸ்தி நாடி வந்திருக்கும் மல்லனான அசுவமேதனை அசோகசந்தன வெல்ல வேண்டும்."

"புருஷமேதத்துக்கு வந்தவன் பெயர் அசுவமேதனா?"

"புருஷமேதம் என்ற போர்வையில் வந்தவன். இவன் அக்காலத்து வைதேகிப் புத்திரனுமல்ல. ஜனமேஜயனின் பேரனுமல்ல! இவன் மகத மன்னனின் ஏற்பாட்டுப் போலியானாலும் மல்யுத்தம் புரியும் மாவீரன். இதில் சந்தேகமே

---

* இவன் பின்னாளில் புத்தரையே எதிர்த்தவன். புத்த மதத் தலைவனாக ஆசைபட்டுத் தோல்வி கண்டவன்.

இல்லை. இவனை எவனும் வென்றதில்லை ; வெல்லவும் முடியாது."

"ஐயையோ !"

"கவலை வேண்டாம். அதற்கு மார்க்கம் சொல்லவே வந்திருக்கிறேன். அம்மா ! சில நாடுகளுக்குச் சென்று பல வற்றைக் கேட்டுப் பெற்று சிராவஸ்திக்கு வந்திருக்கிறான். இங்கிருந்து நேரே அவந்தி செல்கிறான்— அதாவது இங்கும் அவனை எதிர்ப்பவர் யாருமில்லை என்றால் ! இவன் கதை எங்கே முடியும் என்றுதான் நானும் பின்தொடர்ந்தே வருகிறேன். இங்கே எதிர்ப்பவர் இருக்கிறார் என்று சற்று முன்தான் கேள்விப்பட்டேன். உடனே விசாரித்துக் கொண்டு அசோகசந்தனைச் சந்தித்தேன். அசுவமேதனை வெல்வது எப்படி என்ற மூல விஷயத்தை இவனது குருவை நாடிச் சென்று. இவனது அக்கிரமங்களை எடுத்துக் கூறிப் பல மர்மஸ்தான பிடி வித்தைகளைத் தெரிந்து வந்திருக் கிறேன். இரவு இதனை நான் அசோகசந்தனுக்குப் போதிப்பேன்."

"ஆமாம் தேவதத்தரே ! உங்களுக்கு ஏன் அந்த மல்லன் மீது இந்த வன்மம் ?"

நாகச் சீற்றம் போன்ற பெருமூச்சுடன் தேவதத்தன் சொன்னான் : "எனது தமக்கையைக் களவாடிச் சென்று கற்பழித்துக் குடும்பம் நடத்த எண்ணினான். கற்பிழந்த என் தமக்கை தற்கொலை செய்து கொண்டாள். எனக்கிருந்த ஒரே துணை. அதன் பிறகு புத்தகாஷாயத்துள் புகுந்தேன். இவனைப் பழிவாங்கிய பிறகே நான் புத்தரைச் சந்தித்து உபதேசம் பெறுவேன்."

'ஓ... நாம் செய்த பிரார்த்தனை பலிதமாகப் போகிறது. ஏ. புத்த பகவானே ! எனது கனவுகள் நனவாகட்டும் ! நானும் பௌத்த கோலம் பூண்டு தேரியாகிக் கடமை யாற்றுவேன்...!'

தும்பை போன்ற அம்பபாலியின் மனம் துவராடையைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறது.

ஞாயிறு உதயமாகிறது.

அரண்மனைக்குப் பின்புறமாக இருந்த போர்ப் பயிற்சித் திடலில் சிராவஸ்தி தலைநகரமே கூடிவிட்டது போன்ற கூட்டம்.

அஜாதசத்ருவும் அசுவமேதனும் கைப்பிடிப்பில் சிக்கி, யுத்தத் துடிப்பில் புரளுகிறார்கள்.

அசுவமேதனோ ஆஜானுபாகுவான ஆறடித் தோற்றம் ; அற்புதமான ஒரு சதை மலை போலத் தொடையைத் தட்டி உறுமுகிறான். வயது முப்பத்தைந்து என்று மதித்தாலும் இவனது தோற்றம் ஓர் அரக்கனை யொத்திருந்தது.

அரிமாவின் கர்ஜனையாகச் சிலிர்க்கிறான் அஜாதசத்ரு. அவன் தொடை தட்டி முஷ்டியை ஊசுகிற பாங்கு பாரத காலத்து வீரப் பாத்திரங்களையெல்லாம் நினைவு படுத்துகிறது.

வஜ்ஜிரையோ தனித்து அமர்ந்து வயிற்றில் ஏதோ நீர்ப்பாம்பு குடைவது போலக் கவனிக்கிறாள். அவள் பக்கத்தே அமர்ந்திருந்த அம்பபாலியோ, புத்த பகவான் நாமத்தை ஜபித்துக் கொண்டு இமைகளை மூடி மூடித் திறக்கிறாள்.

நடுநாயகமாகப் பொன்னாசனங்களில் கோசல மன்னர் பிரசேனஜித்தும் ராணி வாசவியும் அமர்ந்து அந்த வீர சாகசங்களைக் கணத்துக்குக் கணம் என்ன நடக்குமோ என்று கவனிக்கிறார்கள். ராஜராணியான வஜ்ஜிரையின் தாய்— பிம்பிசாரன் தமக்கை— ஐந்தாண்டுகட்கு முன்பு தான் மண்ணுலகை நீத்தாள்.

இளவரசன் விதுர்த்தபனோ, நண்பன் அசோகசந்தா வெற்றிபெற வேண்டுமே என்று தரைமீனாய்த் துடித்துக் கவனிக்கிறான். தேவதத்தனோ கூட்டத்துடன் கூட்டமாய் நின்று, தான் சொல்லித் தந்த மர்ம அடியைப் பிரயோகிக் காமல் இந்த அசோகசந்தன் காலம் கடத்துகிறானே என்று கைகளைப் பிசைந்து கொள்கிறான்.

ஒரு கட்டத்தில் சதைமலை, சத்ருமலையைத் தூக்கி யெறிகிறது. கூட்டத்தில் ஒரே கூச்சல்.

பாலியும் வஜ்ஜிரையும் பதைத்துப் போகிறார்கள்.

மல்யுத்தத்தின் எட்டு வகையான அக்கைப் போரில், எட்டாவது வகையான எதிரி சோர்ந்திருக்கும்போது கபட முறையில் காலை வாரிவிடும் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி அஜாதசத்ரு, பிடிமேல் பிடிபோட்டு இடியிடியென தலை யில் இடித்து அதாகதம் செய்கிறான்.

ஆ! இதுவே தருணம்... தொடை, வகையாக மாட்டிக் கொண்டது. மர்மப் பிரயோகம் வலது கையின் முட்டி மூலம் சரியான இடம் பார்த்து நரம்பை விண்ணென்று தாக்கி, இடக்கால் முட்டியால் எதிரியின் மோவாய்க்கட்டை யில் இடிக்க...

அசுவமேதன், அடிசாய்ந்த மரம் போல அலறியடித்து விழுகிறான். குறித்த நேரக் கணக்குப்படி அவன் எழ வில்லை. அவன் எழுந்திருக்க வெகுநேரம் பிடித்தது.

இதற்குள் வெற்றிகண்ட அசோகசந்தனை வாழ்த்தி எழுந்த குரல்களும் கரவொலிகளும் வானைப் பிளந்தன.

பகவான் புத்தரின் திரிசரணங்களை ஜபித்துக் கொள் கிறாள் அம்பபாலி. அவள் மட்டுமா? எவர்தாம் மகிழவில்லை?

கோசல மன்னரின் குரல் கம்பீரமாக ஒலிக்கிறது: "அசோகசந்தா! உன் வெற்றியின் வெகுமதியாக நீ என்ன

இவனிடம் பிம்பிசாரப் பிச்சை கேட்பது? என்னைக் கேள்; என்ன வேண்டும்? தருகிறேன்!"

அஜாதசத்ருவின் கண்கள், வஜ்ஜிரை இருக்கும் திசை நோக்கின.

ஓ... இவன் வஜ்ஜிரையைக் கேட்கப் போகிறான். இது வரவேற்கத் தக்கதல்ல என்றுணர்ந்த அம்பபாலி, அடுத்த கணமே விருட்டென்று எழுந்து, "மகனுக்காகத் தாயே கேட்கிறாள். அதுவும் பிம்பிசாரனை நோக்கிக் கேட்கிறாள். ஏ, அசுவமேதா! மகத அரசைத்தான் கேட்கக்கூடாது என்பது நிபந்தனை. மகத சக்ரவர்த்தியின் தலையைக் கேட்கலாம் அல்லவா? நீ போய் உடனே பிம்பிசாரன் தலையை அனுப்பி வை! இது மானமுள்ள புருஷமேத யாகமானால் மறுக்காமல் அனுப்பி வைக்கச் சொல்!"

அம்பபாலியின் இடியன்ன குரல் கேட்டு மின்னலாய்த் துடித்துப் போனார் கோசல மன்னர் பிரசேனஜித்.

பிடகம்-21

அசிரவதிக் கரையில்...

அழகு நடைபயிலும் அசிரவதி ஆற்றங்கரையில் பன்னீர்ப் பூக்கள் பதமாய் மணத்துக் கொண்டிருக்கின்றன.

மாலைப்போதின் இதமான காற்று மலையமாருதமாய் இசைக்கிறது.

கரை நெடுக எண்ண எண்ண இனிக்கும் வண்ண வண்ண மலர்கள்; மரகதப் புல்விரிப்பு; மனத்தைக் கவரும் புள்ளினங்களின் சிரிப்பு.

காதல் ஊர்வலத்து ராஜரதங்களான அஜாதசத்ருவும் வஜ்ஜிரையும் மௌனத்தில் வானவில் தீட்டி, அதன் நிறங்களில் தங்களைச் சித்திரமாக்கிப் பின் சொற்களை மலர்க்கணைகளாய்த் தொடுத்துப் பேசிய பேச்சுக்கள்...

ஓ... சித்திரங்களும் பேசுமோ?

சந்தன மரத்திலிருந்த செம்போத்துப் பறவைகள், 'அடே, அஜாதசத்ரு! காதல் கவனம்!' என்று பெருத்த குரல் கொடுத்துப் பறந்து செல்கின்றன.

இந்நாள் வரை அவர்கள் சித்திரப் பூக்களாய் மலர்ந்திருந்தனர்; இப்போது நிஜப் பூக்களாய் மணக்கத் தொடங்கி விட்டனர்.

அஜாதசத்ரு அடிக்கடி அக்கம்பக்கங்களைப் பார்வையிட்டுக் கொள்கிறான்.

வஜ்ஜிரை நூலிழையாய்ச் சிரித்துக்கொண்டே, அஜாதசத்ருவின் கரம் பற்றித் தனது தாடைகளில் உரசிய

வண்ணம், "ஏன் இப்படிக் கோழை மாதிரி சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே இருக்கிறீர்கள்? அசுவமேதனை வென்ற அசோசந்தாவா இப்படி அஞ்சுவது?" என்றாள்.

"நிஜமான வீரன், காதலில் கோழையாகவே இருப்பான் வஜ்ஜிரை! கோழைத்தனமற்ற காதல் கோழைத்தனமாக முடிந்துவிடும். காதலுக்குப் பால் வகுத்தால் அதனைப் பெண் என்பேன்!"

"காதல் பொதுப்பால்!"

"பரிசுத்தமான காதல் பெண்மைத் தன்மையுடையது. அதனால்தான் அது கற்புக்கு அஞ்சுகிறது."

அஜாதசத்ருவின் புதிய விளக்கம் வஜ்ஜிரையை மேலும் வனப்பாக்கியது. அவளது இதழ்களில் வசந்தம் கவிதை பேசியது.

"இவ்வளவு பேசத் தெரிந்தவர், அன்று அசுவமேதனை வென்றதும் எனது தந்தையார் எது வேண்டுமானாலும் கேள் என்று கேட்டதும் துணிந்து என்னைக் கேட்டிருக்கலாமே!"

"அம்மா தலையிட்டு விட்டார்களே!"

"தலையிட்டதால் பிம்பிசாரன் தலை வந்துவிட்டதா?"

"வஜ்ஜிரை! ஒன்றை மறந்து விட்டாய். வேசியின் புதல்வன், வேந்தனின் மகளைப் பலர் முன்னிலையில் கேட்பது மகுடத்தை மாசுபடுத்தும் நடவடிக்கையல்லவா?"

வஜ்ஜிரை தலைகுனிந்து கொண்டாள்.

"நிமிர்ந்து பேசு வஜ்ஜிரை!"

"காதல் தலைநிமிர வழி சொல்லுங்கள்."

"உன் அண்ணன் சொல்லவில்லையா?"

அவளது நெற்றிச்சுட்டி இல்லை என்பது போல அசைகிறது. பிறகு அவளது நாவில் யாழ் அமர்ந்தது : "பாதங்களிருக்கின்றன ; பாதைகளுக்கா பஞ்சம் ? வீரத்திலகமே ! நமது விழிகள் இருட்டறையில் சித்திரங்களைத் தேடவில்லை ; அந்தச் சித்திரத்தைச் சூரியனிலேயே வரைந்து பிரபஞ்சத்துக்கு எடுத்துக் காட்டத் துடிக்கின்றன. மகத மகுடம் உங்கள் சிரசை அலங்கரிக்கிறபோது, வஜ்ஜிரை உங்கள் இடது பாகத்தில் அமர்ந்தே தீருவாள்."

"இதைத்தான் நான் உன் அண்ணனிடம் சொல்லியனுப்பினேன். நீ உனது சிற்றன்னைக்கு நல்ல பெண்ணாக நடந்துகொள். இப்போதைக்கு அது ஓர் அற்புத ஆயுதம் !"

அப்போது...

குதிரையின் குளம்பொலியைக் காற்று அறிமுகம் செய்கிறது.

இருவருமே ஒருகணம் அதிர்ந்து திரும்புகிறார்கள்.

வருபவன் கோசல இளவரசன் விதுர்த்தபன். நயனங்கள் அமைதி கண்டன.

குதிரையை விட்டிறங்கிய கோசல குமரன் விரைந்தோடி வருகிறான்.

"அசோகசந்தா, புறப்படு. தேவதத்தன் இன்றே புறப்பட்டாக வேண்டுமாம். உனது எதிர்காலம் குறித்து இன்றிரவு நம்மிடையே ஒரு மந்திராலோசனை. உன் அம்மாவும் கலந்து கொள்கிறார்கள்."

"நான்கூடக் கலந்து கொள்கிறேனே அண்ணா !" என்றாள் வஜ்ஜிரை.

தங்கையைக் கூர்ந்து கவனித்த விதுர்த்தபன், "இப்படி ஓர் ஆசையா வஜ்ஜிரை ?" என்றான்.

வஜ்ஜிரை சிரித்துக் கொண்டே தலை கவிழ்ந்தாள்.

"வஜ்ஜிரை ! காலம் கனியும்வரை நீ காதலில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அசோகசந்தா, நீ புறப்படு."

நான்கு கண்கள் நளினமாய்க் காதல் பந்தலிடுகின்றன.

"பார்த்தது போதும் ; புறப்படு அசோகசந்தா !"—விதுர்த்தபன் விரைவு படுத்தினான். அடுத்து, இரு புரவிகள் விரைந்தோடத் தொடங்கின.

வஜ்ஜிரையோ, அஜாதசத்ரு அமர்ந்திருந்த இடத்தில் அமர்ந்து சற்று நேரம் ஆசை தீர்த்தாள். அவனது உஷ்ணம் உறைப்பது போன்ற ஓர் உணர்வு. மெல்லச் சிரித்துக் கொள்கிறாள். தரையில் அவனது பாதம் பட்டிருந்த மண்ணைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்கிறாள். போதை நிறைந்த ஒரு பெருமூச்சு. பின் புறப்பட்டாள்.

இரவு மலரிலிருந்து நாழிகை இதழ்கள் பத்து உதிர்த்தன.

பாலி மாளிகையின் நிலா முற்றத்தில் அம்பபாலி தூய வெண்ணிற ஆடைகளை அணிந்து முத்தாபரணங்களுடன் அமர்ந்திருந்தாள். மேலே முழு நிலவு மோகனப் புன்னகை புரிந்து கொண்டிருந்தது.

தேவதத்தன் அருகே அமர்ந்து ஏதேதோ விளக்கிக் கொண்டிருந்தான்.

முற்றத்துத் தாழ்வாரத்தில் அஜாதசத்ரு பின்னங்கை கட்டிக் கொண்டு உலவுகிறான். கண்கள், விதுர்த்தபனை எதிர்பார்க்கின்றன.

மாளிகை வாசலில் புரவி வந்து நிற்கும் அரவம். சாளரத்தில் கவனிக்கிறான் அஜாதசத்ரு. விதுர்த்தபன் தான்.

நிலாமுற்றத்துக்கு வந்த விதுர்த்தபன், "வெகுநேரமாகக் காத்துக் கொண்டிருக்கிறீர்களா ?" என்று கேட்டுக் கொண்டே, அம்பபாலியை வணங்கி அருகில் அமர்ந்தான்.

அஜாதசத்ரு மறுமொழி பகிர்ந்தான்; "யுவராஜனாயிற்றே! காத்துக் கொண்டுதானே இருக்க வேண்டும்?"

"அட, என் ராஜா! அசோகசந்தா! என்னல் போதும்; உருப்படியான விஷயங்களைப் பேசவேண்டும்; இப்படி வந்து உட்கார்!" என்றான் விதுர்த்தபன்.

"நீங்கள் பேசி எடுக்கிற எந்த முடிவையும் நான் ஏற்பேன். தேவதத்தன் சொல்வதைப் பொறுமையாகக் கேட்டு உனது முடிவைச் சொல்?"

நண்பர்கள் பேசிக் கொண்டதைக் கேட்டு ரசித்தவாறு சிரித்த தேவதத்தன், தனது கருத்தை விளக்கினான்: "விதுர்த்தபா! மகதத்தின் மீது போர் தொடுக்க உனது தந்தை எந்த அளவுக்குப் படையுதவி செய்வார்?"

"ஓரளவு."

"அதுவும் ராஜநர்த்தகி அம்மையாருக்காக! இல்லையா?"

விதுர்த்தபன் தலையசைத்தான்.

"முழு அளவுக்கு உதவ அசோகசந்தன் என்ன கோசல மன்னருடைய மகனா? இல்லை மருமகனா? நீ குறிப்பிடும் இந்த ஓரளவு என்பது ராஜகிருகத்து எல்லைக் கதவுகளைக் கூடத் தட்ட முடியாது."

'மருமகனா?' என்று தேவதத்தன் கூறியது அம்பபாலியைச் சிந்திக்க வைக்கிறது. இது ஓரளவைப் பேரளவாக்குமோ? அவள் கேட்டாள்: "நீயே இதற்கு ஒரு நல்ல வழியைக் காட்டலாம் தேவதத்தா!"

தேவதத்தன் நாவசைத்தது:

"தாயே! இப்போது நமக்குத் தேவை பெரிதான படை முழக்கம்; அரிதான ராஜதந்திரம். அங்கநாடு கேட்பாரற்றுக் கிடக்கிறது. ஒரு காலத்தில் மகத சக்ரவர்த்தியால் வெற்றி கண்டு சோணதண்டன் என்கிற அந்தணர்க்குத் தானமாகத்

தர, இப்போது அந்தத் தானம் தவிடுபொடியாகி அங்கத்து ரத்த சம்பந்தங்கள் ரணப்படுத்திக் கொண்டிருக்கின்றன. முதலில் நாம் அங்கத்தை மீட்டு அரியணையில் அமரவேண்டும். அடுத்து விதேகநாடு. அதாவது, லிச்சாவியர்கள் வாழும் வஜ்ஜி நாடு. அதன் தலைநகராம் வைசாலியை எவ்வழியிலும் கைப்பற்றியாக வேண்டும் அல்லது கையோங்காதவாறு செய்துவிட வேண்டும்!"

"ஐயையோ! அது இப்போதைய மகாராணியான செல்லனாதேவியின் தாயகம் ஆயிற்றே!"

"அதனால்தான் அதன் கையோங்கக் கூடாது என்று சொல்வது. இதன் மூலம் லிச்சாவியர்கள் உதவி மகதத்துக்குக் கிடைக்க முடியாமல் செய்துவிடலாம் அல்லவா?"

"நல்ல யோசனை" என்றான் விதுர்த்தபன்.

இத்தனையையும் ஒரு பார்வையாளனே போன்று உலவியவாறு கவனித்தும் எதிர்காலத்தைக் கணித்தும் உலவிக் கொண்டிருக்கிறான் அஜாதசத்ரு.

தேவதத்தனே மேலும் பேசினான:

"எனது யவன நண்பன் ஒருவனுடன் இணைந்து ஓர் போராயுதத்தைச் சிந்தித்து வருகிறேன். அது குறித்து இப்போதைக்கு எதுவும் கேட்கவேண்டாம். அந்த ஒரு யுத்த கருவி கொண்டு அனைத்து நாடுகளையும் அலறடித்துவிடலாம்."

"அவன் *விஞ்ஞானியா?"

* அக்காலத்தே யந்திர நிபுணர்களும் கணித மேதைகளும் இருந்தனர். கி. பி. ஆறாம் நூற்றாண்டில் குப்தப் பேரரசில் வாழ்ந்த ஆரியபட்டன்தான் முதன் முதலில் பூமி தன்னைத்தானே சுற்றிக் கொள்கிறது என்ற உண்மையைக் கண்டறிந்தவன். பல விஞ்ஞான நூல்கள் அக்காலத்தே அரும்பின.

—'இந்தியர் வரலாறு' (முதல் பாகம்) —என். கே. கோவிந்தசாமி பிள்ளை, எம். ஏ.

"நானே ஒரு விஞ்ஞானிதான்."

"அந்தக் கருவி..." —இப்போது பார்த்துத் தலையிட்டான் அஜாதசத்ரு. அவனது வேகம் தேகத் துடிப்பில் தெரிய வந்தது. அதுவரையிலான மௌனம் அங்கே கலைந்ததென்றால் எங்கே, எதைப் பற்றவேண்டும் என்பதில் இவன் கவனமாகவே இருக்கிறான் என்பது புரியலாயிற்று. தேவதத்தன் மெல்லச் சிரித்துக் கொண்டே, "அடுத்த முறை நாம் சந்திக்கிறபோது அந்த யுத்தக் கருவியை உருவாக்குவோம்" என்றான்.

"எப்போது சந்திப்பது ?"

"பிம்பிசாரன் தலை வரவேண்டாமா ?"

"அது வராது."

"அப்படியானால் நாம் போய் அந்தத் தலையைத் தரிசித்துவிட்டு வருவோமா ?"

"தேவதத்தா !"— அம்பபாலி அரண்டு போனாள்.

"அம்மா ! நான் ஒரு மண்டலப் போதுக்குள் திரும்பி விடுவேன். புத்த பெருமானைத் தரிசிக்கச் செல்கிறேன். விரைவில் திரும்பி விடுவேன். நான் வந்ததும் நானும் அசோகசந்தனும் விதுர்த்தபனும் மகதம் நோக்கிச் செல்கிறோம். நீங்கள் இச்செய்தியினை ரகசியமாக மகத ஆமாத்தியர் வஸ்ஸகாரருக்குத் தெரிவிக்கிறீர்கள். அவர் துணை இருக்கிறபோது என்ன பயம்? இவர்களை நான் இவர்களாக அழைத்துச் செல்லமாட்டேன். அதற்கான வழி முறைகளைச் சிருஷ்டிப்பேன். ராஜ கிருகத்தை ஒரு முறை அசோகசந்தா பார்த்தால்தான் ராஜகம்பீரமான உத்வேகமே பிறக்கும். அதற்குள் இங்கே அந்த நூதன யுத்த கருவி உருவாகும் முறைப்படி யுத்தம் மூளும். எனக்கு விடை தாருங்கள் !"

தேவதத்தன் எழுந்து கொண்டான்.

அம்பபாலி ஆணையிட்டாள் : "அசோகசந்தா ! நீயும் யுவராஜனும் தேவதத்தனை வழிகூட்டித் திரும்புங்கள்."

மூவரும் புறப்பட்டனர்.

அம்பபாலியின் நாசியில் புயலனைய பெருமூச்சு சீற்றமாய்ப் பறிஇறது.

ஒரு மண்டலப்போது உருண்டது தெரியாமல் ஓடி மறைந்தது.

இடையில் வஜ்ஜிரை— அஜாதசத்ரு காதல் ரகசியமாக மலர் பறித்துச் சூடி மகிழ்ந்து வந்தது.

அஜாதசத்ருவை ராஜகிருகம் நோக்கியனுப்பி நச்சுத் தேர்வு நடத்துவதா என்று அம்பபாலி அலைமோதிக் கொண்டிருந்தாலும், தேவதத்தன் குறிப்பிட்டுச் சென்றது போல, மகத மகா ஆமாத்தியருக்கு ரகசியச் செய்தி அனுப்பி இருந்தாள்.

விதுர்த்தபனை எவ்வாறு உடன் அனுப்பி வைக்க முடியும் ? கோசல மன்னர் ஒப்புக்கொள்வாரா ? வருங்கால வாரிசாயிற்றே அவன் ?

பிறகு பார்ப்போம். தனது கயல் விழிகளின் காந்த சக்தி ஒருவேளை அனுப்பி வைக்கச் செய்யலாம் அல்லவா ? ஆனாலும் பெற்றவளான வாசவி ஒப்புக் கொள்வார்களா ?

தேவதத்தனை இன்னும் காணோமே என்ற எதிர் பார்ப்புடன் சிந்தனை, சிந்தனை, ஒரே சிந்தனை...

ஏதோ நவீன யுத்த கருவி என்றானே...

ஓ... மகதம் நோக்கிச் செல்லப் போகிறோம். அதன் மாண்புமிக்க தலை நகராம் ராஜகிருகத்தைக் காணப் போகிறோம். அரக்கத் தந்தையான பிம்பிசார சக்ரவர்த்தியை நேருக்கு நேர் சந்திக்கப் போகிறோம். இவற்றுக்

கெல்லாம் மேலாக, மகப்பேறு தவங்கிடந்து சுகப்பேறு பெற்றும் அகப்பேறு அடைந்து, அருகிலிருந்து அகமகிழ முடியாது, சிறைப்பேறு பெற்றுச் சித்திரவதை காணும் தாய் முகத்தைத் தரிசிக்கப் போகிறோம். ஓ... அம்மா...

எங்கோ 'மா' என்று பசுவைத் தேடிக் கன்று குரல் கொடுக்கிறது. அதனைத் தொடர்ந்து, நூபுரங்களின் ஓசை கலீர் கலீர் என்று கேட்கிறது.

திரும்பிப் பார்க்கிறான் அஜாதசத்ரு.

வருவது வஜ்ஜிரை எனும் வசந்த ருது.

"என்ன, மகத யோசனைதானே ?"

"மறு யோசனை ஏது ?"

அஜாதசத்ரு எழுந்திருக்கிறான். இருவரும் அந்த அசிரவதி ஆற்றங்கரை யோரமாகவே மெல்ல நடக்கின்றனர்.

"பாலி குமாரா! மகதம் நோக்கிச் சென்றுதான் ஆகவேண்டுமா ? செல்லாமலேயே, படைகொண்டு செல்வது எப்படி என்று சிந்தித்துப் பாருங்களேன் !"

"இது விஷயத்தில் எனது ஞான தூதன் தேவதத்தன் பேச்சைத்தான் கேட்பேன்."

"காதலியை விடவா ?"

"உன்னால் வீரசுகம் ஊட்ட முடியாது."

"வீர சுகத்துக்கே காதல் சுகம்தான் கால்கோள் விழா நடத்துகிறது ."

"எனக்கு அந்தச் சுகத்தின் அனுபவமில்லையே...! வஜ்ஜிரை. ஆமையைவிட மெல்ல நகர்வது காதல். எனக்குப் புரிந்தது அவ்வளவுதான்" என்று கூறிச் சிரித்தான்.

ஏன்தான் அப்படிச் சிரித்தானோ ?

விதிதான் சிரிக்க வைத்ததோ ? மதிதான் சிரிக்க வைத்ததோ ?

கரையின் எதிர்ப்புறத்தே புரவியில் வேகமாகச் சென்றுகொண்டிருந்த கோசல ஒற்றன் ஒருவன், சிரிப்பொலி கேட்டுக் குதிரையை நிறுத்திக் கவனிக்கிறான். கண்களில் அக்கினி கனன்றது.

ஞாலத்து நாடகத்தைச் சில சமயம் கண் பார்க்கும் ; சில சமயம் செவி சாய்க்கும். இங்கே செவியடைந்து கண் திறந்து விதியின் செப்படி வித்தைக்கு வித்தூன்றியது.

வஜ்ஜிரையின் கண்கள் வண்ணமாய் விரிந்து, தேனாய் இனிக்கின்றது.

"பாலி குமாரா ! காதல் ஆமை போலவா நகருகிறது ? நிரம்பவும் அவசரம்தான். என்னை உங்களுக்கென்று தத்தம் செய்துவிட்டேன். அப்படித்தான் அவசரமென்றால் நான்... நான்... இதோ காத்துக் கொண்டிருக்கிறேன்."

வஜ்ஜிரையின் கண்கள் நிலைகுத்தி நிற்கின்றன. மேலாடையைக் காற்று எனக்குத் தேவை என்பது போலப் பறித்துச் செல்கிறது. அங்கே மௌனம் நெருப்பாய் எரிகிறது.

இருவரும் அருகருகே நெருங்குகிறார்கள்.

அஜாதசத்ரு சொன்னான் : "எனக்கு மலர்க்கவிதை எழுத இப்போது அவசரமில்லை. எனது அவசரம் மகதக் கவிதை. ஆனால், இதழ்க் கவிதை எழுதினால் என்ன ?"

"எந்தக் கவிதைக்கும் இசைந்து விட்டேன், என்னரும் சுகமே !"

இதழ்கள் நான்கானாலும் எழுதியது ஒரு கவிதை.

அந்தச் சுகந்த நேரத்தில்...

"ஆகா பிரமாதம்!"

—ஒரு கொடூரமான ரசனைக் குரல்.

காதலர்கள் விழிப்பு கண்டு தங்கள் நிலையெய்தி கவனிக்க...

அங்கே—

கோசல மன்னர் பிரசேனஜித் கோபாக்கினியாக நின்று கொண்டிருந்தார்.

"எவ்வளவு நாட்களாக இந்த நாடகம்?"

அஜாதசத்ரு அரண்டு போனான்.

வஜ்ஜிரையே வாய் திறந்தாள்:

"நீண்ட நாட்களாக!"

"வேசி மகனோடு இந்த விளையாட்டா?"

அவ்வளவுதான், "கோசலமன்னா!" என்று கர்ஜிக்கிறான் அஜாதசத்ரு.

அவனது செருக்கான குரல் கேட்டுச் சினத்தீயில் கர்ஜிக்கிறார் கோசல மன்னர்:

"இவனைச் சிறையிலடையுங்கள்; நாளைய விசாரணையில் இவனது செருக்கையடக்குகிறேன்!"

சுற்றி நின்ற வீரர்கள் அஜாதசத்ருவைச் சூழ்ந்து கொள்ள...

'ஓ'வென்று ஓலமிடுகிறாள், கனவுகள் இப்படியா கரை சேரவேண்டும் என்று கருதிக் கண்ணீர் மல்கிய கோசலக் குமாரி வஜ்ஜிரை.

பிடகம்-22

ஓர் இரவு நாடகம்

அஜாதசத்ரு சிறைப்பட்டு விட்டான்.

நெருப்பனைய செய்தி நெஞ்சை எரிக்க, மடியிலிருந்த யாழ்மீது மயக்குற்றுச் சாய்ந்தாள் மதுவழகி அம்பபாலி. சுருதி கலைந்த யாழ் சுநாதமிழந்தது.

அரண்மனையில் அடைபட்ட தங்கையின் அவலக்குரல் கேட்டு, அவளை அமைதிப்படுத்த முடியாது தன்னுடன் அழைத்துக் கொண்டு பாலி மாளிகை நோக்கி விரைந்தோடி வருகிறான் கோசல இளவரசன் விதூர்த்தபன்.

விளங்கிக் கொள்ள முடியாத வேதனையுடன் ஒரு பக்கமாக விசாலி நின்று துடிக்கிறாள்.

இளவரசனும் இளவரசியும் வருவது கண்டு சற்றே ஆறுதலில் சந்தனம் மணக்கிறது.

யாழின்மீது சாய்ந்து கிடந்த அழகு யாழ் அம்பபாலியைக் கண்டு அலறுகிறாள் வஜ்ஜிரை:

"தாயே! அசோகசந்தாவை நீங்கள்தாம் எப்படியும் காக்க வேண்டும். மன்னர் உங்கள் வாதத்துக்குப் பிறகு மனம் மாறலாம்!"

அம்பபாலி கண் திறந்து மெல்லக் கவனிக்கிறாள். நீர் வெள்ளம் கரை புரண்டு யாழின் நரம்புகளில் பாய்ந்தோடுகிறது. இறந்த கண் இறந்தபடியே 'எல்லாம் உன்னால் வந்த வினை' என்பது போலக் கவனிக்கின்றன.

"உங்கள் துணையிருந்தால் என் தந்தையுடன் நான் வாதாடுவேன், புறப்படுங்கள்." விதூர்த்தபன் குரல்

ஒலிக்கக் கேட்டுச் சற்றே நிமிருகிறாள் அம்பபாலி ; "காதல் தீவினை பயக்கும் என்று எதிர்பார்த்தேன் ; அது நடந்து விட்டது விதுர்த்தபா !"

"நன்மையோ, தீமையோ... போராடிப் பார்த்துவிட வேண்டியதுதான். அசோகசந்தனின் கனவுகளை அசிரவதி யாற்றோடு அடித்துச் செல்ல நான் சம்மதியேன்."

விதுர்த்தபனின் வீரிய நித்தியமான சொற்கள், அம்பபாலியின், செவிகளில் காரியசித்தியாய் நிரம்புகின்றன. இனியும் தயங்கிப் பயனில்லை. தன்னிடமிருக்கும் மிகப் பெரிய ரகசிய ஆயுதத்தைப் பயன்படுத்திவிட வேண்டியதுதான்.

விருட்டென எழுந்து கொண்ட அம்பபாலி, தன்னை ஒரளவு ஒப்பனை செய்து கொண்டு அரண்மனை நோக்கிப் புறப்பட்டாள். விதுர்த்தபனும் வஜ்ஜிரையும் உடன் தொடர்ந்தனர்.

அரண்மனையில் அமைதி பந்தலிட்டு, அதன் நடுவே கேள்விக்குறிகள் தீபங்களாய் எரிகின்றன. ராஜநர்த்தகியின் மகன்— மாவீரச் செல்வன் அசோகசந்தன் சிறைப்பட்டு விட்டானே !

அம்பபாலி, அரண்மனையுள் பிரவேசிக்கிறபோது...

வாயில் காவோன் வழியிட மறுக்கிறான். "உங்களை உள்ளே அனுமதிக்க வேண்டாம் என்பது மன்னரின் உத்தரவு."

ராஜநர்த்தகிக்கு இப்பேர்ப்பட்ட அவமானமா ?

விதுர்த்தபனின் கால்கள் இரு முறை துள்ள, உதை பட்ட வீரர்கள் ஒரு பக்கமாய் விழுந்து புரளுகிறார்கள். இதனைக் கண்ணுற்ற கோசல மகாசேனாதிபதி திக்கசாரண்யன் ஓடோடி வருகிறான். "இளவரசே ! வில்லிடம் வினா எழுப்பாமல், அம்பை முறித்துப் போடுவதில் பயனில்லை."

"எங்கே அந்த வில் ? எங்கே அந்தக் கோசல வில் ?"

விதுர்த்தபனின் வினாக்கள், திக்கசாரண்யனை விதிர்க்கச் செய்கின்றன.

"மன்னர் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார் ; யாரையும் பார்க்க அனுமதியில்லை."

"என்னைக் கூடவா ?"

"உங்கள் அன்னையாருக்கும்கூட !"

"ஆ...!"

விதுர்த்தபனின் ஆவேசக் குரல் கேட்டு மேலும் அதிர்ந்து போன அம்பபாலி, "விதுர்த்தபா !" என்று ஓங்கிக் குரல் விடுகிறாள். "சினம் காக்க ! பன்னீர் மரம் பூக்கிறபோது, வேரில் வெந்நீரைக் கொட்டியாய் விட்டது. ஒன்று, மரம்பூக்க வேண்டும் ; இல்லை, மரத்தை அடியோடு வெட்டியெறிய வேண்டும். என்னுடன் மாளிகைக்கு வாருங்கள். நீங்களும் தான் மகாசேனாதிபதியாரே !"

நால்வரும் பாலி மாளிகை அடைந்தனர். மேன்மாடம் நோக்கிச் சென்றனர். அமர்ந்தனர்.

அம்பபாலியின் சிந்தனை மௌனமாய்ப் பேதலிக்கிறது. மரம் பூக்குமா ? வெட்டி வீழ்த்தப்படுமா ?

மௌனம் கலைகிறது. தீர்க்கமான முடிவுக்கு வந்து விட்டதை அவளது பெருமூச்சு எடுத்துக் காட்டுகிறது.

அசோகசந்தன் யார் என்பதை அங்கம் அங்கமாய்க் அவன் கதை என்ன என்பதை அத்தியாயம் அத்தியாயமாய் அலசி அலசிச் சொல்லுகிறாள்.

வஜ்ஜிரை வாய் வசந்தமாய் மலருகிறது ; மூச்சு தென்றலாய்ப் பறிகிறது.

விதுர்த்தபனும் திக்கசாரண்யனும் வியப்பின் நெருப்பில் வியர்த்துச் சிலைத்தனர்.

ஓ...! இவன்தான் வைதேகிப் புத்திரனா ? பிம்பிசாரச் செல்வனா ? அஜாதசத்ருவா ?

ஆவேசப் புயல் கண்டு எழுகிறான் விதுர்த்தபன்.

"விதுர்த்தபா! அமைதியாகச் செயல்படு ! என் சார்பில் வாதிடப் போகிறவன் நீ ! 'ஏதேனும் சாட்சியுண்டா ?' என்று உனது தந்தை உறுமலாம். மகத மகா ஆமாத்தியர் அன்றைக்கு அனுப்பி வைத்த ஓலைச் சுருளைப் பத்திரமாகப் பாதுகாத்திருக்கிறேன். அதனை எடுத்துச் செல் !"

கயலன்ன விழிகளில் புரண்ட நீர்ப்பிரவாகத்தை முந்தானையால் துடைத்துக் கொள்கிறாள் அம்பபாலி.

"அம்மா ! நீங்களே வந்து இதனை எடுத்துக் கூறி வாதிடுவது சிலாக்கியமானதல்லவா ?" வஜ்ஜிரையின் நியாயமான கேள்வி.

"வாதிடத்தானே புறப்பட்டேன் வஜ்ஜிரை ! என்னைத் தான் வாயில் காவோன் அவமதித்து விட்டானே ! அதனாலென்ன ? நீங்கள் மூவரும் இக்கோசலத்து முக்கண்கள். இவற்றில் நெற்றிக்கண் விதுர்த்தபன். சென்று வாருங்கள். ஒன்று, அஜாதசத்ருவைக் கொண்டு வாருங்கள் ; இல்லை கொன்று வாருங்கள் !"

"அம்மா...!"— சந்நதக்காரி போல் வீறிட்டாள் வஜ்ஜிரை.

அம்பபாலியின் கண்கள் குளமாகி வழிகின்றன.

கண்களை மீன் என்றவன், அங்கே குளம் மறைந்திருக்கிறது என்று கவனித்தே உவமை கூறியிருக்கிறான் போலும் !

மூவரும் அக்கணமே அரண்மனை நோக்கிப் புறப்பட்டனர்.

ஆனால், அரண்மனையில்...?

"அவசரப்பட்டு விட்டீர்களே மன்னவா ! தவறு செய்தவன் அசோகசந்தன் மட்டுமல்ல!; வஜ்ஜிரையும். சிறையில் இருவரையும் அல்லவா அடைத்திருக்க வேண்டும்? காதலுக்கு வேசிபுத்திரனும் ஒன்றுதான் ; வேந்தன் புதல்வியும் ஒன்றுதான். நீங்கள் அம்பபாலி மாளிகைக் கதவைத் தட்டுவானேன் ? காமத்துக்கு ஒரு நீதி ; காதலுக்கு ஒரு நீதியா என்று அம்பபாலி கேட்டால் என்ன மறுமொழி சொல்லுவீர்கள் ?" என்று ஆமாத்தியரான ஸ்ரீவத்சன் எழுப்பிச் சென்ற கேள்விக்கு, விடை தேடத்தானே இந்தத் தனிமை ; தடையுத்தரவு ; இத்தியாதிகள்...

இந்தத் தடையுத்தரவு பொழுது புலரும்வரை நீடிக்கும் போலிருந்தது.

தந்தையாரைக் காண முடியாது என்று தீர்மானித்த விதுர்த்தபன், "மகாசேனாதிபதி ! நாம் சிறைக்கோட்டம் நோக்கிச் செல்கிறோம்" என்றான்.

"நான் வருவதற்கில்லை இளவரசே ! அங்கும் எவரையும் அனுமதிக்கக்கூடாது என்பது மன்னர் உத்தரவு. நீங்கள் செல்லுங்கள். வினா வருகிறபோது விடையை நான் உண்டு பண்ணிக் கொள்கிறேன். ஆனால், நானே வருவது நல்லதல்ல "

"அண்ணா, நானும் வருகிறேன் !"

தங்கையின் அவலம் படர்ந்த முகத்தை நோக்குகிறான். ஓ...! இவள் இப்போது அஜாதசத்ரு காதலி !

"நீ எதற்காக வஜ்ஜிரை ?"

"தனிமையிலிருக்கும் ஒவ்வொரு கணமும் என்னை விழுங்கி விடும் போலிருக்கிறது. அதனால்தான் உங்களைப் பின்பற்றிச் சுற்றிக் கொண்டிருக்கிறேன்."

வஜ்ஜிரையின் துடிப்பைக் கண்ட மகாசேனாதிபதி இக்கசாரண்யன், "இளவரசே! அழைத்துச் செல்லுங்கள். வருவது வரட்டும் என்று துணிந்தாய் விட்டது. அங்குலமானால் என்ன, அடியே பெயர்ந்தாலென்ன?" என்றான்.

வஜ்ஜிரையின் கண்கள் மகாசேனாதிபதிக்கு நன்றியறிவிக்கின்றன.

இருவரும் சிறைக்கோட்டம் நோக்கிச் சென்றனர்.

சிறைக்கோட்டத்து அதிகாரி எவ்வளவு எடுத்துக் கூறியும் கோசலக்குமாரன் செவிசாய்க்கவில்லை. "அனுமதிக்கப் போகிறீர்களா, அல்லல்படப் போகிறீர்களா?"

சிறைக்கதவங்கள் வழி விடுகின்றன.

இருவரும் வேகமாக உள்ளே நுழைகிறார்கள். வழியில் தங்கையை எச்சரிக்கிறான்: "வஜ்ஜிரை! உணர்ச்சி வசப்பட்டு எதையும் காட்டிக் கொள்ளாதே! பேசுபவன் நானாகத்தான் இருக்க வேண்டும்."

வழி நெடுகத் தீப்பந்தங்கள் எண்ணெய் வழிய வழிய எரிந்து கொண்டிருக்கின்றன. அந்தஸ்து படைத்தவர்க்கென கட்டப்பட்டிருந்த வரிசையுள் நுழைகிறார்கள்.

தனித்த ஓர் அறையுள் அஜாதசத்ரு, அடைபட்ட அரிமாவைப் போல உலவிக் கொண்டிருக்கிறான். கோபத்தால் சிவந்திருந்த அவனது முகத்தை மேலும் சினக்கச் செய்கிறது செந்நிறத் தீப்பந்தம்.

யாரோ வரும் காலடி ஓசை. நின்று கவனிக்கிறான். விதுர்த்தபன், வஜ்ஜிரை.

சிறைக் கம்பிக்கு அருகே வந்து நின்ற இருவரும் அஜாதசத்ருவைக் கவனிக்கிறார்கள். இப்போதைய பார்வையில்தாம் எத்தனை வித்தியாசங்கள்! எத்துணை வித்தியாசங்கள்!

உணர்ச்சிவயப்பட்டு விட்டாள் வஜ்ஜிரை. விசும்பி விசும்பி அழத் தொடங்கி விட்டாள். "உங்களுக்கா இந்த நிலை...?"

மனம் குமுறிக் கொள்கிறது. தங்கையின் உணர்வு கண்டு மெல்லத் தடவித் தேற்றுகிறான், விதுர்த்தபன். அந்தத் தடவல் 'கவனம் கவனம்' என்று எச்சரிக்கிறது.

"அசோகசந்தா! கடமைகள் ஆயிரமிருக்கின்றன; காதலை நிறுத்தி வையுங்கள் என்றேன், கேட்கவில்லை. அதனால் வந்த வினையைப் பார்த்தாயா?"

அஜாதசத்ரு மௌனத்தில் எரிகிறான் என்பதை எடுத்துக்காட்ட, தீப்பந்தத்தில் ஒரு படபடத்த வெடிப்பு; தீப்பொறிகள்.

"மன்னரிடம் எது குறித்து வாதாடி விடுதலை பெறப் போகிறாய் அசோகசந்தா?"

மீண்டும் தீப்பந்தமே பேசுகிறது.

அஜாதசத்ருவின் முகத்தில் கோபத்தின் குடமுழுக்கு.

"பேசுங்களேன்!" —வஜ்ஜிரையின் குரலில் பூகம்பம் வெடித்தது.

அதிர்ந்து போய்க் கவனிக்கிறான் விதுர்த்தபன்.

ஓ..! தங்கை தன்னை மறந்து விட்டாள். விடை பெற்றுக் கொள்ள வேண்டியதுதான். சிறைச் செவிகளை விழிக்கச் செய்துவிடக் கூடாது.

அஜாதசத்ருவின் சினந்த முகத்தில் ஒரு சின்ன சுழித் திருப்பம். கண்கள் அலைமோதுகின்றன.

"வஜ்ஜிரை, இது சிறைக்கோட்டம்! அனுமதியை மீறி நுழைந்திருக்கிறோம். கதையை அவலத்தில் முடித்து விடுவாய் போலிருக்கிறது, புறப்படு."

வஜ்ஜிரை தலைகுனிந்து விசும்பிய வண்ணம் புறப் படுகிறாள்.

விதுர்த்தபனும் விடை பெறுகிறான்: "உன்னை எவ்வாறு விடுதலை செய்ய வேண்டும் என்பது எனக்குத் தெரியும் அஜாதசத்ரு."

அஜாதசத்ரு; அஜாதசத்ரு...

அவர்கள் வேகமாகச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

அஜாதசத்ரு அதிர்ந்து நோக்குகிறான்.

தீப்பந்தங்கள் மேலும் படபடத்துப் பொறிகளைக் கக்கின.

'அசோகசந்தன், அஜாதசத்ருவா?'

செய்தி முழுவதையும் கேள்விப்பட்ட கோசல மன்னர் பிரசேனஜித் கண் முன்னே மகத ராஜ்யமே எரிவது போல, கிழக்கே கதிரவன் உதயம் காண்கிறான்.

கோசலக்குமாரன் விதுர்த்தபன் குதூகலமடைந்தான். வஜ்ஜிரையின் வதனத்தில் வசந்தம் சுகந்தமானது; சுந்தர மானது; நிரந்தரமானது.

அஜாதசத்ருவைச் சகல மரியாதைகளுடன் அழைத்து வருகிறார்கள்.

பிரசேனஜித் எழுந்து சென்று, அஜாதசத்ருவை மார்பினிக்கத் தழுவிக் கொள்கிறார். "அஜாதசத்ரு! எனதருமை மருமகனே! உன்னையாடா ராஜா, நான் சிறையில் வைத்தேன்? என்னரும் தங்கை சிறையில் வாடுவது போதாதென்று உன்னையும் ஓரிரவு அவ்வாறு வைக்க வைத்த விதியின் நாடகம்தான் புரியவில்லை."

ஈரம் எல்லாக் கண்களிலும் இரந்து நிற்கிறது.

"என்னை இனம் காட்டவே இப்படி ஓர் ஏற்பாட்டைச் செய்திருக்கிறது!"

"உனக்கு நீ யார் என்பது முன்னமே தெரியுமா?"

"தெரிந்திராவிட்டால் நான் வஜ்ஜிரையின் நிழலை மிதிக்கக்கூட அஞ்சி இருப்பேனே! அன்னை அம்பபாலியின் ஆணை என்னைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தது."

அன்னை...

அன்னை; அம்பபாலி...

வைதேகி சிந்தனை இவனுக்கு இல்லையோ?

"உனது அன்னை வைதேகி."

"சிறையுள்ளிருக்கும் சிலை; அதுவெளியே வருகிறபோது தெய்வமாகும். ஆனாலும் என் வழிபாட்டுக்குரிய தெய்வம் அம்பபாலி. எனக்காக அவர்கள் செய்த தியாகத்துக்கு அடுத்த பிறவியில் அவர்கள் வயிற்றில் மகனாகப் பிறந்து மகிழப் பிரார்த்தனை செய்கிறேன்."

பிதுங்கிப் போனார் பிரசேனஜித்.

கேள்விப்பட்டு ஓடோடி வருகிறாள் வாசவி. தனது மருமகனின் தாடைகளைப் பற்றிக் கண்ணேறு கழித்து ஆனந்தக் கண்ணீர் மல்குகிறாள்.

"அஜாதசத்ரு! உன் தாயைச் சிறை மீட்கும் பணியை இன்றே மேற்கொள்! கோசலப் படை முழுவதும் உன்னைப் பின்தொடரக் காத்திருக்கிறது."

பிரசேனஜித் பிரகாசத்தைக் காட்டுகிறார்.

விதுர்த்தபனின் தோள்கள் விம்மிப் புடைக்கின்றன.

"அவசரப்பட வேண்டாம்!" என்று ஆரம்பித்த அஜாதசத்ரு, நண்பன் தேவதத்தன் விளக்கிச் சென்ற செய்திகளுக்கு விளக்கேற்றி வைத்தான்.

அந்த ஒளி, ஒரு நியாயமான வெளிச்சந்தைத் தரவே ஒப்புக்கொண்டு அதன்படியே ஆவன செய்ய ஆணையிடு கிறார் மன்னர் பிரசேனஜித்.

"அஜாதசத்ரு! உன் வருகைக்காக அம்பபாலி ஆவலு டன் காத்திருப்பாள். புறப்படு."

விடைபெற்றுக் கிளம்பும்போது அவனது வஜ்ஜிரமான வீரக் கண்கள் வஞ்சிக்கொடியனைய வேல்விழிகளைச் சந்தித்துச் செல்லத் தவறவில்லை.

ஓ...! எப்பேர்ப்பட்ட மருமகன்?

பூரித்துப் போகிறார்கள் பிரசேனஜித்தும் வாசவியும்.

பத்து நாழிகைப்போது பவித்திரப் பகலவனின் பாதம் பணிகின்றது.

கோசல மன்னர் பிரசேனஜித் அம்பபாலியைக் காணப் புறப்பட்டார்.

அம்பபாலியிடம் எவ்விதம் பொறுத்தருள வேண்டுவது? தவறு அவளுடையது. தகவலை முன்கூட்டியே கோடிட்டுக் காட்டியிருக்கலாம் அல்லவா?

ரதம், பாலி மாளிகை வாயிலில் நிற்கிறது.

மாளிகைக் கதவுக்கருகில் பணிப்பெண் விசாலி நிற்கிறாள்.

பிரசேனஜித் உள்ளே கம்பீரமாக நுழைகிறார்.

"பொறுத்தருள வேண்டுகிறேன் கோசல பிரானே! உங்களை மாளிகையுள் அனுமதிக்க வேண்டாம் என்று ராஜநர்த்தகியார் உத்தரவிட்டிருக்கிறார்கள்."

விசாலியின் சொற்களைக் கேட்டு வியர்த்துப் போனார் பிரசேனஜித்.

பிடகம்-23

ராஜராஜ நாகம்

"வணக்கம், கோசல ராஜா!"

மூடியிருந்த கதவுகளை முட்டிக் கிழித்துக் கொண்டு வாடிய பயிர் போல் ஒரு குரல் வார்த்தைகளை வருடு கின்றன. ஆ! அது அம்பபாலியின் குரலல்லவா? இவ்வளவு தீனமாக ஒலிக்கிறதே!

"அம்பபாலி! இது என்ன அலட்சிய நாடகம்?"

கோசல மன்னர் பிரசேனஜித் மூடிய கதவின் வெளிப் புறத்தில் நின்றே மூச்சுத் திணறுகிறார்.

"நாடகமல்ல பிரபோ! ஒரு காப்பியத்தின் மூன்றாம் பாகம். வீடுபேறு தேடும் பேரின்ப பாகம்! நேற்றைய அரண்மனை வாசல் எப்போது என்னை அவமானப் படுத்தியதோ, அப்போதே உதயம் கண்ட ஞானபாகம்! புத்த பெருமான் என்னை ஆட்கொண்டு விட்டதாக நினைக்கிறேன்."

"அம்பபாலீ...!"

"அதிர்ச்சியடைய வேண்டாம் அசிரவதி நாயகா! நமது முதல் சந்திப்பில் நான் கேட்ட நிபந்தனைகளில் ஒன்று, 'எனக்குக் காமம் போதும் என்று துறக்கிறபோது நீங்கள் அனுமதித்துவிட வேண்டும்; அதன் பிறகு நான் ஒரு தவயோக நிலைக்கு ஆயத்தமாகி விடுவேன்' என்று கேட்டுக் கொண்டேனல்லவா? அதற்குரிய காலம் கனிந்து விட்டது."

"இன்னும் அஜாதசத்ருவுக்கு ஆற்ற வேண்டிய கடமை கள் எவ்வளவோ இருக்கின்றன பாலி!"

"அவனை இன்னவன் என்று உங்களுக்கு இனம் காட்டி விட்ட பிறகு எனது கடமை முடிந்து விட்டது. இனி தொடர வேண்டியது உங்கள் கடமை. இப்போது அவன் உங்கள் மருமகன் !"

"ஆனாலும் உன் மகன் !"

"இல்லை, வைதேகிப் புத்திரன் !"

அம்பபாலி, கதவின் உட்புறமாக நின்று இவ்வாறு கூறிக்கொண்டிருந்ததை மாடப்படிகளில் நின்று கவனித்து வந்த அஜாதசத்ரு, "அம்மா !" என்று பேயோலமிட்டு ஓடோடி வருகிறான். "நான் பாலி புத்திரன் !"

ஓ...! அஜாதசத்ருவிடம் அம்பபாலி அகப்பட்டுக் கொண்டாள் என்பதை உணர்ந்து அமைதியாகக் கவனிக் கிறார் அசிரவதித் தலைவர்.

"நான் இப்போது அம்பபாலியல்ல அஜாதசத்ரு ! புத்த பாலி ! ஒரு தேரினி ஆகப் போகிறவள்."

"இன்னும் எனது தேர்த் திருவிழாவே முடிய வில்லையே !"

"அந்தத் திருவிழாவைக் கண்குளிரக் கண்டு, மனம் குளிர உனது அரண்மனையில் தங்கி, வாய்குளிர உணவுண்டு நான் துறவு பூணுவேன். எனது ஆசைகளின் கடைசி ஆசை அது."

"இதற்காகக் கோசல மன்னரை ஏன் குமுங்கச் செய்ய வேண்டும் ?"

"கோசல மன்னரல்ல ; உன் தாய்வழி அம்மான் !"

"இப்படி உறவால் பிணைத்துத் தனித்துப் பேசுவீர்கள் என்றுணர்ந்துதான் நான் இவ்வாறு குறிப்பிட்டேன். அம்மா ! உங்களுக்குப் பிறகுதான் இந்த உலகமே !

உங்களுக்கு அடுத்தபடியாக அம்மான் ! மூன்றாவதுதான் பெற்றெடுத்த அன்னை வைதேகி !"

"அஜாதசத்ரு...!"

அம்பபாலியின் நெற்றியில் வியர்வை முத்துக்கள். "மகத மாதாவை நான் தெய்வமாக மதிப்பவள் ! இனி யொரு முறை அப்படிச் சொல்லாதே ! நான் தெய்வமாக மதிக்கும் உருவம் உனக்கும் தெய்வம் ! என்னை'நீ முதலாவதாக வைத்து மதிப்பதானால், மகதமாதாவை மூலமாக வைத்து வணங்க வேண்டும், புரிகிறதா ?"

சொற்கள், கற்களாய்ப் பாய்கின்றன.

"என்ன புரிகிறதா ?"

"புரிகிறது தாயே !"

அரிமாவின் நாவிலிருந்து வார்த்தைகள் முயலாய் மூச்சு விடுகின்றன.

அம்பபாலி கதவுக்கு வெளியே குரல் கொடுக்கிறாள் : "கோசலபிரானே ! இந்த அடியாளைப் பொறுத்தருளுங்கள் : நானும் உங்கள் அரண்மனையை இனி மிதிக்க மாட்டேன். நீங்களும்..."

அவள் முடிக்கவில்லை. இடைமறித்த கோசலக் குரல் தொடருகிறது ; "நான் மிதிப்பேன் ; மிதித்தே தீருவேன். நிபந்தனையை மீறியல்ல ; நினைவில் என்றும் நிறுத்திக் கொள்ள !"

"உங்கள் நினைவில் என்றுமிருப்பேன். நீங்கள் செய்த நன்றி என்றும் நீடிக்கும் !"

படீரென்ற ஓசை, எதிர்பாராது எழுந்து கதவுகளை முறித்தன.

விதிர்த்தோடினான் விசாலி ; பதைத்துப் போனான் அஜாதசத்ரு.

உடைபட்டுத் திறந்த கதவுகளுக்கு இடையே, உதைத்த கால்கள் துடிக்க உருத்திராவேசத்துடன் கண்கள் சிவக்கக் காணப்பட்டார் பிரசேனஜித்.

அடுத்த கணம்...

அஜாதசத்ரு பாய்ந்து சென்று கோசல மன்னருடைய பாதங்களைப் பற்றிக்கொண்டான்.

"அம்மாவை மன்னியுங்கள்; அம்மாவின் உள்நோக்கம் புரியாமல் இந்த ருத்திரதாண்டவத்தை நிகழ்த்தி விட்டீர்கள். இந்த மாளிகைக் கதவைத் திறப்பதற்கு மாறாக, மகதச் சிறைக்கதவைத் திறவுங்கள் என்கிற கருத்து மறைமுகமாகத் தொக்கி நிற்பது தெரியவில்லையா?"

கோசல ஆத்திரம் அடங்கவில்லை; அஜாதசத்ருவைக் கூர்ந்து கவனிக்கிறது. பிறகு நாவை அசைத்தது: "மகதமே எரியப்போகிறதென்றால் சிறைக்கதவைப் பற்றிச் சிந்திப்பதாவது? அஜாதசத்ரு! எனது நோக்கத்தை, எனது வஞ்சினத்தை அம்பபாலியின் கால்களில் வைக்க ஓடோடி வந்தேன் அவள் என்னைக் கால்களால் உதைத்து விட்டாள். எனது கால்களையும் உடைத்து விட்டாள்."

பெருமூச்சு பறிகிறது. கண்கள் அம்பபாலியைக் கவனிக்கின்றன. "பாலி! எப்போது நிபந்தனையை நினைவுபடுத்தி விட்டாயோ, அது ஒப்புக் கொண்டுவிட்ட விஷயம். நீ அவசரப் பட்டுவிட்டாலும் நான் வந்த காரியம் பற்றி விளக்குவேன். நீ அஜாதசத்ருவுக்கு இடவேண்டிய ஆணை... எத்தனை ஆண்டுகள் என் தங்கை வைதேகி சிறையில் வதை பட்டாளோ, அத்தனை ஆண்டுகள்வரை பிம்பிசாரன் அதே சிறையில் அடைபட வேண்டும்."

"இது பயங்கரமான ஆணையாகத் தெரியவில்லையா வேந்தே?"

"உனது தியாகம் இதைவிடப் பயங்கரமாகத் தெரியவில்லையா அம்பபாலி?"

இருகண்களில் நெருப்பு; இருகண்களில் நீர்ப்பிரவாகம்; இருகண்களில் புயல் பிரவேசம். புயல் பிரவேசத்துக்குரிய புருவங்கள் நெளிகின்றன; புஜங்கள் துடிக்கின்றன; புலன்கள் ஒன்றுபடுகின்றன: "அம்மா எதற்காக ஆணையிடத் தயங்க வேண்டும்? இதோ, நானே சத்தியம் செய்கிறேன்! அம்மான் எண்ணத்தைச் செயல்படுத்துவேன்! பழிக்குப் பழி வாங்குவேன்! இது எனது சிசுநாக குலத்தின் மீது ஆணை! நாகக் கொடியின் மீது ஆணை!"

"இந்தச் சத்தியம் போதாது அஜாதசத்ரு! நீ அம்பபாலியின் மீது சத்தியம் செய், ஏற்கிறேன்!"

அக்கணமே அம்பபாலியை நெருங்கிய அஜாதசத்ரு, அவளது பாதத்தில் கைவைத்துச் சத்தியம் செய்கிறான்.

அந்தச் சமயத்தில்...

ஒற்றர்களிருவர் புரவிகளிலிருந்து இறங்கி வருகிறார்கள். மன்னரையும் பாலியையும் வணங்கி ஓலையைக் கொடுக்கின்றனர். ஓலையைப் பெற்ற அம்பபாலி, மன்னரிடம் நீட்டுகிறாள். மன்னரும் ஓலையைப் பெற்றுப் பிரித்து வாசிக்கிறார். முகம் மலருகிறது.

"மகதத்திலிருந்து ஆமாத்தியர் வஸ்ஸகாரன் எழுதியிருக்கிறார். நீ மகதம் நோக்கிச் செல்லலாம்!"

"தேவதத்தனிடமிருந்து எந்தச் செய்தியும் வரவில்லையே...?"

ஒற்றர்களில் ஒருவன் சொன்னான்: "தேவதத்தா மகதத்தில்தான் இருக்கிறார். ரிஷிமலையடிவாரத்திலிருக்கிறார். வாய்மூலமாகவே செய்தியனுப்பி இருக்கிறார். அவரது நண்பர்களை உடனடியாக எதிர்பார்க்கிறார்."

சிந்தனையில் சில கணங்கள் சிதறுகின்றன. பிரசேனஜித் சொன்னார்: "ஒற்றர்களே! நீங்கள் இங்கே தங்கலாம்.

நண்பர்கள் புறப்படுகிறபோது நீங்களும் உடன் செல்லலாம். வழிகாட்ட உங்களைத் தவிர வேறு நல்ல உறுதுணை இருக்க முடியாது."

ஒற்றர்கள் வணங்கி விடைபெற்றனர்.

"இந்த வாரத்திலேயே ஒரு நல்ல நாளில் புறப்பட ஆயத்தமாக இரு அஜாதசத்ரு !"

"விதுர்த்தபன் ?"

அஜாதசத்ருவைக் குறுக்கிட்டாள் அம்பபாலி, "விதுர்த்தபன் தேவைதானா அஜாதசத்ரு ?"

கேள்வியின் மூலம் கோசல நாடியைப் பிடித்துப் பார்க்கிறாள் அம்பபாலி.

பிரசேனஜித் விடை பகர்ந்தார் :

"தேவையா என்றால் ? இரண்டு கண்களில் எது தேவை என்பது போலிருக்கிறதே உனது கேள்வி பாலி ?"

"அவன் நாட்டின் இளவரசன்."

"இவன் மட்டும் ? அழிந்தால் இரு கண்களுமே அழிந்து போகட்டும்."

பிரசேனஜித் கூறிய மறுமொழி பிரமிக்கச் செய்து விட்டது.

அம்பபாலி ஆனந்தக் கண்ணீருடன் கோசல மன்னர் பாதம் பணிகிறாள் : "நிபந்தனையில் மாறுதல் இல்லை. ஆனால், நினைவில் இந்தச் சித்திரம் நித்தமும் சிரிக்கும்."

"எழுந்திரு பாலி ! நான் பிம்பிசாரன் அல்ல : பிரசேனஜித் என்பதை மீண்டும் நினைவுபடுத்துகிறேன் !"

"பிரபோ, உள்ளே வந்து அமரலாம் !"— பாலி குரலில் பாகு தெரிகிறது.

பிரசேனஜித் உள்ளே பிரவேசிக்கிறார்.

"ஆமாம் ; மகத சக்ரவர்த்தி தலையைக் கேட்டு அனுப்பினேன். மறுமொழியே காணோமே பிரபோ ?"

"செய்தி வந்து ஒரு வாரத்துக்கு மேலாகிவிட்டது பாலி ! உன் காதுகளில் ஏன் போடவேண்டும் என்றிருந்து விட்டேன். பிம்பிசாரன், உன் தலையை வெட்டித் தங்கப் பேழைக்குள் அனுப்பி வைக்க எழுதியிருந்தான். அதுவும் வெறுமனே புதைக்க மாட்டானாம் ; முத்தமிட்டுப் புதைக்கிறானாம் !"

அஜாதசத்ரு ஆத்திரம் கொண்டான் : "அந்தப் பிம்பிசாரன் மனிதனா ? அரக்கனா ?"

"நீ தான் நேரில் பார்க்கப் போகிறாயே ! மனிதனாக இருந்தால் அவன் சொன்னபடி நடந்து கொண்டிருக்க வேண்டுமே ! நேரமாகிறது. இரவு சந்திப்போம். இது குறித்து மேலும் பேசுவோம்."

கோசல மன்னர் பிரசேனஜித் மனநிறைவுடன் விடை பெறுகிறார்.

மூன்றாவது நாளே முகூர்த்த நாளாய் இருந்தது.

அன்று வெள்ளிக்கிழமையாக இருந்ததால், புலரியத்துச் சுக்கிர ஓரையில் புறப்பட வேண்டும் என்று முடிவாகியது.

அலசி எடுக்கப்பட்ட ஐம்பது சாகசக்கியங்கள் நிரம்பிய வீரர்களுடன் அஜாதசத்ருவும் விதுர்த்தபனும் புறப்பட இருந்தனர்.

விடிந்தால் மகதப் பயணம்.

அஜாதசத்ரு அமைதியாக நடந்துகொள்ள என்னென்ன புத்திமதிகளைச் சொல்ல வேண்டுமோ அனைத்தையும் எடுத்துரைத்தாள் அம்பபாலி.

அன்று மாலை அசிரவதியாற்றங்கரையில் காதலர்கள் சுதந்திரமாக உலவினர். கைகோர்த்து உலவினர். அடிக்கடி கலகலவென்று சிரிப்பொலி யெழுப்பி ஆற்றங்கரையை அமர்க்களப்படுத்தினர். தோளோடு தோள் உரசுகிறபோது அவர்களுள் மொட்டாகி இருந்த காமப்பூ, கண் சிமிட்டியது. கொஞ்சம் ஏமாந்தாலும் மலர்ந்து விடுவேன் என்று எச்சரிக்கை செய்தது.

ஒரு கட்டத்தில் அவர்களிருவரும் கண்ணோடு கண் கவ்வ, கருத்தொடு கருத்து ஒவ்வ, பண்ணொடு சுருதி பண்ணும் பனுவலை— இன்பத்தை எண்ணிப் பார்க்க...

—தென்திசைத் தூதுவனான தென்றல் வந்து தழுவிக் கண்காணிக்கிறது: 'உரிமைகள் வழங்கிவிட்ட பிறகுதான் கவனத்தின் கண்களைத் திறந்து வைக்க வேண்டும்...'

"வஜ்ஜிரை !"

"ம்ஹூம் ! இப்போது தண்டிப்பவர்களில்லை என்பதால் நம்மை நாமே தண்டித்துக் கொள்ளக்கூடாது."

காமப்பூவின் கண் சிமிட்டு, காரிய சித்தி பெறச் செய்யவில்லை. அது மொட்டாகவே முணுமுணுத்தது.

'ஆனால், இத்தனை நாட்களை விரகதாபங்களால் எவ்வாறு கழிப்பேன்?' என்கிற கேள்விக்குறி மட்டும் அங்கத்தின் அவசியமான பாகங்களில் எழுந்து அடங்கியது.

அஜாதசத்ருவும் தனது உணர்வினை அடக்க முடியாமல், வஜ்ஜிரையை வாகுவலயங்கள் ஒலிக்க அணைத்துத் தேன்முத்தம் வழங்கிவிட...

நெருப்பின் திருவுருவான வெங்கதிரோன், இந்தக் காதலர்களின் காமத்தீயால் மேலும் சுடுபட்டவனே போன்று விரைந்து மேலைக்கடலுள் மூழ்கிக் குளிர்கிறான்.

காயாம்பூவனை அந்திமாலைப்போது இப்போது வஜ்ஜிரையை நன்றாகச் சுட்டு விட, 'நீறினால் உள்ளங்கள் நீறி விடும் என்று மாறினாள்; மனமாறினாள்; இடமாறினாள்!

"போதும் புறப்படுங்கள்; நேரம் ஆகிறது."

பெண்மையின் கவல், குரலில் தெறித்தது.

ஓ... பிரிவாற்றாமையே...!

பொழுது பலபலவென்று விடிகிறபோது...

அஜாதசத்ருவின் பயணம் இரகசியமாய்த் தொடங்கியது. விதுர்த்தபன் உடன் புறப்பட்டான். ஐம்பது வீரர்கள் ஏற்கெனவே புறப்பட்டுச் சிராவஸ்தி எல்லையில் காத்திருக்கச் சென்றுவிட்டனர்.

அனைவரையும் வணங்கி விடைபெற்ற அஜாதசத்ரு, வஜ்ஜிரையை இரகசியமாக நோக்கி, உதடுகளை நாவால் நீவிக் கொள்ள, இதே எதிருணர்வு வஜ்ஜிரைக்கும் ஏற்பட்டது. 'ஆ? இந்த நினைவு போதும்' என்ற எடுத்துக்காட்டோ இது?

இரு கருநீலப் புரவிகள் வேக வேகமாக விரைந்தன. நீள் விழிகளிரண்டில் நீர் முத்துக்கள்.

ஒரு பிறை நாட்கள் குதிரைகளின் குளம்படிகளில் குழைந்து போயின.

அசிரவதியாற்றங் கரையோரமாகவே தென்கிழக்குப் பக்கமாகச் சென்று *பாடலிக் கிராமத்தை அடைந்தனர்.

கங்கையும் சோணையாறும் கலந்து சங்கமிக்கும் அந்த இடம் கண்களுக்குக் கவிதாஞ்சலி செய்தது.

---

* இன்றைய பாட்னா.

அஜாதசத்ருவின் மனத்தில் அந்த இடம் ஏனோ ஆழமாகப் பதிகிறது.

"விதுர்த்தபா! இந்த இடம் ஏனோ என்னை மயக்குகிறது. ஒரு புதிய சகாப்தமே— ஒரு புதிய சரித்திரமே இங்கிருந்து தொடங்குவது போன்ற உணர்வு தலை தூக்குகிறது. இங்கே சற்று ஓய்வெடுத்துப் புறப்பட்டால் என்ன?"

"அஜாதசத்ரு! ராஜகிருகம் அருகில்தான் இருக்கிறது. ஒரே மூச்சில் புறப்பட்டால் இருட்டுவதற்குள் ரிஷிமலையை அடைந்து விடலாம்."

"இருட்டினால்தான் என்ன? கையில் அரசலாஞ்சனை இருக்கிறது. யார் நம்மைத் தடுக்கப் போகிறார்கள்? இறங்கு; சற்று இளைப்பாறிச் செல்வோம்."

புரவிகளை விட்டிறங்கிய இருவரும் நடையாகச் சங்கமத்துக்குச் சென்றனர். அஜாதசத்ரு அளவுக்கு மீறி ரசிக்கிறான். 'இங்கே ஒரு நகரை எழுப்பினால் என்ன?' என்று மனம் கேட்டுக் கொள்கிறது.

இரு நாழிகைப்போதுவரை அந்த அற்புதமான இயற்கைச் சூழலைத் துய்த்து விட்டுத் திரும்பினர். அப்படித் திரும்பி வருகிறபோது விதுர்த்தபன் 'சரக்' கென்று வாளையுருவ, "என்ன?" என்று அதிர்ச்சியுடன் கூடிய கேள்வியைக் கேட்டு அஜாதசத்ரு திரும்ப, அங்கே மிகப்பெரிய ராஜநாகம் ஒன்று பயங்கரமாகப் படமெடுத்து 'உஸ்'ஸென்ற பெருத்த சத்தமெழுப்பி ஆடிக் கொண்டிருந்தது.

அது ராஜநாகங்களுக்கெல்லாம் ராஜ ராஜநாகம் போல—சக்ரவர்த்தி நாகம் போலச் சீற்றம் கொடுத்துத் தலையை இடவலமாகத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தது.

பிடகம்-24

குருதிக் குங்குமம்

ரிஷிமலையை அடைகிறபோது இரவின் முதல் யாமம் முடிந்திருந்தது.

மலைக் குகையுள் ஒரு நீண்ட கல் விரிப்பில் படுத்துக் கொண்டு அரைத் தூக்கத்திலிருந்த தேவதத்தன், நண்பர்கள் வந்து விட்டார்கள் என்கிற வெல்லச் செய்தி கேட்டுத் துள்ளியெழுந்தான்.

ராஜகிருகத்தைச் சுற்றி ஐம்பெரும் மலைகள்; பலப்பல குகை வாசஸ்தலங்கள். எத்தனையோ விதமான சிரமணர்கள் அங்கே வாழ்ந்து வந்தனர். அவர்களுள் பௌத்த சிரமணர்கள், கௌதம புத்தர் எழுச்சிக்குப் பிறகு அங்கே குடிகொள்ளத் தொடங்கினர். மகாமலையான வெஹாரா மலையில் மட்டும் அதிகமாக ஆள் நடமாட்டம் இருப்பதில்லை. பகலிலும் அங்கே விலங்குகள் பகிரங்கமாக உலவும்.

நேமிக்கப்பட்டிருந்த இரகசிய வீரர்கள், அஜாதசத்ருவையும் விதுர்த்தபனையும் அழைத்துக் கொண்டு வந்தனர். இருவரையும் அன்புடன் அணைத்து வரவேற்றான் இளம் புத்தபிட்சுவான தேவதத்தன்.

"உணவுக்கு ஏற்பாடு செய்யட்டுமா, அசோகசந்தா?"

"வேண்டாம் தேவதத்தா! பாடலிக் கிராமத்திலேயே வயிறுபுடைக்க உண்டு முடித்தோம். சற்று ஓய்வு கொண்டால் தாழ்விலை!"

"நல்லது ; ஓய்வு கொள்ளுங்கள். நீங்கள் எந்த நேரத்தில் வருகை தந்தாலும் உடனே செய்தியறிவிக்கச் சொல்லியிருக்கிறார் மகத ஆமாத்தியர் வஸ்ஸகாரன். நான் ஆளையனுப்பிவிட்டுத் திரும்புகிறேன்."

—தேவதத்தன் வெளியே சென்றான்.

"விதுர்த்தபா ! நீ உனது மகதமாமனைச் சந்திக்கப் போகிறாய் ; கவனம்."

"நீ உன் தந்தையைச் சந்திக்கப் போகிறாய் என்று சொல் !"

"தந்தையா ? அவன் இறந்து இன்றைக்கு இருபது ஆண்டுகளாய் விட்டன."

அப்போது தேவதத்தன் உள்ளே நுழைந்தான். நண்பர்கள் தரையில் கோரைப் பாய் விரிப்புப் போட்டுப் படுத்திருந்தனர்.

"ஏதும் பயணத் தொல்லை இல்லையே ?" என்றான் தேவதத்தன்.

"ஒரு தொல்லையுமில்லை. மகத லாஞ்சனையும் கோசல லாஞ்சனையும் இருக்கிறபோது என்ன தொல்லை ஏற்பட்டுவிட முடியும்? பாடலிக் கிராமத்தில்தான் ஒரு பெரிய ராஜநாகத்தைக் காண நேர்ந்தது."

"ஐயையோ ! ராஜநாகத்தின் கண்களில் படக்கூடாதே !"

"பட்டாய்விட்டது. நல்லதோ, கெட்டதோ ? ஆனால், நல்லபடியாக முடிந்தால் அதே இடத்தில் புதிய தலைநகரம் உருவாக்கிப் பாடலிபுத்திரம் என்று பெயர் வைப்பதாகப் பிரார்த்தனை செய்து கொண்டேன். ஒருகால் நான் இறந்துபட்டால் அங்கே என்னைப் புதையுங்கள்."

'ராஜகிருகம் என்ன செய்தது ?"

"இது ஒரு *பாவபூமி ! என் தாயைக் கொடுமைப் படுத்தியதல்லவா ?" என்று கூறிக்கொண்டே அஜாதசத்ரு திரும்பிப் பார்க்க, விதுர்த்தபன் குறட்டைவிடத் தொடங்கி இருந்தான்.

தேவதத்தனும் பக்கத்தில் படுத்துக் கொண்டான்.

நண்பர்களிருவரும் பல்வேறுபட்ட பிரச்சனைகளைப் பேசினர். இரண்டு நாட்களுக்கு முன்பு புத்தபகவான் ராஜகிருகத்துக்கு எழுந்தருளியதும், சம்வாதங்கள் நிகழ்த்திய செய்தி குறித்தும் பேசினர். தனது கடமை முடிந்ததும் பௌத்த சங்கத்துக்குச் செல்லப் போவதாகவும் தேவதத்தன் அறிவித்தான். பிறகு இருவரும் சற்றே கண்ணயர்ந்தனர்.

அஜாதசத்ருவின் கனவில் வஜ்ஜிரை வசந்த நடம்புரியத் தொடங்கினாள்.

பொல்லென்று விடிந்த பொழுதைக் கண்டு கொல்லென்று சிரித்துப் புறப்பட்டன, மெல்லென்ற புள்ளினங்கள்.

மகத மகா ஆமாத்தியர் வஸ்ஸகாரன் ஓர் எதிர்பார்ப்பின், புயல் சுழிப்பில் விரைந்தோடி வந்துவிட்டார். ஆ ! எங்கள் அஜாதசத்ரு எப்படி இருப்பார் ? எம்பிரான் சாரமாயிருக்க வேண்டுமேயல்லாது பிம்பிசாரனாய் இருக்கக்கூடாதே. இறைவா...!

செவிமடுத்த தேவதத்தன், எழுந்தோடி வந்து ஏமமுற வரவேற்கிறான் ; அழைத்துச் செல்கிறான் ; அஜாதசத்ருவை அறிமுகம் செய்கிறான்.

---

* 'சிக்காதா' என்கிறது ரிக்வேதம். சிசுநாகர்கள் வாழ்ந்ததால் இவ்வாறு சொல்லப்பட்டது. ராஜகிருகம் பழம்பெரும் நகரம். இராமாயணத்தில் இதனை வசுமதி என்றும் பின்னர் சிசுநாகரால் ராஜகிருகம் என்றும், பின்னர், பிம்பிசாரபுரம் என்றும் பிரசித்தி பெற்றது.

"ஆமாத்தியரே ! இவன் அசோகசந்தன் : இவன் கோசலகுமரன் விதூர்த்தபன்."

அடுத்து...

இரு கரங்களையும் நீள நீட்டிய வஸ்ஸகாரன், மகத இளவரசன் அஜாதசத்ருவுக்கு முறைப்படி வணக்கம் போக்கி, "மகத இளவரசே ! உங்கள் மகத ஆமாத்தியன் ஏதேனும் தவறிப் பிழைசெய்திருப்பின் மன்னிக்க !"

பதறிப்போனான் ராஜகிருக ராஜகுமாரன் : "ஐயகோ, ஆமாத்தியரே ! இது என்ன பெரிய பாவத்தைச் சுமத்து கிறீர்கள் ? நீங்கள் செய்த உதவிக்கு இந்த மகத ராஜ்யத்தையே வெகுமதியாக அளித்தாலும் போதாதே !"

அஜாதசத்ரு, ஆமாத்தியர் கால்களில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து பணிந்தான். அவனை அன்புடன் பற்றி எழுப்பிய வஸ்ஸகாரன், கூர்ந்து கவனித்து, ஏதும் புரியாமல் தவித்து "ஆ ! என்னமாய் வளர்ந்திருக்கிறான் ? பிம்பிசாரனைப் பிழிந்து பிறந்த பிம்பம் போல... ஆனால், இவன் எம்பிரான் வரம் பெற்று எழுபாருல ஏந்தல் போல் காட்சி தருகிறானே ! அஜாதசத்ரு... அஜாதசத்ரு...'

மனம் முனகிக் கொள்ள, வயதான கரங்கள் அவனது தாடைகளைத் தடவி விட, கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிகிறது.

தேவதத்தன் அதிர்ந்து போனான். இவன் வைதேகிப் புத்திரனா ? அஜாதசத்ருவா ?

"யுவராஜன் ! என் வணக்கங்களையும் ஏற்றுக் கொள்ளுங்கள் யுவராஜன்" என்று பணிகிறான் தேவதத்தன்.

"தேவதத்தா ! உன்னிடம் உண்மையைச் சொல்லாதற்கு நானல்லவா மன்னிப்புக் கோர வேண்டும் ? என்றும் நாம் நண்பர்களே !"

தேவதத்தன் முறுவலில் விதூர்த்தபன் முகம் பிரதிபலித்தது. ஓ... தேவதத்தா ! நீ வல்லமைக்குரியவன்...

"ஆமாத்தியரே ! முதலில் நான் எனது அன்னையைத் தரிசிக்க வேண்டும்."

"ஏற்பாடு செய்வேன்" என்று கூறிய ஆமாத்தியர் வஸ்ஸகாரன், விதூர்த்தபனிடம் சென்று, அவனைத் தழுவி, "கோசல ராஜகுமாரா ! உன் இனிய நட்பைப் பற்றி அடிக்கடி அம்பபாலி எழுதுவார்கள். பிம்பிசார சக்ரவர்த்திக்கும் பெண் இருக்கிறாள். * சண்டி என்ற பெயர்கொண்ட மகா அழகி. நான் அவளை உனக்குப் பரிசாக வழங்குவேன்! உன் மைத்துனன் அஜாதசத்ருவுக்குத் தோளோடு தோள் நின்று கடைசி வரை உதவவேண்டும்" என்றார்.

"அப்படி ஒரு தங்கை எனக்கிருக்கிறாளா ? அவளை நான் பார்க்க வேண்டுமே ! இந்தத் திருமணத்தை நான் ஆதரிக்கிறேன் !" என்றான் அஜாதசத்ரு.

விதூர்த்தபன் கரம் கூப்பித் தலை பணிந்தான்.

வஸ்ஸகாரன், அஜாதசத்ருவை நோக்கி விளக்கினார் : "இளவரசே ! நாளைய மறுநாள் செல்லனாதேவியின் மூத்த குமாரன் ஹல்லனுக்கு யுவராஜ பட்டாபிஷேகம். நீங்கள் வருகை தந்த சந்தர்ப்பம் இப்படியாக முடிந்திருக்கிறது. உணர்ச்சிவயப்படாமல் செயலாற்ற வேண்டும். இதே விழாவில் நீங்கள் உங்கள் தந்தையைச் சந்திக்கிறீர்கள். எப்படிச் சந்திக்கிறீர்கள் என்பதைப் பிறகு சொல்லியனுப்புவேன். இன்றிரவு நீங்கள் மகத மாதேவியைச் சந்திக்கிறீர்கள். இருட்டியதும் எந்த நேரத்திலும் உங்களை அழைத்துச்

* Other Children. (of Bimbisaran) Halla and Vihalla by Chellana. Kaala. Silavat. Jayasena and a girl Chundi by other wives—(Political History of Ancient India by Hemachandra Roy Choudhuri. Page-185)

செல்ல எனது அந்தரங்க வீரர்கள் வருவார்கள். நான் விடை பெறுகிறேன்!"

அஜாதசத்ருவை மீண்டும் தழுவி, தமது அன்பினை வெளிப்படுத்திப் புறப்பட்டார் வஸ்ஸகாரன்.

அன்றைய பகற்போது மலையடிவாரங்களைச் சுற்றிப் பார்ப்பதில் கழிந்தது.

இரவு பூத்தது: அதன் நடுவே நள்ளிரவின் பயங்கர நர்த்தனம்.

சாதாரணப் போர்வீரர்களின் கோலம் புனைந்த அஜாதசத்ருவும் விதுர்த்தபனும், ஒரு தோணியில் கங்கை நதியின் இளையாற்றில் மெல்ல நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒரே ஒரு வீரன் தோணியைச் சத்தமின்றி நகர்த்தி வருகிறான்.

இரகசியமான முறையில் பலத்த காவல்களை ஏற்படுத்தியிருந்தார் வஸ்ஸகாரன்.

சிறைக்கோட்டத்து நேர்வாயிலுள் புகாமல், சுற்றியிருந்த பிரம்மாண்டமான மதில் சுவர்களில், பின்புறமாக ஓடிக் கொண்டிருந்த நதிப்புறத்து மதில்சுவர் உடைபட்டிருந்ததால், அதன் வழியே ஏறிக் குதித்துச் செல்ல இந்த ஏற்பாடு.

ஆங்காங்கே ரகசிய வீரர்களின் கண்காணிப்பு இருப்பினும், அவர்களுக்கு வருகை தருபவர்கள் யார் என்பது தெரியாது. ஆமாத்தியர் உத்தரவு: அதன்படி நடந்து கொள்ள வேண்டும்.

இருவரும் மதிலேறிக் குதித்தனர்.

சிறைச் கோட்டத்துப் புதிய அதிகாரி காண்டபனும் இதற்கு உடந்தையாக இருந்தான். அவன் இரண்டாம்

அமைச்சர் சுநீதனுடைய தம்பி. மேல் பதவிக்கு எதிர் பார்த்து வஸ்ஸகாரன் வயமானவன். முன்பிருந்த சிறைக் கோட்டத்து அதிகாரி சிம்மநாகன் சென்ற ஆண்டுதான் சிவலோகம் போய்ச் சேர்ந்தார்.

சிறைக்கோட்டத்துள் பிரவேசித்ததும் இரு வீரர்கள் கலந்து கொண்டு வழி காட்டுகிறார்கள். ஒரு குறிப்பிட்ட இடம் வந்ததும் சமிக்ஞை மூலம், வைதேகி அடைபட்டிருந்த சிறையறையைக் காட்டிவிட்டு நகர்ந்து சென்று மறைந்தனர்.

அறை நாடி நின்ற அஜாதசத்ரு, சிறை நாடிகண்டு, வாழ்வின் குறை நாடிகொண்டு, நிறை நாடியற்றுப் படுத்திருந்த நிவேதத்துக்குரிய அன்னையைக் கவனிக்கிறான்.

"அம்மா!"

தொண்டையில் கூழாங்கல் புகுந்து கொண்டது போன்ற இணறல்.

எங்கோ கன்றொன்று 'ம்மா' என்று தாய்ப் பசுவை அழைக்கும் குரல் காற்றில் தேய்ந்து, அந்தப் பயங்கர அமைதியைக் கிழித்துக் கொண்டு எதிரொலிக்கிறது.

எங்கும் தீப்பந்தங்கள் தேய்ந்து கொண்டிருந்தாலும், அங்கே மட்டும் புதிய தீப்பந்தம் கனத்து எரிந்து கொண்டிருந்தது ஓர் ஏற்பாடுதான்.

கன்றின் குரல் கேட்டுத் தாய்ப் பசு எழமுடியாத பலவீனத்துடன் எழுகிறது.

அந்த வைதேகிப் பசுவுக்கு அஜாதசத்ரு வருகிற செய்தி முன்னமே தெரியும். தட்டுத்தடுமாறி எழுந்து வந்த வைதேகி, சிறைக்கம்பிகளைப் பற்றிக்கொண்டு, இருவரையும் கவனிக்கிறாள்.

—ஆ! இவன்தான் அஜாதசத்ரு... ஓ...! எனது கணவரை இருபது வருடங்களுக்கு முன்பு பார்த்ததுதான். இப்போது அவர் எப்படி இருப்பாரோ? ஆனால், அவரை அன்றைக்குப் பார்த்தது போல இன்றைக்கு என்முன் நிற்பது என் மகன், என் மகன்... ஆ! என் கண்களே பட்டு விடும் போலிருக்கிறதே...!

ஆனால், அஜாதசத்ரு?

கண்களில் நீர் மாலையிட....

...ஓ, தாயே! இப்படியா நீங்கள் ஒட்டி உலர்ந்து, உருமாறி, நிறமாறி, உண்மைகளைக் காலடியில் புதைத்துத் தடுமாறித் தாறுமாறாகிக் காணப்பட வேண்டும்?

கண்களில் நீர் பிரவகிக்கக் கரங்களை வெளியே நீட்டி அழைக்கிறாள் வைதேகி.

அருகே வந்து நிற்கிறான் அஜாதசத்ரு. கம்பிகளுக்கிடையே அவனைத் தழுவித் தலையொடு தலை புதைத்துக் கன்னங்களில் முத்தமிட்டு, கண்ணேறு கழித்து, "அம்பபாலிக்கு என் நன்றியறிதலைச் சொல்லடா ராஜா, மறவாமல் சொல்!" என்றாள்.

முத்தமாரி பொழிகிறாள்...

ஆ! வாயிலிருந்து வரும் முதல் வார்த்தையே அம்பபாலியா? இதுதான் மகா மானுஷ்யமோ?

அடுத்து விதுர்த்தபனை நோக்குகிறாள் வைதேகி: "விதுர்த்தபா, இப்படி வா!"

அருகே சென்ற விதுர்த்தபனை உச்சி முகர்ந்து, "என் மகனுக்கு நீ நண்பனாகவே இரு! மைத்துனன் என்பது அநித்தியமானது. உன் தந்தையிடம் சொல். இதே சிறைக்கு அவர் வருகை தந்தபோது என்னை ஒன்று கேட்டார். அதற்கு நான் சொன்ன அந்தப் பொய்தான் இந்த அஜாதசத்ருவை இப்படி உருவாக்க முடிந்தது என்று சொல்!" என்றாள்.

"எனக்கே தெரியும் அத்தை! இந்தச் சிறைக்கூடத்தை எரித்துச் சாம்பலாக்கி என் நெற்றியிலிட்டு வஞ்சம் தீர்ப்பேன்!"— பொங்கினான் விதுர்த்தபன்.

"வேண்டாமடா, ராஜா! என் களங்கத்தை எரியுங்கள், அது போதும். எவரையும் பழிவாங்கும் நோக்கம் வேண்டாம்."

அஜாதசத்ருவின் நெஞ்சில் புதைந்திருந்த வஞ்சினம் நெருப்பாய் எரிகிறது. அவன் சூன்யமாய்ச் சிரிக்கிறான்.

"என்னடா அஜாதசத்ரு, ஏதோ மாதிரிச் சிரிக்கிறாய்?" என்று தீனமாகக் கேட்கிறாள் வைதேகி.

"நெற்றியில் குங்குமம்கூட இல்லாமல் இருக்கிறீர்களே, அதைக் கண்டுதான் சிரித்தேன் தாயே!"

இப்போது வைதேகி சூன்யமாய்ச் சிரிக்கிறாள். 'ஜனகபுரத்து அஜாதசத்ரு மாண்டு விட்டபோது, அவளுக்குக் குங்குமம் ஒரு கேடா' என்று மகத சக்ரவர்த்தி யிட்ட ஆணையைப் பற்றியா சொல்லுவாள்? ஆனாலும் அவள் சொன்னாள்:

"ஓ... அதுவா? நானா குங்குமம் வைத்துக் கொள்ள மறுக்கிறேன்? இங்கே அதனை எனக்கு வழங்கத் தடை போட்டிருக்கிறார்கள். அது ஒரு கேடா என்பது சக்ரவர்த்தியின் அலட்சியம்."

நெஞ்சில் எரிந்த நெருப்பு வெடித்தது. அடுத்து உடைவாளையுருவிய அஜாதசத்ரு, தனது வலக்கரத்துப் பெரு விரலைக் கீறி, ரத்தம் பீரிடச் செய்கிறான்.

"அஜாதசத்ரு! என்ன இது?" அலறுகிறாள் வைதேகி.

"குங்குமம் தாயே!" என்று கூறிய அஜாதசத்ரு, குருதி பீரிட்ட கட்டை விரலைத் தாயின் நெற்றியில் அழுந்த அழுந்த மும்முறை இடுகிறான். "மகத தெய்வமே! தெய்வங்களுக்குத் திலகமிட குருக்களுக்குத்தான் உரிமையுண்டு என்பதல்ல; தூயதான பக்தர்களுக்கும் உண்டு. நான் இட்ட இந்தக் குங்குமம்— அழுந்த அழுந்த இட்டக் குருதிக் குங்குமம், உங்களைச் சிறை மீட்கும் வரை கலையக் கூடாது. விரைவில் மீட்பேன!"

இருவரும் ராஜகிருகத் தெய்வத்தைக் காராக்கிருகத்தில் வழிபட்டு விடைபெற்றனர்.

காத்திருந்த காவலர்கள் மேகம் போல் கலைகின்றனர்.

வேத காலத்து ரிஷிகள், நெருப்புப் பந்தாய் உதயம் காணும் கதிரவனைக் கண்டு, கால்முட்டியில் கையூன்றி, கண்களை மலர்த்தி, 'இது எப்படி உதயம் காண்கிறது? இதன் தாத்பரியம் என்ன?' என்று மூழ்கிய சிந்தனையின் வெளிப்பாடே மானுட நாகரிகத்தின் மகுடமானது என்பதை நினைவுகூர்பவனே போன்று, ஒரு கல்லின் மீது அமர்ந்து முட்டிமேல் கையூன்றி சூரியோதயத்தை நோக்கிச் சிந்தித்துக் கொண்டிருந்தான் இளம் பிட்சு தேவதத்தன்.

அங்கே வருகை தந்த அஜாதசத்ருவும் விதுர்த்தபனும், "தேவதத்தா! இன்றைய பொழுதைத் தலைநகரைச் சுற்றிப் பார்ப்பதில் கழிக்கலாமே!" என்றனர்.

சிந்தனாவாதி உட்கார்ந்த இடத்திலிருந்தே உலகைப் பார்க்கிறான் என்பது போலக் கண்களை அண்ணாந்து நோக்கிய தேவதத்தன், "நான் பார்த்தாய் விட்டது. நீங்கள் சென்று வாருங்கள். கவனமாகத் திரும்புங்கள். துணைக்குக் குமாரதேவனை அழைத்துச் செல்லுங்கள். நான் புதிய போராயுதம் குறித்துச் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்" என்றான்.

அவர்கள் புறப்பட்டனர்.

மூன்று புரவிகள் அவர்களைச் சுமந்து கொண்டு ராஜகிருகத்தை வலம் வந்தன.

ராஜகிருகத்தின் எழிலார்ந்த தோற்றம் கண்டு விதுர்த்தபன் விதிர்த்துப் போனான். தனது சிராவஸ்தி தலைநகரை விடச் சிறப்புமிக்க நகரம். மகத சக்ரவர்த்தி பிம்பிசாரன் கர்வத்துக்குக் காரணம் புரிந்தது. ராஜகிருகப் பெண்களிடம் ஏதோ ஓர் இரகசிய அழகு இருப்பது கண்டு வியந்து போனான்.

பிரம்மாண்டமான கோட்டையை அங்கிருந்தே நோக்குகிறார்கள். பலத்த கோட்டை. பல்வேறுபட்ட ஆயுதப் பொறிகள் நிறைந்த கோட்டை. முற்றுகை என்று வந்து விட்டால், மூன்றாண்டுகளாலும் உள்ளே நுழைய முடியாத அளவுக்கு வசதிபடைத்த கோட்டை. வஸ்ஸகாரன் உதவி மட்டும் இல்லையென்றால், மகதத்தை வேண்டுமானால் வென்று விடலாம்; கோட்டையுள் நுழையவே முடியாது என்பது புலனானது.

ரிஷிமலைக்கு அவர்கள் திரும்புகிறபோது, அந்திமாலைப்போது அழகுத் தோற்றமளித்தது.

தேவதத்தன், நண்பர்கள் வருகைக்காகக் காத்திருந்தான். நண்பர்கள் வந்ததும், நாளைய விழாவில், அஜாதசத்ரு எவ்வாறு மகத சக்ரவர்த்தியைச் சந்திக்க வேண்டும் என்பதை ஆமாத்தியர் வஸ்ஸகாரன் சொல்லியனுப்பியதை விளக்கினான்.

அந்த விளக்கத்தைக் கேட்டு அதிர்ந்து போனான் அஜாதசத்ரு.

இப்படியா சந்திப்பது?

பிடகம்-25

ரதமுசாலா

16881
3289301

மகதத் தலைநகரமே—மகோன்னத விழாக்கோலம் பூண்டு திகழ்கிறது.

ராஜகிருகக் கொலுமண்டபமே அரசப் பெருமக்கள் நிறைந்து 'அம்மவோ' என்று வியக்கச் செய்கிறது !

பழுத்த வேதப் பழமாகி இருந்த அந்தணர் கூட தண்டன், பல வேதியர்கள் சூழ, யாகம் வளர்த்தி ராஜ மந்திரங்களை ஓதிக் கொண்டிருக்கிறார்.

எங்கு நோக்கினும் மையரி நெடுங்கண் மாதர்கள் ; மதர்த்த மெய்யறி நெடுந்தோள் ஆடவர்கள்.

நடுவே...

பொய்யிலாப் புகழ்கொண்ட பொன்னாசனத்தில், பூரிப்பு கண்களில் மின்ன, புளகங்கள் தோள்களில் தெறிக்க எவர் இங்கு எனை எதிர்ப்பவர் என்கிற இறுமாப்பின் இமயமாய் அமர்ந்திருக்கிறார் மகத சக்ரவர்த்தி பிம்பிசாரன். பக்கத்தே சொல்லொணாத் தீமையின் சொரூபம் போல அமர்ந்து காணப்படுகிறாள் பட்டத்தரசி செல்லனாதேவி. இன்றைக்கும் அன்றைக்கும் இருபதே ஆண்டுகள் இடைவெளியானாலும் இவர்கள் அன்றைக்குப் பார்த்தது போலல்லவா அழகுற இருக்கிறார்கள் ? வயது தெரிந்தாலும் வனப்பு மாறவில்லையே ! இதுதான் அரச போகமோ என்று வந்திருந்த மகத புலவர்களில் ஒருவன் கவிதை இயற்றிக் கொண்டிருந்தான்.

யாகசாலைக்கு முன்னே நாக சப்பரத்தில் இளவரசர்கள் ஹல்லன், விஹல்லன் அமர்ந்திருந்தனர். நேற்று வரை ஹல்லனுக்கு மட்டுமே இளவரசு முடிசூட்டு நடத்துவது எனஇருந்தது. இரவு ஏற்பட்ட செல்லனாதேவியின் மஞ்சமந்திரம், பொழுது விடிகிறபோது விஹல்லனுக்கும் சேர்த்து என்று ஏற்பாடாய்விட்டது. பிம்பிசாரன் இட்டதுதானே பிரகடனங்கள் ? இல்லையென்றால்...

அதோ, அண்மைக் காலத்தில் மணந்த சூரசேன நாட்டின் தலைநகரான (வட) மதுரை இளவரசி ஹேமா, மகத இளைய தேவியாக அமர்ந்திருப்பாளா ? பதிலிலாப் பாவையான புதிய கணிகை பத்மாவதி அமர்ந்திருப்பாளா ?

அவ்வப்போது படித்து மகிழும் பனுவல் ஹேமா. அடிக்கடிப் படித்துமகிழும் பாசுரம் பத்மாவதி.

எண்ணிப் பார்க்கிறான் தொலைவில் அமர்ந்திருந்த மருத்துவமேதை ஜீவகன்.

அந்த விழா இனிது நிறைய மகா சேனாதிபதி ராஜநாகன் சுற்றிச் சுற்றிச் செயல்படுகிறான். மங்கல வாத்தியங்களுடன் மகத பேரிகையும் முழங்கிக் கொண்டிருக்கிறது.

அந்தணர் கூடதண்டன், இரு இளவரசர்களுக்கும் யுவராஜப் பட்டாபிஷேகம் செய்ய எழுந்தபோது...

சத்துருவுக்கு நிகரான ஒரு செய்தி சத்ருவின் மூலம் சந்திக்க நுழைகிறது.

மகா ஆமாத்தியர் வஸ்ஸகாரன் துணிந்தே மகத சக்ரவர்த்தியை நெருங்கி, "சக்ரவர்த்தி ! கோசல மன்னர் பிரசேனஜித் அவசரத் திருமுகம் அனுப்பியிருக்கிறார். அவர் வாய் மூலம் சொல்லியனுப்பிய செய்தி, திருமுகத்தைப் படித்த பிறகு இளவரசுத் திருமுடியை சூட்டித் திருமஞ்சனம் செய்யலாம் என்பது !" என்றார்.

பிம்பிசாரன் பிதுங்கிப் போகிறார்.

"செய்தி கொண்டு வந்தவர்களை வர சொல்லுங்கள்."

அஜாதசத்ருவும் விதுர்த்தபனும் குறுந்தாடி, மீசைக் கோலமாக நுழைகிறார்கள். ஒரு பக்கமாக பிட்சுக் கோலத்தில் அமர்ந்து கவனிக்கிறான் தேவதத்தன். மனத்தில் பயம் மட்டும் பிசிறு தட்டிக் கொண்டிருக்கிறது.

ஓலையை நீட்டுகிறான் அஜாதசத்ரு. அப்போது அவனது சிவந்த கண்கள் பிம்பிசாரச் சக்ரவர்த்தியை நேருக்கு நேர் சந்திக்கின்றன.

ஓ...! இவர்தாம் மன்மதனின் மறு பிறவியோ? சொல்லப் போனால் உண்மையென்று ஒப்புக்கொள்ள வேண்டியதுதான்...

மலைத்துப் போகிறான் மலையன்ன பலம் படைத்த மகத வாரிசு அஜாதசத்ரு. மனம் இவ்விதம் முணகிக் கொண்டது: 'அமுதினையே சுவைபடுத்தி அழகுக்கு அழகு செய்யும் அரம்பையர் மயங்கும் ஆண்மை நிரம்பிய பேரழகு, பிம்பிசாரப் பிரகாச அழகு!'

மெல்ல அவனது கண்கள் செல்லனாதேவியைக் கவனிக்கின்றன. 'இதுதான் நாக நாட்டிலேயே புகுந்துவிட்ட லிச்சாவிக்குடி நாகமோ?'

விதுர்த்தபனின் கண்கள் யாரைத் தேடுகின்றன? ஓ...! பிம்பிசாரன் மகள் சண்டி என்பவள் யார் என்பதைத் தேடுகின்றனவோ?

ஓலையைப் படிக்கிறார் பிம்பிசாரன். அதன் சாரம்:

'மகத சக்ரவர்த்தி ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பிம்பிசார மகாராஜ சமூகத்துக்கு, கோசல மகாராஜன் பிரசேனஜித் வரையும் திருமுகமாவது, உங்கள் திருக்குமாரன் அஜாதசத்ரு இருக்கையில், இரண்டாம் பட்டத்தரசி குமாரனுக்கு

யுவராஜத் திருமஞ்சனம் நிகழ்த்துவது அரச தருமமாகாது. அஜாதசத்ரு உங்களுக்கு அசகாயச் சத்ருவாகக் கூடாது என்பது எனது அபிப்பிராயம். எனவே, இந்தத் திருமஞ்சனத்தை நிறுத்தி, என் வசமிருக்கும் அஜாதசத்ருவை அரச மரியாதைகளுடன் வரவேற்று யுவராஜ முடிபுனைய முனைவீர்கள் என்று நம்புகிறேன்.'

கீழே, விதுர்த்தபனிடமிருந்த தரும சக்கர லாஞ்சினையின் மூலம் முத்திரை பொறிக்கப்பட்டிருந்தது.

இந்த ஓலையே வஸ்ஸகாரன் ஏற்பாட்டில் முளைத்தது தானே?

படித்து முடித்த பிம்பிசாரன் கண்களில் வெடித்துத் தெறித்தது விஷம். அதனை வெளியில் காட்டிக் கொள்ள விரும்பாத பிம்பிசாரன், திருமுகம் கொண்டு வந்தவர்களை நோக்கி, "தூதுவர்களே! நீங்கள் இங்கிருந்து இந்த விழாவைப் பார்த்து விட்டு உங்கள் கோசல மன்னரிடம் விவரியுங்கள். ஒன்றைச் சொல்லுங்கள். கொழுப்பு ஏறுவது இயற்கை; அதனை மற்றவர்கள் மீது ஏற்றுவது செயற்கை. இந்தச் செயற்கைச் செய்தியை நம்புவதற்கில்லை. அப்படியே அஜாதசத்ரு இருப்பானேயானால் அது குறித்துக் கவலையுமில்லை."

இதயத்தில் எரிமலை கொதிக்க, அதனை அடக்கிக் கொள்கிறான் அஜாதசத்ரு.

அந்தணர் கூட தண்டன், இளவரசு முடிகளை இருவர்க்கும் கவிக்க, மங்கல வாத்தியங்கள் முழங்க, மறையவர்கள் மந்திரம் ஓத, மன்றம் வாழ்த்த, விழா இனிது நிறைந்தது. அத்துடன்...

அன்று முதல் ராஜகிருகம் என்ற பெயர் மாற்றப்பட்டு, பிம்பிசாரபுரம் என்ற புதுப் பெயர் பிரகடனப்படுத்த ஆணையிடுகிறார் மகத சக்ரவர்த்தி பிம்பிசாரன்.

அன்றைய மாலைப் போது வரை...

பிம்பிசாரன் அகத்தே புயல் புரட்சி நீடித்தது. அஜாதசத்ரு உயிருடனிருக்கிறானா ? பிம்பிசாரச் சத்ருவாகப் பிரசன்னம் கண்டிருக்கிறானா ? இது உண்மையாய் இருக்குமா ?

அரண்மனைச் சித்திரக்கூடத்தில் ஆலோசனையில் மூழ்கிய வண்ணம் உலவுகிறார் பிம்பிசாரன். ஆமாத்தியர் வஸ்ஸகாரன், இதுவரை நடத்திய நாடகம் சாதாரணம், இப்போது நடத்தப் போவதுதான் அசாதாரணம் என்பது போல நுழைகிறார். அவர் மேலும் ஓர் இடியை மின்னலாக வரைந்து காட்டுகிறார் : "சக்ரவர்த்தி பெருமானே ! இப்போதுதான் நமது தலைமை ஒற்றர் செய்தி கொண்டு வந்தார். காலையில் உங்களைச் சந்தித்த அந்த இளம் தூதுவர்கள் வேறு யாருமல்ல ; புனை வடிவம் தாங்கிவந்த அஜாதசத்ருவும் கோசலக் குமரன் விதுர்த்தபனுமாம் ! என்ன துணிச்சல் ?"

"உண்மையா ஆமாத்தியரே ! இதற்குள் எங்கு சென்றிருக்கப் போகிறார்கள் ? உடனடியாக..."

"பிடித்து வர நாலா திசைகளுக்கும் ஏற்பாடு செய்து விட்டேன் பிரபோ !"

அரண்மனையே பிளப்பது போல அதிர்ச்சி கண்டார் அரவக்கொடி நாயகர் பிம்பிசாரன்.

மகதத்தை விட்டுப் புறப்பட்ட அஜாதசத்ரு குழுவினர், வழியில் எங்கும் ஓய்வு காணாது கோசலநாட்டு எல்லையை மிதித்த போதுதான் ஒரு நிலை கண்டனர் ; நிறைவு கொண்டனர்.

அரண்மனையை அடைந்ததும், நடந்து முடிந்த செய்திகளைக் கேட்டுக் கோசல மன்னர் பிரசேனஜித் பிரமித்துப் போனார் ; அம்பபாலி அரண்டு போனாள். ஆமாத்தியர் வஸ்ஸகாரன் நடத்திய இந்த நாடகம் நன்மைக்கோ அல்லது தீமைக்கோ ?

சிறையில் நடந்த சம்பவம் கேட்டுச் செவிகள் நீர் வடிந்தன. ஓ...! வைதேகி...

எப்படியோ, அஜாதசத்ரு அமர்க்களப் படுத்தித் திரும்பியதில் வஜ்ஜிரையின் வாடிய வதனத்தில் மீண்டும் வசீகர வசந்தம் குடிகொண்டது.

இனி ஒரு கணத்தையும் விரயப்படுத்தக் கூடாது என்பதில் மிகுந்த கவனம் கொண்ட தேவதத்தன், சுறுசுறுப்புடன் போர் முனைப்பில் மூழ்கினான்.

அவர்களுடைய இரகசிய முனைப்புகளுக்காக ஒரு ரகசியத் தனி மாளிகையையே பலத்த காவலுடன் ஒதுக்கித் தந்தார் கோசல மன்னர்.

தேவதத்தனுடைய அருமை நண்பனான யவன (கிரேக்க) தேசத்து மிலீட்டஸ் உடனடியாகக் காசியிலிருந்து வரவழைக்கப்பட்டான். அவனை அனைவருக்கும் அறிமுகம் செய்து வைத்தான்.

"மிலீட்டஸ் என்பது யவன தேசத்துப் பிரதான பட்டினமல்லவா ?" என்றார் கோசல மன்னர்.

தேவதத்தன் விளக்கினான் :

"கோசல மன்னா ! இவன் யவன மகா சித்தாந்தியான ஹெராளீட்டஸின் பெயரை இயற்பெயராகக் கொண்டவன். காசியென்னும் புண்ணிய பூமியைப் பார்த்துப் பிராக்கிருத மொழி பயில வந்தவன், ஒரு பெண்ணிடம் காதல் வயப்பட்டுக் கங்கைக் கரையிலேயே தங்கி விட்டான். மிலீட்டஸ் நகரிலிருந்து இவன் வந்ததால் அந்த நகர்ப் பெயரே காசியில் வழக்குப் பெயராக அமைந்துவிட்டது. இவன் எனது பார்வையில் பராமரிக்கப்பட்டு வருபவன். இவனது சிந்தனையை மூலதனமாகக் கொண்டு அபூர்வ போராயுதங்களைப் படைக்கப் போகிறோம் !"

தேவதத்தனின் விளக்கத்தைக் கேட்டுக் கோசல மன்னன் மகிழ்ச்சி கண்டு மிலீட்டஸை நோக்குகிறான்.

நல்ல நண்பன். செக்கச்செவேலென்று செம்மை படர்ந்த கனத்த தலைமுடியும், கூர்ந்த மூக்கும், விசால நெற்றியும், வியக்கத்தக்க கண்களும் மிலீட்டஸின் அறிவொளியை வெளிப்படுத்தின.

மூவராக இருந்த நண்பர்கள் நால்வராயினர்.

மிலீட்டஸ், தனது யவன நாட்டு வழக்கத்திலிருக்கும் *கல்லெறி யந்திரத்தை வரைபடமாக வரைந்து கொடுத்து உருவாக்கச் சொல்லிக் கொல்லர்களிடம் பணித்து விட்டான். தலைநகரின் கொல்லர் பட்டறைகளில் இரவும் பகலும் ஓயாத வேலைகள்தாம். அதற்கு மகாசிலாகந்தகா என்று பெயர் வைத்தான் அஜாதசத்ரு.

இவற்றைத் தவிர...

இப்போது உருவாக்கப்போகும் பூதாகாரமான பயங்கர யந்திரம்...

ஒ...! ஒன்றைச் சிருஷ்டித்தாலே போதும். ஆனால், ஐந்தைச் சிருஷ்டிக்க வேண்டும் என்கிறானே தேவதத்தன்!

ஒரு நல்ல இரவு...

வரைபடங்களை வரைவதும், அழிப்பதும், கிழிப்பதுமாகச் சிந்திக்கிறார்கள்.

கருத்து புலனாகி விட்டது. மகாசிலாகந்தகா போன்றே ஒரே யந்திரத்தில் பல்வேறுபட்ட கூரிய ஆயுதங்களை எறிய வேண்டும். அதன் வடிவம்? மகாசிலாகந்தாவை ஆட்கள் இழுத்துச் செல்வர். இது அவ்வாறன்றித் தானாகவே இயங்க வேண்டும். எப்படி இயக்குவது? எவ்வாறு இருப்பது?

திடுமென்று ஏதோ யோசனை உதயம் கண்டவன் போலத் துள்ளிக் குதித்தான் அஜாதசத்ரு: "மிலீட்டஸ்!

* நமது குறுந்தொகையில் பேசும் கல் கால் கவணைப் போன்றது நீண்ட வண்டி மாதிரியான யந்திரத்தில் பயங்கர இரும்பு அகப்பைகள் படுத்திருக்கும். அவற்றில் கற்களை நிரப்பித் தட்டி விட்டால், வேகமாக வீசியெறியும்

உனது சிந்தனைப்படி இப்படி ஒரு திருத்தம் செய்தால் என்ன?"

"என்ன அஜாதசத்ரு?"

"நீ குறிப்பிட்ட யவன டிராய் தேசத்து யுத்தத்தின் *மரக்குதிரையை மையமாக வைத்துச் சிந்தித்துப் பார். அதை வைத்துத்தானே ஒன்பதாண்டுகால முற்றுகையை உடைத்து ஒரு நொடியில் டிரோஜர்களை வீழ்த்தினர்? அது போன்று பயங்கரமான அளவில் ஒரு மூடு ரதம். அதனுள் நூறுபேர்கள் அமரக்கூடிய வசதிகள். ரதம் முழுவதும் வெளியே கூரிய இரும்பு முட்கள், துவாரங்கள். ஒவ்வொரு துவாரத்திலும் நினைத்த மாத்திரத்தில் எந்தக் கூரிய ஆயுதங்களையும் கற்றைக் கற்றையாக வேகமாகப் பாய்ச்சலாம். இந்த இரும்பு ரதத்தை எவராலும் எது கொண்டும் தாக்க முடியாது. ஆனால், இதனை எது கொண்டு தன்னிச்சையாக இயங்க வைப்பதென்பதுதான் புரிபடவில்லை! ஆனால், ஒன்று புரிகிறது. தெற்கே அரவ நாடான த்ரமிள (தமிழ்) நாட்டில் சூரியகாந்தக் கல் கொண்டு சூரிய வெப்பத்தைத் தேக்கி யந்திரத்தை இயக்குகிறார்கள். நாமும் முயன்று பார்ப்போமே!"

புதிய ஒளி கண்டான் மிலீட்டஸ். அத்துடன் அஜாதசத்ருவின் அபாரமான சிந்தனா ஞானம் கண்டு வியந்தான். யவன தேசத்து மகா பட்டினங்களையும் துறைமுகங்களையும் நிர்மாணிக்கும் விஞ்ஞான சிற்பியிடம் பயின்ற மிலீட்டஸ், 'சிறந்த கற்பனைதான் மெய்யான அறிவுக்குக் கலா ரூபமளிக்கும் உயிர்' என்பதைப் புரிந்து கொண்டான்.

வரைபடத்தை உருவாக்கி அதன்படி யந்திரங்களைச் சமைக்கத் தனியான கைதேர்ந்த கொல்லர்களைக் கொண்டு வந்து ரகசிய மாளிகையின் மதில் சுவருக்குள்ளேயே இரும்

* ஹெலனை மீட்கத் தொடுத்த டிராய் யுத்தம் (Trojan War). ஹோமர் எழுதிய இலியத்திலும் ஒடிஸேயிலும் கூறப்பட்ட செய்தி.

பைக்காய்ச்சி, தனித்தனிப் பகுதிகளை உற்பத்தி செய்தனர். ஆனால், எப்பகுதி எந்தப் பக்கத்தில் பூட்டுவது என்கிற மர்மத்தை மட்டும் மர்மமாகவே வைத்திருந்து செயல்பட்டனர். அதைவிடச் சூரியகாந்தக் கல் ஆராய்ச்சியின்போது எவரையும் அருகில் சேர்த்துக் கொள்ளாமல் பரிட்சை செய்து வெற்றி கண்டனர்.

பூதாகாரமான இரும்புக் கோட்டை போன்ற ஐந்து ரதங்கள் ஆயத்தமாகின்றன. அவற்றிலிருந்து புறப்பட்டுப் பாய்ந்து செல்லும் கூராயுதங்களும், இரும்புக் குண்டுகளும், உருளைக் கற்களும் மட்டும் வெளியில் உற்பத்தி செய்ய உத்தரவிட்டிருந்தனர்.

அந்த இரும்பு ரதத்துக்கு *'ரதமுசாலா' என்று பெயரிட்டான் அஜாதசத்ரு

---

* In the war with Vaisali. Ajatha sathru is said to have made use of the Maha Sila Kanda and Rathamusala. The firet seems to have been some engine of war of the nature of Cuta Pult which threw big stones. The second Rathamusala may be Compared to the tanks used in the great world wars.

—Political History of Ancient India— By Hema Chandra Roy Choudhuri— Page 188.

'ககாகோசா'வும் இந்த இரண்டு யந்திர ஆயுதங்களைப் பற்றிப் பேசுகிறது

ஆனால் இதனை எவ்வாறு இயக்கினார்கள் என்பது புரியவில்லை. பாரத் வாஜ முனிவர் அக்காலத்தே ஆகாய விமானங்களைச் சூரியகாந்தக் கல்லைக் கொண்டு இயக்கினார்கள் என்று தமது 'வைமானிக சாஸ்திரா' எனும் நூலில் பேசுகிறார். இதே சான்று பழங்காலக் குமரிக் கண்டத் தமிழ் மக்களும் விமானத்தைச் சூரியகாந்தக் கல் கொண்டு இயக்கி இருக்கிறார்கள். ('Lemuriya by W.S. Carve) இந்தக் கருத்தை நான் ரதமுசாலாவில் பொருத்தி இயக்கி இருக்கிறேன்.

ரதமுசாலாவின் தோற்றத்தைக் கண்டு வியக்காதார் யார் ?

அம்பபாலியின் அகத்தில் அகிலத்து ஆனந்தமே திரண்டு குடிபுகுந்தது.

நீண்டு பெரிதாக முற்றும் மூடப் பெற்றிருந்த ரதமுசாலாவில் சுற்றிலும் ஒரு தலை நுழையுமளவுக்குத் துவாரங்கள். எங்கும் நீண்ட இரும்புமுட்கள். உள்ளே ஒரு கை அளவிலான நீண்ட ஈட்டிகளும் வேல்களும் கம்பி ஊசிகளும் இரும்பு அம்புகளும் இரும்புத் துண்டங்களும் கல்லுருளைகளும்...

அம்மம்மா ! ஒருங்கே இவை பாயுமானால், படை கொட்டுவதாவது ? தொடை தட்டுவதாவது ?

அன்றைக்கிருந்த பதினாறு ராஜ்யங்களும் இவற்றுக்கு முன் எம்மாத்திரம் ?

மகாராணியாகப் போகும் வஜ்ஜிரையின் வனப்புப் பாகங்கள், தெம்பின் திரட்சியால் மேலும் தித்திப்படைந்து பெருமிதப்பட்டுக் கொண்டன.

"ரிலீட்டஸ் ! உனது இந்த உதவிக்கு ராஜகிருகத்தில் கனகாபிஷேகம் செய்து கௌரவித்து ராஜ்ய விஞ்ஞானியாக்கிக் கொள்வேன் !" என்றான் அஜாதசத்ரு.

அப்போதுதான் இதுவரை காணாத அதிர்ச்சியைக் கண்டு அலைமோதினான் விதுர்த்தபன். நாளை இந்த யந்திரங்களே கோசல நாட்டைக் கபளீகரம் செய்ய எவ்வளவு நேரம் பிடிக்கும் ?

வரப் போகும் புயலின் எச்சரிக்கைக்காக வானம் இருள்வது போல, விதுர்த்தபனின் இதயமும் இருளத் தொடங்கியது.

பிடகம்-26

பாலி கவசமும் வஜ்ஜிர வாளும் !

ஆ...!

இரண்டு ஆண்டுகள்...

மாதக் கணக்கில் இதனைச் சாதித்து விடலாம் என்று எண்ணியது போக, அறுநூற்றுக்கு மேற்பட்ட நாட்களை விழுங்கி, ஓயாத உழைப்பைக் கண்ட பூதாகாரமான போர் யந்திரங்களைப் பார்வையிடுகிறார்கள். அனைவர் சிந்தனைகளிலும் பல்வேறுபட்ட அலைமோதும் எண்ணங் கள்.

ஐந்து ரதமுசாலாக்கள்; பத்து மகா சிலாகந்தகாக்கள்; மலை போல் குவிந்திருக்கும் விதவிதமான போராயுதங்கள்.

என்னதான் அஜாதசத்ரு, தனது முயற்சியில் இவற்றை உருவாக்கினாலும் தூண்டாத் துணையாக இருந்து கருத்துக்களை வழங்கிச் செப்பனிட்ட தேவதத்தனையும் மீனிட்டனையும் நன்றியறிதலுடன் நோக்குகிறான்.

இப்படியான முயற்சிகள் இந்நேரம் மகத செவிகளை வருடாமலா விட்டிருக்கும்? பிம்பிசாரன் ஒற்றர்கள்தாம் பிடரியைச் சிலிர்த்துக் கொண்டிருக்கிறார்களே!

"அஜாதசத்ரு! இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?" என்று பூரித்துக் கர்ஜிக்கிறார் கோசலமன்னர் பிரசேனஜித்.

தமக்குப் பின்னே ஒரு கடூரமான கடுவளியே காத்திருப்பதை மறந்து தந்தையார் இவ்வாறு கர்ஜிக்கிறாரே

என்று ஆழ்ந்து யோசிக்கிறான் கோசலக் குமாரன் விதூர்த்தபன்.

போர் யந்திரங்களைப் பார்வையிட்ட அனைவரும் அரண்மனையுள் நுழைகிறார்கள்.

அன்றிரவு...

என்றைக்கு யுத்த பேரிகை கொட்டலாம், உடன் யார் யாரை அழைத்துச் செல்வது என்பது குறித்த ஆலோசனையில் மூழ்கினர்.

அன்று பங்குனி உத்தரம்.

எதிர்நோக்கும் வசந்த ருதுவின் இனிய காற்று, கனவுச் சுகங்களை, நனவில் வருடிச் செல்கிறது.

நிலவு, வானத்தில் நிர்வாணக் கவிதை எழுதிக் கொண்டிருக்கிறது.

அரண்மனையின் நிலாமுற்றத்தில் அனைவரும் வட்ட வடிவமாக அமர்ந்திருக்கின்றனர். நடுநாயகமாகக் கோசல மன்னர் பிரசேனஜித்.

"அஜாதசத்ரு! சித்திரை பிறந்ததும் ஒரு செல்வ தினத்தில் போர்ப்பயணம் தொடங்க நமது அரண்மனை அந்தணர்களான பௌஷ்கரருக்கும் லௌஹித்தியருக்கும் உத்திரவிட்டிருக்கிறேன். என்ன பேச வேண்டும் என்பதை இன்றே தெளிவாகப் பேசி விடுங்கள். பின்னால் திருத்தங் களும் திருப்பங்களும் ஏதும் புதியதாக ஏற்பட்டுவிடக் கூடாது; அதனை நான் ஏற்கவும் மாட்டேன். குறிப்பிட்ட நாளில் படைகள் நேரே அங்கதேசம் நோக்கிச்செல்கின்றன. அந்த வெற்றியின் பெருமிதத்துடன் அங்கே யுவராஜ பட்டாபிஷேகம்செய்துகொள்கிறாய். பிறகு படைகள்நேரே வைசாலிநோக்கிப் புறப்படுகின்றன. அது உனதுசிற்றன்னை செல்லனாதேவியின் தாயகம். முடிவில் நிகழப் போகும்

மகத யுத்தத்தில் வைசாலியர்களான லிச்சாவியர்கள் மகதத்துக்குத் துணை வராமல் முறியடிக்கப்பட வேண்டும்."

"அவந்தி நாடு?" என்றான் அஜாதசத்ரு.

"நிச்சயமாக மகதத்துக்குத் துணை வரமாட்டார்கள். அதில் எனக்குப் பரிபூரண நம்பிக்கை இருக்கிறது" என்றாள் அம்பபாலி.

"மகத யுத்தத்தில்தான் நீங்கள் மலை போன்ற செயல்களைச் சாதிக்க வேண்டி இருக்கும். நமது போர் யந்திரங்களைப் பறிக்க அவர்கள் முயலலாம். அவற்றைப் பாதுகாப்பதில்தான் மிகவும் கவனம் தேவை" என்றார் கோசல ராஜன்.

சில கணங்கள் அமைதியின் கரங்களில் சிந்தனை தாண்டவம் புரிந்தன.

"வேறு ஏதேனும் கருத்துக்கள் உண்டா?" என்று வினவினார் கோசல மன்னர்.

விதுர்த்தபன் நெஞ்சில் அதுவரை ரதமுசாலா பற்றிய அச்சம் வியர்த்துக் கொட்டிக் கொண்டிருந்ததால், அது குறித்து ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்துவிட நாவசைத்தான!

"எந்தாய்! எனக்கு எனது மைத்துனர் அஜாதசத்ருவின் பேரில் அபார நம்பிக்கை உண்டு. எனினும், அரசியல் என்பது உறவு முறைகளை உணவாக்கி, தலைமுறைகளை ஜீரணிப்பது. ஆகவே, அஜாதசத்ரு எனக்கு ஒரு சத்தியம் செய்து தரவேண்டும். இப்படிக் கேட்பதற்காக நான் நாணப்படுகிறேன். என்றாலும் நிலைமை என்னை உசுப்பிக் கேட்கிறது."

அலமரல் கண்ட அஜாதசத்ரு துடிப்பு கண்டு எழுந்தான். "விதுர்த்தபா! நீயா பேசுகிறாய்? என்ன சத்தியம் வேண்டும்?"

விதுர்த்தபன் நாவு எழுமுன், அவனது தங்கை வஜ்ஜிரையின் நாவோசை முந்தியது; பளர் நெற்றியைத் தட்டியது: "பிரபோ, நான் யார்!"

"இந்த சிராவஸ்தி சித்திரம்! எனது வருங்கால வேதம்!"

"அப்படியானால் போருக்குப் புறப்படு முன் என்னை மணந்து கொள்கிறீர்கள். நானும் உங்களுடன் புறப்படுகிறேன்."

வஜ்ஜிரையின் இந்தச் சொற்கள், அஜாதசத்ருவின் செவிகளைப் பலாச்சுளையாக்கினாலும், ஏனையவர் செவிகளைக் கேள்விக் குறியாக்கின. துடித்துப் போனார் கோசலமன்னர் பிரசேனஜித். துவண்டு போனான் விதுர்த்தபன், 'நாம் ஒன்று கேட்க வாய் திறந்தபோது, இவள் ஒன்று கேட்டுக் குறுக்கிட்டு விட்டாளே' என்று.

ஆமாத்தியர்களும் சேனாதிபதிகளும் பட்டத்தரசியும் பாவியும் பதற்றம் காணாமல் கவனிக்கிறார்கள். வஜ்ஜிரை புத்திசாலி. எதையோ மனத்தில் கொண்டு இப்படிப் பகிரங்கத் திருவிளையாடல் புரிகிறாள்.

கோசல மன்னர் கேட்டார்: "வஜ்ஜிரை, என் மகளே! இது என்ன பிடிவாதம்? நீ போர்க்களம் நோக்கி அஜாதசத்ருவுடன் புறப்படுவதாவது?"

"வெறுமனே புறப்படவில்லை; மனைவியாகிப் புறப்படுகிறேன்!"

"அதுதான் ஏனென்று கேட்கிறேன்? அஜாதசத்ரு புறப்படுவது போர்க்காட்டுக்கு, பூக்காட்டுக்கல்ல!"

"பூக்காடு உடன் சென்றால்தான் போர்க்காடு மணக்கும்; புகழோடு இனிக்கும்; அண்ணன் குறிப்பிட்ட உறவாடல் மகிழும்."

கவிதாயினியான அம்பபாலிக்கே ஒருகணம் வியப்பு கண்டது. இவள் என்ன சொல்கிறாள்?

"வஜ்ஜிரை! நீ ஒரு புதிய அரசியல் நோக்கோடு பேசுகிறாய் என்பது மட்டும் புரிகிறது. விளக்கமாகவே சொல்லம்மா!" என்றாள் அம்பபாலி, முகத்தில் துளித்த வியர்வையைச் சேலைத் தலைப்பால் ஒற்றிக் கொண்டவண்ணம்.

வசந்தமாய் முகமலர வஜ்ஜிரை தொண்டையைச் செருமிக்கொண்டாள்:

"அம்மா! முதற் பகுதிக்கு வருகிறேன். அண்ணன் விதுர்த்தபன் சத்தியம் கேட்ட காரணம் என்ன தெரியுமா? அண்ணனுக்கு உங்கள் மகன் பேரில் அபார நம்பிக்கையுண்டு. ஆனால், உருவாக்கிய மிகப் பயங்கரமான போராயுதங்கள் ஒரு நாளைக்கு இந்தக் கோசல நாட்டின்மீது திரும்பாது என்பது என்ன நிச்சயம்? எனவேதான் சத்திய சாசனம் கேட்கிறார்!"

வஜ்ஜிரை இவ்வாறு கூறிய மறுகணம்...

விருட்டென்று எழுந்து கொண்ட அஜாதசத்ரு, "விதுர்த்தபா! வஜ்ஜிரை கூறுவது உண்மைதானா?" என்றான். அவனது உடல் வியர்த்தது; துடித்தது.

"உண்மை அஜாதசத்ரு! என் தங்கை ஒரு தீர்க்கதரிசனமாக என்னைப் பற்றிச் சிந்தித்து முந்திக்கொண்டிருக்கிறாள். அவள் திருமணத்துக்கு முந்திக் கொள்வதும், போர்ப் பயணத்துடன் தொடர நினைப்பதும் இதற்காகத்தானோ என்று எண்ணுகிறேன்."

'ஓ..! இருவருமே என்னைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையே, புரிந்து கொள்ளவில்லையே!" —அஜாதசத்ரு கண்களை இறுக மூடி, உதடுகளைக் கடித்து, கைகளைப் பிசைந்து உடலை வருத்திக் கொள்கிறான்.

இந்தக் காட்சியைக் கண்டு தேவதத்தனும் மிலீட்டனும் ஒருவரையொருவர் நோக்கிக் கொள்கிறார்கள். நியாயமான உணர்வுகள்

அஜாதசத்ருவின் கம்பீரக் குரல் கணீரென்று ஒலிக்கிறது: "விதுர்த்தபா! இந்தச் சந்தேகம் நியாயமான சந்தேகமே! என் அன்னை வைதேகி சிறைச்சாலையில் வாழ்த்துகிறபோது, உறவு முறை வைத்து வாழ்த்தவில்லை; நண்பர்களாகவே வாழ வாழ்த்தினார்கள். அந்த அன்னை மீதும், என்னைக் கண்ணிமையில் வைத்துக் காத்த அன்னையான அம்பபாலித் தாய் மீதும் ஆணையிட்டுக் கூறுகிறேன். எனக்கு மகதமே வேண்டாம்; மன்னர் பதவி வேண்டாம்; மாசற்ற நமது நட்பு தேவை! இந்த மகா யுத்தத்தில் காணும் அனைத்து வெற்றிகளையும் உனது காலடியில் சமர்ப்பிப்பேன். போதுமாடா விதுர்த்தபா?"

அஜாதசத்ருவின் கண்களில் நீர் கரை புரண்டது.

பிடரி சிலிர்த்துப் போன விதுர்த்தபன், எழுந்தோடிச் சென்று நண்பனைச் சேர்த்து அணைத்துக்கொண்டு விசும்பி அழுதான்: "என்னை மன்னித்துவிடு அஜாதசத்ரு! உன்னை நான் அறிந்தது அவ்வளவுதான். அது என் அறியாமை. என்னுள் ஒரு *கதை மர்மமாக அடங்கி இருக்

*விதுர்த்தபனின் தாய் வாசவி என்கிற வாசபத்தியா, சாக்கிய அரசனான மகாநாம சாக்கியனின் காமக்கிழத்தி மகள். ஏமாற்றிக் கோசல மன்னனுக்கு மணம் செய்து வைத்துவிட்டான். இது ஒரு கௌரவப் பிரச்னைக் கதை. பின்னாளில் (நமது கதையில் அல்ல) ஏற்படப் போகிற ரத்தாபிஷேகக் கதை.

கிறது. அதனைக் காலம் வரும்போது சொல்வேன். அதற்கு நீதான் உதவ வேண்டும்."

"நிச்சயம் உதவுவேன். அந்தக் கதையும் எனக்குத் தெரியும். அஜாதசத்ருவை நம்புகிறவர்களுக்கு ஆபத்தில்லை என்கிற பொன் வரிகள் நாட்டில் பரவ வேண்டும்."

தனது கதை— ஏமாற்றத்தால் விளைந்த அருமைக் கதை அஜாதசத்ருவுக்குத் தெரியுமா? இது கோசல மன்னருக்குத் தெரியாமல் போனதென்ன? தெரிந்தும் தெரியாதது போல் நடிக்கிறாரா? இனி இது குறித்துச் சிந்தித்துப் பயனில்லை என்றிருக்கிறாரா?

விதுர்த்தபன், மெல்லத் தனது தாயை நோக்க, வாசவி தலைகுனிந்து கொள்கிறாள்.

தந்தையை நோக்கிய விதுர்த்தபன், தான் சொன்ன கதை வேற்று ருபத்தில் சந்தேக விசுவருபம் கொள்ளக் கூடாது என்றெண்ணி, "தந்தையே! அந்தக் கதை என் சொந்தக் கதை! சந்தேகிக்க வேண்டாம். நான் பிம்பிசார மாமனின் மகள் சண்டியை மணந்து கொள்ள ஆசைப் படுகிறேன். பெண் கொடுத்துப் பெண் எடுக்கும் கதை."

கோசல மன்னர் மெல்ல முறுவலிக்கிறார்.

வாசவியின் நெஞ்சில் சின்ன பெரு மூச்சு. ஏ, மர்மமே! நீ மர்மமாகவே இருந்துவிடு!

அம்பபாலி இப்போது தனது நிலை குறித்துப் பேச முன் வந்தாள்: "கோசல ராஜா! வஜ்ஜிரையின் திருமணத்துக்கு நாள் குறிப்பிட வேண்டியதுதானே?"

"அதன் அவசரம்தான் புரியவில்லை பாலி!"

"புரியும்படி நான் சொல்கிறேன். ஏனென்றால், நானும் இந்த யுத்த பயணத்துடன் புறப்படப் போகிறவள் அல்லவா?"

"நீயுமா?"

கோசல மன்னர் இவ்வாறு வியந்ததும், கூடியிருந்த அனைவரும் நெற்றியைச் சுருக்கிக் கொண்டனர். குருக்ஷேத்திரம் நடக்கப் போகிறது. அங்கே குங்குமத் திலகங்கள் ஏன் கூடவே வரவேண்டும்?

அம்பபாலி, அனைவருடைய உணர்வுகளையும் அளந்து அறிவித்தாள்: "பிரபோ! வஜ்ஜிரையின் திருமணம் மிக மிக அவசியம். அஜாதசத்ரு ஆங்காங்கே வஜ்ஜிரை நினைவால் வாடி விடவும் கூடாது, வஜ்ஜிரையும் இங்கே வதங்கிச் சாகவும் வேண்டாம். அஜாதசத்ரு இப்போது மகதம் சென்று திரும்புவதற்குள் படாத பாடுபட்டு விட்டவள் வஜ்ஜிரை. அதனை நான் முற்றுமாக அறிவேன். மேலும், அஜாதசத்ரு அங்க நாட்டில் யுவராஜ பட்டாபிஷேகம் செய்து கொள்கிற போதும், மகதத்தில் மகுடாபிஷேகம் செய்து கொள்கிற போதும் வஜ்ஜிரை உடன் அமர்ந்து மகிழ வேண்டாமா? வஜ்ஜிரை அஜாதசத்ருவுடன் பயணமாவது இந்திரனின் வஜ்ஜிராயுதமே உடன் பயணமாவது போல!"

தேவதத்தன் குறுக்கிட்டான்:

"ரதமுசாலாவை விடவா?"

"நிச்சயமாக! இந்திரனின் வஜ்ஜிராயுதம் ஏழுலகையும் கலக்க வல்லது! ரதமுசாலா அஜாதசத்ருவைக் காக்கும். அவனது ஆத்மாவைக் காக்குமா?"

மிலீட்டல் ரசித்துச் சிரித்து விட்டான்.

"ஆமாம், நீ ஏன் செல்லவேண்டும் அம்பபாலி?" என்றாள் வாசவி.

அம்பபாலி முறுவலிக்கிறாள். "நான் காரணமாகத் தான் செல்கிறேன். எந்த விநாடியிலும் எவராவது புகுந்து அஜாதசத்ருவின் நெஞ்சில் தந்தைப் பாசத்தைப் புகுத்தி பிம்பிசாரக் கீதை பாடிவிடலாம். இவனும் பாச மேலீட்டால் யுத்தத்தை நிறுத்திவிடலாம். பிறகு நான் கண்ட கனவு என்னாவது? எனவேதான் நான் கவசமாகச் செல்கிறேன்; வஜ்ஜிரை வாளாயுதமாக வருகிறாள்!"

"அஜாதசத்ருவின் திருமணம், பெற்றவர்கள் பாராமல் நடப்பதாவது?" என்றார் ஆமாத்தியர் ஸ்ரீவத்ஸன்.

வஜ்ஜிரையின் நாவு இப்போது சிலிர்த்து எழுந்தது: "யார் பெற்றோர்? பாலியம்மையும் என் தந்தையும் இருக்கிறபோது பார்த்து மகிழ பிம்பிசாரச் சக்ரவர்த்தி தேவையா? யார் தேவை?"

அக்கினிப் பொறி பறக்கும் வஜ்ஜிரையின் சொற்களில் மகிழ்ந்து போனார் கோசல மன்னர் பிரசேனஜித்.

ஒளி படைத்த முகத்தில் மேலும் ஒளிபடரச் சொன்னாள் அம்பபாலி: "பிரபோ! முதலில் திருமணத்துக்கு நாள் பாருங்கள். சிராவஸ்தியில் திருமணம் அங்க நாட்டு வெற்றிக்குப் பிறகு யுவராஜ பட்டாபிஷேகம் நடந்ததும் அங்கே இவர்களுக்கு நிலவு தேனாகட்டும்."

ஒருமுகமாக அனைவரும் ஒப்புக்கொண்டனர். வஜ்ஜிரையின் கண்கள் நாணி இமை தழுவின.

பொன்னான நன்னாளில் கோசலமே குதூகலிக்கும் வகையில் வஜ்ஜிரை, அஜாதசத்ரு திருமணம் கோலாகலமாக நடந்து முடிந்தது.

இந்த அலங்காரச் செய்தியைச் சுமந்துசென்ற அசிரவதியாறு, கங்கை நதியிடம் ஒப்படைக்க, அது ராஜகிருகக் காதுகளை விறிக்கச் செய்து கண்களை அலமரச் செய்தது.

அத்துடன்—

பயங்கரப் போராயுதங்களுடன் அஜாதசத்ரு, அங்க நாடு நோக்கிச் செல்லும் செய்தி ராஜகிருகத்தை எரியூட்டியது.

பிம்பிசாரச் சக்ரவர்த்தி பீரிட்டுக் கர்ஜிக்கிறார்: "வஸ்ஸகாரரே! சூறைக் காற்றின் வலிமையறியாது ஒரு சுழல்காற்று அங்கம் நோக்கிச் செல்கிறது. உடனடியாக ஒரு பகுதிப் படையை அனுப்பி வையுங்கள்."

இளைய பட்டத்தரசி செல்லனாதேவி குறுக்கிட்டாள்: "பிரபோ! யோசித்துச் செய்ய வேண்டிய முடிவு. இங்கே உங்கள் கௌரவப் பிரச்னைகளைப் பார்ப்பீர்களேயானால் பாரத யுத்தத்தில் கௌரவர்கள் நிலை நமக்கும் ஏற்பட்டுவிடும். அஜாதசத்ரு பயங்கரப் போராயுதக் கண்டுபிடிப்புடன் புறப்பட்டிருக்கிறான். நமது படைகளை ஏன் வீணாக்க வேண்டும்? எனது தந்தைக்குச் செய்தி போக்கி எதிர்க்கச் சொல்லுங்கள். அந்தப் பலவீனமே எதிர்க்கும் அஜாதசத்ருவை இங்கு வரவிடாமல் தடுத்துவிடும் உடனே வைசாலிக்குச் செய்தியனுப்புங்கள். லிச்சாவி வீரர்கள், முடிந்தால் அந்தப் புதிய போராயுதங்களை எரித்தும் விடுவார்கள்."

இதுதான் சமயம் என்று ஆமாத்தியர் வஸ்ஸகாரரும் இதனை வலுவாக ஆதரித்தார். வேறு வழியின்றி முதன் முறையாகக் கௌரவத்தைத் தளர்த்தி ஒப்புக்கொண்டார் பிம்பிசாரன்.

ஓ... அஜாதசத்ரு! நீதான் கடத்திச் செல்லப்பட்ட குழந்தை அஜாதசத்ருவா?

பிம்பிசாரன் பெருமூச்செறிகிறார்.

ஒரு பத்தினிப் பெண்ணை இருபது ஆண்டுகள் சிறை வைத்ததன் உற்பாதம் இது என்பது அப்போதும் மகத சக்ரவர்த்திக்குப் புரிந்ததாகக் காணோம்.

அடுத்த நாழிகையே...

பிம்பிசாரச் சக்ரவர்த்தியின் அந்தரங்கச் செயலனான அபிநவநந்தன், செய்தியை எடுத்துக் கொண்டு, பாதுகாப் போடு வைசாலி நகர் நோக்கிப் பறந்தான்.

பீடகம்-27

முத்திரை முயக்கம்

நாகக்கொடி பறக்க, நற்றவத்தின் மாப் பயனாய்ப் பெற்றவளின் சோகப் பிடி துறக்க, அஜாதசத்ருவின் படைகள் அலைகடல் பொங்கி எழுந்ததுவோவென அமர்க்களப்படுத்தி வருகின்றன.

பூதாகாரமான ஐந்து ரதமுசாலாக்களில் ஒன்றை மட்டும் சிராவஸ்தி தலைநகர்க் கோட்டையின் தலை வாசலில் நிறுத்தி வைத்தான் அஜாதசத்ரு. பத்து மகாசிலா கந்தகாக்களில் இரண்டினை, அக்கோட்டையின் தெற்கு வடக்காக நிறுத்தி வைத்தான். பகைப் புகைச்சல் காரணமாக அங்கே நெருப்பு புகுந்துவிடக் கூடாதல்லவா? இதன் காரணமாகக் கோசல மன்னருக்கு அஜாதசத்ருவின் பேரில் அளவற்ற நம்பிக்கை அமுதமாய்ச் சுரந்து வழிந்தது.

கோசலத்துக்குத் தென்கிழக்கே உள்ளது அங்க நாடு. வழியிலிருப்பதுதான் வைசாலியானாலும், அங்கத்தில் இளவரசு முடிகவித்து, வைசாலியைப் பொய்சாலியாக்க வேண்டும் என்பது மெய்சாலியான அஜாதசத்ருவின் நோக்கம். மூக்கைச் சுற்றிப் பிடிப்பது ராஜதந்திரமல்ல வென்றாலும், நோக்கம் என்றுவருகிறபோது?

ஆனால், எப்படிப் பார்த்தாலும் வைசாலி நாட்டு எல்லைக்கும் மகத நாட்டு எல்லைக்கும் இடைப்பட்ட ஒரு தனித்த குறுநிலவரசனின் வனாந்திரப் பகுதி வழியாகத் தான் படைகள் சென்றாக வேண்டும்.

பத்துத் தினங்களில் அஜாதசத்ருவின் படைகள் அந்த இடைப்பட்ட எல்லைக்குள் நுழைந்து கொண்டிருந்தன.

அங்கேயே சகலமும் முடித்துக் கொள்ளலாம். அங்கிருந்து மேலும் பத்துத் திலப்பயணத்தை மேற்கொண்டு அங்கதேசம் சென்று மீண்டும் பின்னோக்கித் திரும்ப வேண்டும் என்பது அவசியமற்றதானாலும் அதில் ஒரு மானுடம், மகத்துவம் பேசிக் கொண்டிருப்பதை அஜாதசத்ருவும் அம்பபாலியும் மட்டுமே அறிவர். அந்த நன்றியின் விசுவரூபம் வானுக்கும் பூமிக்குமாக இருப்பதை யாரே அறிவர் ?

அது...

ஜனகபுரத்து அஜாதசத்ரு அங்கே நீங்கா நீடுதுயில் புரிகிறானே ! அந்த நடுகல்லை வழிபடவேண்டாமா ? ஒரு பள்ளிப்படையை எழுப்ப வேண்டாமா ? அதுவல்லவோ மானுஷ்ய யாகம் ? இதனைப் பிறகுகூடச் செய்யலாம். ஏனோ வைதேகிப் புத்திரனான அஜாதசத்ருவுக்கு அந்த நன்றி மறவா முதல் வழிபாடு வெற்றியின் விளக்கொளியாய்த் தெரிந்தது.

அங்கம் மகதத்தின் ஓர் அங்கம் ; அங்கே இளவரசு முடிகவிப்புக்குப் பின்னர் முறைப்படி மகத மகுடத்தைச் சுமப்பது மரபுமட்டுமல்லாது வலுவான வரலாறு என்பதும் அவனது பொலிவான பிடிவாதம்.

அந்த ஜனகபுரத்து அஜாதசத்ருவால் வந்த வினையேயானாலும் திருவினையல்லவா? அன்று அவர் மட்டும் உயிர்த் தியாகம் செய்யவில்லையென்றால் இன்று மதகமெங்கே ? மகாமேருவனைய வீரம் படைத்த இந்த அஜாதசத்ருதான் எங்கே ? நல்வினையின் நாயகனல்லவா ஜனகபுர அஜாதசத்ரு ? அம்பபாலி இதனை ஏற்றது மட்டுமல்லாது அவனுள்ளும் அவனது நடுகல்லைக் கரங்கூப்பி வணங்க வேண்டும் போலிருந்தது. நல்லதோர் மானுடமல்லவா ?

அன்றிரவு எங்கேனும் ஓய்வு கண்டால் தாழ்விலை போலத் தெரிந்தது. ஆனால், கடந்து கொண்டிருப்பதோ

வைசாலி நாட்டுக்கும் மகத நாட்டுக்கும் இடைப்பட்ட பரந்த வனாந்திரம்.

கங்கையிலிருந்து பிரிந்து வந்த கிளை நதியொன்று அலைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது.

பெண்களிருவரும் மிகவும் களைத்திருந்தனர். தோழிப் பெண் மூலம் செவிமடுத்த அஜாதசத்ரு, அக்கணமே அவ்வனாந்திரத்தில் தங்கி ஓய்வு கொள்ள அனைவருக்குமே உத்தரவு பிறப்பிக்கிறான். அவனது நோக்கமே இன்னும் முயன்று சென்றால் கௌசிகி நதி குறுக்கிடும் ; அங்கு ஓய்வு கொள்ளலாம் என்பது. அது ஒரு காலத்தின் கட்டளை. காலநிர்ணயம்தானே ஞாலத்தின் பூர்ணயமும்கூட !

நிலவில் குளிர்ந்து கொண்டிருந்த அந்த இடம், விடிகிற போது நெருப்பில் சுடவிருக்கிறது என்பதை யாரே அறிவர் ? நல்வினையும் தீவினையுமான ஊழியின் கண்கள். எந்த யுகத்திலும் எவராலும் ஆராய முடியாத அதிசயமன்றோ ? இதனால்தான் கீதையில் பகவான் நல்வினையும் நானே, தீவினையும் நானே என்றானோ ?

அந்தக் கீதைக்கும் மூல ஆசான்— முனைவன் நானே என்பது போல, பௌவிராகக் கடவுள் பௌருஷத்தின் பரிபூரணப் பிழம்பாய் ராஜதிசையில் உதயம் காண்கிறான்.

இரு எல்லைகளுக்கிடையே...

வைசாலி நாட்டுப் பறவைகளும் மகத நாட்டுப் புள்ளினங்களும் கலப்பு மணம் புரிந்து கொண்டு பாஷாங்க ராகம் பாடத் தொடங்கி விட்டன.

அதே நேரத்தில்...

நதிக்கரையையொட்டி மதில் சுவர் ஓரிரவில் எழுந்தது போல, வைசாலி நாட்டுப் படைகள் வரிசை கட்டி நின்று கொண்டிருந்தன.

கண்ணுற்ற அஜாதசத்ரு, காண்டீபனாய் பாஞ்சசன்னியத்தை முழக்குமாறு விதுர்த்தபனுக்கு ஆணை பிறப்பிக்கிறான்.

ஓ... விதி முன்னதாகவே குறுக்கிடச் செய்துவிட்டது. சிற்றன்னை செல்லனாதேவியாரின் சூழ்ச்சி. அவரது தந்தையான வைசாலி நாட்டு மன்னருக்குச் செய்தி போக்கி வழிமறிக்கச் செய்திருக்கிறார்.

நினைத்தது ஒன்று; நடப்பது ஒன்று.

ஏ, காலமே! முதல் வெற்றி மூத்தகுடி வெற்றியாகவே இருக்கட்டும் என்று என்னை ஆசிர்வதிக்கிறாயோ?

அஜாதசத்ரு அரிமாவெனப் பிடரியைச் சிலிர்த்துக் கொண்டு போர்க்களம் புக ஆயத்தமாகிறான்.

வஜ்ஜியர்களான லிச்சாவியர்களும் வீரத்தில் சளைத்தவர்களல்லர். பஞ்சாயத்து முறைப்படி வாழும்—ஓரளவான குழுமுறை கண்ட— நாடானாலும் வைசாலிநாடு பழம் பெரும் நாடு.

கோசலக்குமரன் விதுர்த்தபனும் மகாசேனாதிபதி இக்கசாரண்யனும் வட்டுடை அணிந்து போர்க்களம் புகுகிறார்கள்.

ஒரு ரதமுசாலாவில் அம்பபாலியையும் வஜ்ஜிரையையும் அமர்த்தித் தானும் அமர்ந்து செல்லுகிறான் அஜாதசத்ரு.

இன்னொன்றில் விதுர்த்தபன், தேவதத்தன், மிலீட்டஸ். ஒவ்வொரு ரதமுசாலாவிலும்தான் ஏறத்தாழ நூறு பேர் அமரலாமே! ஆ! எத்தனை பெரிய இரும்பு ரதம்!

மகாசிலாகந்தகா எட்டினையும் பயன்படுத்த ஆணையிடுகிறான் மகா சேனாதிபதி இக்கசாரண்யன்.

லிச்சாவிய வீரர்களோ ஏறத்தாழ பதினாறாயிரம் பேர் சூழ்ந்திருக்கிறார்கள். அஜாதசத்ருவின் சேனைகளைவிட அதிகம் என்றுதான் சொல்லவேண்டும். இருக்கட்டுமே! ஒரு ரதமுசாலா ஒரு லட்சம் படைக்கு ஒப்பானதாயிற்றே!

தனது வீரர்களை அநியாயமாகப் பயன்படுத்திச் சேதம் விளைவிக்க வேண்டாம் என்பது அஜாதசத்ருவின் கண்டிப்பான ஆணை.

வைசாலி நாட்டுப் படைகளுக்கு மன்னன் சேதகன் தலைமை பூண்டிருந்தான். இவன் மகத இளைய பட்டத்தரசி செல்லனாதேவியின் தந்தை. மகதம் என்பது அவருடைய பேரப் பிள்ளைகளுக்குரிய பிரச்னையாயிற்றே! அஜாதசத்ரு அரியணை ஏறினால் அவர்கள் கதி என்னாவது?

இருதரப்புப் படைகளும் பொருதத் தொடங்கிப் போர்க்களத்தைப் புழுதிக் களமாக்கிப் புண்களமாக்கிப் புரண்டு வரும் ரதத அலைக் களமாக்கி எங்கும் பிணக்களமாக்குகின்றன.

பிணந்தின்னிப் பறவைகள் அதற்குள் எப்படித்தான் ஆயிரக்கணக்கில் கூடிவிட்டனவோ?

பிணக்கூழ் உண்ணும் பேய்களோ, இரவை எதிர்பார்த்து ஏங்குகின்றன. இரவு அவற்றுக்குத் திருவிழா தானே?

மூன்றே இரவுகள்...

மகாசிலாகந்தகாக்களின் எறிகற்களுக்குத் தாங்க முடியாத வைசாலிப் படைகள், ரதமுசாலாவின் ராட்சஸக் குரலுக்கா ஈடு கொடுக்கப் போகின்றன?

சேதக ராஜன் படைகள் பாதிக்கு மேல் சேதமடைந்து போயின. இனியும் மூன்று நாட்கள் நீடித்தால் வைசாலி விசனித்துப் போகும். அதுமட்டுமா? துப்புரவாகத் துடைபட்டுப் போகும் என்று அடைபட்ட நெஞ்சுடன் அரண்டு போனான், வைசாலி மன்னன்.

லிச்சாவியப் படைகள் பின்னோக்கி ஓடுகின்றன. ஒரு ரதமுசாலாவில் புறப்படும் குத்தீட்டிகளும் கூரிய அம்புகளும் கூழாங்கற்களும் ஆயிரமாயிரம் வீரர்களை அடிசாய்ந்த மரங்களாக்குகின்றனவே!

"சேனாதிபதி! படைகளைத் தலைநகர் வைசாலியை நோக்கித் திருப்பு! இந்தப் பயங்கர ஆயுதங்களுக்கு வைசாலி பலியாக வேண்டாம். மகதம் உண்டு; அதன் மகனுண்டு இவர்கள் வைசாலி வரை துரத்தி வராமலிருந்தாலே விலாக்கியமானது; பெரும் பாக்கியமானது!" என்று உரத்துக் கூச்சலிடுகிறான் வைசாலி மன்னன் சேதகன்.

வைசாலிப் படைகள் தப்பினோம் பிழைத்தோம் என்று தலைநகர் நோக்கி ஓட்டம் பிடிக்கின்றன.

அஜாதசத்ரு முதல் வெற்றி கண்டு கெக்கலி கொட்டி நகைக்கிறான்.

வெற்றி முரசும் வீரப்பணிலமும் விண்ணதிர முழங்குகின்றன. பல்லியங்கள் ஆர்க்கின்றன.

அம்பபாலி அகமகிழ்ந்து முகமலருகிறாள்.

வஜ்ஜிரை, வாழ்வினை வாழ்த்திக் கொள்கிறாள்.

அங்கே வந்து வணங்கி நின்ற மகாசேனாதிபதி இக்கசாரண்யன், "மகத தெய்வமே! வைசாலி வரை சென்று திரும்பலாமே! அங்கேதான் தங்கச் சுரங்கமும் நவமணிக் குவியல்களும் மிகுந்து இருக்கின்றன. மற்ற எந்த நாடுகளிலும் இல்லாத செல்வச் செழிப்பு இங்கே இருக்கிறது.

இவற்றைப் பற்றினால் நமது வருங்கால வாழ்வுக்கு வளம் சேர்க்குமல்லவா?"

அஜாதசத்ரு விதூர்த்தபனை நோக்குகிறான். விதூர்த்தபனின் மௌனத்தைக் கண்டு அஜாதசத்ருவே மறுமொழி பகர்ந்தான்: "இக்கசாரண்யா! வைசாலிப் போர் இத்துடன் முற்றுப் பெறவில்லை. அது தொடரும். நாளைய எனது பாடலிக் கிராமத்துப் பாடலிபுத்திரத் தலைநகர் உருவாக்கத்துக்கு இதனைப் பயன்படுத்த முயல்வேன். சரித்திரம் படைக்கப் போகும் பாடலிபுத்திரத் தலைநகருக்கான, செல்வங்கள் நிறையத் தேவை. எங்கே போய்விடப் போகிறது வைசாலி? நமது இப்போதைய நோக்கம் மகத விழ்ச்சி! அங்கம் சென்றதும் எனது யுவராஜ பட்டாபிஷேகம். மீண்டும் நாம் இவ்வழியே திரும்புகிற போது இந்த லிச்சாவியர் குறுக்கிட்டால் வைசாலியே கொள்ளை போகும்!"

விதூர்த்தபன் ஒரு யோசனையை முன் வைத்தான்: அஜாதசத்ரு! அங்க நாடு என்பது நமக்குச் சுண்டைக்காய்! அதற்கு அனைத்துப் படைகளும் அனைத்து யந்திரங்களும் அங்கு சென்று திரும்பிப் பயணக் களைப்பை ஏற்படுத்த வேண்டுமா? நான் இங்கிருந்து இவற்றைக் கவனித்துக் கொள்கிறேன். நீ குறிப்பிட்ட படைகளுடன் சென்று திரும்பலாம் அல்லவா?"

சிந்திக்க வேண்டிய கேள்வி.

விதூர்த்தபன் சொல்வதும் உண்மைதானே?

மிலீட்டஸும் இதனை ஆதரித்தான்.

"இளவரசே! ஒரு ரதமுசாலா, மூன்று மகாசிலா கந்தகா, ஈராயிரம் வீரர்கள் போதுமே!"

தேவதத்தன் குறுக்கிட்டான்: "மிலீட்டஸ் குறிப்பிடுவதே அதிகம். ஆனாலும் மிலீட்டஸை உடன் அழைத்துச்

செல்லுங்கள் இளவரசே ! நான் விதுர்த்தபனுக்குத் துணையாக இருக்கிறேன் !"

"நான் செல்லலாம் அல்லவா ?" என்று அம்பபாலியின் யாழ்நாவு அசைந்தது.

அஜாதசத்ரு மெல்ல அன்னையை நோக்கி, "அம்மா, நீங்களில்லாமலா ? அந்த மாவீரப் பரிசுத்த தியாகிக்கு உங்கள் அஞ்சலிதானேம்மா முதல் அஞ்சலி ! பிறகுதான் எனது அஞ்சலி ! உங்களை எந்தக் கணத்திலும் அரியணையில் அமர்த்தி அழகு பார்க்கத் துடித்த தியாகச் செம்மலல்லவா ? நீங்கள் இல்லாமலா ?"

ஆலோசித்தபடி அன்றே அஜாதசத்ரு அங்க தேசம் நோக்கிப் பயணமானான்.

ரதமுசாலாவில் அன்னை அம்பபாலியை அமர்த்தி, துணையாக மிலீட்டலையை இருக்கச் செய்தான் அஜாதசத்ரு. அம்பபாலியும் புரிந்து கொண்டு முறுவலில் மகிழ்ந்து கொண்டாள்.

அஜாதசத்ரு, வஜ்ஜிரையுடன் ரதத்தில் பயணமானான். ரத சாரத்தியத்தை அவனே ஏற்றுக் கொண்டான். நான்கு புரவிகள் பூட்டிய அந்தப் பொன் வேய்ந்த ரதம், முத்துத் தோரணங்கள் அசைய வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

வஜ்ஜிரை ஒன்றுமே பேசாமல் வருவதைக்கண்டு, தனது இடது தோளால் இடிக்க, அது பெண்ணின் கோபுர பாகத்தில் பட்டுவிட, சிலிர்ப்பு நிவேதம் கண்ட சித்திரப் பேரழகி சிரிப்பில் சிணுங்கினாள்.

"ஏன் பேசாமல் வரவேண்டும் ?"

"அம்மா என்ன நினைத்துக் கொள்வார்கள் ?"

"நாளை சிருங்காரக் கதை எழுதப் போகிறவர்கள் ! கதைக்கான கற்பனையை வழியில் செப்பனிட்டுக் கொள்ளட்டுமே என்று நினைத்துக் கொள்வார்கள்."

"கதையைச் சுத்தமாக எழுதுவீர்கள் அல்லவா ?"

சேணங்களை இழுத்துப் புரவிகளை நிறுத்தி, சேர்த்து அணைத்து முதல் வரியாக முத்தம் எழுத வேண்டும் போலத் தோன்றியது. ஆனால், அது நேரமல்ல. அவன் சொன்னான் : "எனது கதையில் கோயில் மணியோசை ரீங்கரிக்கும் ; பிறகு நீயே நவமணிச் சேகரங்களால் என்னை அபிஷேகிப்பாய் !"

வஜ்ஜிரை கலகலவென்று சுநாதமாகச் சிரிக்கிறாள். அந்தச் சிரிப்பைக் காற்று அள்ளிக் கொண்டு போய் விட்டது.

அங்க தேச எல்லையுள் அவர்கள் நுழைகிறார்கள்.

மகத சக்ரவர்த்தியால் ரத்தப் பெருக்குக் கண்ட சம்பா நதி, இப்போது தெளிந்து அஜாதசத்ருவை வரவேற்கிறது.

எங்கும் கோலாகலமான பந்தல்களும், தோரணவாயில்களும், மங்கல வாத்தியங்களும், மக்கள் நின்று வரவேற்கும் காட்சியும்...

என்ன இது ! இங்கு இன்றைக்கு ஏதேனும் திருவிழாவா ?

அங்க தேசம் சோணதண்டன் என்கிற அந்தணன்பால் கொடுத்த சில ஆண்டுகளில், போரில் வீர சொர்க்க மடைந்த அரசன் பிரம்மதத்தனின் தாயாதிகள் கலகம் விளைவித்து ஒவ்வொரு பகுதியைப் பிடித்துக் கொண்டு ஆட்சி செய்யத் தலைப்பட்டு விட்டனர். மகத சக்ர வர்த்தி பிம்பிசாரன் இது குறித்து ஏதும் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவில்லை. சம்பா நகரை மட்டும் மகதப்

பிரதிநிதி இழக்காமல் ஆண்டுவந்தான். விதங்கபுரமான துறைமுகப்பட்டினத்தை ஒரு தாயாதியும், வாலிவிப் பருவதங்கள் சூழ்ந்த பகுதியை ஒரு தாயாதியும் ஆளத் தொடங்கினர்.

மகதத்திலிருந்து வந்த கட்டளை என்னவோ, எதிர்த்து வரும் அஜாதசத்ருவை அடக்கியனுப்ப வேண்டும் என்பது. முடிகிற காரியமா? வைசாலி நாடே வீழ்ந்துபட்ட பிறகு இந்த சிரிசல் கண்ட நாடு எம்மாத்திரம்?

மூவருமே ஒன்று கூடிப் பேசி ஒரு முடிவுக்கு வந்து எதிர்த்துவரும் அஜாதசத்ருவை ஏக அமர்க்களமாக வரவேற்கிறார்கள். பிம்பிசாரன் வந்தால் என்ன? அவரது பிம்பம் வந்தால் என்ன?

அஜாதசத்ருவை வாழ்த்துக் கூறி வரவேற்று சம்பா அரண்மனையுள் அழைத்துச் செல்கிறார்கள்.

அம்பபாலியும் வஜ்ஜிரையும் ஆச்சரியத்தால் அரண்டு போயினர். இப்படி ஒரு திருப்பமா?

அன்று மாலை—

யோகபுருஷன் ஜனகபுரத்து அஜாதசத்ரு புதையுண்ட இடத்தில் மகத இளவரசன் அஜாதசத்ரு, மனையாள் வஜ்ஜிரையுடனும் மாதாவனைய அம்பபாலியுடனும் வீர வணக்கம் செலுத்துகிறான். அந்த இதயாஞ்சலி முடிந்ததும் அங்கு ஒரு பள்ளிப்படை கட்டவும் ஆணை பிறப்பிக்கிறான்.

மூவரும் சம்பா அரண்மனையை அடைகிறார்கள்.

ஒரு சுப தினத்தில் அஜாதசத்ருவும் வஜ்ஜிரையும் அரியணையில் அமர, *இளவரசுத் திருமஞ்சனம் இனிது நிறைவேறியது.

---

*அஜாதசத்ரு அங்கத்தில் இளவரசுப் பட்டம் எய்தினான் என்று சரித்திரத்தில் ஒருவரி காணப்படுகிறது.

மஞ்சனம் முடிந்தது.

இரவு வந்தது.

மஞ்சம் மன்மதகீதம் பாடி வரவேற்கிறது.

வானிலே பஞ்சமி நிலா இசையின் சட்சமத்தை— ஆதார சுருதியைச் சேர்க்காமல் பஞ்சமத்தை எட்ட முடியாது என்று பரிகசிக்கிறது.

ரிகமதநி என்கிற ஐந்து சுரங்களும் காமனின் ஐந்து கணைகளானாலும் சட்சமம் பெண்ணாய், பஞ்சமம் ஆணாய் சுருதி கூடினால்தானே கணைகளுக்கே இசைக் காப்பியப் பெருமை ஏற்படுகிறது?

முதலிரவு அறையில் வாசமலர்கள் மணக்க ரதிதேவி மன்மதனை அழைத்து அகோரத் தாண்டவமாடுகிறாள்.

வஜ்ஜிரையின் வசந்தோற்சவ கண்கள் அஜாதசத்ருவின் அரிமாக் கண்களை நோக்குகின்றன. தென்றலைக் கண்டு பிடரி சிலிர்க்கிறது.

"பிரபோ, இந்த இரவு..."

"இனி என்றைக்குமே சொந்த இரவு; சுந்தர இரவு; சொர்க்க இரவு!"

தீபங்கள் எரிந்து ஒளிநடனங்கள் புரிகின்றன. அவற்றை ஏன் அபசகுனமாக அணைக்க வேண்டும்?

அதரங்களில் கற்பனை தேடினர்; பெண்ணின் அபூர்வ படைப்புகள் கருவைத் தந்தன; ஊடல் இலக்கணம் போதித்தது; கூடல் காப்பியம் படைத்தது.

சித்திரை நிலவு, அவர்களது முதல் முத்திரை முயக்கச் செயல்கண்டு, அந்த முதலிரவு மோனத்தை முழுமையாக வாழ்த்தியது.

பிடகம்-28

தேவ தூதன்

முறைமைக்கு மூன்று நாட்கள்...

முக்குவம் போல், முக்குடை போல், முத்தேவர் போல்...

முப்பிரிவினராக இருந்த அங்க தேசத்தவர்களை முழுமையான ஒற்றுமையுடன் திகழச் செய்து, "இது என்றைக்குமே அஜாதசத்ருவின் அங்கமாகத் திகழ வேண்டும்!" என்று அறிவுரை கூறி, ஆணை பிறப்பித்து விட்டுப் புறப்படுகிறான் ஆண்மை மிக்க மாவீரன் அஜாதசத்ரு.

ரதத்தில் பயணித்தது போலவே ரதத்தில் திரும்பினர்.

விதுர்த்தபன் என்னவோ ஏதோவென்று காத்துக் கொண்டிருப்பான். பயணத்தைச் சற்று வேகமாகவே கூட்டினான். காலாட்படைகள் பின்னால் வந்து சேரட்டும்.

இளவரசு மகுடம் புனைந்த இறுமாப்புடன் வஜ்ஜிரையைப் பக்கத்தில் அமர்த்தி அஜாதசத்ரு ரதம் செலுத்தும் பாங்கினை, ரதமுசாலா வட்டத் துவாரத்து வழியாகப் பார்த்துப் பூரித்துப் போகிறாள், பட்ட துன்பம் பயனளித்த பேற்றினைப் பெற்ற, ஆடும் பொற்சித்திரம் அம்பபாலி.

புறப்படுகிறபோதே, "யுவராஜர் அஜாதசத்ரு வாழ்க, வாழ்க!" என்று கோஷம் வானைமுட்டுகிறபோது அவளது குரலும் சேர்ந்து வானில் ஒட்டிக் கொண்டதே! அவ்வாறு 'வாழ்க' சொல்லியதில் அவளுள் ஒரு தனியான மகிழ்ச்சி.

ஒரு காலைப் போதில் விட்ட இடத்தைத் தொட்டு நின்றனர். அங்கத்தில் நடந்த அதிசயத்தைக் கேள்விப்பட்டு ஆச்சரியப்படாதார் யார்? எங்கும் எழுச்சிமிகு வாழ்த்துக் குரல்கள் தாம்! விதுர்த்தபனும் வலக்கரத்தை வானோக்கி உயர்த்தி வாழ்த்துக் கூறினான் என்றால்...

அன்றிரவு அஜாதசத்ருவுக்கும் வஜ்ஜிரைக்குமான தனித் துயின்மனை ஒதுக்கப்பட்டது.

காதலர்க்குத் தனிமை கலாபப் பூஞ்சோலை! காதலித்துக் கழுத்தில் மாலையணிந்த தம்பதியர்க்கோ தனிமை, சஞ்சீவி பருவதத்தின் சாரலல்லவா?

ஓ... இது ஒரு புதிய அனுபவம். அரண்மனை, அம்சதூளிகா மஞ்சம், ஆணிப்பொன் திருவிளக்கு இவற்றை விட்டு, நூல்வெண்மாடம் நுனிப்புல் தைக்கும் தரை, நந்தா விளக்கு...

ஆ! ஏழைகளின் சிரிப்பில் இறைவன் இருக்கிற உண்மை இப்போதல்லவா புரிகிறது!

ஒரு சங்கல்பம் மனத்தே சரங்கோக்கிறது. 'எனது ஆட்சியில் ஏழைமை என்ற சொல் ஏழையாக வேண்டும்; இல்லை என்கிற சொல் இல்லாமல் போக வேண்டும். இரண்டே ஜாதி: ஒன்று அறிவுள்ள ஜாதி; இன்னொன்று அறிவிலா ஜாதி. அறிவை உயர்த்தினால் அவனும் உயருகிறான். அறிவுடையார் அனைத்து உடையார்!'

அவர்களுக்கு அந்த இரவு...,

நிலவிருக்கும் வரை நினைவிருக்கும் இரவாய் நிலைத்தது.

பொன் துள்ளும் புலரியம் புறப்பட்டது; போர்ப் பயணம் தொடர்ந்தது.

ஏ, மகத சாம்ராஜ்யமே! இதோ அடலேறு போல அஜாதசத்ரு வருகிறான்...

அந்தப் போருக்கு ஆதவனே கட்டியம் கூறுகிறான்.

பெருத்த வீரர்களும் பிரமிக்கத்தக்க போர்க் கருவிகளும் மதத்த யானைகளும் மாவலிப் புரவிகளும் வண்ணப் பல்லக்குகளும் வரிசை கட்டிப் பின்தொடர்ந்த வண்டிச் சாத்துக்களும், காலாட்படைகளும், கூலிப்படைகளும்...

'ராஜகிருகம் எங்கே? எங்கே?' என்கிற கேள்வியில் செல்கிறபோது, எங்கும் புழுதிப்படலம் சூழ்ந்து கொள்கிறது.

முன்னே கொட்டும் போர் முரசம், பின்னே வரும் கடைசி ஆள் வரை கேட்குமளவுக்கு சத்தமெழுப்புகிறது.

அஜாதசத்ருவின் அகத்துக்கே சுகத்தையளித்த பாடலிக் கிராமம் குறுக்கிடுகிறது. அங்கே அன்று தங்கவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கிறான் அப்போது அந்திச் சூரியன் மலை வாசலுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் நேரம்.

கங்கையும் சோணையும் சங்கமிக்கும் கலாபீடத்துக்கு வசந்தத்தை அழைத்துச் சென்றால் என்ன? அதுவோ வசந்தகாலம். அனைவரையும் கவனிக்குமாறு விதுர்த்தப னிடம் விடுகிறான். அன்னை அம்பபாலியிடம் சொல்லிக் கொண்டு சங்கமத் துறையில் சங்கமிக்க வசந்தமான வஜ்ஜிரையுடன் புறப்படுகிறான். நடந்துதான்.

புதுமணத் தம்பதியர்க்குப் போர்ப் பயணத்தில் புத்தின்பமோ? நிலவின் ஒளி வாசலில் கைபொத்தி, கண் பொத்தி, வாய்பொத்தி, பின்னர் மெய் பொத்திக் காணும் தேன் இன்பத்தை விட்டு, இப்படி யுத்தத்தின் நடைபாதையில் யுகங்களைச் சந்திப்பதாவது? இதுவும் ஓர் இன்பமோ என்பது மறந்து இதுவே இன்பமென இளமை வெடித்தது; இன்பம் பிரகாசித்தது!

தேடினாலும் கிடைத்திடுமோ? திட்டமிட்டாலும் வந்திடுமோ?

சங்கமத்துக்குச் செல்லாமலேயே அவர்கள் சோணை நதியில் நீராடிச் சங்கமித்தனர்.

அந்திச் சூரியனை அண்ணாந்து கவனிக்கிறான் அஜாதசத்ரு.

அன்று சிறைச்சாலையில் அன்னையின் நெற்றியில் இட்ட குருதிக் குங்குமம் நினைவுக்குடைகிறது கண்களில் சற்றே நீர்த்தேக்கம். அதனைக் கண்டு அருகே நீந்தி வந்த வஜ்ஜிரை, "நீருக்குள் மீனும் அழுமோ?" என்றாள்.

"மீன்களுக்கு ஆண்டவன் கவலையைப் படைக்கவில்லை. எனவேதான் அவற்றுக்கு இமைகளையும் படைக்கவில்லை" என்றான் அஜாதசத்ரு.

அந்திச் சூரியனை எடுத்து அன்னையின் நெற்றியில் வைத்த சம்பவத்தை வருணித்தான். வஜ்ஜிரைக்கு அந்தக் கதை தெரியும். அவளும் பெருமூச்செறிந்தாள்.

ஆ! வசந்தத்திலும் புயலை மறவாத வாலிப நெஞ்சு!

வஜ்ஜிரை அமைதிப்படுத்தினாள்:

"பிரபோ! நிஜ குங்குமம் அணியும் நாள் மாமிக்கு நீண்ட தூரத்தில் இல்லை. நினைவில் நிம்மதி கொள்ளுங்கள்!"

அஜாதசத்ருவின் பின்புறமாக நின்று அவனது கழுத்தை இருகரங்களால் அணைக்கிறபோது, முதுகுப்புறமாக ஏதோ இரு பூச்செண்டுகள் ஈரத்தில் ஈர ஒத்தடம் கொடுப்பது போலக் குளுமையாக இருந்தது.

அதன் பிறகு...

சொர்க்கக் கபாடங்களில் சுந்தர அமுதம் சுரக்க, எழுதாக் கதையை எழுதிப் பார்த்து ஏட்டினில் இறக்கினர்; பாட்டினில் இசைத்தனர்.

சிறகு படைத்த இனங்கள் கூடு நோக்கிச் செல்கின்றன.

இருவரும் நீராடி உடை உடுத்தி இருப்பிடம் நோக்கி நடக்கின்றனர்.

இங்கேதானே அந்த ராஜநாகத்தைப் பார்த்தோம்! அந்த இடத்தை வஜ்ஜிரைக்குக் காட்டினால் என்ன?

"வஜ்ஜிரை! அதோ, அந்த இடத்தில் தான்..."

சொல்லி முடிக்கவில்லை; அதே இடத்தில் அதே ராஜ நாகம் படம் விரித்து ஆடிக் கொண்டிருந்தது.

இருவரும் வியந்து வாய் பிளந்தனர். வஜ்ஜிரை கரங் கூப்பி வணங்குகிறாள். "சிசுநாகச் சின்னமே! எங்களை வாழ்த்து!"

அவர்கள் கண் மூடி கண் திறப்பதற்குள் ராஜநாகம் மறைந்துவிட்டது.

இருட்டுவதற்குள் அவர்கள் இருப்பிடத்தையடைந் தனர்.

வீரர்கள் ஆங்காங்கே தீப்பந்தங்களைக் கொளுத்திக் கொண்டிருந்தனர்.

அன்றிரவு உணவை முடித்துக் கொண்டு மந்திரா லோசனையில் அமர்ந்தனர். ராஜகிருகத்தை ரதமுசாலா வின் மூலம் துப்புரவு செய்வதற்கு மாறாகத் தூது அனுப்பி நாடி பார்த்தால் என்ன? இது அவர்கள் முடிவல்ல; மகா ஆமாத்தியர் வஸ்ஸகாரர் அனுப்பிய செய்தியின் நோக்கம்.

அனைவரும் இதனை ஆமோதித்தனர்.

ராஜகிருகமே ராட்சஸமாய்ச் செயல்படுகிறது.

புலருகிற போது மகத சக்ரவர்த்தி பிம்பிசாரன் புயலாய்ப் போர்ப் படைகளைப் பார்வையிடுகிறார். இவ்வளவு பெரிய படை இருந்து என்ன பயன்? ஏதோ

ரதமுசாலா என்றும் மகாசிலா கந்தகா என்றும் பயமுறுத்து கிறார்களே... இவற்றை அழித்தாலன்றி அஜாதசத்ருவை எங்ஙனே வீழ்த்துவது? போரின் சுவாசத்தால் ராஜகிருகத்து வாசமே மரித்துவிடும் போலிருக்கிறதே!

மகத குமாரச் சக்ரவர்த்தி படை திரட்டி வரும் செய்தி கேட்டுப் பேரரசு முழுவதும் பற்றி எரிகிறது.

வைசாலி வதமும், அங்கத்தின் அலறலும் அறிந்து மக்களை மருளச் செய்தன.

"அங்கத்தில் யுவராஜ பட்டாபிஷேகம் செய்து, மகதத் தில் மணிகுடம் புனையப் போகிறானா அந்த அஜாதசத்ரு? அவனை அங்கமங்கமாக வெட்டிப் போட வழி? வழி? வழி?"

பிறிட்டுக் கதறுகிறார் பிம்பிசாரன்.

வைசாலிப் படையுதவியை எதிர்பார்த்தார். வர மறுத்து விட்டது இருப்பது ஐம்பதினாயிரம் போர் வீரர் கள். இருந்து என்ன பயன்? ஓ... ரதமுசாலா...!

'அஜாதசத்ரு இந்த யுகத்தின் திருமால் அவதாரம். திருமாலிடம் சக்கராயுதம் இருப்பது போல, இவனிடம் ரதமுசாலா இருக்கிறது!' என்றா விதேக நாட்டு மாமனார் ஓலையனுப்புவது?

இளைய பட்டத்தரசி செல்லனாதேவி அங்கு வந்து அரசமாக் கணவருக்குத் தைரியம் சொன்னாள்: "பிரபோ! எனது தந்தை ஏதோ விஷ்ணுவென்றும் சக்கரமென்றும் பிதற்றியிருக்கிறார். அவர் வைசாலியை இழக்கப் பயப்படு கிறார். ஏதேனும் உடனடியாக யோசித்தாக வேண்டும்."

"நானும் அதை எண்ணித்தான் வஸ்ஸகாரரை எதிர் பார்க்கிறேன்!"

"அந்த அந்தணனை நம்ப வேண்டாம். ஆதியிலிருந்தே அவர் மீது நம்பிக்கையில்லை என்றேன். நீங்கள் கேட்க

வில்லை. நான் ஒன்றைச் சொல்வேன். அஜாதசத்ருவைக் கொலை செய்துவிட்டால், பிறகு ரதமுசாலாவாவது ராட்சஸ சாலாவாவது?"

"கொலை, கொலை, கொலை..."

"எவரைக் கொண்டு சாதிப்பது?"

"சண்டி! அவளையனுப்பினால் சகோதரப் பாசத்தை முன் வைத்து நாடகமாடுவாள். அஜாதசத்ரு நம்புகிற அளவுக்கு அவள் அடைக்கலம் பெற வேண்டும் சந்தர்ப்பம் கிடைக்கிற போது கொலை செய்து விடவேண்டும்."

"அவள் சம்மதிக்க வேண்டுமே!"

"நானாயிற்று..."

அப்போது பார்த்துத்தான் அஜாதசத்ருவிடமிருந்து தூது வந்திருப்பதாக அபிநவநீதன் தெரிவித்தான்.

தூது...

"வரச்சொல்!" என்று உத்தரவிட்ட செல்லனாதேவி, "பிரபோ! இனி நாம் ரகசியமாகச் செயல்பட வேண்டும். தூதுவனை வசைப் படுத்த முடியுமா என்று முயல வேண்டும் இதற்காக நாம் சண்டியை இழப்பதானாலும் பரவாயில்லை."

"சண்டியை நீ பெற்றிருந்தால்?"

"நானே பெற்றிருந்தாலும் இந்த முடிவுக்கு வருவேன்! மகள் பெரிதல்ல; மகதம் பெரிது..."

அஜாதசத்ருவின் தூதுவனாக உப தளபதி குமாரதேவன் உள்ளே நுழைந்து கொண்டிருந்தான். அவர்கள் பேச்சை நிறுத்தி ஆளை அலசுகிறார்கள்.

வணக்கம் போக்கிய குமாரதேவன், "சக்ரவர்த்தி பெருமானே! எங்கள் மகத இளவரசர் உங்களுக்கு வணக்கம்

தெரிவிக்கச் சொல்லவில்லை..." என்று கூறி வருகிற போது, பிம்பிசாரன் இடைப் புகுந்தார்:

"அதுதான் வருகிறபோதே வணங்கினாயே!"

"அது என் வணக்கம்; உங்கள் திருமகனார் அஜாத..."

"உஸ்! திருமகனாவது? பெருமகனாவது? வந்த விஷயத்தைச் சொல்லலாம்..."

மகத சக்ரவர்த்தி இவ்வாறு கூறியதும் செல்லனாதேவியின் நாவு அசைந்தது. அங்கு அந்தரங்கத்துக்குரியவனே யானாலும் அபிநவநீதன் நிற்பது பிடிக்கவில்லை. "அபிநவநீதரே! நீங்கள் சற்று வெளியில் நின்று எவரையும் அனுமதிக்காமல் கவனித்துக் கொள்ளுங்கள். குறிப்பாக வஸ்ஸகாரன்."

அபிநவநீதன் வெளியே சென்றான்.

"இப்போது நீங்கள் பேசலாம்; நீங்கள் என்ன பேசுவது? உங்கள் நாக்கில் ராஜதந்திர நளினம் என்றுமே இருந்ததில்லை. நான் பேசுகிறேன்..." என்ற செல்லனாதேவி, மூன்றடி முன்னே வந்து நின்று, "தூதுவரே! உங்கள் பெயர்?" என்றாள்.

"குமாரதேவன்!" என்று கூறியவன், குலை நடுங்கிப் போனான். ஆரம்பத்திலேயே மகத சக்ரவர்த்தியின் ஆகிருதியைக் கண்டு, 'ஆ' நமது இளவரசர் நாற்பது வயதைக் கடந்தால் இப்படித்தான் இருப்பார் போலும் என்று ஆச்சரியப்பட்டவன், மகாதேவியின் கம்பீரம் கண்டு கலங்கிப் போனான். பாம்பென்றால் படையும் நடுங்கும் அல்லவா?

"என்ன பணிபுரிகிறீர்கள்?"

"உபதளபதி!"

"பூ! இவ்வளவுதானா? உங்கள் அழகையும் ஆண்மை மிக்க கம்பீரத்தையும் கண்டு நீங்கள் ஓர் அரச குமாரனாக இருப்பீர்கள் என்று நினைத்தேன். சரி, சரி! அரச குமாரனாகப் பிறக்க வேண்டுமா? ஆக்க முடியாதா அல்லது ஆக்கிக் கொள்ள முடியாதா? அஜாதசத்ரு ஆகவில்லை? போகட்டும்; தூது வந்ததன் நோக்கம்? நானே யூகித்துக் கொள்ளட்டுமா? போர் எதற்கு? புழுதி எதற்கு? பேசாமல் மகதத்தைத் தூக்கிக் கொடுத்துவிட்டால் அழிவு மிஞ்சும் என்று தானே அஜாதசத்ரு சொல்லி அனுப்பி இருக்கிறான்?"

குமாரதேவன் மேலும் அதிர்ந்துபோய், "ஆமாம்" என்பது போலத் தலையசைத்தான்.

"உங்கள் அதிர்ஷ்டம் உங்களை இங்கே அனுப்பச் சொல்லி இருக்கிறது. இது அஜாதசத்ருவின் துரதிர்ஷ்டம்."

விழிக்கிறான் குமாரதேவன்.

ஏன்? செல்லனாதேவியின் பேச்சுச் சாமர்த்தியத்தைக் கண்டு பிம்பிசாரன்கூட பிசைந்து போனார்.

செல்லனாவே தொடர்ந்தாள்: "குமாரதேவா! நான் சொன்னது இன்னமும் உங்களுக்குப் புரியவில்லை. உங்களை எனக்கு நிரம்பவும் பிடிக்கிறது?"

ஓ...நம்மை பூச்சங்கிலியால் பிணைக்கிறார்களோ? பொன்சங்கிலியால் பிணைக்கிறார்களோ? புரியவில்லை!— குமாரதேவன் தடுமாறுகிறான்.

"ஏன் விழிக்க வேண்டும் குமாரதேவரே! நீங்கள் எனது பேச்சைக் கேட்பீர்களேயானால் என் மகளைக் கொடுத்து மருமகனாக்கிக் கோசல நாட்டையே குலையச் செய்து அந்நாட்டுக்கு உங்களைக் கோமகனாக்குவேன்! என் மகள் சண்டி கோசலக்குமாரி வஜ்ஜிரையை விட கோதிலா அழகு படைத்தவள். அஜாதசத்ரு, ஒரு நாடு பிடிக்கும் வெறியன். அவனிடம் உப தளபதியாகச் சேவகம் பார்ப்பதைவிட மகத மருமகனாக இருப்பது மகத்துவம் அல்லவா?"

குமாரதேவன், உதடுகளைக் கடித்துப் பின்னர் நீவிக் கொண்டே தலை குனிகிறான்.

செல்லனாதேவி, தனது சிவந்திக் கண்களால் மகத சக்ரவர்த்தியைக் கொட்டிப் பார்க்கிறாள். அந்தக் கொடுக்கில் விஷம் ஏறுவதற்கு மாறாக விஷயம் ஏறுகிறது. சக்ரவர்த்தி பிம்பிசாரன் மெல்லக் கண்களை இமைத்து 'நீயே பேசு' என்பது போல பாவனை செய்கிறார்.

"என்ன! பேசாமலிருந்தால் எப்படி? இப்படி உட்காரலாம்! ம்ம்! உட்காருங்கள்!"

குமாரதேவன் உட்கார்ந்தான் அது உடன்பாட்டுக்கு அச்சாரமாகத் தெரிந்தது.

"சம்மதம்தானே?"

"நான் என்ன செய்ய வேண்டும்? அதைச் சொல்லுங்கள்."

"நல்லது நான் என் மகள் சண்டியை உங்களுடன் அனுப்புவேன். அவளை அஜாதசத்ருவிடம் அறிமுகம் செய்கிறீர்கள். அரண்மனையில் மாற்றாந்தாய் கொடுமை தாங்காமல், நீங்கள் புறப்படுகிறபோது ரகசியமாகத் தப்பி வந்து விட்டாள் என்று சொல்லுகிறீர்கள். அஜாதசத்ரு தங்கையை அன்புடன் ஏற்றுக் கொள்வான்; அல்லது ஏற்கும்படி சண்டி சாதித்துக் கொள்வாள்; அஜாதசத்ருவை அவள் கொலை செய்த அடுத்தகணம் மகத வீரர்கள் உங்களுக்குத் துணை புரிய சுறுசுறுவென்று செயல்படுவர். அடுத்து தேவதத்தனையும் அந்த யவனனையும் சிறைப்படுத்த முயலுங்கள். விதுர்த்தபனையும் திக்சாரணயனையும் வீழ்த்துவது ஒரு பெரிய செயலாகாது. எல்லாமே இன்றிரவு தவறினால் நாளைய இரவு நடந்தேறி விடவேண்டும். நம்பலாமா?"

"நான் உங்களை நம்பலாமா?"

இப்போதுதான் பிம்பிசாரன் குரல் வெடித்தது: "பிம்பிசாரன் வாக்கு பிரணவ மந்திரத்துக்கு ஒப்பானது."

பிரணவ மந்திரம்! செல்லனாதேவிக்கு வாய்விட்டுச் சிரித்து விடலாம் போலிருந்தது. பொய்யும் ஒரு ராஜ தந்திரம்தானே?

குமாரதேவன் எழுந்து கொண்டான்.

"எதை வைத்து உங்களை நம்புவது குமாரதேவா? நீங்கள் வணங்கும் தெய்வத்தின் மீது சத்தியம் செய்யுங்கள்."

"நான் வணங்கும் தெய்வத்தின் மீது சத்தியம்."

கொஞ்சமும் தயங்காமல் குமாரதேவன் சத்தியம் கண்டு செல்லனாதேவி, சொல்லணா மகிழ்ச்சி கண்டாள்.

"குமாரதேவா! உங்கள் தூது தெய்வமாகப் பார்த்து அனுப்பிய தூது."

குமாரதேவன் இதழ்களில் குமிழ்நகை குழைந்தது.

பிம்பிசாரன் குரல் தொடர்ந்து ஒலித்தது!

"உன்னை நம்பி என் மகளை அனுப்புகிறேன் குமாரதேவா! நன்மை செய்தால் கோசலம். துரோகம் செய்தால் கழுவில் ஏற்றுவேன். நீ போய் ஓய்வு கொள். யுத்தம் மலைவாயிலில் நடக்கட்டும். அதன் நடவடிக்கைகளைக் கவனித்துச் சமயம் பாரத்து உங்களை ஏவுவேன். அஜாதசத்ரு கொண்டு வந்த ரதமுசாலாக்கள் நான்கை விட நான் அனுப்பும் இந்த இரண்டு ரதமுசாலாக்கள் சக்தி வாய்ந்தவை என்பதை நீங்கள் நிருபித்துவிட வேண்டும்."

குமாரதேவன் பணிந்து விடைபெற்றான்.

பீடகம்-29

சண்டி

ராஜகிருகத்து மலைக்கணவாய்களை நினைக்கிற போதுதான் ராட்சஸ முயற்சியை மேற்கொள்ள வேண்டும் போலத் தோன்றுகிறது. மலைகளைக் குரங்குகள் மொய்த்துக் கொண்டிருப்பது போல மகத வீரர்கள்.

சிசுநாக குல திலகமான— மூன்றாம் தாதையான க்ஷேமதர்மரை வணங்குகிறான் அஜாதசத்ரு. அத்துடன் எல்லைக் கடவுளாய் விளங்கும் ஆதிசேஷப் பெருமானுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும். எல்லையை நெருங்க முடிந்தால்தானே?

புதுப்பொலிவுப் பிரகாசத்துடன் சூரியோதயம் எழுகிறது.

மகாபண்டிதையான அன்னை வைதேகி அனுப்பிய ஆணைப்படி கணவாயுள் பிரவேசிக்கும் திதி தசமியாக இருந்தது. அன்று வியாழக்கிழமை நல்வினைப் பயனாகவே அமைந்து விட்டதால் விடியலிலேயே குரு ஓரை.

சூரியோதயத்தின் தங்க ரேகைகள் தகத்தகாயமாய்த் தெரிகின்றன.

ஆதித்த இருதய மந்திரம் ஜபிக்காமல் ராஜக்கிருக வாயிலில் அடியெடுத்து வைக்காதே; இது அன்னை இட்ட ஆணை.

மந்திரங்களுள் தலையான காயத்திரி மந்திரத்தின் மூலபுருஷனாக விளங்குபவன் சூரியனாயிற்றே! சூரிய ஒளியே வேத ஒலிகள்! காலையில் ரிக்வேதமாகவும், பகலில்

யஜுர்வேதமாகவும், மாலையில் சாமகானமாகவும் விளங்கு பவன் ஞாலத்து நாயகனான ஞாயிறு !

ஆரோக்கியத்தையும் ஆயுளையும் தரவல்ல *ஆதித்திய இருதய மந்திரம் அகத்திய மாமுனிவர், ஸ்ரீ ராமச்சந்திர பிரானுக்கு உபதேசித்த மகா மந்திரமாயிற்றே !

ப்ர ஹ்ம மே சானாச் யுதேசாய

ஸூர்யாதித்த வர்ஷே

பாஸ்வத் ஸர்வபதக்ஷாய

ரௌத்ராய வபுஷே நம :

ஹே, சூரியபகவானே ! நீயே பிரம்மா ! நீயே விஷ்ணு ! நீயே சிவன் ! நீயே இவர்களின் அதிபதி ! பன்னிரு ஆதித்தியர்களுக்கு நீயே ஒளி முதல் தெய்வம் ! எல்லாவற்றையும் விளக்குபவனும் நீயே ! விழுங்கு பவனும் நீயே ! எனவே, எனது வணக்கங்களை ஏற்றுக் கொள் !

அஜாதசத்ருவின் கண்களில் வழிந்த நீர், கங்கையினும் புனிதமாய ஆனந்தக் கண்ணீர்.

** தன்னைப் பாதுகாப்பவனைத் தருமம் பாதுகாக் கிறது.

பிரார்த்தனை முடித்த அடுத்த கணம்...

போர் முரசம் முழங்குகிறது.

வீரத்தின் அவதாரப் புருஷன் அஜாதசத்ரு கருநீலப் புரவியில் ஆரோகணித்துப் படை நடத்துகிறான்.

புயல்கண்ட கடல் போல அஜாதசத்ருவின் படைகள் மலைக் கணவாயுள் நுழைகின்றன.

---

* 'இராமாயணம்'— (வான்மீகி) யுத்தகாண்டம்

** தர்மோ ரக்ஷதி ரக்ஷித :

முடிகிற காரியந்தானா ? பிம்பிசாரப் படைகளான மகதப் படைகள் பேயோலமிட்டு எதிர்க்கின்றன.

சர்ர், சர்ர்...ரென்று சரக்கூடம் கட்டத் துடிப்பன போன்று அம்புகள்.

விர்ர், விர்ர்...ரென்று எதிரிகளின் விலாக்களை முறிக்கப் பாயும் ஈட்டிகள்...

ஓ... ரதமுசாலாவும் மகாசிலா கந்தகாவும் இருந்து பயனளிக்கவில்லையே ! மலைமுகட்டு யுத்தத்துக்கு அவை என்ன செய்ய முடியும் ? முதலைக்கு நீரில் பலம்; யானைக்குத் தரையில் பலம். இங்கே யானைகள் அவதிப் படுகின்றன. எப்படியாவது யந்திரங்களைக் கணவாயுள் செலுத்திக் கடந்து விட்டால்...

முதல் கண்டம் முடிவு பெறும்.

கவசமணிந்த அஜாதசத்ரு, இரும்பு முகக்கவச முடியுடன் புரவியை மலை மீது செலுத்துகிறான். இன்னொருபுறம் விதுர்த்தபன், நிக்கசாரண்யன், மிலிட்டஸ் மகாசிலாகந்தகாவையாவது எவ்வாறு பயன் படுத்தலாம் என்று யோசிக்கிறான்.

யானைகளின் பிளிறல்களும் குதிரைகளின் கனைப்பு களும் வீரர்களின் ஆவேசக் குரல்களும் சேர்ந்து பெரு முழக்கமாய் மலை முகடுகளிலிருந்து எதிரொலிக்கின்றன. போராயுதங்களின் பேரொலிகள் அந்த மலைப் பிராந்தியத் தையே மலைக்க வைக்கின்றன. வானத்தில் ஆயிரமாயிரம் கழுகுகள் வட்டமிடுகின்றன.

மலைகளில் தர்மவியூகங்கள் பயன்படாது என்று முடிவு செய்து விட்ட மிலிட்டஸ், தேவதத்தனைக் கலந்து ஆலோசிக்கிறான்.

'இன்றையப் போர் ஓயட்டும் ; இரவு பேசிக் கொள்ள லாம்' என்று வாளாயிருந்தான் தேவதத்தன்.

அன்றைய மாலை அச்சம்தரும் மாலையாக மறைந்தது.

அன்றைய யுத்தமும் ஓய்ந்தது.

மலைகளுக்குப் பின்புறமாக இருந்த தங்கள் பாடி வீடுகளில் ஓய்வு கண்டனர் அஜாத வீரர்கள். எங்கும் தீப்பந்தங்கள் செந்நாவை நீட்டிக் கொண்டிருந்தன. வானில் வளர் பிறை நிலவு குளுமைப் பண்பாடியது.

அஜாதசத்ருவின் நூல்வெண்மாடத்தில் மகாசேனாதிபதி இக்கசாரண்யன், விதூர்த்தபன், தேவதத்தன், மிலீட்டஸ் மட்டுமே அமர்ந்து நாளைய யுத்தத்தில் எப்படியும் யந்திரங்களை மலைதாண்ட வைத்துவிட வேண்டும் என்பது குறித்து ஆலோசிக்கின்றனர்.

"இளவரசே! நாளைய போர் முறையை மாற்றினால் என்ன?" என்றான் தேவதத்தன்.

"எப்படி?"— அஜாதசத்ரு.

"மகாசிலாகந்தகா இரண்டினை இரு மலைகள் மீதும் சக்கரங்களைக் கழற்றி ஏற்றி விட வேண்டும். ஆனால், இந்த இரு ஆயுதங்களை நாம் இழக்க வேண்டி நேர்ந்தாலும் இழந்துதான் ஆகவேண்டும். அது குறித்துக் கவலையுமில்லை. மேலே ஏற்றப்பட்ட மகாசிலா கந்தகாவில் குத்தீட்டிகளையும் குண்டுக் கற்களையும் கூரிய அம்புகளையும் நிறையவே நிரப்பிவிட வேண்டும். நமது வீரர்களுக்கு மட்டும் ஒரு மர்ம எச்சரிக்கை செய்துவிட வேண்டும். பெரிய முரசத்திலிருந்து முதல் 'தும்'மென்று ஓசை கேட்கும். அது கவனம் என்பதை நமது வீரர்களுக்கு மட்டும் சொல்லாமல் சொல்லவில்லை; எதிரிகளையும் ஏனிந்த ஓசை கேட்டது என்று முதலில் சிந்திக்க வைக்கும். இரண்டாம் முறையாக 'தும்'மென்ற ஓசை. அவரவர் தரையோடு தரையாக, முடிந்தால் பாறைகளுக்குப் பின்புறமாகப் படுத்துக்கொள்ளவும் பதுங்கவும் இடம் தேடிக் கொள்ளுங்கள் என்கிற எச்சரிக்கை. எதிரிகளோ, 'ஏதோ சத்தம் கேட்கிறதே! ஏன்?' என்று கவனத்தைத் திசை திருப்ப நேரிடும். மூன்றாம் 'தும்' ஓசை கேட்ட அடுத்த கணம், நமது வீரர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்கிறார்கள். மகாசிலா கந்தகாவிலிருந்து ஆயுதங்கள், மலைகளின் இருபுறங்களில் பாய்கின்றன; தொடர்ந்து பாய்ந்து கொண்டே இருக்கின்றன. எதிரிகள் பாதிக்கு மேல் பலியாவர். மீதிப்பேர் தங்களைப் பாதுகாக்கத் தரையில் படுப்பர்; தப்பி மறைவர். இந்த அவர்களது தடுமாற்றத்தைப் பயன்படுத்திக் கொண்டு நமது வீரர்கள் அவர்கள் மீது பாய்ந்து அதாகதம் செய்துவிட வேண்டும். ஒரு நாளிலேயே இந்த மலைவாசல் போர் ஓய்ந்துவிடும்."

"அருமையான ஆலோசனை!" என்று அஜாதசத்ரு பாராட்ட தேவதத்தனோ, "இது சேரவேண்டிய இடம் மிலீட்டஸ்!" என்று கூற, அனைவருமே கரங்கோத்து மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டிருந்தபோது, வெளியில் ஏதோ ஆளரவம் கேட்டது.

காவல் வீரன் ஒருவன் உள்ளே நுழைந்து வலக்கரத்தை நீட்டி வாழ்த்தும் வணக்கமும் கூறி நிற்கிறான்.

"என்ன செய்தி?"

"உபதளபதி உங்கள் உத்தரவுக்காக வெளியில் காத்து இருக்கிறார்."

யார் குமாரதேவனா?

"அனுப்பிவை!"

வீரன் விடைபெற்றதும் குமாரதேவன் உள்ளே நுழைந்து வணங்குகிறான். அவன் தலை நிமிருவதற்குள் அஜாதசத்ரு கேட்டான்:

"குமாரதேவா! என் தங்கை சண்டி மட்டும் என்ன பாவம் செய்தாள் என்று வெளியிலே நிற்க வைத்திருக்கிறாய்? அழைத்து வருவதற்கென்ன?"

நரம்பு தளர்ந்து நாடி நின்று கவனிக்கிறான் குமாரதேவன்.

ஐயகோ! இவர் என்ன மாய புருஷனா? தன்னைத் தவறாக எண்ணிவிடக் கூடாதே! "குமார சக்ரவர்த்தி! எண்ணிச் சென்றது ஒன்று; அங்கே நடந்தது..."

"உஸ்! அனைத்தும் அறிவேன். குமாரதேவா! என்னிட மிருக்கும் சாதாரணப் போர் வீரன் கூட எனது விசுவாசி! உன்னையா சந்தேகிக்கப் போகிறேன்? நீ அவ்வாறு நடந்து கொண்டதுதான் விவேகம்! ஒரு விஷயம் புரியவில்லை. 'நான் வணங்கும் தெய்வம்' என்று தெய்வத்தின் மீது சத்தியம் வைக்கலாமா? சத்தியம் தவறலாமா?"

"நான் வணங்கும் தெய்வத்தின் பெயர் அஜாதசத்ரு! அந்தத் தெய்வத்தின் மீது ஆணையிட்டதன் காரணம், தெய்வத்தை பக்தன் அழிக்க முடியாது என்பதால் தான்!"

'ஓகோ'வென அஜாதசத்ரு கர்ஜித்த கர்ஜனைச் சிரிப்பு...

வெளியில் பல்லக்கில் அமர்ந்திருந்த சண்டி அதிர்ச்சி கண்டவளாய் பல்லக்கை விட்டு வெளியே வந்து வானத் தைக் கவனிக்கிறாள். எங்கும் மேக மூட்டத்தைக் காணோமே! எங்கிருந்து கேட்டது இந்த இடிமுழக்கம்?

"குமாரதேவா! செய்தியறிந்துதான், உனது வருகையை எதிர்பார்க்காமலேயே யுத்த முரசம் கொட்டி விட்டேன். உனது விழிப்பு. 'அங்கே பேசுகிற போது மூவர்தாமே இருந்தோம்; செய்தி எப்படி இவருக்கு எட்டியது?' என்று தடுமாறுகிறது. எனது விசுவாசிகள் பிம்பிசாரன் இதயத்துள் கூட ஒளிந்து கொண்டிருக்கலாம்! நீ போய் சண்டியை அழைத்துவா! அவளது நாடியைப் பரிசோதிக்க வேண்டும்."

நெட்டநெடிய பெருமூச்சு உள்ளுக்குள் பறிய, வணங்கி வெளியே சென்றான் குமாரதேவன்.

தனது விவேகத்தைப் புரிந்து கொண்ட இளவரசர் அஜாதசத்ருவைத் தெய்வமாக ஏற்றுக்கொண்ட பேற்றினை எண்ணிப் பெருமிதப்பட்டுக் கொண்டான்.

"என்ன உபதளபதி! அழைப்பு கிடைத்ததா? இல்லை நாளைக்கா?"

நின்றிருந்த சண்டி நிமிர்த்திய மார்பகப் பெருமையுடன் கேட்கிறாள்.

"சகோதரி..."

"நிறுத்துங்கள்! இது என்ன சகோதரி முறை?"

"எனது குமார சக்ரவர்த்தியின் சகோதரி எனக்கும் சகோதரிதானே?"

"அப்படியானால் குமார சக்ரவர்த்தியின் மனைவி உங்களுக்கும் மனைவி மாதிரிதானா?"

"மகத இளவரசி! நகைச்சுவைக்கும் அந்து உண்டு. எங்கள் குமார சக்ரவர்த்தியின் மீது உட்கார்ந்து கொஞ்சம் ரத்தம் உறிஞ்சிய கொசுவுக்குக் கூட விசுவாசம் ஏற்பட்டு விடும். இல்லை என்றால் இவ்வளவு பெரிய சைன்னியத்தை அவரால் திரட்டவே முடியாது."

குமாரதேவனை அப்போதுதான் முழுமையாகப் புரிந்து நோக்குகிறாள் சண்டி.

நாம்தாம் திருவிளையாடல் புரிந்திருக்கிறோம் என்றால், நம்மைவிட இவன் பெருவிளையாடல் புரிந்து இருக்கிறான்.

எப்படியோ சந்தர்ப்பமே நீ வாழி!

"மகத இளவரசி! எங்கள் குமார சக்ரவர்த்தி உங்களை அழைக்கிறார்."

16881

"அது என்ன எங்கள் குமார சக்ரவர்த்தி உங்கள் அண்ணார்' என்று சொல்வதற்கென்ன?"

"நீங்கள் வந்தது உறவு முறையைக் கூட்டிப் பார்க்கவா ? பகுத்திப் பார்க்கவா ? நானறியேன்."

"இரண்டுமில்லை ; வகுத்துப் பார்க்க ?"

"கழித்துப் பாாககவல்லவா உங்கள் தந்தையார் அனுப்பி இருக்கிறார்கள்."

"அவர் அனுப்பி இருக்கலாம். நான் பெருக்கிப் பார்க்கவும் வந்திருக்கலாம் அல்லவா ? உள்ளே வாருங்கள் ; கணக்குப் புரியும்."

'ஓ... இவளது பொய்வண்ணம் அங்கு கண்டோம் ; அதனுள் மறைந்திருந்த மெய்வண்ணம் இங்கு கண்டோம்; என்று அவளைப் பொய்வண்ணப் போலி என்று அதுவரை எண்ணியிருந்த குமாரதேவன் பேயறைந்து போனான்.

சண்டி முன்னே நுழைய, குமாரதேவன் பின்னே நுழைகிறான்.

முதலில் கணையெனப் பாய்ந்த கண்கள், விதுர்த்த பனுடைய அவாக் கன்கள்.

அன்றொரு நாள்...

ராஜகிருக அரண்மனையில் இந்தக் கண்கள் 'யார் சண்டி' என்று நொண்டின ; இப்போது மண்டின.

குழையணிந்த மயில் ; மழை மின்னலின் ஒயில் ! குரல் ?...

"வணங்குகிறேன் அனைவரையும். காரணம், உங்களில் யார் என் அண்ணன் என்பது புரியாததால் !"

ஆ ! குயில் ! விதிர்த்தபன் விதிர்த்துப் போனான் ; ஏன்? வியர்த்தும் போனான் ! இவள் இலக்கியம் போல் நயமாக

இல்லாமல், இலக்கணம் போல் முரடாக இருக்கிறாள். ஆணுடை தரித்தால் இவளும் ஓர் அஜாதசத்ருவோ ?

அஜாதசத்ரு எழுந்திருக்கிறான்.

உடன்பிறந்த பாசத்தை இது நாள்வரை காணாத உணர்வுகள், அவனை மேலும் மேலும் மென்மைப்படுத்து கின்றன. இருகரங்கள் நீட்டி, "சண்டி ! என் தங்கையே !" என்று அழைக்க, உணர்வுகளின் சிகையில் பாசமலர்கள் மணக்க ஓடிவந்த சண்டி, அண்ணனைச் சேர்த்துக் கட்டிக் கொண்டு, "அண்ணா ! இன்றுதான் பிறந்தநாள் முதற் கொண்டு காணாத சந்தோஷத்தை முதன்முறையாகக் காணுகிறேன் ! 'இந்த சந்தோஷம்கூட, வேண்டாமடீ சண்டி ! நீ சென்று அவனைக் கொலை செய்துவிட்டுத் திரும்பு' என்று எவ்வளவு கல் நெஞ்சோடு தந்தை கூறினார் ; சின்ன பெரியம்மா தாளம் போட்டாள் ! அண்ணா ! என்னைப் பாராமலேயே என் மீது உங்களுக்கு எவ்வளவு பாசமிருந்தால் ! எத்துணை நம்பிக்கையிருந்தால், மகா ஆமாத்தியர் என்னைப் பற்றிக் கூறியதும் அதனை முழு மனத்துடன் ஆமோதித்துக் கோசல குமாரருக்கு நான் தான் என்று முடிவு செய்திருப்பீர்கள் ?" என்று கூறுகிற போது கண்ணீரால் நனைத்தாள் ; பின் மகிழ்ந்தாள்.

அவளது இருதோள்களையும் பற்றிக் குலுக்கிய அஜாதசத்ரு, "சண்டி ! இது உனக்கு எப்படியம்மா தெரியும் !" என்றான்.

"சிறையிலிருக்கும் பெரியம்மாவுக்கு எப்போதாவது சின்ன சந்தோஷம் ஏற்பட்டிருக்குமேயானால், அது என்னால்தான் அண்ணா !"

"சண்டி ! சண்டி !"

கண்களைத் துடைத்துக் கொள்கிறான் அஜாதசத்ரு.

இதற்குள் கேள்விப்பட்ட அம்பபாலியும் வஜ்ஜிரையும் அங்கே வந்து விட்டனர்.

"அண்ணா! ஐந்து ஆசைகளை நெஞ்சில் புதைத்து ஓடோடி வந்தேன். ஒன்று பூரணமாக நிறைவேறியது. இரண்டாவது, பாலியம்மையின் பாதங்களைப் பணிய வேண்டும். பிறக்கும் போதே தாயை இழந்தவளல்லவா நான்!"

"குழந்தாய்! நான்தானம்மா அந்த அம்பபாலி!"

மண்டியிட்டுப் பாதங்களில் நெற்றியைப் பதிக்கிறாள் சண்டி: "கொலு மண்டபத்தில் முதன்முதலாக எனது பெரியம்மாவின் பாதங்களை வணங்கினீர்கள்; யுத்தகளத்தில் முதன் முதலில் உங்கள் பாதங்களைப் பணிகிறேன் நான். வெற்றி நம்முடையதாக இருக்கட்டும்!"

சண்டி இவ்வாறு கூறி எழுந்ததும் தன்னை மறந்த வஜ்ஜிரை, "சண்டி!" என்று வாய்மணக்க அழைத்துச் சேர்த்துக் கட்டிக்கொண்டு உச்சி முகர்ந்து, "நான் உனது அண்ணியம்மா!" என்றாள்.

அதிர்ந்து போனாள் சண்டி.

ஆ! எனது மூன்றாம் ஆசை.

"அண்ணி! இனி நீங்கள்தாம் ராஜகிருகத்து மக்களை வழி நடத்தும் தாய்! தாயைச் சிறையில் பூட்டித் தவிக்கும் மகதம், உங்களைப் பெரிதும் எதிர்பார்க்கிறது! மூன்று லட்ச மகத மக்கள் சார்பில் நான் ஒருத்தியாக உங்கள் தாள் பணிகிறேன்!"

காலில் விழப்போன சண்டியைப் பற்றிக் கொண்ட வஜ்ஜிரை, "உன்னைப் பார்த்தா கொலை செய்ய அனுப்பினார் மகத சக்ரவர்த்தி?" என்றாள்.

"அவர் அனுப்பினாரா? சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக் கொண்டேன். நானும் உங்களுடன் கம்பீரமாக ராஜகிருக அரண்மனையுள் நுழைய வேண்டாமா? பலரைப் போல் நானுமா அங்கு தலைதாழ்த்தி நிற்க வேண்டும்?"

அஜாதசத்ரு கேட்டான்: "சண்டி! மூன்றாவது ஆசை என்ன?"

"அண்ணியின் ஆசீர்வாதம் கிடைத்து விட்டது அண்ணா!"

"நான்காவது ஆசை?"

நாணித் தலைகுனிந்து கொண்டாள், சண்டி.

"ஓ... புரிகிறது! விதுர்த்தபன் யார்? இதோ நிற்கிறானே செக்குமாடு! இவன்தான்."

சிரிப்பை அடக்க முடியாமல் கொல்லென்று சிரித்து நோக்கிய சண்டி, பூரணச் சந்திரோதயத்தில் பொங்கும் கடல் போலப் பூரித்து, புன்னகைத்து மீண்டும் நாணித் தலை கவிழ்த்தாள்.

"செக்குமாடு என்று ஏன் சொன்னேன் என்றால், அவனது நினைவுகளாகிய மாடுகள் சதா உன்னையே வலம் வந்து கொண்டிருக்கின்றன. இப்போது எண்ணெய் இறங்கி விட்டிருக்கும்."

மீண்டும் சிரித்தாள் சண்டி.

"அஜாதசத்ரு! இருந்தாலும் இவள் முன் இப்படிப் பேசி இருக்கக்கூடாது" என்றாள் அம்பபாலி.

விதூர்த்தபன் இதனைப் பெரிதுபடுத்திக் கொள்ளவில்லை. "உண்மைதானே அம்மா! அஜாதசத்ரு எட்டைத் திருப்பிச் சொல்லிவிட்டான்! சதா இவனையே சுற்றிக் கொண்டு இவனது வெற்றிக்குப் பாடுபடுபவன்தானே நான்? நான் எருதுவானால் இவன் சிவன்!"

விதுர்த்தபனின் விளக்கம் கேட்டு வியக்காதார் யார்?

"சண்டி! ஐந்தாவது ஆசை?" என்றான் அஜாதசத்ரு.

"உங்கள் வெற்றி!"

"அது நம் கையில் இல்லை. அந்தச் சண்டியாகிய துர்க்கையிடம் விடப்பட்ட விஷயம். நாளையக் கதிரவன் நல்ல கதிரவனாக உதிக்கட்டும்."

அனைவரும் உணவுக்கு ஆயத்தமாயினர்.

பிடகம்-30

வைதேகி சபதம்

இயற்கை ஓவியன் வானில் இரவிப் பிரகாசனை வரைந்து இரண்டு நாழிகைகள் ஏறிப் போயிருந்தன.

இரண்டு மகாசிலா கந்தகாக்களை, சக்கரங்களை நீக்கி எப்படியோ மலைக்கு ஆயிரம் பேர் வீதம் நின்று, இருமலைகளிலும் ஒரு சரியான உயர்ச் சமபீடத்தில் கயிறு கொண்டு ஏற்றி நிறுத்திவிட்டார்கள்.

ஐந்து நாழிகைப் போது பூமியின் கர்ப்பத்துக்குள் பதுங்கியதும் போர் முரசம் முழங்கத் தொடங்கிவிட்டது.

கணவாய்க்கு வெளியே இருந்த நான்கு ரதமுசாலாக்களில், அஜாதசத்ருவும் விதுர்த்தபனும் தேவதத்தனும் மிலிட்டஸ்ஸும் மற்றும் பெண்டிர்களும் இருந்தனர்.

எந்த நேரத்தில் மகதவீரர்கள் பலியானாலும் சூரிய காந்தக் கற்களை ஒன்றோடு ஒன்றை ஒட்டி யந்திரத்தை முடுக்கிவிடவேண்டியதுதான். அவற்றின் பின்னே கயிற்றால் கட்டப்பட்டிருந்த ஏனைய மகாசிலாகந்தகாக்களை இழுத்துக் கொண்டு சீறிப் பாய்ந்து மலைக் கணவாயைக் கடந்து ராஜகிருகத்தை அடைந்துவிட வேண்டும்.

இரு மலைகளிலும் அஜாதசத்ரு படைகளும் மகதப் படைகளும் பொருதத் தொடங்கி விட்டன.

கணவாயிலும் பலத்த காவல் வீரர்கள் எல்லைக் கதவைக் காவல் காக்கின்றனர்.

ரதமுசாலாவை விட்டிறங்கிய அஜாதசத்ரு, தனது கருநீலப் புரவியில் ஆரோகணித்துச் சற்றே முன்வந்து

வானை அண்ணாந்து கவனிக்கிறான். கழுகுகள் கூட்டத்திலிருந்து போரின் மும்முரம் புலப்படுகிறது.

சிலர், அருகே வந்து பறந்த ராட்சஸக் கழுகுகளையும் வெட்டிச் சாய்க்கின்றனர். எங்கும் பேயோலமான எதிரொலிகள். மேலும் இருநாழிகைப்போது பூமிப் பிளவில் புகுந்து கொண்டது.

தும்...

ஆ! முதல் எச்சரிக்கை.

என்ன சத்தமிது? மகத வீரர்கள் புரியாமல் தடுமாறித் திரும்ப, அந்தக் கவனக்குறைவால் ரணப்படுகிறார்கள்.

தும்...

இரண்டாம் எச்சரிக்கை.

அஜாத வீரர்கள் உயிர்காக்க மறைவிடங்களையும் தரையில் தரையோடு படுத்துவிடவும் ஆயத்தமாக இருக்கிறார்கள். மகத வீரர்கள் என்னவோ ஏதோவென்று வெறிக் கூச்சலிட்டு வாளைச் சுழற்றுகிறார்கள்.

தும்...

சடசடவென்று மரங்கள் சாய்வன போல் அஜாத வீரர்கள் தரையில் சாய, சிலர் பாறைப் புறங்களில் ஒடி ஒளிய, 'தணார்...தணார்' என்று பெருத்த ஓசைகள் கேட்க, மகதப் படைகள் பிரமிக்க, படபடவென குத்தீட்டிகளும், அம்புகளும் கல்லுருளைகளும் இரும்புத் துண்டங்களும் அரைச் சந்திரவட்டமாகச் சீறிப் பாய்ந்துவர, மகதவீரர்கள் 'ஐயோ' என்றும் 'ஆ' என்றும் 'ஓ' என்றும் அவலக்குரல் எழுப்பி மலைகளில் தூக்கியெறியப்பட்டு உருளுகிறார்கள்.

மீண்டும் அதே தணார்... தணார்...

மூன்றே முறைதான்.

மகதப் படைகள் முக்கால் பகுதிக்கு மேல் அந்த இடத்தில் இழப்பைக் கண்டன. எஞ்சியவை ஓடி ஒளியலாயின.

அஜாதசத்ரு கெக்கலிக் கொட்டிச் சிரிக்கிறான்.

எல்லைக் கதவங்களை வீழ்த்துகின்றனர்.

ரதமூசாலாக்களும் மகாசிலாகந்தகாக்களும் கணவாயைக் கடந்து சமதளத்தை அடைந்து தலைநகருக்குள் பிரவேசித்துவிட்டன. அஜாதவீரர்கள் பெருத்த மகிழ்ச்சியுடன் தங்கள் தலைவனை வாழ்த்திக் கொண்டு முன்னேறுகின்றனர்.

மலைமேல் ஏற்றியிருந்த மகாசிலாகந்தகா இரண்டினை இறக்கும் பணியில் ஈடுபட்டால், அதற்குள் தலைநகரிலிருந்து மேலும் படைகள் குவிந்து விடலாம். மீண்டும் போராட வேண்டும். எனவே அவற்றை மலையிலிருந்து உருட்டி விடுகிறார்கள். மிகுந்த சத்தத்துடன் உருண்ட மகாசிலா கந்தகா இரண்டும் பகுதி பகுதியாகப் பிரிந்து சிதறிப் போயின.

அஜாத படைகள் ராஜகிருகத்தை அடைந்துவிட்டன. அப்போது மலைவாயிலில் சூரியன் மறைந்து கொண்டிருந்தான்.

ராஜகிருகத்தை முற்றுகையிட்ட அஜாத படைகள், இரவு நெருங்கியதால், போர் தருமத்துக்குப் புறம்பாகாமல் ஓய்வு கண்டன. போர் யந்திரங்களுக்கு மட்டும் பலத்த காவலும், மீறி, மகத வீரர்கள் தருமத்தை மீறி ஏதேனும் குறும்பு செய்ய வந்தால் அதனிலிருந்து மீளுவது எப்படி என்கிற பொறுப்பை மிலீட்டஸ் ஏற்றிருந்தான்.

அரண்மனையுள் சக்ரவர்த்தி பிம்பிசாரன் சந்நதம் கண்டவர் போல அலறுகிறார்.

"தருமத்தை மீறி ஆட்களை ஏவி அந்த யந்திரங்களுக்குத் தீ வைத்தால் என்ன?" என்று ஆலோசனை வழங்குகிறாள் இளைய பட்டத்தரசி செல்லனாதேவி.

'பேசாமல் சரணடைந்துவிடுங்கள். வந்திருப்பவன்வேறு யாருமல்ல: ரத்தத்தின் ரத்தம்' என்று கூறத்தான் அருகிலிருந்த மகா ஆமாத்தியர் வஸ்ஸகாரன் வாயெடுத்தார். இத்தருணத்தில் இதைச் சொல்லப் போக, தமக்கு ஆபத்து வந்துவிடக் கூடாதல்லவா? சிந்தித்து வைத்திருக்கும் செயல் சிதிலப்பட்டுப் போய்விடுமே!

"வஸ்ஸகாரரே! நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்றார் பிம்பிசாரன்.

"தீ வைப்பது அவ்வளவு சுலபமல்ல: தருமத்தை மீறுவது சுலபம். ஒரு யந்திரத்துக்கு வேண்டுமானால் சாமர்த்தியமாக முயன்று தீ வைக்கலாம். அவர்கள் விழிப்புண்டு ஏனைய யந்திரங்களில் தீப்பந்தங்களைப் பொருத்தி கோட்டைக்குள் பாய்ச்சுவார்களேயானால்? எவ்வளவு பெரிய நஷ்டம்?"

செல்லனாதேவி சிறுத்துப் போனாள்.

நாளையப் போரை எவ்விதம் வெல்வது? கோட்டையைத் திறவாமல் அஜாதசத்ருவை விரட்டுவதற்கான வழிமுறைகளைக் காண உடனடியாக மந்திராலோசனையைக் கூட்டினார் மகத சக்ரவர்த்தி பிம்பிசாரன்.

கீழ்த் திசையில் செம்பரிதிக் கீற்று வெளிப்பட்டது.

'விண்'ணென்று அஜாத வீரர்கள் தோள்கள் விம்மின.

ஊழ்வினையின் பயனோ என்று ராஜகிருகம் விழிக்கிறது.

உறங்காது விழித்திருந்த மக்கள் மருட்சி கண்டனர்; வீரர்கள் வெருட்சி கண்டனர்: ஆயினும் செஞ்சோற்றுக் கடனுக்கு ஆளான சகலமும் அறிந்த மகத மகாசேனாதிபதி ராஜநாகனே செம்மையாக எவற்றையும் நிறைவேற்ற முன்வந்திருக்கிறானே!

புரவியில் ஆரோகணித்த அஜாதசத்ரு, புயலனைய வேகத்துடன் செயல்படுகிறான்.

கிழக்கு வாசல் கோட்டைப் புறத்தைத் தனதாக்கிக் கொண்டு ஒரு ரதமுசாலாவை நிறுத்துகிறான். விதூர்த்தபன வடக்குவாசல்; மிலிட்டஸ் தெற்கு. திக்கசாரணயன் மேற்கு.

நான்கு ரதமுசாலாக்கள் போக; எஞ்சிய மகாசிலா கந்தகாக்களை வடமேற்கிலும் வடகிழக்கிலும் தென்மேற்கிலும் தென்கிழக்கிலுமாக நிறுத்துகிறான். எஞ்சிய இரண்டு மகாசிலாகந்தகாக்களை சமயத்தில் எங்கு வேண்டுமானாலும் விரட்ட ஆயத்தமாக வைத்திருக்கக் கட்டளைப் பணிக்கிறான்.

ஏனைய நால்வகைப் படைகளுக்கும் தலைமை தாங்கும் பொறுப்பினை குமாரதேவனுக்குப் பணிக்கிறான்.

ராஜகிருகக் கோட்டை முரசம் ராட்சஸ சத்தமெழுப்புகிறது.

அஜாத முரசமோ அட்டதிக்குப் பாலகக் குரல் கொடுக்கிறது.

எட்டுத் திக்கிலும் அஜாதசத்ரு நிறுத்தி வைத்திருக்கும் யந்திரங்களுக்கு முறையே அவன் இந்திரன், அக்கினி, எமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் எனப் பெயர் கொடுத்திருந்தான். ஆகவே, அந்த யுத்த முரசொலியில் அட்டதிக்குப் பாலகக் குரல் முழங்கியது.

நால்வகைப் படைகளும் கோள் புரண்டு வருவனபோல எதிரும் புதிருமாக வருகின்றன.

ஒரு கட்டத்துக்கு வந்ததும் 'ஹோ' என்ற பெருங் கூச்சலுடன் மோதத் தொடங்குகின்றன.

அதுவரை உடன் வாசித்து வந்த போரிசைக் கருவிகள் ஓய்வு பெற்று ஒதுங்கிக் கொள்கின்றன.

ஆ! ஒரு மகா பிரளயமே ஏற்பட்டுவிட்டது போலிருக்கிறது அந்தப் போர்க் காட்சி.

அங்கே நடக்கும் ரத்த வேள்வி அவசியமா என்று படுகிறது மிலீட்டஸுக்கு.

அவன் புரவியில் ஆரோகணித்து விரைந்து வருகிறான். போர் காட்சியை ஒரு கலா ரூப ஓவியனைப் போலக் கண்டு களித்துக் கொண்டிருந்த அஜாதசத்ருவை நோக்கி, "வீணில் நேரத்தை ஏன் கடத்த வேண்டும் இளவரசே?" என்றான்.

அஜாதசத்ரு— வைதேகி புத்திரன், சிறையில் வாடும் தாயின் நெற்றித் திலகச் சிரிப்பு சிரிக்கிறான்.

"மிலீட்டஸ்! நமது ரத்தத்தையும் ராஜகிருக பூமியில் கொஞ்சம் சிந்தியிருக்கிறோம் என்பதைக் காட்ட வேண்டாமா? போ! போய், ரதமுசாலாக்களுக்கான சமிக்ஞை ஓசை எழுப்ப ஆணையிடு!" ஆண்மையின் நிமிர சலோடு அஜாதசத்ரு குரல் ஒலிக்கிறது.

அடுத்து...

'தும்,' என்ற சமிக்ஞை ஓசை— முரசோசை எழுந்தது தான் தாமதம்...

எச்சரிக்கை, எச்சரிக்கை...

அஜாத வீரர்கள் சட சடவென்று தரையில் சாய...

ஏதோ தங்களுக்குப் பணிந்து சரணடைந்து காலில் விழுகிறார்கள் எதிரிகள் என்று மகத வீரர்கள் வியந்து எண்ணி முடிப்பதற்குள்... மீண்டும் சமிக்ஞை ஓசைகள்...

அட்டதிக்குப் பாலகர்களும் பேசத் தொடங்கி விட்டனர்.

ராஜகிருக வீரர்களும், கரிகளும், பரிகளும், ஏன், சாலையோரத்தில் மேய்ந்து கொண்டிருந்த கழுதைகளும் கூடத் துள்ளி விழுந்தன; உயிரைத் துறந்தன.

ராஜகிருக வீடுகளின் சாளரங்கள் படபடவென சாத்தப்படுகின்றன.

மகதப் படைகள் சின்னாபின்னமாகின்றன. தரையில் விழுந்த அஜாத படைகள் ஊர்ந்தே பின்னோக்கி வந்து சேருகின்றன. அவர்களிலும் ஒரு சிலர் அங்கத்தில் ரணப் பட்டு அலறுகிறார்கள்.

எட்டுத் திசைகளிலும் ஏற்பட்ட இந்தத் தாக்குதலுக்கு ஏழு நாழிகைகளா தேவை? எழுபது நாடித் துடிப்புப் போதாவா?

அஜாதசத்ரு படைகள் கோட்டையைச் சூழ முன்னேறுகின்றன.

ராஜகிருக கோட்டை மதில்களிலிருந்து வீரர்கள் பல்வேறுபட்ட ஆயுதங்களை எறிகிறார்கள்; நெருப்பைக் கொட்டுகிறார்கள். கொதி நீரை இறைக்கிறார்கள்.

அஜாதபடைகள் அவதிப்பட்டாலும் எதிர்த் தாக்குதலை நிகழ்த்துகிறார்கள்.

இப்போது மகா சிலா கந்தகாக்களை வானோக்கி நிமிர்த்திப் பயன்படுத்த...

கோட்டை மேலிருந்த வீரர்கள் கோட்டு வாய் விட்டு அலறி விழுந்து ஓடுகிறார்கள்.

அப்போதும் கோட்டைக் கதவங்கள் திறக்கவில்லை.

"கோட்டையைத் திறந்து விடுங்கள்; இல்லை, கோட்டையே எரியும்!"— கருநீலப் புரவியில் பவனி வந்த அஜாதசத்ரு ஓங்கிக் குரல் கொடுத்துக் கர்ஜிக்கிறான்.

கதவுகள் திறந்த பாடில்லை.

அடுத்த ஆணை அஜாதசத்ருவின் நாவிலிருந்து பிறக்கிறது. "எறியுங்கள் தீப்பந்தங்களை. கோட்டைக் கதவங்கள் எரியட்டும். ஏன் ? கோட்டையே எரியட்டும் !"

மகா சிலா கந்தகாவின் அகண்ட இரும்பு அகப்பைக் கரங்களில் பந்தாகச் சுற்றியிருந்த பஞ்சுப் பொதிகளில் எண்ணெய் ஊற்றி ஏற்றி எறிகிறார்கள்.

கோட்டை தீப்பற்றிக் கொள்கிறது. உள்ளிருந்து ஓலப் பெருங்கூச்சல் அவலமாய்க் கேட்கிறது.

கோட்டைக் கதவுகளைத் திறக்கும் முயற்சியில் ஈடுபட்டனர் அஜாத படையினர்.

ராஜகிருகக் கோட்டையே அஸ்திவாரம் இழந்தது போல ஆடத் தொடங்கிவிட்டது.

அரண்மனையுள்...

மகத சக்ரவர்த்தி பிம்பிசாரன்...

வெடித்த மார்பில் நெருப்புப் பொறி பறக்க, துடித்த தோள்களில் தோல்வி கதி கலங்க, கடித்த உதடுகளுடன் கம்பீரமிழந்த நடையுடன் சிறைக் கோட்டம் நாடி விரைகிறார்.

ஒரே வழி, வைதேகியை வைத்து அஜாதசத்ருவை அடிபணிய வைக்க வேண்டும்.

சிறைச்சாலையில் வைதேகியோ, செய்தி கேட்டுப் பட்ட சித்திரவதைக்கெல்லாம் பயன் கண்டதே போல அடி வயிற்றில் பால் சுரக்க அகமகிழ்ந்து போனாள்.

நெற்றியைத் தொட்டுப் பார்த்துக் கொள்கிறாள்.

குமாரனிட்ட குருதிக் குங்குமச் சொரசொரப்புத் தெரிகிறது.

ஓ... இரக்கமற்ற இருபது ஆண்டுகளே !

"வைதேகி !"

—எங்கோ கேட்ட கம்பீரக் குரல்.

எழுந்து வந்து உற்றுக் கவனிக்கிறாள், வைதேகி.

ஓ... கணவர் !

வியர்த்து வெலவெலத்து வந்திருக்கிறார்.

இருபது ஆண்டுகளுக்குப் பிறகு பார்க்கிறோம்.

வயதின் படிப்படிப் பருவத்தைப் பார்த்த மனைவிக்கு —நல்ல மனைவிக்குக் கணவன் எப்போதும் அன்று பார்த்த முகம் போல ஆனந்த மணம் பரப்புவான் !

இப்போது, யார் இந்த முதியவர் என்றல்லவா கேட்கத் தோன்றுகிறது ? ஆனாலும் கணவர்... கணவர்...

உற்றுக் கவனிக்கிறாள். ஒருகணம், ஒருகணம்...

பிம்பிசாரச் சக்ரவர்த்திக்கு இந்த எண்ணம் பிறக்க வேண்டுமே ! அது *பேய்களோடு வாழ்க்கை நடத்திய பிம்பமல்லவா ?

மலங்க மலங்க விழிக்கிறாள், எலும்புருவாய் நின்ற வைதேகி.

வெளியே போர் இரைச்சல் கேட்கிறது.

கேள்விப்பட்ட சிறைக் கோட்டத்துப் புதிய அதிகாரி காண்டீபன் அங்கு ஓடி வந்தான்.

"காண்டீபா ! சிறையைத் திறந்துவிடு !"

வைதேகி பொங்கினாள் :

"ஏன் ? எதற்கு ? காரணம் சொல்லிவிட்டுக் கதவைத் திறக்கலாம்."

"நீ கேள்வி கேட்டு நான் விடை கூற வேண்டுமா ?"

* கணிகையர்களோடு.

"கேள்வி கேட்கப் போகிறவன் அரண்மனையினுள் நுழைந்து கொண்டிருக்கிறான்."

"அரண்மனையுள் நுழையவில்லை; எரித்துக் கொண்டிருக்கிறான்."

"மகிழ்ச்சியோடு நான் சாம்பலாவேன்!"

சிறைக் கோட்டச் சுவர்களைக் கிழித்துக் கொண்டு ரதமுசாலாவின் பூதாகாரமான சத்தம் பாய்ந்து வருகிறது; சுவர்களைப் பிளக்கிறது.

"வெட்டிப் பேச்சு. நேரமில்லை. நீ என்னுடன் வருகிறாய். போரை நிறுத்தும்படி அஜாதசத்ருவுக்கு ஆணை பிறப்பிக்கிறாய்."

"ஆணை பிறப்பித்து...?"

"உன்னை மீட்டுக் கொண்டு அவனை வந்த வழி நோக்கித் திரும்பச் சொல்கிறாய்?"

எவ்வளவு அறியாமையாக இவர் பேசுகிறார்.

ஓ... இன்னும் புத்தி வரவில்லை.

"ஏன் தயக்கம்? காண்டீபா! கதவைத் திற! இவளாக வந்தால் மரியாதையுடன் அழைத்துச் செல்கிறேன். மறுத்தால் கூந்தலைப் பிடித்துத் தரதரவென்று நாயை இழுத்துச் செல்வதைப் போலச் செல்கிறேன்!"

"போரை நிறுத்தலாம்! எனது சபதத்தை நிறுத்த முடியுமா சக்ரவர்த்தி?"

"என்ன சபதம்? பெரிய பாஞ்சாலி சபதம்?"

வைதேகி இப்போதுதான் மெய்தேகியாகி மேனி சிலிர்த்துப் போனாள்:

"மகத சக்ரவர்த்தி! பாஞ்சாலி சபதம் வெறும் துகிலுரித்த சபதம்! என் சபதம்! என் சபதம்...? ஓ..."

உடலைக் கூனிக் குறுகிக் கொள்கிறாள் வைதேகி:

"இதோ! என் நெற்றியைப் பாருங்கள்! குங்குமத்துக்கும் வக்கில்லாத குற்றச்சாட்டுகளைக் கேட்டு நமது மகன் தனது குருதியால் குங்குமமிட்டு, 'நான் வந்து மீட்கும் வரை இதனை அழியாமல் பாதுகாத்து வைக்க தாயே!' என்று ஆணையிட்டுச் சென்றிருக்கிறான். அன்று முதல், முகம் கழுவுவதையே முற்றுமாகத் துறந்தேன். உங்கள் கையால் என் நெற்றியில் குங்குமம் இடுகிற வரை அவன் உங்களை மன்னிக்க மாட்டான். வந்த வழி நோக்கித் திரும்ப மாட்டான். அவன் மராமர மந்திரத்தில் பிறந்த அந்த ராமச்சந்திரமூர்த்தி! அவன் மனைவி வைதேகியை மீட்டான்! இவன் அன்னை வைதேகியை மீட்க வருகிறான்."

"என்னை ராவணனாகவா பழித்துப் பேசுகிறாய்?"

அப்போது கணீரென்று அந்தச் சிறைக் கோட்டத்தையே கிடுகிடுத்து அதிரும்படியான குரல் கேட்டது: "அந்த ராவணன் இந்தப் பிம்பிசார அரக்கனை விட எவ்வளவோ மேலானவன்! அவன் பிறன் மனையைத்தான் சிறை வைத்தான்! பிம்பிசாரா! நீ தன் மனைவியையே சிறை வைத்துச் சித்திரவதையும் செய்தாய்!"

உருவிய வாளுடன் உருத்திரனைப் போல் வந்து நின்றான் அஜாதசத்ரு.

பீதி கண்ட பிம்பிசாரன் பிதுங்கிப் போனார்.

பிடகம்-31

பிராயச்சித்தம்

அக்கினியின் ஆவேச உருவினனாய் உருவிய வாளுடன் வந்து நின்ற அஜாதசத்ருவுடன் அனைவருமே பின்புலமாக நிற்கின்றனர். அவர்களுள், மகா ஆமாத்தியர் வஸ்ஸகாரரும் இருந்தார்.

பீதி கொண்டு பிதுங்கிய பிம்பிசாரன், "வஸ்ஸகாரா! இவை யாவும் உனது சூழ்ச்சிதானா?" என்று பீரிட்டுக் கதறுகிறார்.

வஸ்ஸகாரர் அமைதியாகச் சொன்னார்: "சூழ்ச்சி செய்திருந்தால் இந்தப் போர் முழக்கமே தேவையில்லை. அலுங்காமல் நலுங்காமல் மகதத்தை அப்படியே எடுத்துக் கொடுத்திருப்பேன். பிறகு அஜாதசத்ருவின் வீரத்துக்கு மதிப்பில்லாமல் போயிருக்குமே! அஜாதசத்ரு, வீரன் மட்டுமல்ல; அறிவு நுட்பம் படைத்த யந்திர ஞானி. ரதமுசாலா போதாதா? தெற்கே விந்திய எல்லை வரை மகத எல்லை பரவும்! சக்ரவர்த்தி! நான் எடுத்துச் சொன்ன போதெல்லாம் இடக்கரத்துப் புறப்பகுதியால் ஒதுக்கினீர்கள். உங்களுக்கு அழகு மகளிர் அறிவுரைகள் பெரிதாகத் தெரிந்ததேயொழிய ஒரு ஆமாத்தியனின் அறிவுரைகள் சிறியனவாகத் தெரிந்தன. நான் மனமறிந்து செய்த ஒரே தவறு, அஜாதசத்ரு என்கிற குழந்தைக்கு உயிர் காப்பவனாக இருந்தேன். மகத மகாராணியின் மாசற்ற கற்புக்கு மெய்க்காப்பாளனாக இருந்தேன். மற்றபடி இந்த அரசுக்கு நான் ஒரு துரோகமும் செய்யவில்லை. இப்போதும் மாற்றான் மடியில் மகதத்தைப் போட்டு விடவில்லை. தோற்றான் தந்தை; வென்றான் பிள்ளை. இதில் களங்கத்-

துக்குக் காரணமே இல்லை. அழிக்க வேண்டியது ராஜமாதாவின் பழிச்சொல்— களங்கம்."

பிம்பிசாரன் கண்கள் நெருப்புத் துண்டங்களாகின்றன.

"சிறைக் கதவைத் திறவுங்கள்!"

அஜாதசத்ருவின் ஆணையைக் கேட்டு அலறிப் புடைத்துப் பூட்டைத் திறக்கிறான் சிறைக்கோட்ட அதிகாரி காண்மடபன்.

சிறை மீட்டு அன்னையை வெளியில் அழைத்து வந்த அஜாதசத்ரு, அன்னையைச் சேர்த்து அணைத்துக் கொள்கிறான்.

"மகனே, என் மகனே!"

பூரித்துப் போகிறாள், புலம்பிப் புலம்பி இரவுகளைக் கழித்த புனிதவதி வைதேகி.

அன்னையின் நெற்றியைக் கவனிக்கிறான்.

"குருதிக் குங்குமத்தை நீ வருகிற வரையில் கூடுமான வரை காப்பாற்றி இருக்கிறேனடா ராஜா! ஏதோ வியர்வையால் அங்குமிங்குமாகக் கலைந்திருக்கலாம்."

கண்களனைத்தும் கலங்கிப் போயின. இரண்டு சாரமற்ற கண்களைத் தவிர!

அடுத்து அஜாதசத்ருவின் ஆவேசப் பிரகடனம் பிறக்கிறது: "இதே சிறையில் தள்ளுங்கள் பிம்பிசாரனை! நிராயுத பாணியாக நிற்க வையுங்கள். இரவும் பகலும் எந்த நேரமும் கண்ணுங் கருத்துமாகக் காவல் நிற்க வேண்டும்! என் அன்னையை எப்படி நடத்தினாரோ, அப்படி நடத்துங்கள்!"

வாளையுருவிக் கொண்டு அருகே வந்து நின்ற மகா சேனாதிபதி திக்கசாரண்யன், அடம்பிடித்த பிம்பிசாரனை

வலுக்கட்டாயமாகச் சிறையினுள் தள்ளிக் கதவைச் சாத்திப் பூட்ட ஆணையிடுகிறான். ஓ...! அந்தக் காட்சி...

பிம்பிசாரன் கதறுகிறார்: "என்னையா சிறையில் அடைத்தீர்கள்? என்னையா சிறையில் அடைத்தீர்கள்?"

வைதேகியின் வற்றிய கண்களில் எப்படியோ இரு நீர்த்திவலைகள் அரும்புகின்றன.

"மகனே, அஜாதசத்ரு! உன் தந்தை; உன் தந்தை! நான் சிறையிலிருந்தது விதி வசம்! மகத மகா சக்ரவர்த்தி சிறையில் இருக்கலாமா? வேண்டாமடா, மகனே! அஜாதசத்ரு! என் சபதத்தை அவரைச் சிறை வைக்காமலேயே நிறைவேற்றிக் கொள்ளலாம்! அவரை மன்னித்து விடு! மன்னித்து விடு!"

வைதேகியின் உடலில் சதை இருந்தால்தானே துடிக்க? ஆனால், எலும்புகள் துடித்தன!

அந்தத் துடிப்பைத் துகளாக்கினார் பிம்பிசாரர்: "இவன் யார் என்னை மன்னிக்க? வேசிக்குப் பிறந்தவன்!"

தொடர்ந்து வெடித்தது ஒரு பூகம்பம்: "பிம்பிசாரா...!"

பீறிட்டு ஒலித்தது அந்தப் பெண்குரல்.

குரல் வந்த திசை நோக்க, அங்கே பலரை விலக்கிக் கொண்டு வந்து நின்றவள் அழகுப் பனுவல் அம்பபாலி. அவளது கண்கள் அக்னியில் அபிஷேகித்துக் கொண்டிருந்தன.

அம்பபாலியா இவ்வாறு அழைத்தாள்— அதுவும் ஒருமை போட்டு?

சில கணங்கள் வரை அங்கே அராஜக அமைதி நிலவியது. பூக்களையே தடவிப் பார்த்துக் கொண்டிருந்த அமைதி, முட்களால் கிழிபட்டு ரத்தம் கொட்டி நிலவுகிறது.

மகதமாதேவி வைதேகியின் தாள் பணிந்து எழுகிறாள் அம்பபாலி: "மகதமாதேவி! உங்களை அக்கா என்றழைக்க எனக்கு அருகதையில்லை. காரணம், நான் வேசியாக்கப் பட்டேன். ஆனாலும் எனது ஆத்மா அக்கினிப் பிரவேசம் நடத்திப் பவித்திரம் கண்டது. தயவுசெய்து என்னைப் பேச விடுங்கள்! நான் மனிதனோடு பேசவில்லை; ஒரு மிருகத் தோடு பேசப் போகிறேன்."

மிருகத்தோடு என்று தொனித்த அழுத்தம் கண்டு, "பாலி! நீ இப்படிப்..." என்று வைதேகி வாய் திறந்ததும், அஜாதசத்ரு குறுக்கிட்டான்: "என் அன்னையைப் பேச விடுங்கள்!"

அன்னையை .. என் அன்னையை...

"ஏன் மகத மாதேவி அப்படிப் பார்க்கிறீர்கள்? அஜாதசத்ரு 'என் அன்னை' என்று சொல்வதற்காகவா? நீங்கள் அவனை என் மடியில் போடச் சொன்னபோது அவனது கொப்பூழ்கூட அறுபட்டு விழவில்லையே! முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்கள் நீங்கள் அவனைச் சுமந்திருக்கலாம், அவ்வளவே! ஆனால், நான் அவனை வட்டிலிலும் தொட்டிலிலும் மார் மேலும் தோள்மேலும் போட்டுத் தாலாட்டி, பாலூட்டி, நீராட்டி, சீராட்டி வளர்த்து, வாலிபமாக்கி, வட்டுடை தரிக்கும் பாசறைச் சிங்கமாக்கியவளல்லவா? இந்த முயற்சிக்குப் பின்னாலிருக்கும் எனது தியாகம்... தியாகம்... வேசி என்ற விருதுக்குரிய தியாகம்... இப்படியிருக்க, நான் வளர்த்ததால் இவனை இந்த மிருகம், வேசியின் மைந்தன் என்கிறதா? அல்லது வைதேகியின் புத்திரனையே வேசியின் புத்திரன் என்கிறதா? விளக்கம் தேவை! சொல்லுங்கள் மகாராணி! சொல்லுங்கள் மகாராணி!"

'ஹோ'வென அழுது விட்டாள் ஒரு மகத்தான தீபத்தின் தியாகம் போன்ற அம்பபாலி.

அந்த அழுகுரலுடன் அபசுருதிபோல் பிம்பிசாரன் குரல் ஒலித்தது :

"இரண்டு பேருமே வேசிகள் ! எவன் புத்திரன் என்று சொன்னால் என்ன ?"

"ஏ, பிம்பிசாரா...!"

—அஜாத கர்ஜனை ! வாளை உருவிக் கொண்டான் : "காண்டபா ! சிறைக் கதவுகளைத் திற ! விரைந்து திற ! சிறை அறையிலேயே இந்த மிருகத்தைச் சிரச்சேதம் செய்கிறேன் ! ம்ம் ! திற, திற...!"

அடலேறு உடல் பதைத்து, படலேறித் தாவிப் பகை எருதை வீழ்த்தப் பாய்வது போலப் பாய்கிறான், உடலுறுப்புகள் துடிபட்ட, உன்மத்தம் வெடிபட்ட உத்தம ஜாதி ரத்தத்துக்குப் பிறந்த அஜாதசத்ரு.

அந்த இடியேறு மேலும் இரைகிறது : "இன்னுமா கதவைத் திறக்கவில்லை ?"

காண்டபன் ஓடிச் சென்று கதவைத் திறக்க முயல, வைதேகி குறுக்கிட்டுத் தடுக்கிறாள் :

"மகனே ! என் அஜாதசத்ரு ! அவர் குணம்..."

"நாய்க்குணம், நரிக்குணம், பேய்க் குணம், பிசாசுக் குணம் ! ஏழைகளின் ரத்தத்தை உறிஞ்சும் சீமான்களின் வர்க்கத்தில், இந்தப் பிம்பிசாரன் பெண்களின் ரத்தத்தை உறியும் கிரீட ஜாதிப் பேய் ! செம்மை நிரம்பிய மனைவியைச் சந்தேகித்த செங்கோல் செந்நாய் ! காண்டபா ! கதவைத் திறக்கவில்லை என்றால் முதலில் உன் கதை முடியும் ! இறந்து விடு ! தந்தையைக் கொலை செய்தான் தனயன் என்று சரித்திரம் என்னைத் தூற்றட்டும் ; இப்பேர்ப்பட்ட தந்தைகள் இனி தோன்றக்கூடாது. ம்ம்! கதவைத் திற !"

அஜாதசத்ரு எரிமலையின் உச்சியில் தாண்டவமாடுகிறான்.

அந்த ஊழித் தாண்டவம் கண்ட வைதேகியின் கண்கள், அம்பபாலியைத் துணைக்கு அழைக்கின்றன.

அடுத்துக் கொஞ்சமும் தாமதியாமல் இடைமறித்து நிற்கிறாள் அம்பபாலி :

"அஜாதசத்ரு ! நான் அம்பபாலி ! நான் அம்பபாலி ! இந்த இருபது ஆண்டுகளாக நீ நினைந்து பாராத சிறிய அன்னை அம்பபாலி ! உனக்காகத் தேகத்தை விற்ற, தெய்வமாக் கலையை விற்ற, கவிதையனைய அழகைச் சீர் சீராகப் பிய்த்துச் சீரழிந்த அம்பபாலி ! மகனே, சினம் தவிர்ப்பாய் ! அஜாதசத்ரு, சினம் தவிர்ப்பாய் !"

மதர்த்த அஜாதசத்ருவின் தோள்களை, வியர்த்த அம்பபாலியின் கரங்கள் துணிந்து பற்றுகின்றன.

பாலியையும் இவன் தூக்கி எறிவானோ ?

ஆனால், அஜாதசத்ரு ?

அம்பபாலி கூறிய விளக்கம் கேட்டுச் சினம் அடங்க அடங்க, வேதனை மேலோங்கி அழுதறியா அஜாதசத்ரு அழத் தொடங்கி விட்டான். ஓ...! மாவீர மாணிக்கம் கலங்கலாமா ? மாசு கற்பிக்கப்பட்டபின் ?

"அம்மா ! நான் யாருக்காக அழுவேன் ? எவர் களங்கத்துக்காக அழுவேன் ? என் களங்கம் பலர் முன் அழிபட வேண்டும் !"

"அஜாதசத்ரு ! என் களங்கம் பற்றி இனி யார் அழுது என்ன பயன் ? இனி உன் களங்கம் தீரவேண்டும் ; என் தெய்வமாகிய வைதேகி தேவியின் களங்கமும் தீர வேண்டும் ! நான் எடுத்துக்கொண்ட முயற்சி பூரணத்துவம் பெற வேண்டும். அஜாதசத்ரு ! வேசியர்களின் முந்தானையில் வியர்வைத் துடைத்துப் பழகிய மகதராஜன், மாசுமறுவற்ற ஒரு மங்கை நல்லாளின் கற்புக்குப் புலன் விசாரணை நடத்தியதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது.

ஆனால், மகதராணியைச் சிறையில் தள்ளியதும், உன்னைச் சிசு என்றும் பாராமல் கொல்ல உத்தர விட்டதும்தான் மகோன்மத்தம்! பிரணவத்தைத் தாறுமாறாகப் பிய்த்துக் குப்பையில் போடத் தெரிந்த கோமானுக்கு, உன் பிறப்பின் ரகசியத்தை ஆற அமர ஆலோசிப்பதற்கு அறிவு எங்கே இருக்கப் போகிறது? அராஜகனுக்கு ஏழையின் வயிற்றைக் காட்டிலும் பேழையின் ரத்தினங்கள் எப்படிப் பிரகாசிக்குமோ, அப்படி இந்தப் பிம்பிசாரனுக்குப் பத்தினிப் பெண்ணின் பவித்திரத்தைக் காட்டிலும் சித்தினிப் பெண்ணின் சித்திரங்கள் மேலாகத் தெரிந்தன."

அம்பபாலி பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறாள். நேரே சிறைக் கதவண்டை சென்று நிற்கிறாள். பிம்பிசாரனை விழுங்கி விடுவது போலக் கவனிக்கிறாள். "ஏ, பிம்பிசாரன்! இப்போது மரியாதையுடன், அம்பபாலி பேசுகிறாள். ஏனென்றால், இனியாகிலும் நீங்கள் மரியாதையின் சிறப்பைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதால்! ஒரு கற்பின் கனல்மீது கை வைக்கப் போய், அது கொடுத்த மரியாதைகளும் சிறப்புகளும் உங்களுக்குப் புரிபடவில்லையானால், உங்கள் சரித்திரத்தை யாராலும் மாற்ற முடியாது! மூன்று ஆண்டுகளுக்கு முன்னம் இதே ராஜகிருகத்தில் புத்த பகவான் எழுந்தருளியதையும் சம்வாதங்களை நிகழ்த்தியதையும் நானறிவேன். அப்போதும் உங்களுக்குப் புத்தி வரவில்லை. சண்டியை அனுப்பிக் கொலை செய்யப் பணித்தீர்கள். என்ன நடந்தது? சகோதரப் பாசம் வென்றது. உங்களிடம் அந்தப் பாசம் மருந்துக்கும் இல்லாதது வெட்கப்படத்தக்கது. பகவான் புத்தரே உங்களைப் பரிசோதித்து, 'சீ! நீ இவ்வளவுதான்!' என்று சென்று விட்ட பிறகு, நீங்கள் அவருக்குத் தானம்செய்தென்ன, தருமம் செய்தென்ன? உலகத்தில் மிகச் சிறந்த நிர்மூடன் யார் தெரியுமா? மனைவியைச் சந்தேகிப்பவன். சந்தேகத்துக்குரியவள் என்பது வேறு விஷயம். சந்நிதானத்துக்

குரியவள் என்பது ஒழுக்கமுடைய கணவன் ஒருவனுக்கே புரிபடுகிற புஷ்பாஞ்சலி! ஜனகபுரத்து அஜாதசத்ரு, தேவர்கள் கனகமாரி பொழியக் கூடிய பேராண்மைப் பெருநாயகன்! அவரை நான் அறிந்ததையும் நீங்கள் அறியாததையும் சொல்லுகிறேன், கேளுங்கள்!..."

அம்பபாலி, வைதேகிக்கான அக்கினிப் பிரவேசத்தை வார்த்தை நெருப்புகளால் நடத்தி வைக்கிறாள்.

ஒவ்வொரு கட்டத்திலும் நடந்ததை நடை நயத்துடன் வார்த்தைகள் மூலம் வலம் வரச் செய்கிறாள்.

அன்றிரவு நடந்ததையும் அதன் பின் அங்கத்து வெற்றியையும், ஜனகபுரத்து அஜாதசத்ருவின் தியாகத்தையும், செல்லனாதேவியின் திசை திருப்பத்தையும் பிட்டுப் பிட்டு வைக்கிறாள்.

அப்போது பார்த்து வந்தது அந்தச் செய்தி...

செல்லனாதேவி தனது இரு பிள்ளைகளுடன் இரகசியச் சுரங்க வழியாகத் தப்பிச் சென்று விட்டாள். வைசாலி நோக்கிப் புறப்பட்டு விட்டாள். உடன் உதவியர்கள் பத்மாவதி போன்ற காமக் கிழத்திகள்.

செய்தி கொண்டு வந்தவள் வேறு யாருமல்ல; பிம்பிசாரன் கடைசியாக மணந்து கொண்ட சூரசேன ராஜகுமாரி ஹேமா. உடன் வந்தவள் சண்டி.

இதுவரை புத்தபகவானை மனத்தில் கொண்டு ஒரு ஞான அனுபூதி போலப் பேசி வந்த அம்பபாலி, இச் செய்தி கேட்டுக் கலகலவென்று நகைக்கிறாள்.

"கேட்டீர்களா செய்தியை, மகத ராஜன்? இப்படியானவர்கள் பேச்சைக் கேட்டு, பொய்யான சந்தேகத்துக்குப் பட்டத்தரசி பட்டம் வழங்கி, மெய்யான பவித்திரத்தைச் சிறையிலடைத்தீர்கள். இருபது ஆண்டுகள்! அதற்குப் பிராயச்சித்தம் வேண்டாமா?"

"நிச்சயம் வேண்டும்! தாயே, நிச்சயம் பிராயச்சித்தம் வேண்டும்! அந்தப் பிராயச்சித்தத்தை இதோ, நானே இதே சிறையறையின் முன் பிரகடனப் படுத்துகிறேன். இவர்..."

"அஜாதசத்ரு!" வைதேகி துணிந்து அஜாதசத்ருவின் வாயைப் பொத்தி, "மகனே! கொஞ்சம் யோசித்துத் தண்டனையை வழங்கு! ஆனாலும் சபதத்தை நிறைவேற்று! அது முரட்டுத்தனமாக இருக்கக்கூடாது. நான் எனது சுவாசமே அவரது வாசமாகக் கண்டதையன்றி வேறொன்றும் அறியாதவள். நான் அவரை முழுக்க முழுக்க நேசித்தவள்! இந்த இருபதாண்டுச் சிறைவாசத்தை ஒரு கனவாக எண்ணி மறந்து விடுகிறேன். தண்டனையைப் பெரிதாக வழங்கி விடாதே! உன்னை முந்நூறு நாள் சுமந்தேனே, அந்த பாரத்துக்குக் கூலியாகக் கேட்கிறேன், அவருக்குக் கடுமையான தண்டனையை வழங்கிவிடாதே!"

தந்தை விஷயத்தில் அரக்க மனம் பூண்டிருந்த அஜாதசத்ருவின் கல்நெஞ்சை, முந்நூறு நாள் கூலி கலங்க வைத்து விட்டது.

நீண்ட பெருமூச்சுடன் சற்றே தலையைத் தூக்கிக் கண்களை இறுக மூடுகிறான் அஜாதசத்ரு.

சில கணங்கள் சிந்தனையில் ஐம்புலன்கள் அமர்ந்து மந்திராலோசனை நடத்துகின்றன. ஆறாம் அறிவு தலைமை தாங்குகிறது. மகா பண்டிதையான வைதேகிப் புத்திரனல்லவா? பாலிமொழிப் பண்டிதையான பாலியால் வளர்க்கப்பட்டவனல்லவா? ஆயினும் களங்கம் தீர வேண்டும்; தாயின் சபதம் நிறைவேற வேண்டும்.

கண்களைத் திறக்கிறான். அனைவரையும் கவனிக்கிறான். கடைசியாக அவனது கண்கள், தந்தை பிம்பிசாரன்பால் நின்று பரிசீலிக்கின்றன. பிம்பிசாரன் தலைகுனிந்து போனார்.

"இருபதாண்டுகள் என் அன்னை இந்த இருட்டறையில் —நாற்றம் பிடித்த இருட்டறையில் சித்திரவதைப்பட்டார். பிம்பிசாரனே! உன்னையும் இருபதாண்டுகள் இதே சிறையில் வைத்துப் பார்க்கத்தான் எண்ணியிருந்தேன். ஆனால், நீ யாருக்கெல்லாம் துரோகம் செய்தாயோ, அந்தத் துரோகங்களே இப்போது உனக்காகப் பரிந்து கண்ணீர் வடிக்கின்றன. எனவே, இருபது நாள் சிறைவாசம் அளிக்கிறேன். இதைவிடச் சிறந்த மன்னிப்பு இருக்க முடியாது. இடையில் எனது மகுடாபிஷேகம் நடைபெறும். விரும்பினால் காவலுடன் வந்திருந்து மகத மகா சக்ரவர்த்தி அஜாதசத்ருவைத் தரிசிக்கலாம்; மகிழலாம். விருப்பமில்லையென்றால் சிறைச்சாலையிலிருந்தே கேள்விப்பட்டுப் புழுங்கலாம்! இன்று முதல் எண்ணி இருபதாம் நாள் காலை நான் இங்கு வந்து உன்னை அழைத்துச் செல்வேன். அன்றைய சபாமண்டபத்தில்— அனைவரும் கூடியிருக்கும் கொலு மண்டபத்தில்— என்னை முந்நூறு நாள் வயிற்றில் சுமந்த அன்னையைக் கையெடுத்துக் கும்பிட்டு, 'பத்தினித் தெய்வமே! என்னை மன்னித்து விடு!' என்று கூறுவதோடல்லாது, அந்தத் தெய்வத்தின் நெற்றியில் குங்குமம் இடவேண்டும்."

அஜாதசத்ருவின் பிராயச்சித்தப் பிரகடனம் கேட்டு...

அம்பபாலி அகமகிழ்ந்து போனாள்.

ஆனால், வைதேகி?

பிடகம்-32

இதற்குப் பெயர்தான்...

அஜாதசத்ருவின் பிராயச்சித்தப் பிரகடனம், வைதேகியைக் கூனிக்குறுகி நடுங்கச் செய்துவிட்டது. யார் யாரை வணங்குவது ?

"அஜாதசத்ரு ! உனது பிராயச்சித்தப் பிரகடனத்தில் ஒரே திருத்தம். அவர் என்னையா வணங்குவது ? மகத மகா சக்ரவர்த்தியடா அவர் !"

"யார் சொன்னது ? இப்போது மகத மகா சக்ரவர்த்தி இந்த அஜாதசத்ரு. அவரல்ல ! எனவேதான் ஆணை பிறப்பிக்கிறேன் !"

"இது தருமமான ஆணையா குமாரா ?"

புத்தஞானப் பூவின் மணத்தை இதயத்தில் சுவாசிக்கத் தொடங்கிவிட்ட அம்பபாலி, கயல்விழிகளைத் துவர் விழிகளாக்கிப் பாதியாகச் செருகித் திரிசரணமாய்ச் சிரிக்கத் தொடங்குகிறாள். பின்னர், அவளது நாவு அடக்கமாக ஒலித்தாலும் சற்று அழுத்தமாக ஒலிக்கிறது : "இதைவிடத் தருமமான ஆணையை வேறு யாராலும் வழங்கிவிட முடியாது மகதமாதா ! ஒரு தருமபத்தினியின் வயிற்றில் உதித்த மகனால் மட்டுமே வழங்க முடியும் ராஜதேவி !"

'ஓகோ' வென்று பெருநகை புரிகிறான் அஜாதசத்ரு.

அம்பபாலியின் வீணை நாவு மீண்டும் அசைகிறது : "நானே ஆதரிக்கிறேன். இந்தப் புனிதமான ராஜமாதாவை வணங்கினாலொழிய, எந்தக் காரணம் பற்றியும் அஜாதசத்ருவின் தந்தைக்கு விடிவு பிறக்காது ; விவேகம் பிறக்காது ; விமோசனமும் பிறக்காது !"

அஜாதசத்ருவின் தந்தை என்று உச்சரித்தபோது தெரிந்த அழுத்தத்தில், ஒரு மகா யக்ருத்தின் சாமகானமே ஒலிப்பது போலிருந்தது. சாமகானத்தைப் பாலி மொழியில் பயின்ற சங்கீத வித்யா சொரூபிணியாயிற்றே அம்பபாலி !

அவளது குரலைத் தொடர்ந்து அளகாபதி நிலையடைந்துவிட்ட அஜாதசத்ரு, அன்னையின் அநாதிபந்தம் அவசியமற்றது என்று ஒதுக்கி, அபிபூதனான பிம்பிசாரனை நோக்கி முழக்கினான் :

"இனி இதற்கு மாற்றமும் பிறக்காது ! இந்தச் சபதம் நிறைவேறிய கணமுதல், நான் பிம்பிசாரரை அறியாமை நிறைந்த அபிபூதனாகப் பார்க்க மாட்டேன் ; அறிவான, பாசமான தந்தையாகவே பார்ப்பேன் ! ஏற்றும் கொள்வேன் ! சகலவிதமான பாக்கியங்களையும் நல்குவேன் ! அன்றுதான் எனது நியாயமான மரியாதையை அவருக்கு மகுடமாகச் சூட்டுவேன் ! ஏன், கழல் பணிந்தும் கரம் கூப்புவேன் !"

நல்ல பிரகடனமென்று அனைவரது விழிகளும், இமைப்பதிலும் இரு சொட்டுக் கண்ணீரைச் சிந்துவதிலுமாக ஏற்றன.

ஆனால், அறியாமையெனும் மாயையின் மடியில் தலைவைத்து நித்திரை செய்யும் பிம்பிசாரன் ?

"நான் உடன்பட மறுத்தால் ?"

"அகம்பாவமான கேள்வி."

"என்னைப் பொறுத்தவரை இது அர்த்தமுள்ள கேள்வி.

ஓ...!

அஜாதசத்ருவின் அங்கமெல்லாம் கொதித்துப் பிடரியைத் தட்டியெழுப்பிச் சீறிக் குரல் கொடுக்கச் செய்துவிட்டது :

"மறுத்தால்? ஆ(ங்)? அதே காலைப் பொழுதில் உன்னைச் சிரச்சேதம் செய்ய ஆணை பிறப்பிப்பேன்! இது பெற்ற வயிற்றின் மேல் சத்தியம்! பேணி வளர்த்த கரங்கள் மீது சத்தியம்! உற்ற துணை புரிந்த நண்பர்கள் மீது சத்தியம்! என்னை ஓரமாக நின்று வாழ்த்திய அந்த ராஜ நாகத்தின் மீது சத்தியம்!"

"அஜாதசத்ரு..."

—அலறி மயங்கி விழுந்தாள் ராஜமாதா வைதேகி.

"சண்டி! அம்மாவைப் பத்திரமாக அரண்மனைக்கு அழைத்து வா!" என்று கூறிய அஜாதசத்ரு, விறுவிறுவென அரண்மனை நோக்கி நடந்தான். அப்போதுதான் அவனது ஆகிருதியின் விசுவரூபம் தெரிந்தது. 'ஆ! இவன்தான் அஜாதசத்ருவோ!' என்று வியக்காதார் யார்? வெட வெடத்து நடுங்காதார் யார்?

அரண்மனையில்...

வைதேகி வருகையறிந்த வஜ்ஜிரை, தன் மாமியாரின் பாதம் பணிந்தாள். பட்டுக் கண்களில் தொட்டுத் தொழுதாள்.

இதைக் கண்ட அஜாதசத்ரு சினம் தணிந்தான்; சிரம் குளிர்ந்தான்.

வஜ்ஜிரையின் வசீகர வதனத்தைக் கண்டு வருத்தம் தணிந்து வாழ்த்தினாள் வைதேகி.

ஆ! என் அண்ணன் மகள் எவ்வளவு அழகாக இருக்கிறாள்! வஜ்ஜிரை என்றாலே அப்சரஸ் என்றுதானே அர்த்தம்?

"மாமனாரை எப்போதம்மா பார்க்கப் போகிறாய் வஜ்ஜிரை?"

"மகுடாபிஷேகத்தில்!"

"அவரது பாதங்களைப் பணிய வேண்டாமா?"

"உங்கள் பாதங்களை அவர் பணிந்த பிறகு!"

வைதேகியின் கண்கள் வஜ்ஜிரையின் கண்களில் பதிந்து வக்கரித்தது.

ராஜகிருகக் கோட்டை உச்சியில் நாகக் கொடி அஜாதசத்ரு கம்பீரத்துடன் பறக்கிறது. முன்பும் இதே நாகக்கொடிதான். ஆனால் அது பிம்பிசாரக் கொடி. இந்தக் கொடியில் நாகம் வித்தியாசமாகவும் பெரிதாகவும் இருந்தது. ராஜநாகமோ?

எப்படிப் பார்த்தாலும் அது சிசுநாக குலக்கொடி தானே?

மூன்றே நாட்களில் ராஜகிருகம், ராஜகிருகமாகத் திகழத் தொடங்கிவிட்டது. ஒரு மகா யுத்தம் நடந்தது போல அது காட்சி தரவில்லை.

அரண்மனை அந்தணர் கூடதண்டனும் மருத்துவமேதை ஜீவகனும் முடிசூட்டு விழாவுக்கான நன்னாளை, நாளையும் கோளையும் நகர்த்தி நகர்த்திப் பார்த்து முடித்தனர்.

இன்றைக்குப் பன்னிரண்டாம் நாள் காலை சூரியோதயத்தில் நல்ல சுபதினம்.

நகரை அலங்கரிக்கும் பொறுப்பை அக்கணமே மேற்கொள்ளத் தொடங்கி விட்டனர்.

கோசல நாட்டுக்குச் செய்தி நான்கு இறக்கைகளைக் கட்டிக் கொண்டு பறந்தது. இரவு பகல் பாராமல் அந்தச் சிறகுகள் பறக்க வேண்டும். வேளையோடு பிரசேனஜித் வருகை தர வேண்டாமா?

அரண்மனை பெரிதும் அமைதி கண்டது. அந்த அமைதிக்கு ஆனந்தம் ஆலவட்டம் வீசியது.

ராஜமாதா வைதேகியின் உடல், பலவீனத்திலிருந்து மீண்டு விட்டாலும் உள்ளம் பலவீனப்பட்டிருந்தது.

பிம்பிசாரப் பிடிவாதம் தலையை நிமிர்த்துமோ? தலையை இழக்குமோ?

மனம் தவித்துக் கொண்டிருந்தது.

மகன் அஜாதசத்ருவிடம் எவ்வளவுதான் மன்றாடுவது? அந்தச் சத்தியப் பிரகடனத்திலிருந்து அவன் சற்றும் பிறழ வில்லை. எவர் சொல்லுக்கும் அது விஷயத்தில் அவன் செவிடானான்!

என் செய்வாள் வைதேகி? எப்படித் திருப்பம் காண்பாள்? பிம்பிசார மன்னனைத் திருந்த வைப்பாள்?

மஞ்சளும் குங்குமமுமாக மணக்கும் அந்த முகத்துக்கு மகிமை குறைந்து விடுமா? ஆடைகளும் ஆபரணங்களும் அவளை அழகு செய்து என்ன பயன்? அண்டத்தில் ஆயிரம் விசித்திரங்களிருந்தாலும் அது ஒரு சூரியனால்தானே அதிசயம் பெறுகிறது: அற்புதங்களைப் பெறுகிறது! சூரிய னில்லையேல் நிலவுக்கு மகிமை ஏது?

இந்த வைதேகி நிலவுப் பிம்பிசாரச் சூரியனை எண்ணிப் பிரார்த்தனை செய்தது.

அன்றிரவு உண்டு முடித்து அமைதியாக நிலாமுற்றத்தில் அமர்ந்திருந்தான் அஜாதசத்ரு. பக்கத்தே ஆருயிர் மனையாள் வஜ்ஜிரை. எதிர்கால மகதத்தைப் பற்றி அவர் கள் ஏதேதோ விழிப்பில் கனவு கண்டு கொண்டிருந்தார்கள்.

யாரோ வரும் காலடி ஓசை.

பிதாவின் பிரச்சினை குறித்துப் பேச மாதா வருகிறாள் என்று எண்ணி எட்டிப் பார்க்க, அங்கே அம்பபாலியும், தேவதத்தனும், விதுர்த்தபனும் வருகை தந்து அமர்ந் தார்கள்.

"அஜாதசத்ரு! உன்னிடம் ஒரு முக்கிய செய்தி பற்றிப் பேச வந்தேன்" என்றாள் அம்பபாலி.

"பிம்பிசாரப் பிரச்சனை தவிர வேறு எதையும் பேச லாம் அம்மா!"

"இனி அது குறித்துப் பேச ஒன்றுமில்லை. விதிப்படி எது நடக்குமோ அது நடந்தே தீரும். நான் பேச வந்த செய்தி எனது சொந்தப் பிரச்சனை. எனது நோக்கம்—வாழ்ந்த வாழ்வு—ராஜமாதாவைச் சிறைமீட்க வேண்டும்; உனது முடிசூட்டு விழாவைக் கண்ணாரக் கண்டு மனமார மகிழ வேண்டும். இந்த வைபவத்தன்றே நான் பிட்சுணிக் கோலம் பூண்டு உன்னை வாழ்த்திவிட்டுத் தேவதத்தனுடன் புத்த பகவானைத் தரிசிக்கப் புறப்படுகிறேன். இனி தேரி வாழ்வில் அமைதி காண ஆசைப்படுகிறேன்!"

"ஆதரிக்க வேண்டிய முடிவு. ஆனால், உங்களைப் பிரிந்து என்னால் எப்படி இருக்க முடியும்?"

"எங்கிருந்தாலும் இருவர் நெஞ்சிலும் இருவரும் இருப்போம். தடை சொல்லாதே!"

தேவதத்தனை நோக்குகிறான் அஜாதசத்ரு. அவனது கண்கள் கலங்கி விட்டன. "உன் வாக்கை நீ காப்பாற்றி யதற்காகப் பிற்காலத்தில் உனக்கு எந்த உதவியும் இந்த அஜாதசத்ரு செய்யக் காத்திருக்கிறான். மிலீட்டஸும் உன்னுடன் வருகிறானா?"

"இல்லை; அவன் உங்களுடன்தான் இருக்கிறான்."

"விதுர்த்தபா! நீ ஏன் பேசாமலிருக்கிறாய்? பேச வேண்டியதையெல்லாம் சண்டியிடம் பேசிவிட்டதால் வார்த்தைகள் அகப்படாமல் தேடுகிறாயோ?"

வஜ்ஜிரை கொல்லென்று சிரித்தாள்.

விதுர்த்தபன் தலை குனிந்தான். அவனது நாவு நிமிர்ந்தது: "இனி நான் பேசவேண்டியதைக் கோசலத் திலிருந்து தந்தையார் வந்து பேசுவார்!"

'ஓகோ'வெனக் கைதட்டிக் கெக்கலித்தான் அஜாதசத்ரு. அவனது புழுக்கத்தை அவ்வாறு சிரித்துக் கரைத்துக் கொள்கிறான்.

அம்பபாலி எழுந்து கொண்டாள். அவளுள்ளும் பிரிவாற்றாமை இல்லையா, என்ன?

அனைவரும் எழுந்து கொண்டனர்.

வஜ்ஜிரையை அம்பபாலியின் அழகிய விழிகள் வருடுகின்றன. "வஜ்ஜிரை! நான் யாரை நம்பியும் என் மகனை விட்டுச் செல்லவில்லை. உன்னை நம்பித்தான். நீ ஒருத்திதான் அஜாதசத்ருவின் அகமாகவும் முகமாகவும் விளங்க வேண்டும்."

அவர்கள் விடைபெற்றனர்.

அவர்கள் விடைபெறட்டும் என்று காத்திருப்பதுபோல ஒளிந்திருந்த அந்தச் செய்தி வெளிப்பட்டது. வந்து சொன்னவன் உப தளபதி குமாரதேவன்.

"ஐந்து தினங்களாக இரவு உணவை மகதமாதா-உங்கள் அன்னையார் சிறைக் கூடத்துக்குக் கொண்டு வருகிறார்கள். இனியும் மறைப்பது நல்லதல்ல என்று காண்டீபன் சொல்லியனுப்பியிருக்கிறார். இப்போதும் சிறையில் இக்காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது."

"ஓகோ! நீ போகலாம். நான் வருவதாகக் காண்டீபனிடம் சொல்."

குமாரதேவன் விடைபெற்றான்.

அனல் கனன்ற கண்களுடன் அஜாதசத்ரு புறப்படுகிறான்.

"பிரபோ! நானும் உங்களுடன் வருகிறேன்."

"நீ எதற்காக வருகிறாய் என்பது புரிகிறது. நீ அந்த மிருகத்தை மகுடாபிஷேகத்தில் பார்க்கலாம்."

அஜாதசத்ரு சிறைக்கோட்டம் நாடி விரைகிறான். மனம் அலை மோதுகிறது. எந்தக் களங்கத்தைப் போக்க இத்தனை பிரயாசைகள் பட்டோமோ அவை யாவும் வீணாகிவிடும் போலிருக்கின்றனவே!

சிறைக்கோட்டத்துள் நுழைந்த அஜாதசத்ருவைக் கோட்டத்து அதிகாரி காண்டீபன் அழைத்துச் சென்று காட்டுகிறான்.

ஒரு மறைவான இடத்தில் நின்று கொண்ட அஜாதசத்ருவின் கண்களில், அந்தக் காட்சி நெருப்பில் எரிகிறது.

பிம்பிசாரன் சிறையினுள் மண்ணாலான பாத்திரங்களில் உண்டு கொண்டிருக்கிறார்.

"வைதேகி! நீ இன்னமும் என்னை எவ்வளவுக்கு நேசிக்கிறாய் என்பது இப்போதுதான் புரிகிறது." என்கிறார் பிம்பிசாரன்.

உணவை ருசி பார்த்துக் கொண்டே, "நீயே சமைத்தாயா?" என்கிறார்.

ஆனந்தக் கண்ணீருடன் தலையசைக்கிறாள் வைதேகி.

"வைதேகி! முதல் இரண்டு நாட்கள்வரை, நீ கொண்டு வந்து நான் உண்பதா என்று பிடிவாதமாக இருந்தேன். ஆனால், நான் கேள்விப்பட்டது... எனக்கு இரவு உணவு இல்லை என்பதால் நீ இரவு உணவை மறுத்தாயாம். நான் பகலில் மண் பாத்திரத்தில் உணவு கொள்கிறேன் என்பதால் நீயும் பகலில் மறைவிடமாகச் சென்று மண் பாத்திரத்தில் உணவு உண்டு வருகிறாயாம். மனம் வருந்தினேன். சிறையில் நீ சித்திரவதைப் படுகிறபோது நான் சிங்காரிகளுடன் உண்டு மகிழ்ந்தேன். ஆனால் நீ, அரண்மனைக்குச் சென்றும் எனது துன்பமே உனது துன்பமாக எண்ணி வதைபடுவதை..."

உண்பதற்கிடையே ஒரு பெருமூச்சு.

"என்னால் சகித்துக் கொள்ள முடியாமல் உனது இந்த வேண்டுதலை ஏற்றேன்."

பிம்பிசாரன் உண்டு முடித்து வைத்த மீத உணவைச் சிறைக்கு வெளியே அமர்ந்திருந்த வைதேகி உண்டு மகிழ்கிறாள்.

"உன்னை நான் எப்படியெல்லாம் சந்தேகித்தேன். அதற்குப் பிராயச்சித்தம்! ஓ... பயங்கரம்!"

ஒலி போல் வந்து நின்ற அஜாதசத்ரு, எதிரொலி போல் திரும்புகிறான்.

காண்டீபன் புரியாமல் கம்பமாய் நிற்கிறான்.

சற்று நேரம் கழித்துக் கணவனிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டாள் வைதேகி.

வழியில் காண்டீபன் நின்றிருப்பது கண்டு, "எனக்குக் காவல் நிற்கிறாயா காண்டீபா?" என்றாள் வைதேகி.

"நான் காவல் நிற்கிறேனா? இதுவரை மகத இளவரசரல்லவா காவல் நின்று புறப்பட்டுச் சென்றார்!" என்றான் காண்டீபன்.

"அஜாதசத்ரு வந்தானா? பார்த்தானா? என்ன சொன்னான்?"

"வந்தார்; நின்றார்; போனார். மற்றபடி ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை."

இதன் விளைவு நன்மையோ, தீமையோ என்று அரண்மனை நாடி விரைந்தாள் வைதேகி.

அடுத்த நாள் பகல்...

அன்னை எந்த இடத்தில் இரகசியமாய் மண்பாண்டத்தில் உணவு உண்ணுகிறார்கள் என்பதனைப் புலன் விசாரித்துப் புறப்பட்டுச் சென்று கவனிக்கிறான் அஜாதசத்ரு.

அந்தப்புரத்து ஒரு மூலையின் தனியறை.

மகதமாதாவா இப்படி எவர் பயத்துக்கோ அஞ்சித் தொண்டை விக்க அவசரமாக உண்ண வேண்டும்? இன்னுமா தலையெழுத்துக் கலையவில்லை?

விசாலி கொண்டு வந்த பொற்பாத்திரங்களைப் பெற்றுக் கொண்ட அஜாதசத்ரு, அறையுனுள் நுழைந்து அன்னையின் முன் வைக்கிறான். மண் பாத்திரத்திலிருந்த உணவு வகைகளைப் பொன் பாத்திரங்களில் எடுத்து வைக்கிறான்: "இப்போது உண்ணுங்கள் அம்மா! நீங்கள் பிம்பிசாரன் மனைவி மட்டுமல்ல; அஜாதசத்ருவின் அன்னை. அந்தக் கௌரவத்தையும் காப்பாற்றுங்கள்."

"அஜாதசத்ரு!"

விழி கலங்கக் கவனிக்கிறாள் வைதேகி.

"சிறைக்கும் பொன் பாத்திரங்களில்தான் உணவு அனுப்பி இருக்கிறேன்!"

ஓ...! மகன் நெஞ்சில் ஈரம் கசிகிறது.

"மகனே! இரவு உணவை மட்டும் நான் கொண்டு செல்ல அனுமதிப்பாயா?"

"அனுமதிக்கிறேன்! ஆனால், சத்திய சபதத்தின் ஓர் எழுத்தையும் அழிக்க அனுமதியேன்! நீங்கள் பின்வாங்க இப்போது முடிவு செய்யலாம். நான் பின்வாங்க மாட்டேன். இதற்குப் பெயர்தான் அஜாதசத்ரு!"

"நிறைவேறும் என்று நம்புகிறேன் மகனே!"

"அப்படியானால் மகத சரித்திரம் மகோன்னதமாகத் திகழும்!"

வைதேகிக்கு விக்கல் காண, பொற் குவளையில் நீரருந்தச் செய்தான் அஜாதசத்ரு.

பிடகம்-33

முடிசூட்டு விழா

ராஜ திசையில் வானப் பேரழகி, புலரியப் புனலாடி, மஞ்சள் வண்ணம் பூசிக் குங்குமச் சூரியத் திலகமிட்டுப் பிரகாச முகம் காட்டி அஜாத புன்னகையுடன் ராஜ கிருகத்தை வாழ்த்துகிறாள்.

அன்று...

அரிமா நெஞ்சன் அஜாதசத்ருவுக்கு முடிசூட்டு விழா.

எங்கும் நாகக் கொடிகள் பறந்து, 'வாருங்கள், எங்கள் அஜாதசத்ருவைப் பாருங்கள்' என்று கரம் அசைத்து அழைக்கின்றன.

தொடர்ந்து முரசங்கள், 'ஆனால் அவன் சத்ருவுக்குச் சத்ரு; நல்லவனுக்கு நல்லவன்' என்று ஆர்ப்பரிக்கின்றன. சங்குகளோ 'பம்'மித்து வாழ்த்துகின்றன.

கழுகு மூக்கு மலையுச்சியிலிருந்து பறந்து வந்து வட்டமிட்ட கருடன், 'அஜாதசத்ரு ஒரு அறைகூவல்' என்று அதன் மொழியில் பாடி மகிழ்கிறது.

அரண்மனையோ, அலங்காரமோ அலங்காரம்! அந்தத் தலைமுறையினர் அதுவரை பாராத அலங்காரம்!

நுழைவாயிலில் பல்வேறுபட்ட மங்கல வாத்தியங்கள் சுகராகம் பாடிச் சுகபோகம் நல்குகின்றன.

சதுர்வேத பாடிகள், அக்கினிக்கு நெய்யூற்றி, அதன் ஆதி அந்தத்தின் மெய்யூட்டி, நீள்வேள்வி நிகழ்த்துகின்றனர்.

ஆணிப் பொன் அரியணையில் அலங்காரத் திருநாயகனாய் அஜாதசத்ருவும், நலங்காணும் நாயகியாம் வஜ்ஜிரையும் பொலிவோடும் பூரிப்போடும் அமர்ந்திருக்கின்றனர்.

ஒருபுறம் கோசலமன்னர் பிரசேனஜித், அவரது பட்டத்தரசி வாசவி என்கிற வாசபத்தியா, மகன் விதுர்த்தபன்.

அவர்களுக்கு முன்னே இரு பொன்னாசனங்கள், பிம்பிசாரன் வருகைக்காகவும் அவரை அழைத்து வரச் சென்ற ராஜமாதா வைதேகிக்காகவும் காத்திருக்கின்றன.

இன்னும் ஏன் வரவில்லை?

இன்னொரு புறத்தே மகா ஆமாத்தியர் வஸ்ஸகாரன், பிட்சுணிக் கோலம் பூண்டுவிட்ட அம்பபாலி, இளம் பிட்சு தேவதத்தன், மிலீட்டஸ், மகா சேனாதிபதிகள்.

ஓ... அம்பபாலி! குழம்பிப் போனார் கோசல மன்னர்.

அழகுப் புதையலான விதர்ப்ப ராஜகுமாரி இந்துமதிகள் ஆயிரவர் கூடினும் ஈடுகட்ட இயலுமோ அம்பபாலியின் ஒரு பக்கத்து அழகுக்கு?

அவள் பிட்சுணிக் கோலம் பூண்டு விட்டாளே!

கொலு மண்டபமே நிறைந்து வழிகிறது.

அரண்மனைக்கு வெளியே மக்கள் மகாசமுத்திரம்.

சில தேசத்துப் பிரதிநிதிகள் இறக்கை கட்டிக் கொண்டு விரைந்து வந்து கௌரவிக்கிறார்கள்.

ஆனால், வரவேண்டிய முக்கிய தலைகள் இன்னும் வரவில்லையே?

அம்பபாலிக்கு ஆத்திரமோ ஆத்திரம்.

தனது இத்தனை பெரிய தியாகம் இதற்காகவா? ஒ...! ராஜமாதா...!

குறிப்பிட்ட சுப நேரம், நாழிகைப் பயணத்தில் நலங் கூறிக் குந்துகிறது.

அந்தணர் கூடதண்டன் எழுந்து சென்று, வஸ்ஸகாரன் காதில் முணு முணுக்க, அதனைக் குறிப்பாலுணர்ந்த அம்பபாலி கோசல மன்னரை உசுப்ப, பிரசேனஜித் கம்பீர மாக எழுந்து, "குறித்த நேரத்தில் முடிசூட்டு விழா நடக்கட்டும்!" என்று ஆணை பிறப்பிக்கிறார்.

மகுட மந்திரங்கள் முழங்குகின்றன.

மகதத்தின் நவரத்தின கிரீடம், மன்மதனும் அர்ச்சுன னும் இணைந்து அவதாரம் பூண்ட அஜாதசத்ருவின் அழகிய சிரசில் அமருகிறது.

அந்த இனிய முடிசூட்டு வைபவத்தைக் கண்டு ராஜ மண்டபம் வாழ்த்துகிறது.

மாவீர அஜாதசத்ரு மகத மகா சக்ரவர்த்தியானான்.

அரண்மனைக்கு வெளியே ராஜகிருக மக்கள் சமுத்திரமே வாழ்த்துகிறது!

அந்த ஒலி வானில் முட்டி மகதப் பேரரசுக்கே எதிரொலிக்க, எங்கும் தங்கள் புதிய சக்ரவர்த்தியை வாழ்த்திப் புளகக் கூத்து நிகழ்த்துகிறார்கள்.

இந்தச் சரித்திரப் புயலின் முடிசூட்டு விழாவில்— வனைந்தனைய திருவீர வள்ளலின் முடிசூட்டு விழாவில்— புனைந்தனைய புருடோத்தமனின் புகழ்மிக்க முடிசூட்டு விழாவில்...

மனம் தணிய, மகிழ்ச்சி பொங்க, சிசுநாக இனம் பொலிய சிம்மாசனம் ஏறிய சிங்கமனைய அஜாதசத்ருவை— அரிலகு அஜாதசத்ருவை— அவனது அழகுப் பட்டத்தரசி

வசந்த வசீகர வஜ்ஜிரையுடன் காண, ஈன்றவர்கள் இல்லா மல் போய்விட்டனரே என்று எண்ணாதார் யார்? ஏங்காதார் யார்?

ஆனால், பாடுபட்டுப் பயிர் வளர்த்த கோசல மன்னர் பிரசேனஜித்தின் குதூகலம் இமயத்தினும் உயர்ந்தது. ஆ! வஜ்ஜிரையின் இந்த வைபவத்தைக் காண அவளை ஈன்றவள் இல்லாமல் பரலோகம் போய்விட்டாளே!

அந்தப் பொன்னனைய புனித நேரத்தில் எங்கிருந்து தித்திக்கும் திரிசரணம் கேட்கிறது?

ஆ! பகவான் புத்தர் வருகிறார் என்கிற தேனனைய செய்தி நுழைகிறது.

கொலு மண்டபமே எழுந்து நிற்கிறது.

என்ன புண்ணியம் செய்தோம்!

புத்தம் சரணம் கச்சாமி.

சங்கம் சரணம் கச்சாமி.

தர்மம் சரணம் கச்சாமி.

திரிசரணங்களான இவை மூன்றும் மேலும் முழங்க, புத்தர் பெருமான் மண்டபத்துள் வருகை தருகிறார்.

"புனிதமே வருக! தெய்வ வனிதமே வருக!" என மகத மகா சக்ரவர்த்தி அஜாதசத்ருவும் அவனது பட்டத்தரசி யும் வரவேற்றுப் பாதம் பணிந்து எழுகிறார்கள்.

அம்பபாலியும் தேவதத்தனும் கண்ட அகமகிழ்ச்சிக்கு எல்லையேது? எதிர்பாராத வருகையல்லவா?

புத்தபகவான் ஒளி நிறைந்த பார்வையில் மகத சிம்மாசனத்தை வாழ்த்துகிறார்.

"அஜாதசத்ரு! இந்தப் பெயரை ஆதியில் ஆதரித்தவன் நான்! ஒரு நாள் சந்திப்பேன் என்று, நீ தொட்டிலிலிருந்து

என்னைப் பார்த்தபோது சொன்னேன். இப்போது நீ அரசுக் கட்டிலிலிருக்கிற போது வருகை தந்தேன்; வாழ்த்துகிறேன்!"

"பதந்த, இந்த வாழ்த்து எனது பூபாரத்தைப் பொலிவுறச் செய்யும்; புனிதப்படுத்தும்?"

"எங்கே உன் தாய் தந்தையரைக் காணோம்?"

"அதோ!"

தனித்திருந்த இரு ஆசனங்களைத் தருமசங்கடத்துடன் காட்டுகிறான் மகத மகா சக்ரவர்த்தி அஜாதசத்ரு. பிறகு விளக்குகிறான்.

"ஓ... அப்படியா செய்தி. அதனாலென்ன?"

புத்தபகவான் ஓர் ஆசனத்தில் அமருகிறார்.

அடுத்திருந்த ஆசனத்தைக் கவனிக்கிறான் அஜாதசத்ரு.

புரிந்து கொண்டார் புத்தர்.

"அஜாதசத்ரு! அந்த ஆசனம் பாவப்பட்ட ஆசனம். நான் அமர்ந்தது வைதேகி அமரக் கூடிய இடப்புற ஆசனம். அவள் மகா பதிவிரதை என்பது எனது இந்தச் செய்கை நிருபிக்கிறது"

அவர் எழுந்து கொள்கிறார்.

அம்பபாலியும் தேவதத்தனும் அருகில் வந்து பாதம் பணிகிறார்கள்.

கோசலக் குடும்பம் பணிகிறது.

"ஓ... பாலியா? நீ எப்போது தேரியானாய்?"

"இன்று புலரியத்தில்."

"நல்ல புலரியம்!"

தேவதத்தனைக் கவனிக்கிறார் தேவ சொருபரான புத்தபகவான்.

சொர்க்கப் பேரழகி தனது சுந்தர ரூபத்தைத் துவராடைக்குள் மறைத்துக் கொண்ட அர்த்தம் புரிகிறது. மேலும் அர்த்தத்தைப் புரிய வைக்க அதரங்களை அசைக்கிறார் புத்தபகவான்:

"பாலி! அதோ நிற்கும் அந்த இளைஞன் யார் என்று புரிகிறதா பார்?"

அம்பபாலி கவனிக்கிறாள்; புரியவில்லை.

"நீ பெற்ற திருக்குமாரன்; அபயகுமாரன்!"

அபயகுமாரன்...

அம்பபாலி, பாச உணர்வு மேலிட அருகில் செல்ல...

"தொலைவில் நில்லுங்கள். துவராடை அணிந்த பிறகு பாசம் வெளிப்படுவது பாவமாகும்!" என்றான் அபய குமாரன்.

அயர்ந்து வெட்கிப் போகிறாள் அம்பபாலி.

புத்தர் சொன்னார்: "அபயகுமாரா! உனது சம்வாதங்களைச் சங்கத்தில் வைத்துக் கொள். உனது ஞான திட்சையால்தான் பாலியின் உயர்வு பாரினை எட்டும்! அஜாதசத்ரு! வஸ்ஸகாரன் எங்கே?"

"இதோ நிற்கிறேன் ததாகரே!"

"மூன்றாம் முறையாக மகதத்தில் பிரவேசிக்கிறேன். இனி ராஜகிருகம் பாவ பூமியல்ல; புண்ணிய பூமி! அஜாதசத்ரு விஷயத்தில் நீயும் கவனமாக இரு. உன் விஷயத்தில் அவனும் கவனமாக இருக்கவேண்டும்."

"பதந்த, மீண்டும்..." அஜாதசத்ருவின் கண்கள் பணிகின்றன; பனிக்கின்றன.

"நீ புதிய தலைநகரம் பாடலிபுத்திரத்தை உருவாக்கப் போகிறாயாமே! அங்கே சந்திப்பேன்!"

"எனது பெற்றோர்களைப் பற்றி..."

"அவர்களைப் பற்றி நான் கவலைப்பட ஒன்றுமே இல்லை. சென்ற முறை வந்தபோதே பிம்பிசாரன்

செருக்கைக் கண்டித்தேன்; இப்போது நீ தண்டித்து விட்டாய். உடம்பைப் பற்றியும் ஆன்மாவைப் பற்றியும் விசாரம் கொள்ளாதே! இந்த ஆராய்ச்சி மனித குலத்தை எவ்வழியிலும் நன்மைப் படுத்தாது. நான் வருகிறேன்!"

திரிசரணம் முழங்குகிறது.

பகவான் புத்தர் முன்னே செல்ல, பின்னே சீடகோடிகள் செல்ல, அவர்களைத் தொடர்ந்து அம்பபாலியும் ஷ்தலதத்த னும் அஜாதசத்ருவிடமும் விடைபெற்றுக் கொண்டு புறப் பட்டார்கள்.

முடிசூட்டு விழா புத்தர் பெருமான் வருகைக்குப் பிறகு இனிது நிறைந்தது.

அரண்மனைக்கு வெளியே கூடியிருந்த மக்கள் சமுத்தி ரத்துக்கிடையே காட்சி தந்தனர், மகத மகாசக்ரவர்த்தி அஜாதசத்ருவும் பட்டத்தரசி வஜ்ஜிரையும்.

வாழ்த்தொலிகள் வானைப் பிளக்கின்றன.

அதன் பிறகு...

அவர்கள் பாதங்கள் சிறைக்கோட்டத்தை நாடின.

முடிபுனைந்த கோலத்துடன் மகததேவி சகிதமாக வந்து நின்ற மகனைக் கண்டு ராஜமாதா வைதேகி மட்டுமா பூரித்துப் போனாள்? உள்ளுக்குள் பிம்பிசாரனும் உவகை பூத்துத் தலை குனிகிறான்.

மாமியார் பாதங்களைப் பணிகிற சாக்கில் மாமனாரை யும் பணிந்தது போலிருக்கட்டும் என்று வஜ்ஜிரை முயல, அதனைத் தடுத்து நிறுத்துகிறான் அஜாதசத்ரு.

"வஜ்ஜிரை! வைதேகியாருக்குத்தான் அடம் பிடிக்கத் தெரியும் என்றால், நீ அஜாதசத்ரு தேவி! உனக்கும் அது தெரிந்திருக்க வேண்டும்! புருஷன் வர மறுத்தார் என்பதற்காகப் பெற்ற மகனின் முடிசூட்டு விழாவைக் காண இவர்களும் மறுத்துவிட்டபோது? இவர்கள்வரை அது தரும

மாக இருந்தால், உன் வரையும் நான் சொன்னதும் தருமம் தான்! பார்வையிட வந்தோம்; அவர்களும் பார்க்கட்டுமே என்று வந்தோம்; புறப்படுவோம்!"

வைதேகி புலம்பினாள்: "அஜாதசத்ரு! கொஞ்சம் நில்லடா! தந்தையின்றி தாய் மட்டும் அமர்ந்து காண்பது அவமானமாகத் தெரியவில்லை?"

"இருபது ஆண்டுகள் களங்க முத்திரையுடன் சிறையில் அனுபவித்தீர்களே, அது அவமானமாகத் தெரியவில்லை?"

"அது விதி!"

"இதுவும் விதிதான்! நான் சொன்ன விதிக்கு நியாயம் என்று அர்த்தம்!"

வஜ்ஜிரையின் கண்கள் ஏனோ பிம்பிசார உருவத்தை வைத்த கண் வாங்காமல் கவனிக்கின்றன. அவர் இந்த நாடகம் ஆடியிருக்காவிட்டால் இவள் நாயகியாகி இருக்க முடியாதல்லவா?

வைதேகி மேலும் புலம்பினாள்:

"குற்றம் செய்தார், நான் மறுக்கவில்லை. அதற்காகப் பாதுகாப்பு வீரர்களுடனா கொலு மண்டபத்துக்கு வருவார்? எப்படியெல்லாம் அந்தக் கொலுமண்டபத்தில் வீற்றிருந்து இருப்பார்?"

"எப்படியெல்லாம் கொடுமைகளைச் செய்து பார்த் திருப்பார்?"

"அஜாதசத்ரு! என் மகனே! நான் சொல்வதைக் கொஞ்சம் பெரிய மனம் கொண்டு கேள்!"

"பெரிய மனம் கொண்டு... பெரிய மனம் கொண்டு... ஓ... தாயே! நீங்களா இப்படிக் கேட்கிறீர்கள்?"

மனம் கொந்தளிக்கிறது...

"சொல்லுங்கள்!"

குரலில் மட்டும் கோபக் கனல்.

"நீ இட்ட ஆணையை உன் தந்தை இக்கணமே நிறை வேற்றக் காத்திருக்கிறார். ஆனால், இரண்டு திருத் தங்கள்."

"என்ன, என்ன ?"

"ஒன்று, பலர் முன்னிலையில் கொலு மண்டபத்தில் இதனை வைத்துக் கொள்ளாதே! அடுத்து, என்னை வணங்கச் செய்யாதே!"

"இரண்டையுமே ஏற்பதற்கில்லை."

—என்று கூறிய மகத மகா சக்ரவர்த்தி அஜாதசத்ரு, தனது பட்டத்தரசியை அழைத்துக் கொண்டு புறப் பட்டான்.

பிம்பிசாரன் கண்களில் காலங்கடந்த ஞானப் புனல் பொங்கிப் பிரவகித்தது.

போகிற வழியில் மெல்ல- நாநயத்துடன்- நளினமான விழி நயத்துடன் கேட்டுக் கொண்டாள் வஜ்ஜிரை:

"பிரபோ! எனக்குள் ஒரு வேதனை. வஜ்ஜிரை காலடி வைத்து மாமனாரின் சிரசைக் கொய்தாள் என்கிற பழிச் சொல் எனக்குத் தேவைதானா ?"

கொந்தளித்த மனத்தில் கொடும் புயல் தலை தூக்குகிறது.

பட்டத்தரசியை மின்னல் நெருடப் பரிசீலிக்கிறான் மன்னன் அஜாதசத்ரு.

மருண்டு போயின, மான் விழிகள்.

"பிரபோ! நான், நான் எதாவது..."

"புண்பட ஏதும் சொல்லிவிடவில்லை. அன்னையும் தந்தையுமாகவே கலந்து, ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்து விடுவார்கள். எனது குறிப்பிட்ட காலப்பொழுதான விடிகிற போது, எனக்கு நீ இதனை நினைவுபடுத்துகிறாய். அதுவரை

மௌனமாகக் கவனி. அஜாதசத்ரு, உன் காதலன், கணவன் என்கிற நிலை மீறி அவன் இப்போது மகா சக்ரவர்த்தி, நீ அவனது பட்டத்தரசி. பாவ பூமியான ராஜகிருகம், எனது தந்தையின் பணியின் மூலம்தான் புண்ணிய பூமி யாகப் போகிறது. நினைவிருக்கட்டும்!"

என்ன மறுமொழி இது ?

வக்கிரமான மறுமொழி!

பனித் துளி, பனிக்கட்டியாகிறதா ? பனிக்கட்டி பனித் துளியாகிறதா ?

புரிந்துகொள்ள முடியவில்லையே!

மௌனச் சிலை போலக் கணவருடன் ரதத்தில் அரண்மனை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள் வஜ்ஜிரை.

ஆனால் ஊழ்...?

ஊழினும் வலியது என்ன இருக்க முடியும் ?

பீடகம்-34

அணையா தீபம்

இரவின் கர்ப்பத்தைக் கிழித்துக் கொண்டு நிலவு பிரசவமாகிக் கொண்டிருக்கிறது.

நட்சத்திரங்களெல்லாம் தன்னை நோக்கிக் கை கொட்டிச் சிரிப்பனபோல எண்ணிப் பார்க்கிறாள் வைதேகி.

காரணம்...

அந்த நாள்— இருபதாம் நாள்— நாளைய வைகறை.

கறைப்படுத்துமோ ? கறை துடைக்குமோ ?

ஏ, நளாயினி ! உனது சக்தி என்னிடமில்லை. இருந்தால் பொழுதையே— நாளைய வைகறைப் போதையே விடியாமல் செய்து விடுவேன் என்று புழுங்கு கிறாள், புலம்புகிறாள் வைதேகி !

சிறைச்சாலைக்கு உணவு கொண்டு செல்லுமுன், நேரே மகனிடம் சென்று, "மகத மகாசக்ரவர்த்தி ! நீ ஒரு மாதாவுக்கு மடிப்பிச்சை போடுவதானாலும் சரி, ஒரு மாங்கல்யத்துக்குக் குங்குமமிட்டுப் புண்ணியம் தேடிக் கொண்டாலும் சரி : நாளைய பொழுது நல்ல பொழுதாக விடியுமா ?" என்று மன்றாடுகிறாள்.

வஜ்ஜிரையும்கூட அங்கு நிற்க மனமில்லாமல் உள்ளே சென்று மௌனமாகக் கண்ணீர்விடத் தொடங்கிவிட்டாள்.

"விடியுமாடா, மகனே ?"

"இதை உங்கள் மடிப்பிச்சையிடமோ, மாங்கல்யத் திடமோ கேட்டால் நிச்சயம் விமோசனம் பிறக்கும் !"

"உன் தந்தைக்கு மறுபெயர் பிடிவாதம் !"

"அஜாதசத்ருவுக்கு மறுபெயர் அடம் ! அதே அர்த்தம் தான் ! காரணம், அதே ரத்தம்தான் !"

வைதேகி கண்களைத் துடைத்துக் கொண்டு சிறைச் சாலைக்கு உணவு எடுத்துக் கொண்டு புறப்படுகிறாள். அவ்வாறு புறப்படுகிறபோது கண்கள் சிவக்கின்றன. அந்தச் சிவப்பில், ஒரு செய்தி சிக்கிப் புரண்டு கொண்டிருந்தது. வேறு என்னதான் செய்வாள் ?

சிறைச் சாலையுள் பிரவேசிக்கிறாள்.

சரித்திரம் கண்களை நிமிட்டிச் சாசனம் எழுதக் காத்துக் கொண்டிருக்கிறது.

வைதேகி முன்னே வர, பின்னே பணிப்பெண் சுதமதி பொற்பாத்திரங்களைக் கொண்டு வருகிறாள்.

"சுதா ! நீ உணவை வைத்துவிட்டுப் பல்லக்கில் புறப்படு ! நாளைய சூரியன் நளாயினி சூரியன் ! நான் இரவு முழுவதும் இங்கேயே இருக்க விரும்புவதாக, அஜாதசத்ரு கேட்டால் சொல் ! இருப்பது எங்களிடையே இந்த இரவு வாழ்க்கை ஒன்றுதானே, போ !"

சுதமதி, பணிந்து கண் கலங்க விடைபெறுகிறாள்.

பணிப்பெண் விடைபெற்றதும் பலகணங்கள் வரை நான்கு கண்கள் ஏதேதோ நயன பாஷை பேசிக் கொள் கின்றன. அர்த்தம் புரிந்த நான்கிலும் நான்கு நீர்த் திவலை கள் ; தீர்க்கதரிசன தீர்த்தம் !

"அஜாதசத்ரு ஒப்புக்கொள்ள மறுத்தே விட்டானா வைதேகி ?"

"முடிவாக அவன் சொன்ன வார்த்தைகள், 'பிடிவாதம் தந்தைக்கு மட்டுமே இருந்தால், அந்த ரத்தத்துக்குப் பிறந்தவன் எப்படி இருப்பான் ?' என்பன !"

"நியாயமான வார்த்தைகள்; நான் நேசிக்கக்கூடிய வார்த்தைகள்."

"பிரபோ! நான் ஒன்று சொல்வேன்; யோசித்துப் பாருங்கள். ஏற்பது நல்லது. ஏற்க மனமில்லையெனில் உங்கள் தீர்மானத்துக்குத் தலைவணங்குகிறேன்."

"என்ன வைதேகி?"

"அஜாதசத்ரு ஆணைப்படி நீங்கள் நடந்துகொள்வதில் பெருமை உங்களுக்குத்தான் நீங்கள் உயருகிறீர்கள். சரித்திரம் உங்களை வாழ்த்தும்!"

பிம்பிசாரன் வைதேகியை நோக்கிப் புன்முறுவல் பூக்கிறார்: "பிம்பிசாரன் சரித்திரத்தில் தலைபணிந்தான் என்ற புண்ணான சொற்கள் இடம் பெற வேண்டாம்."

உணவை எடுத்து வைக்கிறாள் வைதேகி.

"வைதேகி! இது நமக்குக் கடைசி உணவு அல்லவா?"

அவளது விழிகள் சூன்யத்துச் சுழற்சியில் கவனிக்கின்றன: "ஆமாம் பிரபோ! ஏனென்றால், கடைசியாக என் கையால்..."

"ஒரு திருத்தம். கடைசியாக என் கையால் நீ உண்ணுகிறாய்; நானும் உண்ணுகிறேன்."

இருவர் கண்களிலும் சூன்யம் சொக்கட்டான் விளையாடுகிறது.

இருவரும் உண்ணத் தொடங்கினர்.

நான் எந்த மண்ணிலிருந்தாலும் எனக்கு ஒரே மொழிதான் என்பது போலச் சேவல், 'கொக்கரக்கோ' என்று கூவுகிறது.

பொழுது படபடவென்று சரித்திர ஏடுகளைப் புரட்டிக் கொண்டு பிறக்கிறது.

கொலுமண்டபமே கூடிக் கொண்டிருக்கிறது.

பிலுக்குப் பிலுக்கெனப் பிலுக்கியவரல்லவா பிம்பிசாரன்! அவரது பிளிற்றல், பிதற்றல் காணப் போகிறது! அவரது பிரதாபம், பிளவைக் காணப் போகிறது!

மகத மகாசக்ரவர்த்தி வருகிறார் என்கிற செய்தி கட்டியக்காரன் நாவில் ஒலிக்கிறது.

அரியணையில் வந்தமர்றார்கள் அஜாதசத்ருவும் வஜ்ஜிரையும்.

வழக்கப்படி வாழ்த்தொலிகள்.

"பிரபோ! நினைவுபடுத்தச் சொன்னீர்கள்!"—வஜ்ஜிரை ஒரு காதுக்கு மட்டுமே கேட்கும்படி உடல் நடுங்கக் கூறுகிறாள்.

"நினைவிருக்கிறது."

அஜாதசத்ருவின் சொற்களில் ஒலியில்லை; காற்றிருந்தது.

அவையைக் கவனிக்கிறான். அமைதியோ அமைதி. அனைவருமே வந்திருந்தனர்.

கோசல மன்னர் பிரசேனஜித் மட்டும், பிம்பிசாரன் பிடிவாதம் பிடித்தால் மறுவாதம் செய்து அஜாதசத்ருவின் மனத்தை மாற்றுவது எப்படி என்று ஆலோசிக்கிறார்.

ஓ...! இந்த நேரத்தில் அம்பபாலி இருந்திருக்கலாமே!

"சிறைச்சாலையிலிருந்து சகல மரியாதைகளுடன் அழைத்து வர ஆளையனுப்பி வைத்து விட்டீர்களா மகா ஆமாத்தியரே?"

16881

வஸ்ஸகாரன் விடை [illegible]றார்.

"உதயமாகிற போதே [illegible] மகத மகா சக்ரவர்த்தி !"

அச்சமயம்...

சிறைக்கோட்ட அதிகாரி காண்டூபன், மருட்சியை மாலையாக அணிந்து விரைந்து வருகிறான்.

அவன் சொன்ன செய்தி கேட்டுக் கொலுமண்டபத்தில் மருட்சி மாரி பொழிந்தது.

அலறிப் புடைத்து எழுகிறான் அஜாதசத்ரு. உடன் மண்டபமே எழுந்தது.

குறிப்பான சிலர் மட்டும் அஜாதசத்ருவைப் பின் தொடர்ந்து சிறைக்கோட்டம் நாடி விரைகிறார்கள்.

அங்கே...

ஓ...என்ன பரிதாபம் !

சிறையினுள் பிம்பிசாரனும், சிறைக்கு வெளியே வைதேகியும் பிணமாகி கிடைக்கிறார்கள்.

சிறைக் கம்பிகளுக்கிடையே இருவர் கரங்களும் பின்னிப் பிணைந்திருக்கின்றன.

பாத்திரங்களில் பாதிக்கு மேல் உணர்வு அப்படியே இருக்கிறது. தரை முழுவதும், உணவுப் பருக்கைகள்.

மருத்துவமேதை ஜீவகன், உணவைச் சோதிக்கிறான் அதில் நஞ்சு கலந்திருப்பது தெரியவருகிறது.

மகத மகா சக்ரவர்த்தி, அஜாதசத்ரு பட்டத்தரசி வஜ்ஜிரையின் வலத் தோளில் நெற்றியைப் புதைத்துக் குமுங்கிக் குமுங்கிக் குழந்தைபோல் அழுகிறான்.

தங்கையின் பரிதாப முடிவைக் கண்டு கோசல மன்னர் கண்ணீர் மல்குகிறார்.

எங்கும் எவர் முகத்திலும் கண்ணீர், கண்ணீர், கண்ணீர்...

"நான் ஒன்றை நினைத்திருக்க, நீங்கள் ஒன்றைச் செய்து கொண்டீர்களே ! ஓ...! இப்படி நிகழும் என்று நான் துளியும் எதிர்பார்க்கவில்லை" என்று மனம் வெடித்துச் சொற்கள் சிதறக் கதறியழுகிறான் மகத மாமன்னன் அஜாதசத்ரு.

அந்தக் கண்ணீர் மழையில் மகத சாம்ராஜ்யமே நனைந்தது.

தனது கணவன் மௌத்கல்ய முனிவரின் உயிர் காக்கச் சூரியனையே விடியாதிருக்கச் சபித்தாள் நளாயினி. வைதேகியோ, அவ்வாறு ஏன் சபிக்க வேண்டும் ? சூரியன் முகத்திலேயே விழிக்காமல் போனால் என்ன என்று முடிவு செய்து விட்டாள்.

பணிப்பெண் சுதமதி கூறிய 'நளாயினி சூரியன்' என்ற சொற்களுக்கான பொருளை, இவ்வாறு கற்பிதம் செய்து கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறான் மகத மகா சக்ரவர்த்தி அஜாதசத்ரு.

செய்தியறிந்த வைசாலிப் பகைவர்களோ...

அவந்தியைத் தூண்டினர். அதன் விளைவு ?

பிம்பிசாரனை அஜாதசத்ரு சிறைப்படுத்திக் கொலை செய்துவிட்டான் என்கிற பிரசாரம், சரித்திரத்தில் பிணையுமளவுக்குத் தலை தூக்கியது. அதற்கான வேறு பல பின்னணிகளும் துணை நின்றன.

ஆயினும அஜாதசத்ரு...

ஓர் அணையா தீபமாகவே வரலாற்றில் பிரகாசிக்கிறான்.

□ ○ □

பின்னுரை

'ஏ அஜாதசத்ரு ராஜன் !

அது என்ன அழைப்பு ?

"மன்னவனும் நீயோ ?" என்று கேட்ட தமிழ்ப் புலவர் மரபில் வந்தவன் நான்.

தொடக்கத்தில் நீ எழுதிய முடங்கல் கண்டு மூச்சுத் திணறிப் போனேன். 'வரலாறு மறந்ததோ மறைத்ததோ ?' என்றும், 'அஜாதசத்ரு ஒரு நிகரிலி செருநாகனாக நிமிர்ந்து நடக்க வேண்டும்' என்றும் எழுதியது கண்டு பல்வேறு வரலாற்று நூல்களைத் திருப்பித் திருப்பிக் கை வலித்தது தான்மிச்சம். எங்கு நோக்கினும் 'நீ கொலைகாரன்' என்று தானே எடுத்தியம்புகிறன ? ஆமாம் ; உன் கதையை அங்கே காணோம். ஆனால், கொலைக் குற்றம் மட்டும் இருக்கக் காரணம் ?

மகதத்தில் கிடைத்த கதை என்ன, பிம்பிசாரன் வேசி லோலன் ; மூர்க்கன் ; பிடிவாதக்காரன். ஜீவகனை அவந்திக்கு மருத்துவம் பார்க்க அனுப்பினான். அங்கத்தை வீழ்த்தினான். முடிவில் மகனால் கொலையுண்டான். இவ்வளவுதானே ?

ஆனால், உனது உருக்கமான முடங்கலோ, உன்னைக் கொலைகாரனாகக் காட்டவில்லை. எனவே உன்மீது அனுதாபமும் அக்கறையும் கொண்டு சிந்தனையைப் பிய்த்துக் கொண்டேன்.

'India through the Ages' – by Flora Annie Steel என்பவர் மட்டும் (இது என்ன மொழி என்கிறாயா ? இது மிகப் பிற்காலத்தே தோன்றிய ஆங்கில மொழி. உலகுக்குக்

கிடைத்த அற்புத ஆயுதம்.) 'Whether this be true or not' என்ற வரிகளைப் பெய்து, 'Bimbisara was murdered. and by his son's order' (Fifth Edition Page—32) என்றல்லவா கூறுகிறார் ?

'True or not' என்ற சொற்கள் எனக்குப் பிடிப்பைத் தந்தன.

பாலி மொழியில் எழுதப்பட்ட திரிபிடகங்களையும், ஜாதகக் கதைகளையும், ஆங்கில மொழியில் அதன் சுருக்கங்களையும் விமர்சனங்களையும் ஆராய்ந்தேன். அங்கே உனது குடும்பத்திலுள்ளவர்களின் சில பெயர்களும், பகவான் புத்தர் உன்னைச் சந்தித்ததும், அம்பபாலி பற்றிய சில வரிகளும் இழையோடிக் காணப்படுகின்றன.

இதிலும் ஒரு குழப்பம்.

நீ செல்லனாதேவிக்குப் பிறந்தவன் என்பது. தமிழ் வரலாற்று நூல்களில் நீ தாறுமாறாகக் காணப்படுகிறாய். இதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை. தமிழ்நாட்டு வரலாற்று நூல்களையே சிலர் நன்கு ஆராயாமல் எழுதியிருக்கிறபோது வடக்கு வரலாற்றைத்தானா கவனமுடன் எழுதப் போகிறார்கள் ?

நீ யார் பெற்ற புதல்வன் என்பதை ஹேம சந்திர சௌந்தரிதான் தெளிவாகப் பேசுகிறார்.

According to the 'Thasa Jathaga (338) and the Moosiga Jathaga (373) the Kosala Princes was the mother of Ajatha Sathru. In the Sainyaktha Nikaya (Book of Kindred Sainyas (110) Pasanethi (Prasenajith) of Vrosala calls Ajatha Sathru his Nephew.

Pasanethi என்கிற வார்த்தையை நான் என்னவாக இருக்கும் என்று மண்டையைக் குடைந்து கொண்டே அது பிரசேனஜித், உனது தாய்மாமன் என்பதைக் கண்டுபிடிக்க நேர்ந்தது.

இப்படிப் பல குழப்பங்களுடன் நான் நூல்களைக் குடைந்து குடைந்து ஆராய்ந்தேன். முதலில் காலம் 545, B.C. என்பதைக் கண்டுபிடிக்கவே குழம்பிப் போனேன்.

ஆய்ந்த நூல்களிலேயே 'Political History of Ancient India'— by: Hemachandra roy Choudhry எழுதிய நூலில், இழையிழையாகச் சில செய்திகள். உன் குடும்பமும் உறவுகளும் தெரிகின்றனவேயொழிய கதையைக் காணோம். அரசியல் பின்னணி தெளிவாகப் பேசுகிறது. ஆனாலும் நீ கொலைகாரனாகவே தென்படுகிறாய்

உன்னை நிரபராதியாக எவ்வாறு நிரூபிப்பேன் ?

கோசலதேவியான உனது தாய், மகா பாண்டித்தியம் பெற்றதால் வைதேகி என்ற பெயரைப் பூண்டாள். அவள் வயிற்றில் ஜனித்த நீ கொலைகாரனா? மகான்களான கௌதம புத்தரும், மகாவீரரும் உயிருடன் வாழ்ந்து நல்லொழுக்கப் பிரசாரம் செய்த காலத்தில் பிறந்தவன்; அவர்கள் உபதேசத்தைக் கேட்டவன்... நீ கொலைகாரனா? அஜாதசத்ரு என்ற பெயருக்குப் பொருள், தருமபுத்திரன் என்றும், தனக்குச் சத்ருவற்றவன், தானும் பிறர்க்குச் சத்ருவாகாதவன் என்பது. இப்பேர்ப்பட்டவன் கொலைகாரனா ?

நான் எழுப்பிக் கொண்ட கேள்விகள் இவை.

நீ ஏன் தந்தையைச் சிறையில் அடைக்க வேண்டும்? அந்தத் தந்தைக்குத் திருட்டுத்தனமாக வைதேகி ஏன் சிறைக்கு உணவு எடுத்துச் செல்லவேண்டும்? முடிவில் கொலை செய்ய ஆணை பிறப்பிக்க வேண்டும் ?

என் கற்பனை இந்த வரிகளில் நுழைந்தது. ஆக, நீ கொலை செய்ய ஆணை பிறப்பித்திருக்கிறாய். இதனை நீ மறுத்தாலும் நான் ஏற்கமாட்டேன். தந்தையைக் கொலை செய்த தனயர்கள் வரலாறு வடக்கில் ஏராளம்.

மேலும், வேசிலோலனான பிம்பிசாரன், மனைவியை நேசிக்கக் காரணமில்லை. ஆனாய் உனது தாய் வைதேகி, கணவனை நெஞ்சோடு நேசித்தாள். 'It is said that when Ajathasathru murdered Bimbisara, his father, the queen Kosaladevi (வைதேகி) died of love for him' என்கிறார் ஹேமசந்தர ராய் சௌத்திரி.

இப்பேர்ப்பட்ட நேசநெஞ்சின் கருவில் உதித்தவனுக்குக் கொலை செய்கிற நெஞ்சிருக்க நியாயமில்லை. எனவே, சிந்தித்தேன். உன் வேண்டுதலுக்குச் செவிசாய்த்து முடிவை மாற்றினேன். மகிழ்ச்சிதானே ?

வரலாற்றுப் பேராசிரியர்கள் என்னைச் சாடுவர். அவர்களுக்கு ஒன்று சொல்வேன். தமிழ்ப் பண்பைக் காக்கக் கம்பன், வான்மீகியினிடமிருந்து வேறுபடவில்லையா ? நான் அவன் பேரன்தானே ?

இது ஒரு சமாதானமேயானாலும் ஏ, அஜாதசத்ரு ராஜன்! என்னைப் பொறுத்த வரையில் எனது முடிவு ஏற்புடைத்தே !

உன்னை நான் எவ்வளவுக்கு நேசித்தேன் என்பதற்கு ஓர் உதாரணம்.

இந்த நாவலை ஆனந்த விகடன் வாரப் பத்திரிகையில் தொடராக (1985) எழுதி வருகிற போது நீ எந்த அத்தியாயத்தில் பிறந்தாயோ, அந்த அத்தியாயம் வெளிவந்த வாரத்தில் எனது மகள் திருமதி அம்மங்கைக்கு (எழுத்தாளர் அம்மங்கை குமாரதேவ் மனைவி) ஆண்மகன் பிறந்தான். அவனுக்கு உன் பெயரையே சூட்டினேன்.

இதைவிட, உனக்கு நான் என்ன மகிழ்ச்சி தரமுடியும்? நீ கொலைகாரன் என்றால் நிச்சயமாக என் பெயரனுக்கு அப்பெயரைச் சூட்டியிருக்க மாட்டேனல்லவா ?

இந்தப் புதினத்தை அன்புடன் வெளியிட்ட ஆனந்த விகடன் ஆசிரியர் மதிப்புக்குரிய திரு. எஸ். பாலசுப்பிரமணியன் அவர்கட்கும், நூலாக வெளியிட்ட வானதி பதிப்பக உரிமையாளர் நண்பர் திரு. ஏ. திருநாவுக்கரசு அவர்கட்கும், நாவல் தொடராக வெளிவந்தபோது என்னுடன் போட்டியிட்டு வெற்றிகண்ட ஓவியர் அன்புத் தம்பி மணியன் செல்வனுக்கும், அவ்வப்போது நூல்களை உதவும் கன்னிமாரா நூல்நிலையத்துக்கும் எனது விசுவாசத்துக்குரிய வாசகர்களுக்கும் உனது சார்பிலும், என் சார்பிலும் நன்றி கூறுகிறேன்.

வாழ்க அஜாதசத்ரு! வெல்க அஜாதசத்ரு!

மிக்க அன்புடன்
கோவி. மணிசேகரன்

சுதந்திர நாள், 1985
சென்னை-93.

16881
328930